ஜோதி

சித்திர சகிதமான மாதப் பத்திரிகை

சுடர் 1

கதிர் 1—12

1937௵ ஆகஸ்ட்௴ முதல்

1938ம் ௵ ஜுலை௴ வரை

ஆசிரியர்

வெ. சாமிநாத சர்மா

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.,

47, 31வது வீதி, இர[redacted]கூன்.

1938

விலை: நாலரை ரூபாய்

இரண்டு பைண்டு புஸ்தகங்களாக

ஜுபிட்டர்

ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: பம்பாய்.

சோத்தின் மொத்த மதிப்பு ரூபாய் **65,00,000**

தொழில்கள்;—

உயிர், நெருப்பு, கப்பல், மோட்டார் வண்டிகளும் இதர விதமான விபத்துக்களைப் பற்றிய தொழில்களும் செய்யப் படுகின்றன.

கிளை ஆபீஸ்:—

644, மெர்ச்செண்ட் வீதி,

ரங்கூன்.

ஜில்லாக்கள் தோறும் செல்வாக்குள்ள

செட்டியார் ஏஜண்டுகள் தேவை

"ஜோதி"

சுடர் 2 கதிர் 1

அதிக பக்கங்கள்

விசேஷ கட்டுரைகள்

நல்ல படங்கள்

முதலியவற்றோடு

வெளியாகும்.

ஜோதி

சித்திர சகிதமான மாதப் பத்திரிகை

சுடர் 1

கதிர் 1—12

1937௵ ஆகஸ்ட்மீ முதல்

1938ம் ௵ ஜூலைமீ வரை

ஆசிரியர்

வெ. சாமிநாத சர்மா

ஜோதி பப்ளிஷிங் கம்பெனி லிமிடெட்.,

47, 31வது வீதி, இர[redacted]கூன்.

1938

விலை: நாலரை ரூபாய்

இரண்டு பைண்டு புஸ்தகங்களாக

ஜோதிக்கு

ஜவஹரின் வாழ்த்து

முதல் கதிர் முகப்பில்

ஜோதி பிரஸ், 47, 31வது வீதி, இரங்கூன்.

வந்தே மாதரம் :

"ஜோதி"

முதலாவது சுடரின் பொருளடக்கம்

அரசியல்

	கதிர்—பக்கம்
அடுத்த சர்வாதிகாரிகள் யார்?	9 – 59
அடுத்த யுத்தம் ஏற்பட்டால்?	7 – 29
அயல் நாட்டு இந்தியர் பிரச்னை	7 – 111
அரசியல் முறைகளும் சமஷ்டி அரசியலும்	3 – 30
ஆஸ்திரியா	9 – 23
ஆஸ்திரியா எப்படி விழுங்கப்பட்டது?	11 – 46
இத்தலியின் கைங்கரிய மென்ன?	9 – 44
இந்தியாவி லுள்ள ஸ்தல ஸ்தாபனங்கள்	6 – 84
இந்தியாவில் தற்கால அரசியல் நெருக்கடி	1 – 73
இந்தியாவில் நான் கண்டதென்ன?	8 – 45
இந்தியாவின் கவர்னர்—ஜெனரல்கள்	1 – 41
உலகத்திலே என்ன நடக்கிறது? (கார்ட்டூன்கள்)	3–16, 4–18, 5–10, 6–14, 7–15, 9–12, 10–12, 11–13, 12–12.
எதியோப்பியா—இத்தாலிய ஆக்ரமிப்புக்குப் பிறகு	4 – 92
ஐம்பத்தோராவது தேசீய காங்கிரஸ்	8 - 125
ஐரோப்பிய அரசுகள் நாடு பெருக்கின சரித்திரம்	1 - 16
ஐரோப்பிய யுத்தம் சமீபத்தில் ஏற்படுமா?	2 - 21
ஒரு நாட்டின் மீது பல கண்கள்	7 - 35
ஒரு பரீட்சை—அரசியல் வாதிகளுக்கு	12 - 56
கண்ணீர் விட்டுக் கதறும் கைம் பெண்கள் எத்தனை பேர்?	4 - 33
காங்கிரஸ் அரசாங்கம்—மந்திரிகள் யாரார்?	1 - 81
காங்கிரஸ் தலைவருக்கு ஒரு வேலைத் திட்டம்	8 - 101
கொரியா தேசத்தின் அரசியல் நிலைமை	4 - 49
சக்திகள் ஒன்றுபடட்டும்	12 - 25
சமஷ்டி அரசியல்	12 - 17
சமஷ்டி அரசியல் என்றால்?	6 - 100
சமஷ்டி அரசியல் என்றால் என்ன?	4 - 89
சமஷ்டி அரசியல் சட்ட சபைகள்	10 - 47
சமாதான தேவதையின் உலக யாத்திரை	11 - 98
சீன—ஜப்பானிய யுத்தமும் இந்தியாவின் வெளி நாட்டுக் கொள்கையும்	6 - 29
சீன—ஜப்பானிய யுத்தம்	2 - 9
சீனாவின் கட்சி	2 - 14
நமது அரசியல் டைரி	5–89, 6–104, 7–86, 9–86, 10–114
நமது மந்திரிகளைப் பற்றி	1 - 82

கதிர்—பக்கம்

நன்ருகச் சாகிருர்கள்! .... 11 - 104
பரஸ்பரப் புகழுரைகள்—முஸோலினி—ஹிட்லர் .... 12 - 100
பர்மாவில் விவசாய சீர்திருத்தம் .... 2 - 97
பாசிஸம்—பொதுவுடமை—ஜன நாயகம் .... 5 - 61
பார்லிமெண்ட் நடை முறை .... 12 - 52
பாலஸ்தீனத்தைப் பற்றி .... 1 - 99
பிரிட்டிஷ் ராணுவ உத்தியோகங்களின் அந்தஸ்துக் கிரமம் 2 - 91
பொதுவுடமை இயக்க வளர்ச்சி .... 9 - 75
மகாத்மாவுக்கு அடுத்தபடி யார்? .... 8 - 17
மூர்ச்சையாகும்படி அடிக்க வேண்டும்! .... 3 - 13
யுத்தத்தை ஒழிக்க யுத்தங்கள்! .... 3 - 14
யுத்த மில்லாத யுத்தம்! .... 12 - 36
யுத்தம் ஏற்படுமானல்—ட்ரோட்ஸ்கியின் கருத்து 12 - 38
ருமேனியாவில் நெருக்கடி ஏற்பட்டதேன்? .... 9 - 39
வந்தே மாதரம் என்ருல் என்ன? .... 4 - 9
வல்லரசுகளின் கப்பற் படை பலம் .... 5 - 107
வெளி நாடுகளில் இந்தியர்கள் .... 1 - 45
ஜப்பானின் கட்சி .... 2 - 17
ஜப்பானை பகிஷ்கரிக்க முடியுமா? .... 10 - 99
ஜப்பான் வாழ சீனு இறப்பதா? .... 3 - 10
ஜெக்கோ—ஸ்லோவேகியா படையெடுக்கப் பட்டால்? 11 - 64
ஜெக்கோ—ஸ்லோவேகியாவில் ஜெர்மானியர்கள் .... 11 - 62
ஜெர்மனிக்குள் ஆஸ்திரியா .... 11 - 49
ஜெர்மனியின் கூக்குரல் நியாயமா? .... 9 - 33
ஸ்பெயினே! உன் பதில் என்ன? .... 2 - 23
ஹரிபுரா காங்கிரஸ்—சில தோற்றங்கள் .... 9 - 26

அன்ருட உலகம்

தினசரி நிகழ்ச்சிகள் 1 - 96, 2 - 94, 3 - 94, 4 - 95, 5 - 95, 6 - 112, 7 - 116, 8 - 105, 9 - 108, 10 - 116, 11 - 115, 12 - 108.

இலக்கியம், கலை முதலியன

அடிமை கொள்ளும் வழக்கம் .... 8 - 14
அப்சாரத்திற்கு உபசாரம் .... 2 - 70
அயர்லாந்தில் மூன்று நாட்கள் .... 5 - 46
அழகுக்கும் அழிவுண்டோ? .... 6 - 85
அறிவும் நூல்களும் .... 4 - 25
அறுபத்து நான்கு கலைகள் .... 9 - 76
ஆக்கங்கெடுத்தவன் ஆசான்—
ஐசுவரியங் கெடுத்தவன் ஐ. சி. எஸ். .... 3 - 25
இங்கிலாந்தில் ஜீவகாருண்ய இயக்கங்கள் .... 10 - 110

	கதிர்—பக்கம்
இந்த மூவர் யார்?	2 - 32
இந்தியாவும் தற்கால ஜன.சங்கியையும்	11 - 16
இன்பவசனுமிர்தம்	8 - 49
உலகத்திற்கு இந்தியாவின் பாடம் என்ன?	12 - 61
உலகத்தின் பழைய பத்திரிகை எது?	3 - 98
உறுதி கொள் மகனே!	10 - 52
எதற்கெடுத்தாலும் சக்தியாக்கிரகமா?	11 - 109
எழுபத்தாறு வயதுக் குழந்தை	5 - 58
எனது தாயார்	7 - 106
ஒரு புருஷனுக்குப் பல மனைவிகள் —ஒரு மனைவிக்குப் பல புருஷர்கள்	7 - 97
ஒரு பேராசிரியரின் வரலாறு	12 - 29
ஓய்வு கொள்வதா?	11 - 95
கடவுளைப்பற்றி	5 - 64
கல்வி கற்பிப்பதன் லட்சிய மென்ன?	11 - 87
கவிஞர் நோகுச்சி	2 - 76
கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை	2 - 36
கிரீஸ் தேசத்துக் கல்வி முறை—பழைய காலத்தில்	2 - 84
குழந்தைகளை வளர்ப்ப தெப்படி?	2 - 40
கைகேயி கேட்ட வரங்களில் முன்னெது? பின்னெது?	3 - 33
கொஞ்சம் கவனியுங்கள்!	2 - 49, 3 - 93
கோயில்கள் சமைத்ததேன்?	6 - 86
சங்கீதத்தின் வளர்ச்சி—மொகலாயர்கள் காலத்தில்	4 - 79
சரஸ்வதி பவனம்	4 - 22
சர்வாதிகாரிகள் உண்பதெப்படி?	10 - 75
சில ஜப்பானியப் பழமொழிகள்	2 - 54
சினிமா உலகில் புரட்சி	4 - 38
சினிமாவுக்கென்று தனிப் பெயரா?	10 - 16
சினிமாவும் தேச முன்னேற்றமும்	12 - 86
சினிமா பக்தர்களுக்கு	12 - 103
சைக்கிள் யாத்திரை	5 - 78
சோம்பல்	8 - 63
டாக்டர் சாமிநாத ஐயர்	10 - 17
தந்தையும் தனயனும்	8 - 36
தமிழ்ப் பிரயோகங்கள்—ஒரு வேண்டுகோள்	1 - 88
தர்மமும் தயையும்	8 - 33
தெய்வமும் தர்மமும்	7 - 46
நட்புக்காகப் பன்னிரண்டரை லட்சம் ஏகராக்கள்	11 - 107
நப்போலியனுடைய சில வார்த்தைகள்	1 - 47
பத்திரிகா லட்சணம்	11 - 71
பள்ளிக் கூடங்களில் சினிமாக்கள்	4 - 43
பால் ம்யூனி யார்?	4 - 44

	கதிர்—பக்கம்
புக்கர் வாஷிங்டனுடைய கல்வி ஸ்தாபனம்	9 - 105
புதிய கல்வித் திட்டம்	4 - 45
புராதன ரோம தேசத்துக் கல்வி முறை	5 - 51
புலவர்கள் பட்டபாடு	5 - 75
பெண்ணின் உள்ளம்	10 - 77
பெண்மையிலே தான் வாழ்வு	1 - 33
பேரூர்க் கனகசபை—ஓர் கலைவிருந்து	6 - 80
மகனே! உன் கடமையைச் செய்	9 - 16
மனிதன் யார்?	1 - 24
மனித சமூகத்தை உத்தாரணம் செய்வது இந்தியாதான்	12 - 95
மனிதரும் மற்ற உயிர்களும்	10 - 63
மனித வர்க்கத்தின் பரம்பரையும் ஸ்தாவர வர்க்கத்தின் அபிவிருத்தியும்	7 - 11
மனித வாழ்க்கையின் லட்சியமென்ன?	6 - 34
மாணவனே! கலை நிமிர்	3 - 99
மாணவர்களின் பிரதிக்ஞை	5 - 105
யோசனை கூறுங்கள்—கொஞ்சம்	7 - 55
ராக்பெல்லர்-ஒரு தனி மனிதன்	3 - 57
ராக்பெல்லர் நீண்டகாலம் வாழ்ந்ததன் ரகசியம்	5 - 25
வறுமையிலும் வாழ்வு கண்டவர்கள்	2 - 52
வாழ்விலிருந்து வீழ்ந்து விட்ட பிறகு	1 - 23
விசுவ பாரதி—சாந்தி நிகேதனம்	1 - 36
விசுவ விசித்திரம்—(படங்கள்) 5 - 99, 6 - 109, 9 - 94,	10 - 107
வீரப் பெண்மணியின் வீர வாசகம்	4 - 59
ஜெர்மனியில் அறுவடைத் திருநாள்	6 - 11
ஜெர்மனியில் ஒரு தமிழ்ப் புலவர்	7 - 71
ஜெர்மானிய மாணவர்களுக்கு	8 - 32
ஜோதி	1 - 10
ஸ்திரீகளின் சமூக அந்தஸ்து	10 - 103
ஹமாரே பாத்ஷா ஹை	4 - 60
ஹிந்து மதமும் நவீன உலகும்	6 - 23
ஸ்ரீ. ஈ. வெ. ராமசாமி நாயக்கர்	11 - 44
ஸ்ரீ. எஸ். சத்திய மூர்த்தி	10 - 89

சரித்திரம்

அசோகன் சாஸனங்கள் 3-23, 4-58, 5-38, 6-71, 7-65, 8-60,	9 81
அம்பி அறம் வளர்த்த முதலியார்	5 - -33
அவுரங்கஜீப் சக்ரவர்த்தியின் கடிதம்	2 - 43
அஜண்டா குகைச் சித்திரங்கள்	7 - 41
ஆபிரகாம் லிங்கன்	4 - 63
ஆல்ப்ரெட் வெப்	9 - 74
இதுவன்றோ ராஜபக்தி	2 - 57

	கதிர்—பக்கம்
இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இந்தியா	3 - 68
இரண்டு பர்மிய யுத்தங்கள்	7 - 69
இருபெரு இறவா நாடுகள்	8 - 26
உமேச சந்திர பானர்ஜி	2 - 73
உலகத்தி லுள்ள பெரிய நகரங்கள்	5 - 32
உலகப் பேர்வழிகள்	6 - 33, 7 - 39
எதியோப்பியாவும் இந்தியாவும்	7 - 49
எல்லோரா சித்திரங்கள்	10 - 43
கப்பற்றொழில்—புராதன காலத்தில்	10 - 73
கிழக் கிந்தியா கம்பெனி தோன்றிய வரலாறு	12 - 57
சாணக்கியன்	1 - 42
சிவப்பு இந்தியர்கள்	3 - 52
சுதந்திரத்திற்காக உயிர் துறந்த வீர மன்னன்	7 - 25
சுரேந்திரநாத் பானர்ஜி	10 - 57
தாதாபாய் நௌரோஜி	3 - 47
தாமஸ் மஸாரிக்	3 - 87
நாகேசுவர ராவ் பந்துலு	10 - 81
நெவில்லி சேம்பர்லேன்	1 - 70
நேபாள தேசம்	11 - 54
பசி யெடுக்குதே—ஒரு விதவையின் புலம்பல்	3 - 64
பத்ருத்தீன் தையாப்ஜி	4 - 34
பர்மாவை ஆண்ட முக்கிய அரசர்கள்	4 - 54
பர்மாவின் முக்கிய ஜாதிகள்	9 - 63
பர்மிய மன்னர்களின் கீழ் அரசாங்க முறை	5 - 36
பர்மிய ஜாதியினர்	11 - 38
பண்டித கு. பக்கிரிசாமிப் பிள்ளை	5 - 24
பி. அனந்தாச்சார்லு	8 - 57
பிரான்ஸும் கீழ் நாடும்	10 - 79
பிரிக்கப்பட்ட ஏடன்	2 - 46
பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன் இந்தியா ஞான சூன்யமாயிருந்ததா?	8 - 30
புதிய தம்பதிகள்	6 - 9
புதுவை ஆனந்தரங்க பிள்ளை	4-29, 6-17.
புராதன இந்தியா	9 - 56
புராதன பர்மாவில் இந்தியர் குடியேற்றம்	1 - 17
மார்க்கோனி	1 - 91
மாஜி கெய்ஸர் எப்படி வாழ்கிறார்?	8 - 74
மாஸ்கோ—ருஷ்யாவின் தலை நகரம்	5 - 29
முதலாவது பர்மிய யுத்தம்	6 - 68
முந்நூறு வருஷங்களுக்கு முன்	10 - 51
மேட்டூர் அணை	10 - 27
ரஹிமதுல்லா முகம்மத் ஸயானி	11 - 67

	கதிர்—பக்கம்
ராம்ஸே மாக்டோனல்ட்	5 - 22
ராஜ பக்தி	1 - 30
ராஜேந்திர சோழன்	2 - 55
லண்டன்—நியூயார்க்—டோக்கியோ	6 - 49
லஜாரே—கார்டெனஸ்	12 - 50
லெனினும்—காந்தியும்	11 - 90
வான் ஹிடென்டார்ப்	6 - 21
விசால பாரதம் அல்லது மகா ஆர்யா வர்த்தம்	12 - 14
வீழ்ந்துபோன விஜய நகரம்	2 - 92
ஜார்ஜ் யூல்	5 - 44
ஜான் டி. ராக்பெல்லர்....	1 - 90
ஜோஸப் மாஜினி	11 - 35
ஸர் பிரோஸிஷா மேர்வான்ஜி மேத்தா	7 - 62
ஸர் சி. சங்கரன் நாயர்	12 - 33
ஸர் முகம்மது இக்பால்	10 - 11
ஸர் வில்லியம் வெட்டர்பர்ன்	6 - 76
ஸர் ஜகதீச சந்திர போஸ்	5 - 23
ஸாபியா ஹானெம்	7 - 108
ஹாவாய்த் தீவுகள்	1 - 65
ஸ்ரீ சாரதாமணி தேவி	7 - 59
ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்	7 - 17

சிறு கதைகள்

இபன் அஹமத்	10 - 33, 11 - 25
உபதேசம்	11 - 112
எங்களூர்க் கோயில்	7 - 102
ஒப்படி—	11 - 57
ஒரு குடும்ப சம்பாஷணை	6 - 55
கசங்கின புஷ்பம்	12 - 20
கடவுள் என்ன செய்கிறார்?	6 - 88
கட்டுரைப் பஞ்சம்	12 - 105
கனகாவின் கடிதங்கள்	2 - 103, 3 - 62, 4 - 52, 5 - 56, 6 - 78, 7 - 76, 8 - 55, 9 - 47, 10 - 61
காதலா? வீரமா?—ஸதி சிந்தா	4 - 99
சரியான தீர்ப்பு	4 - 73
சிறு கதை எழுதுதல்	1 - 26
சிறை மீட்சி	5 - 16
சுசீலை மணம்	12 - 65
டாக்டர் ஷூஸ்னிக்கின் காதல் கதை	12 - 93
தர்ம ராணி	12 - 63
தலை தீபாவளி	3 - 20

கதிர்—பக்கம்

தீராப் பகை	1 - 53
நியாயந்தான்	10 - 93
பிச்சைக்காரனுடைய பினத்தல்	3 - 81
பிழைக்கும் வழி	8 - 29
புரட்சி மனப்பான்மை	12 - 46
போஸ்டாபீஸ்	10 - 19
மாப்பிள்ளையின் யுக்தி	3 - 72
மாரியாயி எங்கே?	3 - 40
விமோசனம் உண்டா?	8 - 40
வீர பத்தினி	8 - 64, 9 - 49
ஜோதி	8 - 91

ஞானக்களஞ்சியம்

பெரியோர் மொழிகள் 2 - 50, 3 - 38, 5 - 42, 6 - 66, 11 - 22

துலாக்கோல் (புஸ்தக விமரிசனம்)

அயல் நாடுகளில் கடன் ஒழிப்பு	9 - 102
ஆனந்த மடம்	12 - 96
இந்திய விவசாயிகளின் கடன்	9 - 102
எம். என். ராய்	5 - 74
எல்லோரும் ஓர் குலம்	11 - 72
கடன் நிவாரணச்சட்டமும் அதைப்பற்றிய முழு விவரங்களும்	9 - 102
காதலின் வெற்றி	10 - 97
கான் அப்துல் கப்பார்கான்	7 - 80
கிராமச் சீர்திருத்தம்	8 - 89
சீனு—ஜப்பான்	8 - 88
சுபாஷ் சந்திர போஸ்—சுதந்திர வீரன்	8 - 90
சுபாஷ் சந்திர போஸ்—ராஷ்ட்ரபதி	8 - 89
திருவள்ளுவர் பெருமை	2 - 82
தேய்ந்த கனவு	6 - 107
பகவான் அரவிந்தர் பத்தினியாருக்கு எழுதிய கடிதம்	8 - 90
பண்டித மதன் மோஹன் மாளவியா	7 - 78
பர்மா பிரிவினை ஞாபகார்த்த மலர்	2 - 83
பர்மாவில் சோழர் ஜயஸ்தம்பம்	5 - 74
மலர் வணக்கம்	11 - 74
மஹாயோகம் (Mahayoga)	9 - 104
மைக்கேல் காலின்ஸ்	9 - 101
லாலா லஜபதிராய்	7 - 79
வார்தா திட்டம்	12 - 98
விஷ விருக்ஷம்	5 - 72
ஜவஹரின் பர்மா விஜயம்	1 - 93

கதிர்—பக்கம்

ஹோமியோ பத்தி .... 6 - 108
ஸ்ரீ ரமண சந்நிதி முறை .... 9 - 104

நமது நிருபர்களுடன்

ஆசிரியருக்கு வந்த கடிதங்களும் அவைகளுக்குப் பதில்களும்
1-85, 2-78, 3-90, 4-77, 5-109, 6-116, 7-81, 9-97, 10-83, 11-85, 12-89.

நமது நியாய சபை

தலையங்கம் .... ஒவ்வொரு கதிரிலும் முதற் பக்கத்தில்

பாடல்கள்

அந்திப் பரிதி .... 9 - 22
அமெரிக்க தேசீய கீதம் .... 4 - 16
அலாடின் விளக்கு .... 5 - 35
இந்தியாவிற்கு .... 9 - 46
இருப்பதுதான் யாது? .... 11 - 74
இறந்தோர் நகை .... 9 - 58
உடல் நலம் வேண்டல் .... 10 - 88
உனக்காக வாழ்வேன் .... 3 - 97
உன்னை நான் எப்படி மறக்க முடியும்? .... 2 - 72
என் தாய் நாடு .... 5 - 69
ஏக்கம் .... 7 - 75
ஏழு வயது ஆகாத குழந்தையின் ஏழு தேவைகள் .... 8 - 13
ஐந்து மலர்கள் .... 12 - 45
கடல் .... 11 - 70
கண்ணீர் மாலை .... 6 - 10
கொடுக்கிறவனே-வாழ்கிறவன் .... 4 - 81
சிறைப் பட்ட செல்வி .... 1 - 103
சீன தேசீய கீதம் .... 5 - 14
தட்டு ஜய பேரி! .... 12 - 72
தாய் யார்? .... 3 - 61
தேசாபிமானம் .... 6 - 13
நிலையிற் பிரியேல் .... 8 - 54
நில் ஓடாதே! .... 6 - 38
நீ யார்? .... 10 - 15
பிரார்த்தனை .... 3 - 15
பிரிட்டன் தேசீய கீதம் .... 4 - 11
பிரெஞ்சு தேசீய கீதம் .... 4 - 12
மதங்களின் இருவித உபதேசம் .... 8 - 16

கதிர்—பக்கம்

முஸ்லீம் கவியரசர் ஸர் முகம்மது இக்பாலின் பாடல்கள் .... 5 - 112
வந்தேமாதர கீதம் .... 4 - 14
வாழ்க்கைப் போராட்டம் .... 7 - 40
விடுதலை—ஆனால் கட்டுப் பட்டேன் .... 4 - 37
ஜப்பானிய தேசிய கீதம் .... 5 - 15

பொருளாதாரம்

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் வரவு செலவுத் திட்டம் 7 - 14
இங்கிலீஷ் தெரிந்தவர்கள் .... 4 - 62
இந்தியாவின் வியாபாரம்—ஒரு வருஷத்தில் .... 5 - 81
இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் .... 12 - 83
இவ்வளவு பணமா? .... 5 - 45
கடன்—ஒரு சனியன் .... 5 - 55
சராசரி வருமானமும் சம்பள விகிதமும் .... 2 - 91
சர்வதேச சர்க்கரை ஒப்பந்தம் .... 3 - 65
தங்க விலை இறங்குமா? .... 1 - 11
தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு பரிகாரம் 7 - 57
நாணய மாற்று விகிதம் .... 11 - 121
பணம் என்றால் என்ன?.... .... 2 - 25
பண்டிகைகளின் பொருளாதாரம் .... 2 - 101
வரிப்பணம் எப்படி செலவழிகிறது? .... 10 - 82
வருமானமுள்ள தொழில் எது? .... 12 - 44
வியாபாரப்புள்ளிகள் .... 2 - 89
வைரங்களுக்கு ஏன் அதிக விலை?.... .... 6 - 98
ஜெர்மனியில் ஐந்து வருஷ முன்னேற்றம் .... 10 - 56

விஞ்ஞானம்-(அறிவுத் துறை)

ஆகாய விமானம் உயரப் பறப்பதேன்? .... 6 - 90
இடிக்குத் தப்புவதெப்படி? .... 8 - 59
உலகத்தை நிறுப்பதெப்படி? .... 7 - 88
ஒளி மின்சாரக் கருவியின் சேவைகள் யாவை? .... 12 - 73
சிறிய கல் மூழ்குவதேன்? பெரிய கப்பல் மிதப்பதேன்? 2 - 64
டைப் ரைடிங் மெஷின் கண்டு பிடித்தது யார்? .... 2 - 69
பதார்த்தங்களிலே மூன்று வகை ஏன் .... 1 - 48
புகைக்கூடு மேலே போவதேன்? .... 3 - 73
பூலோகத்தின் முடிவு காலம் எப்பொழுது? .... 9 - 65
பூலோகத்தின் வயதென்ன? .... 8 - 77
போர்க்களத்தில் .... 10 - 65
மின்சாரம் என்றால் என்ன? .... 11 - 75
வாயுமண்டலம் .... 4 - 82
வாயு மண்டலத்தின் உயரமென்ன? .... 5 - 83

ஜோதி

ஆசிரியர் வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 **ஆகஸ்ட் 1937** **கதிர் 1.**

அடுத்த பக்கங்களில்

எனது செய்தி	ராஷ்ட்ரபதி ஜவஹர்	முகப்பில்
நமது நியாய சபை	தலையங்கம்	1
ஜோதி	சுவாமி பரிபூரணனந்தா	10
தங்க விலை இறங்குமா ?	ரா. பத்மநாப ராஜூ	11
ஐரோப்பிய அரசுகள் நாடு பெருக்கின சரித்திரம்	(ஸ்டேட் மெண்டு)	16
புராதன பர்மாவில் இந்தியர் குடியேற்றம்	கு. கோ. கிருஷ்ணன் B. Sc., (Hons)	17
வாழ்விலிருந்து வீழ்ந்து விட்ட பிறகு ?	"வறுமைப் புலவன்"	23
மனிதன் யார் ?	"தேவ கவி"	24
சிறு கதை எழுதுதல்	கி. ரா.	26
ராஜ பக்தி	"சரித்திரக்காரன்"	30
பெண்மையிலேதான் வாழ்வு	"குயில்"	33

விசுவபாரதி-சாந்தி நிகேதனம்	*வி. தேவாச்சாரியன்*	
இந்தியாவின் கவர்னர் ஜெனரல்கள்	—	**41**
சாணக்கியன்	*சு. குஞ்சிதபாதம்* B. A., L. T.,	**42**
வெளி நாடுகளில் இந்தியர்கள்	*" குடியேறியவன் "*	**45**
நப்போலியனுடைய சில வார்த்தைகள்	—	**47**
பதார்த்தங்களில் மூன்று வகை ஏன் ?	*"விஞ்ஞான போதகர்"*	**48**
தீராப்பகை (ஒரு பிரெஞ்சுக் கதை)	*ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா*	**53**
ஹாவாய்த் தீவுகள்	*நமது அமெரிக்க நிருபர்*	**65**
நெவில்லி சேம்பர்லேன்	—	**70**
இந்தியாவில் தற்கால அரசியல் நெருக்கடி	*கே. வி. ராமசுப்ரமண்யம்* B. A., B. L.,	**73**
காங்கிரஸ் அரசாங்கம்—மந்திரிகள் யாரார்?	—	**81**
நமது மந்திரிகளைப் பற்றி	—	**82**
நமது நிருபர்களுடன்	—	**85**
தமிழ்ப் பிரயோகங்கள்—ஒரு வேண்டுகோள்	*ஆசிரியர், "ஜோதி"*	**88**
போய் விட்டார்களே பாவம்!	*ஜான் டி. ராக்பெல்லர்*	**90**
	மார்க்கோனி	**91**
துலாக்கோல்	—	**93**
இப்படியும் நடக்குமா?	—	**94**
அன்றாட உலகம்.	—	**96**
பாலஸ்தீனத்தைப்பற்றி	*ஓர் அரசியல் மாணக்கன்*	**99**
சிறைப்பட்ட செல்வி	*ஆந்த்ரே ஷெனியேர்*	**103**

Message

I understand that the new Tamil Illustrated Monthly ''Jyothi'' will stand for the uplift of the masses and for Poorna Swaraj. As such it has my good wishes. I hope it will work for cooperation between India and Burma and for the development of good-will between Indians and the Burmese. Further that it will lay stress on the larger problems affecting both countries as well as the world, for only by understanding them can we understand our own particular problems.

எனது செய்தி

ஜோதி" என்ற புதிய சித்திர சகிதமான மாதப் பத்திரிகை, பாமர ஜனங்களின் முன்னேற்றத்திற்காகவும், பூரண சுயராஜ்யத்திற்காகவும் உழைக்கும் என்று அறிகிறேன். ஆதலின் அதற்கு எனது நல்லாசி. இந்தியா—பர்மா ஒத்துழைப்புக்காகவும், இந்தியர்களுக்கும் பர்மியர்களுக்கும் இடையே சிநேகப் பான்மை அதிகரிக்கவும் அது வேலை செய்யும் என்று நம்புகிறேன். தவிர இரண்டு நாடுகளையும் பாதிக்கிற மகத்தான பிரச்னைகளையும், உலகப் பிரச்னைகளையும் அது வலியுறுத்தும் என்று எதிர் பார்க்கிறேன். ஏனென்றால் இவற்றை நாம் தெரிந்து கொண்டால்தான், நமது சொந்தப் பிரச்னைகளைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

ஜவஹர்லால் நேரு

ஜோதி

சுடர் 1 ஆகஸ்ட் 1937. கதிர் 1

'ஜோதி' பெய்ஸ்பூர் காங்கிரஸின்போது, அணையாத அமர ஜோதியை ஏற்றி வைத்தார் பண்டித ஜவஹர். "நமது ராஷ்ட்ரபதியினால் ஏற்றி வைக்கப்பெற்ற இந்த ஜோதி எப்பொழுதும் அணையாது" என்று மகாத்மா ஆசீர்வாதம் செய்தார். அதையே, நாமும் நமது 'ஜோதி'க்குப் பொருத்தமாக எடுத்துக் கொள்கிறோம். ஏனென்றால் நாம் சர்வாநுகூல வாதிகள்.

ராஷ்ட்ரபதியின் ஆசீர்வாதமாகிற ரட்சா பந்தனத்துடன் நாம் வெளியே புறப்படுகிறோம். எனவே, இடர்ப்படோம். அவர், தம் ஆசிச் செய்தியில் நமக்கு வழி காட்டியிருக்கிறார். அவ்வழியிலேயே செல்வோம். அப்படிச் செல்லும் போது ராபர்ட் இங்கர்ஸால் என்னும் அறிஞனோடு சேர்ந்து கொண்டு "ஓ சுதந்திரமே! தொலைதூரத்திலேயே நீ மிதந்து கொண்டிருக்கப்போகிறாயா? ஓர் உற்சாகியினுடைய, கொடை வள்ளலினுடைய, கவிஞனுடைய கனவிலேயே எப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கப் போகிறாயா? வா, இறங்கி வா, எங்களிடத்தில் வந்து வாசஞ் செய்" என்று முழக்கம் செய்வோம். அதுவே, ஜவஹருக்குக் காட்டும் நன்றி. தாய்க்குச் செய்யும் தொண்டு.

'கடவுளை மறந்தாவது கடவுள் தொண்டு செய்' என்றான் ஒரு புலவன். மனித வாழ்க்கையின் லட்சியத்தை இந்த ஒரு வாக்கியத்திற்குள்ளே எவ்வளவு அழகாகத் திணித்து வைத்திருக்கிறான் இவன். அந்தத் தொண்டிலேதான் நாம் இன்பங் காண்போம். மறு பிறவியிலே என்ன நடக்கப்போகிறதென்பதைப்பற்றி நாம் அதிகமாகக் கவலை கொள்ளப் போவதில்லை. இந்தப் பிறவியில் எழுந்துள்ள பிரச்னைகள்தான் நமது கவன மனைத்தையும் கவர்ந்து நிற்கும். கடவுள் நம்பிக்கை நமக்கு நிரம்ப உண்டு. ஆனால் அதற்காக நாம் தன்னம்பிக்கையை இழந்து விடத் தயாராயில்லை.

விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக, உலகம் தற்பொழுது, இடத்திலும்

காலத்திலும் சுருங்கிக் கொண்டு வருகிறது. இந்த நிலையில், தமிழர்களாகிய நாம் உலகத்தோடு ஒட்டி வாழா விட்டால் வீழ வேண்டியதுதான். இந்த வீழ்ச்சி வாராமல் தடுப்பதுவே 'ஜோதி'யின் வேலையாக இருக்கும்.

சீன தேசத்திலிருந்து பெரு தேசம் வரையிலுள்ள பல நாட்டுக் காவியங்களாகிற வற்றாத ஊற்றுக்களைத் தமிழர்களுக்கு அறிமுகப் படுத்திப் பருகச் செய்வோம். இதிகாச மண்டலத்திலே தோன்றிய சரித்திர நாயகர்களையெல்லாம் நமது வாழ்வோடு பிணைத்துக் காட்டுவோம். குழந்தைப் பாதுகாப்பு முதல் உலக நிர்வாகம் வரையில் அனைத்தையும் அணி படுத்தி வைப்போம். விஞ்ஞானத்திலும் பிற நாகரிகத் துறைகளிலும் புகுந்து சென்று, வேண்டுவனவற்றைக் கொண்டு வந்து தமிழர் முன்னிலைப் படுத்துவோம். ஆழ்ந்த சுரங்கமாயிருந்தாலும், மேகத்தினால் மூடப் பெற்ற உயர்ந்தமலைச் சிகரமாயிருந்தாலும் இறங்கியும் ஏறியும் முறையே சென்று நல்லனவற்றை யெல்லாம் திரட்டித் தமிழ்த் தாயின் திருவடிகளில் காணிக்கையாக வைப்போம். பொதுவாக இலக்கியப் பூஞ்சோலையிலே யாகட்டும், யுத்த களத்திலே யாகட்டும், தமிழன் தலை நிமிர்ந்து நடக்க வேண்டும்; அது மட்டும் போதாது. பிறர்க்கு வழி காட்டவும் வேண்டும். இதுவே நமது கலையாத கனவு; மாறாத லட்சியம்.

சுருங்கக் கூறுமிடத்து, 'ஜோதி' இறந்த காலத்தோடு நிகழ்காலத்தைப் பிணைக்குஞ் சங்கிலி; நிகழ் காலத்திலிருந்து வருங்காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லும் ஏணி; உலக வீரர்களின் யுத்த மேடை; காவிய ரஸிகர்களின் உத்தியான வனம்; உலகத்தாரோடு நம்மை ஒப்பிட்டுக் காட்டும் தராசு; முன்னேற்ற வழிகளையெல்லாம் சுட்டிக் காட்டும் கலங்கரை விளக்கம்.

'ஜோதி'க்கு நிற, சமூக, சமய வேற்றுமை ஒன்றுமே கிடையாது. உலக சகோதரத்துவத்திலே அதற்குப் பூரண நம்பிக்கை உண்டு. ஆனால் தேசியக் கண் கொண்டுதான் இந்த உலக சகோதரத்துவத்தைப் பார்க்கும்.

இத்தகைய சங்கற்பத்துடன் 'ஜோதி'யை நமது அன்னையின் பாதார விந்தங்களில் ஏற்றி வைக்கிறோம்.

உதய காலத்தில்

'ஜோதி'யின் உதய காலத்திலேயே காங்கிரஸ் சரித்திரத்தில் ஒரு புதிய ஏடு திறக்கப்பட்டதைக் குறித்து நாம் மகிழ்ச்சியடைகிறோம். சென்ற பதினேழு வருஷ காங்கிரஸ் போராட்ட களத்தில் அரசாங்க மாளிகையும், காங்கிரஸ் மாளிகையும் இரு தரத்துப் பாடி வீடுகள் போலவே இருந்தன. ஆனால் இப்பொழுது தான்—காந்தியடிகளின் சிறந்த ராஜதந்திரம் வெளிப்படுகின்ற இந்த நவயுகத்திலேதான்—இரு வீட்டினரும் கைகுலுக்குகிறார்கள். மகாத்மா காந்தி கூறுவது போல, இரண்டு பேருடைய சரித்திரம், நாகரிகம், கலைஞானம், லட்சியம் எல்லாம் வேறு வேறு. ஒருவரை யொருவர் அறிந்து கொள்ளவும் மாறவுந்தான் இப்பொழுது கைகுலுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இங்கேதான் காங்கிரஸ்காரர்களுடைய பெரிய பொறுப்பு இருக்கிறது. இந்தப் பொறுப்பை நிறைவேற்ற எல்லா மாகாண கவர்னர்களும், அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதே நமது விருப்பம்.

காங்கிரஸ் அரசாங்கம்

காங்கிரஸ் கட்சியினர், ஆறு மாகாணங்களில் மந்திரிப்பதவிகளை ஏற்று ராஜ்யபாரம் நடத்திக்கொண்டு வருகிறார்கள். இனி, காங்கிரஸ்காரர்கள் உத்தியோகங்களை ஏற்றுக்கொண்டது சரியாஇல்லையாவென்பதைப்பற்றி வாதஞ் செய்து கொண்டிருப்பது காலத்தை வீணாக்குவதாகும்; தேச சக்திகளையும் சிதறஅடிப்பதாகும். ராஷ்ட்ர பதிக்கு, உத்தியோக மேற்றுக் கொள்ளும் விஷயத்தில் கருத்து வேற்றுமை இருக்கிறது என்பது பகிரங்க ரகசியம். ஆனாலும் அவர் ஒரு போர் வீரன் போல காரியக் கமிட்டியின் தீர்மானத்திற்குக் கட்டுப்பட்டு, நிருவாகக் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருக்கவில்லையா? உத்தியோக மேற்றுக் கொள்வதே காங்கிரஸின் லட்சியமல்ல; லட்சியத்தையடைய இஃதொரு சாதனந்தான். அவ்வளவோடு நமது தர்க்க அறிவை நிறுத்திக் கொண்டு காங்கிரஸின் இந்தப் புதிய முயற்சிக்கு வெற்றி தேடுவது நமது கடமை.

ஒரே பார்வை

காங்கிரஸ், சென்ற ஐம்பத்திரண்டு வருஷகாலத்தில், எத்தனையோ மகத்தான மலைகளையும், ஆழமான ஆறுகளையும் கடந்து வந்திருக்கிறது. ரத்த வெள்ளத்திலேயும் நீந்தி யிருக்கிறது. தடியடி மழையிலே நனைந்திருக்கிறது. ஆனால், லட்சியத்திலே வைத்திருக்கும் பார்வையை மட்டும் அது விலக்கிவிடவில்லை. அந்தப்பார்வையோடு தான், மந்திரிப் பதவிகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. உத்தியோகங்களை ரோஜாப்பூ படுக்கையாகவோ, சிரம பரிகாரஞ் செய்து கொள்வதற்குரிய இடமாகவோ, அதிகார சக்கரத்தை ஆர்ப்பாட்டமாகச் சுழற்றும் மேடையாகவோ அது கருதவில்லை. காங்கிரஸ் மந்திரிகள் அமர்ந்திருக்கும் நாற்காலிகள் பலிபீடங்கள்; மனித உணர்ச்சி நிறைந்தவை; மின்சார வேகத்தில் இயங்கி, மக்களுக்கு நல்வாழ்வை நல்கவேண்டுமென்ற அவா மிகுதியும் கொண்டவை. "கிராமங்களனைத்தையும் சிரிக்கச்செய்ய, எங்களுக்கு ஆண்டவன் சக்தியை அருள்வானாக" என்று ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் கூறிய ஒரு வாக்கியத்திலிருந்தே காங்கிரஸ்காரர்கள், இந்தப் பதவிகளை எவ்வாறு உபயோகிப்பார்கள் என்பது நன்கு தெரியவில்லையா?

கிராமங்களில்

"உலகத்திலுள்ள நாடுகளில் நமது நாடுதான் பரம தரித்திரம் நிறைந்த நாடு. லட்சக்கணக்கான ஜனங்கள், இங்கே அரைப் பட்டினியோடு வாழ்கிறார்கள்" என்று காந்தியடிகள் கதறுகிறார். இந்தியா எங்கே யிருக்கிறது? மாடி வீடுகளும் கார் ரோட்டுகளும் போட்ட ஐயாயிரத்துச் சொச்சம் நகரங்களிலேயா? அல்லது கன்னி மேயோவின் புத்தகத்திலேயா? இல்லை; இல்லை. போக்கு வரவுக்கு வசதியில்லாத பாதைகளும், விளையாத நிலங்களும், வாசஞ் செய்வதற்கு லாயக்கில்லாத வீடுகளும் உடைய ஏழு லட்சம் சொச்சத்துக் கிராமங்களிலே இந்தியா இருக்கிறது. மேலே வரிச்சுமை இறுக்க, கீழே பசிப்பிணி இழுக்க, ஏங்கிநிற்கும் லட்சக்கணக்கான கிராமவாசிகளின் சூனியப் பார்வையிலே இந்தியா இருக்கிறது. இந்த இந்தியாவிலேதான் காங்கிரஸின் கவனமெல்லாம் செல்லும். அப்படிச் செலுத்துவதற்கு, இந்த மந்திரிப் பதவிகளை ஒரு கருவியாகவே காங்கிரஸ்காரர் உபயோகித்துக் கொள்வர்.

காங்கிரஸ்காரர் கடமை

காங்கிரஸ்காரர்கள் இனி மிக ஜாக்கிரதையாக நடந்து கொள்ளவேண்டுமென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஸ்ரீமான் ஆச்சாரியார் கூறிய மாதிரி, காங்கிரஸைச் சேர்ந்த ஒரு சிலர் மட்டும் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. காங்கிரஸே உத்தியோகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. பொறுப்பு எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு கடமையும் அதிகமாகிறது. ஜெர்மானிய நிபுணன் ஒருவன் சொன்னதுபோல, அதிகாரத்தைப் பெற்று விடுவது சுலபம். அதனைவைத்துக் காப்பாற்றுவது கடினம். இதனால், நான்கணு சந்தா செலுத்துகிறஒவ்வொரு காங்கிரஸ்காரனும், காங்கிரஸ் மந்திரிகள், அரசாங்க பீடத்திலிருந்து செய்யும் தேசீய முயற்சிகளுக்குத் துணை செய்ய வேண்டும். ஜனங்களுடைய ஒழுக்கத்திற்குத் தான் வழி காட்டியா யிருக்க வேண்டும். அவர்களுக்குக் கண் திறந்துவிடவேண்டும். தான் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் ஒழுங்கைப் புகுத்தவேண்டும். இயற்கை வாழ்விலே அழகு காணவேண்டும். இம்மாதிரி பொதுப்படையாகத்தான் நாம் சொல்லிக்கொண்டு போகலாமே தவிர குறிப்பிட்ட திட்டங்கள் எதையும் வகுத்துக்காட்ட முடியாது. ஏனென்றால், அந்தந்த மாகாண நிலைமைக்குத் தக்கவாறு, மந்திரிகள் செய்யப்போகிற சீர்திருத்தத் திட்டங்களில் நாம் அத்து மீறிப் பிரவேசிக்க விரும்பவில்லை.

சில வார்த்தைகள்

மந்திரிமார்களுக்கும் சில வார்த்தைகள் கூற விரும்புகிறோம். சகோதரர்களே! உங்களிற் பெரும்பாலோர் தேசத்திற்காகப் பல கஷ்டங்களை அநுபவித்திருக்கிறீர்கள். எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்து விட்டீர்கள். உங்களுடைய விசாலமான தியாக புத்திதான், இந்த மந்திரி உத்தியோகத்தை ஏற்றுக் கொள்ளத் தூண்டியிருக்கிறதென்பதை உணராதார் யார்? முதலாவது நீங்கள் செய்ய வேண்டியது, தேசத்தினுடைய கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டும். ஏனென்றால், ஒரு தேசத்து ஜனங்கள் நிமிர்ந்து நடப்பதற்கும், அல்லது தலை குனிந்து நிற்பதற்கும் அவர்களுக்கு அளிக்கப் படும் கல்வி முறையே காரணமாயிருக்கிறது. ஐரோப்பிய மகா யுத்தத்திற்குப் பிறகு சோர்ந்து போயிருந்த இத்தலி, ஜெர்மனி, துருக்கி முதலிய தேசங்களில், அந்தந்த சர்வாதிகாரிகளாக வந்த, முஸோலினி, ஹிட்லர், கமால் அதாதுருக் ஆகியோர் முதலில் கல்வியிலேயே கவனஞ் செலுத்தத் தொடங்கினார்கள். பத்து வருஷங்களுக்குள்ளே ஒரு புதிய ஜாதி பிறந்து விட்டது. இதனை நமது மந்திரிமார்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். அதிகமான சர்வ கலாசாலைகளை ஏற்படுத்தி, கட்டிடங்களிலே ஏராளமான பணத்தை நீங்கள் செலழிக்க மாட்டீர்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆரம்பப் பள்ளிக்கூடங்களை அதிகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு கிராமத்திற்கும், குறைந்தது ஒரு பள்ளிக்கூடமும் வாசக சாலையுமாவது இருக்க வேண்டும். இது போழ்து, சில புள்ளிகளை உங்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறோம். இந்தியாவின் ஜனத் தொகை ஒவ்வொரு பத்து வருஷத்தின் ஜன கணிதப்படி அதிகப் பட்டுக் கொண்டே வந்திருக்கிறதல்லவா? அதைப்போல கல்வியற்

றவர் தொகையும் அதிகப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. 1901ம் வருஷத்திலிருந்து 1931ம் வருஷம் வரை சுமார் 60 லட்சம் பேர் கல்வியற்றவரா யிருக்கின்றனர். இதனால் கல்வியில் நாம் எவ்வித முன்னேற்றத்தையும் அடையவில்லை யென்று தெரிகிறது. இந்த நிலைமையை மாற்றியமைப்பது உங்கள் கடமையாகும்.

பரிசோதனை

உலகமனைத்தும் உங்களைக் கொட்டாத கண்ணோடு பார்த்துக் கொண்டிருக்கிறது. உங்களுடைய நிருவாகத் திறமைக்கு இது பரிசோதனை காலம். புதிய வழிகளைச் சிருஷ்டிக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு அதிகம் இருக்கிறது. இடையிலே முட்டுகள் தென்படலாம். காலுறுகள் குறுக்கிட்டு ஓடலாம். நீங்கள் அவைகளையெல்லாம் அசாதாரண தைரியத்தோடு சமாளித்துக்கொள்ள வேண்டும். ஏன் சமாளித்துக் கொள்ள மாட்டீர்கள்? இந்திய ஜனங்களுடைய பூரண ஆசீர்வாதம் உங்களைக் கவிந்து கொண்டிருக்கிறது. அந்த ஜனங்களுடைய மனோபாவத்தின் பிரதிபிம்பமாக இருக்கும் மகாத்மா காந்தியின் புன்சிரிப்பு உங்களுக்கு வழி காட்டிச் செல்கிறது.

உத்தியோகஸ்தர்கள்

இந்தச் சமயத்தில் அரசாங்க நிரந்தர உத்தியோகஸ்தர்களை நாம் மறந்து விடமுடியாது. அவர்களிடத்தில் அறிவு, ஆற்றல், அநுபவம் முதலிய அனைத்தும் ஒருங்கே சேர்ந்திருக்கின்றன. அவையனைத்தையும், மந்திரிமார்களுக்குத் தயங்காது உதவுவார்களென்று நம்புகிறோம். காலத்தோடு ஒட்டிப் போகக்கூடிய சக்தி அவர்களுக்கு அதிகம் உண்டு. இந்தச் சந்தர்ப்பத்தில் எவ்விதத்திலும் அவர்கள் பின் வாங்க மாட்டார்கள் என்பது நமது நிச்சயமான நம்பிக்கை. ஜனங்களின் அதிகாரிகளாகத் தங்களைக் கருதிக்கொள்ளாமல், ஜெர்மன் சக்ரவர்த்தியாயிருந்த மஹா பிரடெரிக் மன்னன் சொல்லிக் கொண்டதுபோல், ஜனங்களின் தொண்டர்களாயிருந்து, தேசத்தின் நன்றியறிதலினின்று எழும் ஆனந்த பாஷ்பத்தில் அவர்கள் நீராட வேண்டுமென்று விரும்புகிறோம்.

லார்ட் லின்லித்கௌ

காங்கிரஸ்காரர்கள், உத்தியோகமேற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சரளமான நிலைமையை உண்டு பண்ணியதற்கு முக்கிய காரணராயிருந்தவர்

ராஜப் பிரதிநிதி லார்ட் லின்லித்கௌ.

சென்ற மார்ச் மாதம் 17-ந்தேதி, டில்லியில் கூடிய காங்கிரஸ் கூட்டம் காங்கிரஸ்காரர் மந்திரிப்பதவிகளை ஏற்றுக்கொள்வதில்லை யென்று தீர்மானித்து விட்டபிறகு, இங்கிலாந்திலும்

இந்தியாவிலும் வாதப் பிரதிவாதங்களும், ஆட்சேப சமாதானங்களும் நிறைய நடைபெற்றன. ஆனால் லார்ட் லின்லித்கௌ, இவை யெவற்றிலும் தலையிட்டுக்கொள்ளவில்லை. ஜூன் மாதம் 22ந் தேதி இவர், இந்திய அரசியல் நிலைமையைப்பற்றி வெளியிட்ட அறிக்கையில், இவருடைய மனித உள்ளம் அப்படியே திறந்து காட்டப் பட்டது. "நாங்கள் குற்றங்கள் செய்திருக்கலாம். நாங்களும் மனிதர்கள்தானே. நாங்கள் பல சந்தர்ப்பங்களை இழந்து விட்டிருக்கலாம்" என்ற இந்த அறிக்கையில் காணப்பட்ட வாக்கியங்கள், இவரிடத்தில் அனைவருக்கும் நம்பிக்கையை யுண்டு பண்ணிவிட்டன. இந்திய தேசீய அபிலாஷைகளை இவர் அறிந்திருக்கிறார். காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை நாம் அங்கீகரிக்கிறவர்களில்லை யானாலும், லார்ட் இர்வின் (இப்பொழுது லார்ட் ஹாலி பாக்ஸ்) ஒரு சிறந்த மனிதர் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். அவருக்குப் பக்கத்தில் லார்ட் லின்லித்கௌவுக்கு ஸ்தானம் கொடுக்க விரும்புகிறோம்.

தருமம் எங்கே?

1936ம் வருஷத்தில் உலக மனைத்திலும் 11,343, 948 பைபில் பிரதிகள், கிறிஸ்தவ மதப் பிரசார சங்கத்தினர்களால் விநியோகிக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் எங்கெந்த நாடுகளில் இவை அதிகமாகப் பரப்பப் பட்டிருக்கின்றன என்பதைப் பாருங்கள். சீனாவிலும் மஞ்சூரியாவிலும் மட்டும் 4,574,000 பிரதிகள்; ஆப்ரிக்காவில் 100,000 பிரதிகள்; ஸ்பெயினில் 211,000 பிரதிகள் செலவழிந்திருந்தும், இந்த மூன்று நாடுகளில்தான் அதிகமாகக்கொந்தளிப்பு இருக்கிறது. இந்தச் சங்கத்தார், தங்கள் அறிக்கையில், பைபிளைப் பரப்புவது ஆசியா கண்டத்தில் சுலபமாக இருந்ததென்றும், ஐரோப்பா கண்டத்தில் கடினமாகவே இருந்ததென்றும் குறிப்பிடுகின்றனர். சிறப்பாக இத்தலியில் ஆறுமாத காலம் ஒரு பிரசாரமுமே செய்யமுடிய வில்லையாம். இதில் என் ஆச்சரியம்? முஸோலினிதான், எதியோப்பியாவில் கிறிஸ்தவ தருமத்தைப் பரப்பிக் கொண்டிருந்தா ரல்லவா? கிறிஸ்து நாதரைப் பெரிதும் கொண்டாடும் ஐரோப்பாவில், அவருடைய தருமத்தைப் பரப்புவது கடினமாயிருக்கிறதென்றால், ஐரோப்பியர், மேற்படி தருமத்தை வேண்டாமென்று மறுக்கின்றனர் என்று அர்த்தமா? அல்லது ஆசியா கண்டத்தில் தான் கிறிஸ்துவ தருமம் வாசங்கொள்ள விரும்புகிறதென்று பொருளா? எப்படியோ, ஸ்பெயினில்தான் இப்பொழுது இந்தத்தருமம்தீவிரமாக தாண்டவம் செய்கிறது!!

தினம் ஒரு லட்சம்

தினசரிப் பத்திரிகைகளை நாம் புரட்டிப்பார்க்கிறபோது, ஒவ்வொரு நாளும் 'வட மேற்கு எல்லைப்புறத்தில் குண்டுகள் போடப்பட்டன, அந்த ஜிர்கா கூடியது, இந்த ஜாதியார் பணிந்தார்கள்' என்பன போன்ற செய்திகளைப் படிக்கிறோம். இவற்றில் எத்தனை பேர் அக்கறை செலுத்துகிறார்களோ தெரியாது. 1936ம் வருஷம் நவம்பர் மாதம், எல்லைப் புறத்தில் அமைதியை நிலை நாட்டும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு நாற்பதினாயிரம் துருப்புகள், ஆயிரம் கூலிகள், எழுபத்தைந்து ஆகாய விமானங்கள், இந்த ஆகாய விமானங்களுக்கு எழுநூறு உத்தியோகஸ்தர்கள் முதலியோர் உபயோகப்படுத்தப் படுகிறார்கள். இதற்கு நிரம்ப சிக்கன

மாகவே செலவு நடைபெறுகிறது. தினம் ஒரு லட்சம் ரூபாய் தான். 1937ம் வருஷம் அக்டோபர் மாதத்துடன் இந்த அமைதியை நிலை நாட்டும் வேலை முடிந்துவிடுமென்றும், இதற்குள் மூன்று கோடி ரூபாய் தான் செலவழியும் என்றும் திட்டம் போட்டிருக்கிறார்கள். அமைதியை எவ்வளவு விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது!

சரித்திரச் சின்னங்கள்

ரங்கூனுக்குச் சுமார் ஐம்பது மைல் வடமேற்கே பெகு என்ற ஊர் இருக்கிறது. இங்கே ராஜேந்திர சோழனுடைய ஜயஸ்தம்பம் ஒன்று உண்டு. இதைப்பற்றி விவரமாக ஸ்ரீமான் கு. கோ. கிருஷ்ணன், இந்த இதழில் (20-ம் பக்கம்) எழுதியிருக்கிறார். இந்த ஜயஸ்தம்பத்தைப் பற்றிக் குறிக்கும் கற்பலகையை, இப்பொழுது எடுத்து விட்டிருக்கிறார்கள் என்று அறிந்து வருந்துகிறோம். தமிழர்கள் ஒரு காலத்தில் பர்மாவில் குடியேறினார்கள் என்றால் அது, பர்மிய சகோதரர்களுக்கு எவ்விதத்திலும் இழிவாகாது. தவிர, சரித்திரச் சின்னங்களை அப்படியே பாதுகாப்பதுதான் முறை. இந்தியாவில், புராதனச் சின்னங்களையெல்லாம் அப்படியே பாதுகாத்து வரவேண்டுமென்பதற்காக, தனியாகவே ஓர் அரசாங்கஇலாகாவை லார்ட் கர்ஸன் சிருஷ்டி செய்தார். இது விஷயத்தில் நமது பர்மிய அன்பர்கள் தாராள மனப்பான்மை காட்ட வேண்டுமென்று கோருகிறோம். மாகாண அரசாங்கத்தார் வேண்டுவன செய்வார்களென்ற நம்பிக்கை நமக்குத் திடமாக உண்டு.

ஜாதிப் பெயர்

பிரெஞ்சு இந்தியாவில் ஒரு புதிய உத்திரவு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதாவது, கோர்ட் தஸ்தாவேஜுகளிலோ, அல்லது ஜனன மரண ரிஜிஸ்தர்களிலோ, ஒருவருடைய பெயருக்குப் பின்னால் அவர்களுடைய ஜாதிப் பெயரைச் சேர்க்கக் கூடாதென்பது இந்த உத்திரவு. இதனை நாம் அப்படியே ஆதரிக்கிறோம். உலகமெல்லாம் ஒன்றுசேர்ந்துவாழ வேண்டிய இந்தக் காலத்தில் ஜாதிக்குள் ஜாதியென்று பிரிந்து கொண்டிருப்பதோடு கூட, அதனை தஸ்தாவேஜுகளிலும் பதிவு செய்து கொள்ள வேண்டுமா? பிறப்பிலே ஜாதி வேற்றுமை கிடையாது என்பது நமது திடமான நம்பிக்கை. பகவத்கீதை தான் நமக்கு ஆதாரம். நமக்குள்ளே யிருக்கும் பிரிவினைகளை ஒன்றுபடுத்தி சட்டமாகிற சிமெண்ட் தேவைதான், திருவாங்கூரில் ஆலயப் பிரவேச உரிமையைத் தீண்டாதாருக்குச் சட்டபூர்வமாக அளித்திராவிட்டால் அவர்கள் விமோசனங் காண்பதுதான் எப்பொழுது? சமூக சம்பந்தமான இத்தகைய சிக்கலான பிரச்னைகள் காங்கிரஸ் மந்திரிகளின் பரிசீலனைக்கு வரக்கூடும். அப்பொழுது 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என்று பாடிய பாரதியாரின் கம்பீர வாக்கு அவர்கள் இதயத்தில் ஒலித்துக் கொண்டிருக்குமல்லவா?

ஒரு வருஷத்திற்கு மேல்

1937ம் வருஷம் ஜூலை மாதம் 17ந் தேதியோடு ஸ்பெயின் குழப்பம் தொடங்கி ஒரு வருஷமாகிறது. மேலே 15 நாட்கள் கூட ஆகி விட்டன. இதன் முடிவு எப்பொழுது என்ற கேள்விக்கு, எப்பொழுது என்ற எதிரொலிதான் பதிலாகக் கிடைக்கிறது. கார்ல் மார்க்ஸ் ஒரு சமயம கூறினான்:—பிரான்ஸில் புரட்சி ஏற்பட்டால் மூன்று நாட்களிலே

முடிந்து விடும். ஸ்பெயினில் புரட்சி ஆரம்பித்த மூன்று வருஷத்திற்குள் முடிந்தால் அது குறைவான காலம். ஒன்பது வருஷம் வரை நீடித்திருந்தால் அதில் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. கார்ல் மார்க்ஸ் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கலாம். ஆனால் இந்தச் சமயத்தில், உலக நன்மையை முன்னிட்டு சிறப்பாக ஐரோப்பாவின் க்ஷேமத்தைக் கருதி—அவனுடைய வாக்கு பொய்த்துப் போக வேண்டுமென்று தான் விரும்புகிறோம். ஒரு கொள்கைக்கும் மற்றொரு கொள்கைக்குந் தான் இப்பொழுது ஸ்பெயினிலே போராட்டம். இதற்காக, எத்தனை உயிர்கள் பலி வாங்கப் படுகின்றன? 1936ம் வருஷம் ஜூலை மாதம் 17ந் தேதி பகிரங்கமாகக் கலகம் தொடங்கிய போதிலும், உண்மையிலேயே, 1931ம் வருஷம் ஏப்ரல்மாதம் 14ந் தேதிக்குப் பிறகே-அதாவது அல்பான்ஸோ மன்னன், நாட்டை விட்டு வெளியேறியதினத்திலிருந்தே-கலகத் தீ புகைய ஆரம்பித்துவிட்டது. அதுமுதற் கொண்டு ஸ்பானிஷ் பொது ஜனங்கள், அரசியல் வாதிகளின் கையில் அகப்பட்டுக் கொண்டு பலவித ஹிம்சைகளை அநுபவித்து வருகிறார்கள். அப்படியிருந்தும், தங்களுடைய தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக அவர்கள் இன்னும் மன்றாடிக் கொண்டிருப்பதைக் கண்டு நாம் தலை குனிந்து கொள்ளவேண்டி யிருக்கிறது. ஸ்பெயின் தேசத்துச் செய்திகளைப் படிக்கிறபோது, ஸ்பானியர்களுக்கு வெடிகுண்டு வீச்சுகளும், பீரங்கிச்சப்தமும் சர்வ சகஜமாகிவிட்டனபோல் தெரிகிறது. இவர்களுடைய தியாகம், இன்றைக்கில்லாவிட்டாலும், என்றைக்காவது நன்மையைத் தராமல் போகுமா?

தளபதி பிராங்கோ

தளபதி பிராங்கோவுக்கு இப்பொழுது இத்தலி, ஜெர்மனி ஆகிய நாடுகளின் உதவி இருக்கிறதென்பதை எவரும் மறுக்க முடியாது. 'போபோலோ-டி-இடாலியா' பத்திரிகையில், இத்தலி, ஸ்பெயின் யுத்தத்தில் நடுநிலைமை வகிக்கவில்லையென்பது பகிரங்கமாக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. இப்படி

யே தான் ஜெர்மனியின் உதவி பிராங்கோவுக்கு இருக்கிறது. இதனை மற்ற வல்லரசுகள் தடுக்கமுடியவில்லை. தற்போதைய அபேதவாத அரசாங்கத்திற்கு ருஷ்யாவின் உதவி இருக்கிறதென்று சொல்லித்திருப்தி அடைந்துவிடுகின்றன. தவிர, மூர்களின் படை உதவி பிராங்கோவுக்கு அதிகம். இது ஸ்பானியர்களுக்கு அதிகவெறுப்பாகிறது. ஏனென்றால் மூர்படைகளை,

அந்நிய நாட்டுப் படைகளாகவே, ஸ்பெயின் அரசாங்கத்தார் கருதி வந்திருக்கின்றனர். தவிர, ஸ்பானியர்களுக்கும் மூர்களுக்கும் பரம்பரைப் பகைமை யுண்டல்லவா? அப்படியிருக்க, அதே மூர்களின் துணைகொண்டு, ஸ்பானியர்கள் மீது வெற்றிகாண பிராங்கோ முயற்சிப்பது பாசிஸத்தின் தருமம் போலும்!

வல்லரசுகளின் நடு நிலைமை

ஸ்பெயின் யுத்தத்தை உள் நாட்டு யுத்தமாகவே வரம்பு கட்டிவிட வேண்டுமென்று பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் ஓயாமல் பேசி வருகிறார்கள். ஜூன் மாதம் 25ந் தேதி பிரதம மந்திரி சேம்பர்லேன் காமன்ஸ் சபையில் பேசிய போது, ஸ்பெயின் யுத்தத்தை அந்த நாட்டோடு அடக்கி, ஐரோப்பா கண்டத்தின் சமாதானத்தை நிலை நிறுத்துவதுதான் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கொள்கை என்று கூறினார். அப்படி யிருக்க, ஏன் ஒவ்வொரு நாடும், தங்களுடைய ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொண்டு வருகின்றன? 18-7-37ல் ஸ்ரீ சேம்பர்லேன் மிடில்ஸ்பரோவில் பேசிய போது, "சென்ற வருஷத்தைவிட இந்த வருஷம் நாம் பலசாலிகளாயிருக்கிறோம். நாம் தாக்கப்பட்டால் அதை எதிர்த்து நிற்க, நாம் பூரணமான தயாரிப்பில் இருக்கிறோம்" என்றும் பேசினார். இதன் பொருளென்ன? மற்றொரு மகாயுத்த நாடகத்திற்கு, ஸ்பெயின் தேசத்திலே இப்பொழுது ஒத்திகை நடக்கிறதா? அப்படி சமீபத்தில் ஒரு யுத்தமும் வராதென்று, ஸ்ரீ லாயிட் ஜார்ஜ், 'ஸ்ட்ராண்ட் மாகஸீனில்' கூறுகிறார். ஆனால், ஐரோப்பிய அரசியல் சமுத்திரம் கொந்தளித்துக்கொண்டிருக்கிறதே!



ஸ்பெயின் தீயிலே ஐரோப்பிய வல்லரசுகள் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றன!

ஜோதி

—சுவாமி பரிபூரணானந்தா

நாடு விட்டு நாடு வந்த தமிழர்களின் ஞானதாகத்தைத் தீர்த்து வைக்கும் பெரியார் ஸ்ரீ பரிபூரணானந்தர். இவர் உழைப்பின் வடிவம். நாட்டுப்பற்றுக்குச்சமயப்பணி முரண்பட்டதல்ல வென்ற பாடத்தை இவர் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொள்ளலாம்.

'ஜோதி'ப் பத்திரிகை புறப்படுகின்ற முதல் இதழிலேயே 'ஜோதி' என்னும் பொருள்பற்றி வரைவது பொருத்தமல்லவா? ஆம்! அந்தப் பொருத்தத்தையாதாரமாகக்கொண்டு 'ஜோதி'யின் பொருத்தத்தைக் காண்போமாக!

'ஜோதி' என்னும் மொழியைத் தமிழிலக்கண நூலார் வடமொழித் தற்பவமென்று கூறுவர். தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்பிருந்தாலும் இராவிட்டாலும் சமஸ்கிருத எழுத்துக்களின் உச்சரிப்புள்ள சமஸ்கிருத பதத்துக்கு வடமொழித்தற்பவமென்றும், தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்புக்குச் சமமான சமஸ்கிருத எழுத்துக்களாலான சமஸ்கிருத பதத்துக்கு வடமொழித்தற்சமம் என்றும் பெயர். ஜாதி—சாதி என்று வருவதுபோல், வட மொழித்தற்பவம் வட மொழித் தற்சமமாவதுமுண்டு. அந்த இலக்கணப்பிரகாரம் 'ஜோதி' என்னும் மொழி சோதி என்று கூறப்பெறும். ஆனால் 'ஜோதி' என்றபோது பிரகாசம் அல்லது வெளிச்சம் என்ற பொருளும், சோதி என்ற போது அப்பொருளோடு 'ஆராய்ந்துபார்' என்ற மற்றொரு பொருளும் வெளிப்படுகின்றன. இதனால் 'ஜோதி' என்னும் மொழிக்குப் பிரகாசம் அல்லது வெளிச்சம் என்ற பொருள் தோன்றுவதோடமைந்து விடாமல், விசாரித்துப் பார்த்தால் வேறு பல உண்மைகளும் விளங்குமென்று நம் கன்னித் தமிழன்னை நமக்குக் கற்பிப்பதாகக்கொண்டு ஆராய்வோம்.

பிரகாசம் அல்லது வெளிச்சமானது இருளைப் போக்கும் சக்தி வாய்ந்தது. இருளைப் போக்குவதென்றால் அப்படி ஒரு வஸ்து எங்கும் உண்டா? அதாவது இருளென்பது இருக்கின்ற ஒரு பதார்த்தமா என்ற கேள்வியெழும். அதற்கு விடையாக 'வெளிச்சமில்லாததே இருள்' என்று யாரும் கூறுவர். அவ்வாறாயின் இல்லாத இருளைப் போக்குகின்றதென்னும் வாக்கியம் சிரிப்புக்கிடந்தரும். பின் இருளைப் போக்குவதாக நாம் பிரத்தியக்ஷமாய்க் காண்கின்ற இந்த அநுபவத்தை எப்படியில்லையென்று கொள்வது? 'பொருளல்லவற்றைப் பொருளென்றுணரு மருளானாமாணாப் பிறப்பு' என்னும் பொய்யாமொழியை மெய்யென நம்பி, இல்லாததை மயக்கத்தால் இருப்பதாக எண்ணிப் பேதைமைப் பிறப்புற்று வரும் ஜீவசுபாவத்தை நோக்குவோமாயின் இருளைப் பொருளெனக் கொள்வது மயக்கமென்றே தெளியலாம். அன்றியும் இருக்கும் பொருளாகிய வெளிச்சமில்லாததே இருள் என்று சொல்வது கூடத் தப்பென்று தோன்றுகிறது. ஏனெனில் 'இருக்கும் பொருள் இல்லாததெப்படியாகும்?' என்று கேள்வியெழும். அதற்கு 'வெளிச்சம் ஒருபோதும் இல்லாது போவதில்லையென்றாலும் வெளிச்சத்தைப் பார்க்கின்ற ஒருவன் அந்தகனாயிருந்தால் வெளிச்சமில்லாதது போலத்தானே தோன்றும்' என்ற விடையுதிக்கும். இதிலிருந்து வெளிச்சமில்லாதது போல் தோன்றுவதுதான் இருளென்றும்,

தங்க விலை இறங்குமா?

—ரா. பத்மநாப ராஜு

ஸ்ரீமான் ராஜு பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தின் காரியஸ்தர். பர்மா இந்திய தூது கோஷ்டியுடன் இங்கிலாந்துக்குச்சென்று நல்ல வேலை செய்தவர். தங்கத்தைப்பற்றித் 'தங்க'மாக எழுதியிருக்கிறார்.

தங்கமென்றால் ஆசைப் படாதார் உலகத்திலுண்டோ? அப்படி யாராவது இருந்தால் அவர் உலகத்தில் வாழ்ந்தும் வாழாதவர்; ஒரு துறவி. இந்தியப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் தங்க நகைகள் போட்டுக்

உண்மைக் கயிற்றைக் கண்ட பின் கயிற்றைப் பாம்பெனக் கண்டவன், கயிற்றையே பாம்பெனக் கொண்டதாகக் கூறுவதுபோல் வெளிச்சத்தையே மயக்கத்தால் இருளென்று கொண்டோமென்றும் கண்டு கொள்ளலாம். அத்துடன் வெளிச்சத்துக்கு வேறாக வெளிச்சத்தைப் பார்க்கின்ற வஸ்து வெளிச்சத்தின் அமிசம் பெறாதபோது வெளிச்சத்தையே இருளெனக் கொள்ளுகின்றதென்னும் உண்மையும் புலப்படுகின்றது.

இதுவரை வெளியிலே உலகத் தோற்றத்தில் ஆராய்ந்தோம். இனி உள்ளே உண்மைத் தோற்றத்துள் ஒரு சிறிது செல்வோம். வெளியிலே காண்கின்ற வெளிச்சத்துக்குக் கண் வேண்டுமென்றும், அந்தக் கண் சரியாயில்லையென்றால் இருள் தோன்றுமென்றும் கண்டாற்போல் நமது கண்களை மூடிக் கொண்டாலும் உள்ளே ஒரு வெளிச்சம் தோன்றுகிறதே, அந்த வெனிச்சத்தை எதனால் காண்கிறோம்? இந்தக் கேள்விக்கு ஸ்ரீ கைவல்ய நூலார் கூறுகின்ற விடையிது:- 'எரிகின்ற விளக்கால் கண்ணால் இருட்பொருள் காணல் வேண்டும், தெரிகின்ற பரிதிகாணச் சென்றிடில் கண்ணே போதும், விரிகின்ற ஜகத்தைக் காணவிருத்தியும் மலமும் வேண்டும், புரிகின்ற விருத்தி யொன்றே போதும் மெய்ப்பொருள் காண்போர்க்கே.' வெளியில் விளங்குகின்ற பலவகைத் தோற்றத்தைக் காண்பதற்கு வெளிச்சத்தை வேண்டி நிற்கின்ற கண்ணானது சூரியனைக் காண்பதற்கு வேறு வெளிச்சத்தை எப்படி வேண்டி நிற்க வில்லையோ, அப்படி உள்ளே விளங்குகின்ற உண்மைப் பொருளான ஞான தினகரனைக் காண்பதற்கு விருத்தி அதாவது உண்மையறிகின்ற ஞானம் ஒன்றே போதும் என்பதும், உலகம் அல்லது பலவிதத் தோற்றங்களைக் காண்கின்ற பலம் அல்லது பிரயோஜனத்தை நாடுகின்ற புத்தியும் விருத்தி என்னும் ஞானமும் பிரிந்து ஞானமாத்திரமா யிருந்தால் மெய்ப் பொருள் விளங்குமென்பதும் இப்பாசுரத்தின் திரண்ட பொருளாம். இது கருதியே 'கண்ணுடையரென்பவர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்' என்னும் கூற்று தமிழ்மறைக் கணியாயிற்று. கண்ணையே அறிவென்று கொள்ளும்போது வெளிச்சத்தை மெய்ப் பொருளென்றுதான் கொள்ளவேண்டும். அந்த மெய்ப் பொருளையே யாவரும் கடவுள் என்று கருதுகின்றனர். அந்தக் கடவுள்தான் நமக்கு வழி காட்டுகின்றனர். அக்கடவுளாகிய ஜோதியே நமக்கு வழி காட்ட வந்திருப்பதால் நாம் நமது அறிவாகிய கண்ணால் அதனைப் பார்த்து உண்மை தெரிந்து கொள்வோமாக!

கொள்வதில் வெகு விருப்பம். தங்கத்தைச் சேகரித்து வைக்கக் கூடாத துர்ப்பாக்கியத்திற்கோ அல்லது பாக்கியத்திற்கோ ஆளாகியிருந்தாலும், நமது நாட்டு வண்டிக்காரன் கூட, தனது கட்டழகியை நினைந்துகொண்டோ, அல்லது கவி உள்ளத்தால் தூண்டப் பெற்றோ 'தங்கமே தங்கம்' என்று பாடிக் களிக்கிறான். பஞ்ச பூதங்களாலும் பீடிக்கப்படாதவாறு பிர்ம்மாண்டமான நிலவறைகள் அமைத்து, உலகத்து வல்லரசுகள் தங்கத்தைச் சேமித்து வைக்கின்றன. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை யென்பதை யறிந்தோ, என்னவோ, அவ்வுலகத்திற்காக அருளை நாடி அலையும் நம் நாட்டுப் பரதேசிகளிற் பலர் வாதஞ்சுட விரும்புகின்றனர். மேல்நாட்டு விஞ்ஞானிகளுக்கும் இப் பைத்தியம் உண்டு. சிற்சில சமயங்களில் அசல் தங்கத்தினின்றும் எவ்விதத்திலும் வித்தியாசம் கண்டறியக் கூடாத செயற்கைத் தங்கம் கண்டு பிடிக்கப் பட்டு விட்டதாகவும், இனி அசல் தங்கத்திற்கு அனர்த்தந் தானென்றும் பத்திரிகைகளிற் செய்தி வருவதும் உண்டு. ஆனால் நல்ல வேளையாக அவ்வித செய்திகளைக் கண்டு கலங்காத வைர நெஞ்சம் படைத்த வியாபார உலகம், ரஷிய நாட்டில் அபரிமிதமான தங்கமெடுக்கப் படுகிறது என்று கேட்டதும் நடுங்கி விட்டது. சில வாரங்கட்கு முன்பாக, ஏப்ரல் மாத வாக்கில், ரஷியாவிலிருந்து இரண்டு கோடி பவுன் மதிப்புள்ள தங்கம் லண்டனுக்கு அனுப்பப் பெற்றது. தங்கம் வந்ததுதான் தாமதம்; வியாபார உலகம் நிலைகலங்கிவிட்டது. எங்கும் பெரும் பீதி; எல்லா மார்க்கெட்டுகளும் பாதிக்கப் பட்டன. ஆர்த்த சாஸ்திர நிபுணர்களிற் சிலர் "தங்கத்தின் விலை இறங்க வேண்டியது தான், தற்காலமுள்ள விலையைக் கொண்டு செலுத்த முடியாது" என்று தாக்கீது கொடுத்தனர். இக்கட்சியைச் சேர்ந்தவர் புரொபெசர் கேசல் என்னும் நிபுணர். "இல்லை, இல்லை; தங்க விலையைச் சீக்கிரம் இறங்க விடக் கூடாது. அதனால் பல்வேறு தீங்குகள் நேரும். மூன்று வருடங்களாவது பொறுத்துப் பார்க்க வேண்டும்" என்று கிளம்பினர் மற்றொரு கோஷ்டி பொருளியல் நிபுணர்கள். இவர்களில் தலையாயவர் மிஸ்டர் கீன்ஸ், சர் ஹென்ரி ஸ்ட்ரகோஷ். இதற்கிடையில் இங்கிலாந்து தேசத்துப் பொக்கிஷ மந்திரி சர் ஜான் சைமனும் ஐக்கிய அமெரிக்க நாட்டுக் குடியரசுத் தலைவர் மிஸ்டர் ரூஸ்வெல்ட்டும், தங்கள் தங்கக் கொள்கைகளில் எதுவும் மாறுதல் இல்லை என்று உறுதி கூறினார்கள். இதனால் 'தங்க விலையை குறைக்கப் போகிறார்கள்' என்று உலவி வந்த வதந்தி ஒருவாறு நின்றது. பல்வேறு மார்க்கெட்டுகளும் முன் நிலையை அடைந்தன. எனினும் எல்லோர்க்கும் பூராச் சந்தேகம் தீர்ந்த பாடில்லை.

தங்கத்தைப் பல அரசாங்கங்கள் ஏன் சேமித்து வைக்கின்றன? ரஷ்யாவினுடைய தங்கம் லண்டனில் வந்திறங்கியதும் 'கெடுபிடி யாவானேன்?' இவைகளைக் கொஞ்சம் ஆராய்வோம்.

பண்டைய காலத்தில் மனிதவர்க்கத்தினர் பண்ட மாற்றுதலின் மூலமாகத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். நாகரிகம் முதிர முதிர, மனித வர்க்கத்தினரின் தேவைகள் வளர வளர, பல்வேறு வகையான பண்டங்கள் உற்பத்தியாக ஆக, பழைய திட்டம் நழுவி, செம்புக்காசு, தோல்காசு, வெள்ளிக்காசு, தங்கக் காசு முதலியன சாமான்களின் விலை மதிப்பை அளக்குங் கருவிகளாக ஒவ்வொரு காலத்தில் உபயோகப் படுத்தப் பெற்றன. நவீன காலத்தில்

நோட்டுகளும், பேங்கு செக்குகளும், பில்களும் பெரிதும் பரவி வருகின்றன. நாணயங்கள் உபயோகிப்பது மிகவும் குறைந்து வருகிறது. அரைக் காசு பெறாத வெறுந் தாள்களாகிய நோட்டுகளிலும் செக்குகளிலும் பொது ஜனங்களுக்கு எவ்விதம் நம்பிக்கை ஏற்பட்டது? அந்தத் தாள்களில் குறிப்பிட்டுள்ள தொகைகள் எத்தனை கோடியானாலுஞ் சரி, அத்தொகைகளை சர்க்காரிடமிருந்தோ அல்லது பேங்குகளிடமிருந்தோ பெறக்கூடிய உறுதியிருப்பதாலேயே பொதுமக்கள் அவைகளையேற்கின்றனர். இவ்விதமாக அந்தந்த நாட்டுப் பண அமைப்பைத் திறம்பட நடத்துவதற்கும், நோட்டுச் செலாவணி நாணயத்தை ஒழுங்கு செய்து வைத்துக் கொள்வதற்கும், ஒவ்வொரு நாகரிக தேசத்திலும் ஒரு பேங்கு அமைத்துள்ளார்கள். அதற்கு 'மத்திய பேங்குகள்' என்று பொதுப் படையாகச் சொல்வார்கள். அப்பேங்குகளே அந்தந்த நாட்டு நோட்டுகளை வெளியிடுகின்றன. இந்திய நாட்டு மத்திய பேங்காகிய 'ரிசர்வ் பேங்க்' கூடிய விரைவில் தங்கள் பெயரால் நோட்டுகள் வெளியிடுவர். தற்சமயம் இந்தியா கவர்ன்மெண்டின் பெயரால் வெளியிடப் பெற்ற நோட்டுகளே செலாவணியிலிருக்கின்றன. இவ்வித நோட்டுகளில் நம்பிக்கையை உண்டு பண்ணுவதற்காகவும், கேட்கும் பொழுது பணம் கொடுப்பதற்காகவும், ஒவ்வொரு மத்திய பேங்கும் தங்கத்தைச் சேமித்து வைத்திருக்கின்றது. அதனையே பெரும்பாலும் 'சர்க்கார் சேமித்து வைத்திருக்கும் தங்கம்' (Gold Reserves) என்று சதாரணமாய்ச் சொல்லுவார்கள். வெளியில் செலாவணியிலிருக்கும் பூரா நோட்டுகளின் மதிப்பிற்குத் தங்கத்தைச் சேமித்து வைப்பதில்லை. ஏனெனில் ஏககாலத்தில் எல்லோரும் கேட்கப் போவதில்லை. உதாரணமாக இந்தியாவில் இது சமயம் செலாவணியிலிருப்பது 208-கோடி ரூபாய் நோட்டுகள். இத்தொகையில் நூற்றுக்கு அறுபது பங்கு விகிதமே தங்கம், வெள்ளி சேமிப்பு இருக்கிறது.

1931ம் வருடம் செப்டம்பர் மாதம் இங்கிலாந்து, தங்கத்திட்டத்திலிருந்து விலகியதின் பயனாகவும், இதர சில முக்கிய தேசங்கள் இங்கிலாந்தை இது விஷயத்தில் பின் பற்றினதாலும், உலகத்தில் தங்கத்தின் விலை ஏறிக் கொண்டே வந்தது. உதாரணமாக இங்கிலாந்தில் ஒரு அவுன்ஸ் 85 ஷில்லிங் விலையாயிருந்தது ஏறக்குறைய 140 ஷில்லிங்கிற்கு வந்து விட்டது. இந்தியாவில் ஒரு தோலா 21 ரூபாயாயிருந்து வந்தது 34 ரூபாய் வரை உயர்வாயிற்று. இவ்விதமாகத் தங்க விலை ஏற ஏற, பலதேசங்களில்—தென் ஆப்ரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா முதலிய தேசங்களில்—முன்னர் வேலை செய்யக் கட்டாது என்று கைவிடப்பட்ட தங்கச் சுரங்கங்களிலிருந்து தங்கம் எடுக்கத் துவக்கினர். பழைய சுரங்கங்களிலும் வேலை முமுரமாக நடந்தது. அதனால் நாளுக்குநாள் தங்கவுற்பத்தி உலகில் அதிகமாய்க் கொண்டே வருகிறது.

பூனை கண்ணை மூடிக்கொண்டு, உலகம் இருட்டிவிட்டதாக நினைத்துக் கொள்ளும் என்பார்கள். இரண்டு, ஐந்து வருடத் திட்டங்கள் ஏற்படுத்தி பிறநாடுகள் பிரமிக்கும் விதமாய் ரஷியா முன்னேற்றமடைந்து வருகிறது என்பதை ஐரோப்பிய வல்லரசுகள் பல நாள்வரை நம்ப மறுத்துவிட்டன. அதேபோல தங்க உற்பத்தி, ரஷிய தேசத்தில் அதிகப்பட்டு வருகிறதென்று சொல்லப்பட்டதை இதர

நாடுகள் அலட்சியமாகக் கருதின. சென்ற ஏப்ரல் மாதத்தில் இரண்டு கோடி பவுன் மதிப்புள்ள தங்கத்தைக் கொண்டுவந்து லண்டன் துறைமுகத்தில் தள்ளியதும் உலகம் நடுங்கிவிட்டது. 1932ம் வருட வரையில்கூட, ரஷியாவில் அதிக தங்கம் உற்பத்தியானதில்லை; அவ்வருடத்தில் 20 லட்சம் அவுன்சுக்கு குறைவாய்த்தான் உற்பத்தியாயிற்று. 'பார் ஈஸ்டர்ன் ரெவியூ' (Far Eastern Review) என்ற பத்திரிகை, 1936ம் வருடத்தில் ரஷியாவின் உற்பத்தி 106 லட்சம் அவுன்ஸ் தங்கம் என்று கூறுகிறது. உலகத்திலேயே அதிகமான தங்கம் உற்பத்தி செய்து கொண்டு வந்த தென் ஆபிரிக்காவில் அதே வருடத்தில் 113 லட்சம் அவுன்ஸ் தங்கம்தான் உற்பத்தியாயிருக்கிறது என்பதைக் கவனிக்குமிடத்து, சென்ற நாலைந்து வருடங்களுக்குள்ளாக ரஷியா தேசம் இதர கைத்தொழில்களில் மேம்பாடடைந்திருப்பதுபோல தங்க உற்பத்தியிலும் உலகத்தில் இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது. லண்டன் பிரபல பொருளியல் பத்திரிகை 'எகனமிஸ்ட்' (Economist) அவ்வருடத்தில் ரஷியாவில் உற்பத்தியானது $73\frac{1}{2}$ லட்சம் அவுன்ஸ் என்று கணக்கிட்டிருக்கிறது. அப்படிப் பார்த்தாலும் ரஷியாவின் இரண்டாவது ஸ்தானம் போய்விடவில்லை.

'எகனமிஸ்ட்' பத்திரிகைப் படி, 1932ம் வருடத்தில் ரஷியா உள்ளிட்ட உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் உற்பத்தியான தங்கம் 226 லட்சம் அவுன்ஸ். 1936ம் வருடத்திலோ 353 லட்சம் அவுன்ஸ். எவ்வளவு அதிகமான உற்பத்தி பார்த்தீர்களா? அதிக உற்பத்தி ஒரு புறமிருக்க, இந்தியாவில் மூலை முடுக்குகளிலிருந்த தங்கம்—ஏழை எளியவர்கள் நல்ல காலத்தில் சேமித்து வைத்த தங்கம்-ஏறக்குறைய முந்நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கம் கடந்த ஐந்து ஆறு வருடங்களில் நம் நாட்டிலிருந்து வெளியேறியிருக்கிறது. சைனு, ஹாங்காங் பிரதேசங்களிலிருந்தும் தங்கம் வெளியேறிவருகிறது. இவ்விதமாகக் கீழ் நாடுகளிலிருந்து வெளியேறிய தங்கமும் உலகத்தில் உற்பத்தியான தங்கமும் சேர்ந்து கடந்த ஐந்து வருடங்களில் 128 கோடி பவுன் மதிப்புள்ள தங்கம் மேலே நாடுகளுக்குக் கிடைத்திருக்கிறது.

மற்றும் மத்திய பேங்குகளுக்கு மறைமுகமாகத் தங்கம் ஒருவாறு கிடைக்கிறதென்று கூறலாம். அதாவது அவைகள் வசம் முன்னிருந்த தங்கத்திற்கு விலை மதிப்பு மிக அதிகரித்திருப்பதால் நோட்டுச் செலாவணி பாது காப்புக்கு முன்னைவிட குறைந்த தங்கமே தேவை. 'விலை ஏற்றத்தில், ஒரு புதிய சுரங்கத் தங்கம் இப்பேங்குகளுக்கு கிடைத்ததற்கு ஒப்பாகும்' என்கிருர் ஒரு பெரியார்.

நாளுக்கு நாள் ஜனத் தொகையும் கைத் தொழிலும் பெருகுவதால், அவைகளின் அபிவிருத்திக்கு ஏற்றவாறு நோட்டுச் செலாவணியும் அதிகம் தேவைப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்னர் இப் பெருக்கத்திற்கு ஏற்றவாறு தங்க உற்பத்தியில்லையென்று அர்த்த சாஸ்திர பண்டிதர்கள் கூறினார்கள். இன்று உலக உற்பத்தியும் கீழ் நாடுகளிலிருந்து கிடைக்கிற தங்கமும் எவ்வளவு அதிகரித்து விட்டதென்று மேலே கூறினோம். இதுகாலே வியாபாரத் தேவைக்கு இத் தங்கம் மிக மிக அதிகம் என்று நிபுணர்கள் கூறுகிருர்கள். எந்த

வஸ்துவும் தேவைக்குக் குறைவாயிருந்தால், அதற்குப் பிரியம் அதிகம்; விலை அதிகம். தேவைக்கு அதிகமிருந்தால், அதற்கு சௌதம் ஏற்பட்டு விடும்; விலை குறையும். இந்த இயற்கை நியதிப்படி, தேவைக்கு அதிகப்படியான தங்க மிருப்பதால் அதன் விலை இறங்கவேண்டியது நியாயந்தானே. இதுவே புரொபசர் கேசல் துரையின் வாதம்.

இனி எதிர் வாதத்தைக் கவனிப்போம். மேற் கண்டவாறு வெளி வந்த தங்க மனைத்தையும் இரண்டு தேசங்களே கபளீகரித்து விட்டன. அவை அமெரிக்காவும் இங்கிலாந்துந்தான். ஒவ்வொரு தேசத்தின் மத்திய பேங்கிலும், கவர்ன் மெண்டிடமிருக்கும் தங்க சேமிப்பின் கணக்கைக் கீழே தருகிறோம். அவை 'சுவிஸ் பிராங்கில்' கூறப்பட்டிருக்கிறது. அத்தொகையைப் பதினைந்தால் வகுத்தால் அவ்வளவு பவுனாகும். ஒரு பவுனுக்கு பதினைந்து சுவிஸ் பிராங்கு. இவை லட்சம் புள்ளிகள். ஒவ்வொன்றையும் இவ்வளவு லட்சம் என்று வாசிக்கவும்.

தேசம்	1932 முடிவில்	1936 முடிவில்	அதிகம் + குறைவு —
யுனைடெட் கிங்டம் (இங்கிலாந்து, ஸ்காட்லந்து ஐர்லாந்து)	30210	79110	+48900
அமெரிக்கா	209640	344390	+134750
பிரான்ஸ்	168570	91680	—76890
ஹாலந்து	21510	14990	—6520
பெல்ஜியம்	18710	19340	+630
ஸ்விட்ஜர்லாந்து	24710	20060	—4650
ஜெர்மனி	10830	1410	—9420
இத்தலி	15930	6380	—9550
இதர தேசங்கள்	121310	145640	+24330
மொத்தம்	621420	723000	+101580

இப்புள்ளி விவரங்களை ஆழ்ந்து சிந்தித்தால் சில உண்மைகள் விளங்கும். பிரான்ஸ், ஹாலந்து ஸ்விட்ஜர்லந்து, ஜெர்மனி, இத்தலி முதலிய நாடுகள் தங்கள் தங்க சேமிப்பை இழந்து வந்திருக்கின்றன. ஜெர்மனியில் எவ்வளவு குறைவான தங்கமிருக்கிறதென்பதைக் கூர்ந்து கவனியுங்கள். 14 கோடியே 19 லட்சம் ஸ்விஸ் பிராங்குக்குத்தான் இருக்கிறது. அதாவது 1 கோடி பவுனுக்குக் குறைவான தங்கமே இருக்கிறது. இத்தலி தேசத்தில் 6380 லட்சம் பிராங்கு அல்லது நாலே கால் கோடி பவுன் மதிப்புள்ள தங்கந்தானிருக்கிறது. நம் இந்திய நாட்டிலிருந்து கடந்த ஐந்தாண்டுகளில் ஏற்றுமதியான தங்கத்தின் மதிப்பு மாத்திரம் 20 கோடி பவுனிருக்குமென்றால், இந்நாடுகளில் எவ்வளவு குறைவான தங்கமிருக்கிறது என்பதைக் கவனியுங்கள். உலகத்தின் பெரும்பாலான தங்கம் அமெரிக்கா நாட்டில் சேமிக்கப் பட்டிருப்பதைப் பாருங்கள். பிரான்சுக்கு, இரண்டாவது ஸ்தானம். மூன்றாவது இங்கிலாந்து. இப்புள்ளி விவரங்களில் கூறப்பட்டிருப்பதை விட இன்னும் அதிகமான தங்கம் இங்கிலாந்து அமெரிக்க

நாடுகள் வைத்திருக்கின்றன. 'நாணய மாற்று சரிகட்டும் நிதி' என ஒரு பெரும் நிதி இவ்விரண்டு தேசங்களிலும் உண்டு. அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் இம்மூன்று தேசங்களின் நாணயங்களைப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு ஏற்பட்டுள்ள விகிதங்களில் ஒன்றும் கோளாறு வராமல் தடுப்பதற்கு இந்நிதி உபயோகப் படுத்தப் பெறுகிறது. கோளாறு வராமலிருப்பதற்குத் தங்க விலை ஓர் நிலையிலிருக்க வேண்டும். ஆதலால் தங்க விலை இறங்கி விடாமல் பாதுகாக்கும் நோக்கத்தோடு விற்பனைக்கு வரும் தங்கமெல்லாம் இந்நிதியைக் கொண்டு வாங்கப் பெறுகிறது. இந்நிதியில் இவ்விரண்டு தேசங்களிலும் எவ்வளவு தங்கம் சேகரிக்கப்பட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரங்கள் ரகசியமாய் வைத்துக்கொள்ளப் பெறுகின்றன. ஆகவே தங்கம் உலகத்தில் மிகுதியாயிருக்கிறதென்று சொல்லக்கூடுமானால், அது இங்கிலாந்திற்கும் அமெரிக்காவுக்குந்தான் பொருத்தம்.

அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் மூன்று தேசங்களும் ஒருமிக்கப் பேசி, திடீரென தங்க விலையைக் கொஞ்சம் இறக்கினாலும் அதனால் பல தீமைகள் விளையும் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். அவ்வித விலையிறக்கத்தால் தங்கச் சுரங்கத்திற்குக் கிடைக்கும் லாபம் குறைந்து சில சுரங்கங்கள் மூடப்பட வேண்டும். அதனால் தங்கச் சுரங்கப் பங்குகள் மாத்திரமில்லாமல் இதர எல்லாப் பங்குகளும் பாதிக்கப்படும். எல்லாவித சரக்குகளின் விலையும் குறையும். கடன்படு அதிகமாகும். கொடுக்கல் வாங்கல் நாணயம் நிலை குலையும்.

கடந்த ஐந்தாண்டுகளாக உலகில் ஏற்படும், நம்பிக்கையைப் பாதிக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளால், பொது ஜனங்களின் டெபாசிட் பணங்கள் (ஜமால் பணங்கள்) அடிக்கடி ஒரு தேசத்தை விட்டு மற்றொரு தேசத்திற்கு மாற்றப்படுகிறது. எந்நேரத்திலும் கொடுக்க வேண்டியதாய் ஏற்படக்கூடிய பணங்கள் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் அபரிமிதமாய் இருக்கின்றனவாம். 1934-35-36-ம் வருடங்களில் மாத்திரம் இவ்விதப் பணங்கள் அமெரிக்க நாட்டிற்கு 400-கோடி டாலர்கள் வந்திருக்கின்றன. அதேகாலத்தில் அந்நாட்டில் வாங்கிய தங்கத்தின் மதிப்பு 399-கோடி டாலர் தான். ஆதலால் தேவைக்கு மிஞ்சிய தங்க சேமிப்பு அமெரிக்காவில் இல்லையாம். இங்கிலாந்திலிருக்கும் இவ்வித பணங்கள் திரும்ப வாங்கப் பெற்றால் இங்கிலாந்தில் சேர்ந்திருக்கும் தங்க சேமிப்பு போதுமானதாயிருக்குமாவென்று சில நிபுணர்கள் சந்தேகப் படுகிறார்கள். இத்தியாதி காரணங்களால் 'தங்க விலையை இறங்க விடக்கூடாது. இன்னும் இரண்டு மூன்று வருடங்கள் பொறுத்துப் பார்க்க வேண்டும்' என்பது மற்றொரு சாராரின் வாதம்.

இவ்வறிஞர்களுடைய தர்க்கரீதிகள் எவ்விதமிருப்பினும், பொது ஜனங்களின் மனதிலே தங்க விலை நிலைத்திருப்பதைப்பற்றி பலமான சந்தேகம் உண்டாகி விட்டது. இந்திய வியாபாரிகள் இந்நிலைக்குத் தக்கவாறு நடந்து கொள்வது நல்லது.

ஐரோப்பிய அரசுகள் நாடு பெருக்கின சரித்திரம்

ஐரோப்பாவிலுள்ள முக்கிய அரசுகள், சென்ற ஐந்நூறு வருஷ காலமாகவே, நாடு பரப்பும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன என்பது அடுத்து வரும் ஸ்டேட்மெண்டில் தெரியும். இந்த முயற்சியில் முதலில் இறங்கியது ஸ்பெயின். கடைசியில் வந்தவை இத்தலியும் ஜெர்மனியும். தொடர்ந்தாற்போல் படர்ந்து வந்தவை இங்கிலாந்தும் பிரான்ஸும்.

சென்ற ஐந்நூறு வருஷங்களில் ஐரோப்பிய அரசுகள் நாடு பெருக்கின வரலாறு

எந்த வருஷம்	போர்த்துகல்	ஸ்பெயின்	இங்கிலாந்து	பிரான்ஸ்	ஹாலந்து	ஜெர்மனி	இத்தலி	பெல்ஜியம்
1400 வருஷத்திலிருந்து	ஆப்பிரிக்கா கண்டத்தில் போர்த்துக்கீசர் [illegible] பிரதேசங்களைக் கண்டு பிடிக்க ஒரு கோஷ்டியினர் சென்றனர். இவர்கள் காங்கோ நதியின் முகத்துவாரத்தைக் கண்டு பிடித்தனர். 1488ம் வருஷத்தில் பார்த்தலமியோ டயாஸ் என்பவன் ஆப்பிரிக்காவின் தெற்கேயுள்ள நன்னம்பிக்கை முனையைக் கண்டு பிடித்தான். 1497ம் வருஷம் வாஸ்கோடகாமா என்பவன் நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச்சென்று, ஆப்பிரிக்காவின் கிழக்குக் கரையோரமாக இந்தியாவுக்கு வந்தான்.	இஸபெல்லா-பெர்டினாந்து அரசர்களின் ஆதரவில் கொலம்பஸ் 1492ம் வருஷம் அமெரிக்காவைக் கண்டுபிடித்தான்.	ஏழாவது ஹென்றி மன்னனுடைய ஆட்சி காலத்தில் காபட் என்பவனுடைய தலைமையில் ஒரு கோஷ்டியினர், நியூபௌண்ட்லாண்ட், லாப்ரடார் பிரதேசங்களைக் கண்டு பிடித்தனர்.	தென்னமெரிக்காவிலுள்ள செயின்ட் லாரென்ஸ் நதியை ஒரு பிரெஞ்சு கோஷ்டியினர் கண்டு பிடித்தனர். பிரான்ஸிலிருந்து பலர், க்யூபெக், மான்ட்ரீல் ஆகிய இடங்களில் குடியேறினர். கனடா கண்டுபிடிக்கப்பட்டது.				
1500 வருஷத்திலிருந்து	கோவா, மொஸாம்பிக், ஜான்ஸிபார் ஆகிய பிரதேசங்கள் கைப்பற்றப்பட்டன. பெர்னாண்டோபோ, ஸான் தோம், பிரின்ஸிபே ஆகிய தீவுகள் போர்த்துகேசிய ஆட்சிக்குட் பட்டுப் பெற்றன. அங்கோலாவில் போர்த்துகேசியர் தங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டனர். செனிகலுக்கும் காம்பியா நதிக்கும் இடையே வியாபாரஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டன. பாரசீக வளைகுடா ஓமானையும், இந்தியாவிலும், [illegible] தீவுகளிலும் போர்த்துகேசிய ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டன. தென்னமெரிக்காவிலுள்ள பிரேஜில் கண்டு பிடிக்கப்பட்டது.	மெக்ஸிகோவும் பெருவும் ஆக்கிரமிக்கப்பட்டன. போப் ஆண்டவருடைய உத்திரவின் பேரில் அமெரிக்காவையும் அதனைச் சார்ந்த தீவுகளையும் ஸ்பெயின் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டது.	இந்தியாவுக்கு வழி கண்டு பிடிக்க வடகிழக்கிலும் வடமேற்கிலும் பல கோஷ்டிகள் புறப்பட்டன. வடகிழக்குத்திசையில் இந்தியாவுக்குச் செல்லும் பாதையைக் கண்டுபிடிக்க மஸ்கோவி கம்பெனி என்ற பெயருடன் ஒரு ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. 1577ம் வருஷம் ஸர் பிரான்ஸிஸ் ட்ரேக் என்பவன் கடல் மார்க்கமாக உலக யாத்திரை செய்தான். 1583ம் வருஷத்தில் ஸர் ஹம்ப்ரி கில்பர்ட், இங்கிலீஷ்காரர் [illegible] சென்று ஒரு பிரதேசத்தை [illegible] முயற்சி செய்தனர். வர்ஜீனியாவில் ஆங்கிலேயர் குடியேறினர். கிழக்கிந்திய கம்பெனி ஸ்தாபிதம். இந்தியாவில் ஆங்கிலேய வியாபார ஸ்தலங்கள் ஏற்படுத்தப்பெற்றன.					
1600 வருஷத்திலிருந்து	பிரேஜிலில் போர்த்துகேசிய ஆதிக்கம். அங்கோலா, மொஸாம்பிக் முதலிய பிரதேசங்களில் எல்லை விஸ்தரிப்பு. கோல்ட் கோஸ்டிலும் செனிகல் நதிப் பிரதேசத்திலும் போர்த்துகேசியருக்குச் சொந்தமாயிருந்த இடங்கள் [illegible]	அமெரிக்கா கண்டத்தில் ஆதிக்கம்.	முதலாவது ஜேம்ஸ் மன்னன், [illegible] கண்டுபிடிக்க, ஆப்பிரிக்காவிலுள்ள [illegible] வருக்கும் [illegible] அனுமதித்தான். 1610ம் வருஷத்தில் நியூ பௌண்ட்லாண்டில் ஆங்கிலேயர் ஸ்தாபிதம். 1612ம் வருஷம் [illegible] ஆங்கிலேயர் குடியேற்றம்.	கயான், செனிகாம்பியா என்ற பிரதேசங்கள் ஆக்ரமித்துக் கொள்ளப் பெற்றன. 1632ம் வருஷம், நோவா ஸ்கோஷியா [illegible] அகேடியா பிரதேசம் கைப்பற்றிக்கொள்ளப்பட்டது. இந்தியாவில் புதுச்சேரி, காரைக்கால் முதலிய இடங்கள் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமாயின. மேற்கிந்தியத் தீவுக் கூட்டங்களைச் சேர்ந்த மார்டினிக்கே,	[illegible] கடற்கரை போர்ப் பிரதேசங்களை போர்த்துகேசியரிடமிருந்து ஹாலந்து கைப்பற்றிக்கொண்டது. கோல்ட் கோஸ்டில் அநேக முகாம்களை போர்த்துகேசியரிடமிருந்து கைப்பற்றியது. கிழக்கிந்தியக் கம்பெனி என்றும் மேற்கிந்தியக்கம்பெனி என்றும் இரண்டு பெரிய வியாபார கம்பெனிகள் ஏற்படுத்தப்பெற்றன.			

புராதன பர்மாவில் இந்தியர் குடியேற்றம்

—கு. கோ. கிருஷ்ணன்
B. Sc. (Hons)

இந்தக் கட்டுரையாளர், ரங்கூன் சர்வகலாசாலையில், விஞ்ஞான போதகாசிரியர் குழுவைச் சேர்ந்தவர். அறிவு, ஆராய்ச்சி, அடக்கம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்றவர். பழைய பர்மிய ஓலைச் சுவடிகள் பலவற்றை ஆராய்ந்து இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார்.

பர்மா தேசத்திற்கு 'பர்மா' என்ற நாமம் ஏற்பட்டது இந்தியர் சம்பந்தத்தால் என்பது ஆராயக்கிடக்கிறது. 'இங்கிலீஷ்' என்ற பதம் 'ஆங்கில்ஷ்' என்ற பதத்திலிருந்து திரிந்ததுபோல, 'பர்மா' என்ற பதம் 'பிரம்மா' என்ற பதத்திலிருந்து திரிந்ததெனக் கூறலாம். இந்நாட்டை முற்காலத்தில் 'பிரம்ம தேசம்' என்பதற்கு (ரகரம் பர்மியர் பாஷையில் இல்லாதிருந்ததால்) 'மியம்ம தேசம்' என்று எழுதி வைத்திருக்கின்றனர்.

ஆதியில் பர்மாவில் குடியேறியவர்கள் மங்கோலிய வம்சத்தவர். இவர்கள் சீனாவின் மேற்குப் பிரதேசத்திலிருந்து புறப்பட்டுவந்தனர். அவ்வாறு வந்தவர்களை மான், பியு, கன்ஜன், தேட், கரின் என்னும் முக்கிய பகுதியினராகப் பிரிக்கலாம். இப்பொழுது மான் என்பவர்கள் தலேய்ங் என்றும், பியு என்பவர்கள் பர்மியர் என்றும், தெட் என்பவர்கள் சின் என்றும், கன்ஜன் என்பவர்கள் அரக்கானியர்களென்றும் அழைக்கப்படுகின்றனர்.

மங்கோலியர்களுக்கு முன்னர் மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவில் குடியேறியவர்கள் பர்மாவுக்குள்ளும் புகுந்து வசித்துச்சென்றதாகக் கருதப்படுகிறது.§ ஆனால் அவர்களைப் பற்றிய ஆதாரங்கள் அதிகம் கிடைக்கவில்லை.

பர்மாவில் குடியேறிய மங்கோலிய வம்சத்தவர்களில் கரின் ஜாதியார்களே முதலாவதாகச் சீனதேசத்திலிருந்து பர்மாவுக்கு வந்து சேர்ந்ததாகப் பர்மா சரித்திர ஆங்கில ஆசிரியர் ஹார்வே என்பவர் கூறுகிறார். ஆனால் ஜே. ஆர். லோகன் என்பவரின் ஆராய்ச்சியின்படி மான் (தலேய்ங்) என்பவர்களும், ஷான் என்பவர்களும் தீபேத்துத் தேசத்திலிருந்து முதலாவதாகப் பர்மாவுக்குள் நுழைந்ததாகக் காணக்கிடக்கிறது.† இதுவே உண்மையென நம்புதற்கிடமாயிருக்கிறது.

இந்தியர் வருகை

இந்துக்கள் சுமார் கி. பி. 300-ம் ஆண்டிற்கு முன்னதாகவேபர்மாவுக்கு வந்திருந்ததாகத் தெரிகிறது. கி. பி. 300-வரை பர்மா ஜாதியாரிடம் செதுக்கெழுத்துக்கள் காணப்படவில்லை. பர்மாவுக்கு எழுத்துக்கள், சட்டதிட்டங்கள், நாகரிகம் முதலிய முன்னேற்றங்களை ஆதியில் இந்துக்களே கொணர்ந்தனர். ¶ சுமார் கி. பி. 300-ல் தென்னிந்தியாவிலிருந்து முதலாவதாக பியு ஜாதியார்களுக்கு எழுத்துக்கள் கொண்டுவரப்பட்டன. புரோம் நகரில் உபயோகப்பட்ட பாலி எழுத்துக்களும், ஆதி பியு ஜாதியாரின் எழுத்துக்களும், 5-ம், 6-ம் நூற்றாண்

§ Harvey's "History of Burma"

† "Journal of the Indian Archipelago" Vol 11.

¶ Temple's "Burmese Arithmetic" 1891, "Currency & Coinage" 1897-8.

டுகளில் இந்தியாவில் பம்பாய் மாகாணத்தில் கோவா என்ற ஊருக்கருகில் உபயோகப்பட்டுவந்த கடம்ப அட்சரங்களை ஒத்திருந்தன. அதுவேபோல் ஆதியில் மான் (தலேய்ங்) ஜாதியாரின் எழுத்துக்கள் 6-ம் நூற்றாண்டில் காஞ்சிபுரம் தர்மபாலன் காலத்துப் பல்லவ ஜாதியாரின் எழுத்துக்களை ஒத்திருந்தன. தலேய்ங் ஜாதியாரின் ஓலை ஏடுகளில் காஞ்சிபுரம் தர்மபாலனைப்பற்றி அடிக்கடி காணக் கிடக்கிறது. வட பர்மாவுக்கு வட இந்தியாவிலிருந்து எழுத்துக்கள் 10-ம் நூற்றாண்டில் தான் வந்ததாகத் தெரிகிறது. ¶

பர்மாவின் ஜாதியினர் மங்கோலிய வம்சத்தவர்களாயினும் இவர்கள் ஆதிப்பழக்க வழக்கங்களில் சீன தேசத்தாரை ஒத்திராமல் இந்தியரையே பெரும்பாலும் ஒத்திருந்தனர். பர்மியர்கள் ஆதியில் தாங்கள் வட இந்தியாவில் தோன்றிய புத்தர்பிரானின் (சாக்கிய) வம்சத்தவர்களென்று பொய்யாக எழுதி வைத்திருந்தனர். ஆதி பர்மியர்களின் கல்விமுறை இந்துக்களின் கல்விமுறையை ஒத்திருந்தது. முக்கிய பட்டணங்கள் யாவும் பர்மியரின் சொந்தப் பாஷையைக்கொண்ட ஓர் பெயரையும், இந்தியாவிலுள்ள பட்டணங்களின் ஓர் பெயரையும் வகித்துவந்தன. பர்மாவிலுள்ள ஐராவதி நதி, சமஸ்கிருதத்தில் 'ஆகார முதவுபவர்' என்று அர்த்தப்படக் கூடியதாய் தற்போது பாஞ்சாலதேசத்தில் ரவி என்ற நதியின் பூர்வப்பெயராகவுமிருக்கிறது. பிகு என்ற பட்டணத்தின் பண்டைப் பெயராகிய உஸ்ஸா என்பது, இந்தியாவின் ஒரிஸா மாகாணத்தோடு சம்பந்தம் ஏற்பட்டதற்கு அறிகுறியாயிருக்கிறது. பிறகு அந்த நகரம் தென்னிந்தியாவிலுள்ள கடாரம் என்ற நகரின் பெயரைப் பெற்றுச் சிலகாலம் இருந்துவந்தது.

இந்தியர்கள் அஸ்ஸாம் வழியாக மேல் பர்மாவுக்கும், சென்னையிலிருந்து கடல் மார்க்கமாகக் கீழ்பர்மாவுக்கும் ஆதியில் வந்து கொண்டிருந்தனர். இவ்வாறு வந்தவர்கள் அரக்கான் மாகாணத்தில் (மேற்குக் கடற்கரைப் பட்டணங்களில்) அதிகமாக வந்து சேர்ந்தனர். சென்னை மாகாணத்தில் தெலிங்கானு (கலிங்கம்)§ என்ற பாகத்திலிருந்து மோல்மேனுக்கு அருகில் வந்து குடியேறியவர்களைக் கொண்டு கீழ்பர்மாவில் அச்சமயம் வசித்து வந்த மான் ஜாதியினர் 'தலேய்ங்' என்று நாளடைவில் மாறிய பெயருடன் திகழ்ந்தனர்.

இவ்வாறு குடியேறிய இந்துக்கள் சிறிய உருவங்களை ஆராதனைக்கு ஆங்காங்கு உண்டாக்கினர். தாட்டுனியிலுள்ள சுவேஜயான் புத்தர் ஆலயம், பீகுவிலுள்ள சுவேமாடா ஆலயம் இவைகள் அக்காலங்களில் இந்துக்கள் ஆராதனை செய்துகொண்டிருந்த இடங்களில் உண்டாயினவென்று கூறப்படுகிறது.

அசோகமகாராஜன் கலிங்க நாட்டைக் கைப்பற்றி புத்தமதத்தைத் தென்னிந்தியாவில் புகுத்திய கி.மு. 261-ம் ஆண்டிலிருந்து பர்மாவில் வசித்த இந்தியர்களின் இந்துமதம், புத்தமதத்தின் அம்சங்களைப்பெற்று விளங்கத் தொடங்கிற்று. இவ்வாறு இந்துமதம் புத்தமதத்தைத் தழுவி முழுவதும் புத்தமதமாக மாற வெகுகாலம் சென்றிருக்க வேண்டும். இப்பொழுது பூமியிலிருந்து வெட்டி யெடுக்கப் படுபவை யாவும் ஆதி இந்துக்களின் சுவாமி உருவங்களாகவே தோன்றுகின்றன. சில கற்சிலைகளில் புத்தர்,

¶ Fuhrer's Inscription No. 310.

§ கலிங்கம்-தென்னிந்தியா.

விஷ்ணுவின் அவதாரமாகச் செதுக்கப்பட்டு வந்திருக்கின்றது.

பர்மாவை ஆண்ட பர்மிய அரசன் கியான்ஜித்தா என்பவனின் அரண்மனைக்கருகில் வெகுகாலம்வரை ஒரு விஷ்ணு ஆலயம் (நாட்-லாங்-க்சாஸ்) இருந்து வந்திருக்கிறது. கியான்ஜித்தா, புத்தமதஸ்தனுயிருந்தும், தான் விஷ்ணுஅவதாரமெனவும் கூறிவந்திருக்கிறன். ஷின்-அர-ஹான் என்ற அரசன் புத்தமதஸ்தனு யிருந்தும், விஷ்ணுவின் அம்சமான ஒரு சங்கையேந்தி வந்திருக்கிறன். அவர்கள் புத்தமத வழிபாட்டில் 'நார்' (நாராயணு-விஷ்ணு) என்பவரையும் பலதடவை பூஜித்து வந்திருக்கின்றனர். ¶ பியு ஜாதியாரின் தலைவர் தூத்தபாங் § என்பவர், மூன்று கண்ணுடையவர் என்று கூறப்பட்டிருப்பதினுல் அவரும் அவரைப் பின் பற்றியவர்களும் சைவசமயத்தைத்தழுவி யிருந்ததாகக் கருத இடமுண்டு. இவ்வாறு இந்துமதமும், புத்தமதமும் பாலும் நீரும்போலக் கலந்திருந்தன. அசோகன் கி. மு. 272-73 வருடங்களில் சோனு, உத்தாரா என்னு மிரண்டு மதபோதகர்களை பாட்னு (பாடலிபுரம்) நகரத்திலிருந்து பர்மாவுக்கு அனுப்பியதின் காரணமாய் தாட்டோனில் சுமார் அறுபதினுயிரம் பர்மியர் புத்தமதத்தைத் தழுவினர். கி. மு. 403-லேயே புத்தகோஷன் என்னும் துறவி இலங்கையிலிருந்து தாட்டோனுக்கு மதநூல்களைக்கொண்டு வந்து சேர்த்திருந்தான்.

1071-ல் விஜயபாகு 1 என்பவன் இலங்கையை ஆண்டுவந்த காலத்தில் ராஜேந்திர சோழன் அங்குப் படையெடுத்துச் சென்றுன். இதன்காரணமாக அங்கே பழுதுபட்டுக்கிடந்த புத்தமத ஆலயங்களைச் செம்மைப் படுத்த குருக்களையும், சமயநூல்களையும் இலங்கைக்கு அனுப்பிவைக்குமாறு அப்பொழுது பர்மாவில் ஆண்டுவந்த அனேரட்டாஅரசனுக்கு விஜயபாகு தூதனுப்பிவிட்டான். அனேரட்டா மகிழ்ந்து அவ்வாறே அனுப்பியதோடு ஒரு வெள்ளை யானையையும் சேர்த்தனுப்பினுன்.

இந்தியர் ஆளுகை.

1894-ம் வருஷத்தில் பூரெர் (Fuhrer) என்ற ஐரோப்பிய சரித்திராசிரியர், டகாங் என்ற இடத்தில் ஓர் பழைய கல்தூண்டைக் கண்டெடுத்தார். அதில் கி. பி. 416-ல் வட இந்தியாவிலிருக்கும் அஸ்தினுபுரத்து அரசர்கள் குடியேறி டகாங் ஊரை உண்டுபண்ணியதாக சமஸ்கிருதத்தில் எழுதி யிருந்ததாகக் கூறியிருக்கிறர். அதன் வரலாறு பின் வருமாறு:—

"கௌதமர்வருகைக்குவெகுகாலத்திற்குமுன், கோசலம், அஸ்தினுபுரம், பாஞ்சாலம் முதலிய இந்தியதேசங்களின் அரசன், கோலிய என்ற மற்ருேர் இந்திய நாட்டின் அரசகுமாரத்தியை மணஞ்செய்து கொள்ள விரும்பி நிற்க, தான் தாழ்ந்த ஜாதி அரசனெனக் கோலிய தேசத்தினர்கள் கூறக் கேட்டு சீற்றங் கொண்டு மேற்படி தேசத்தரசன்மீது போருக்குப் புறப்பட்டான். யுத்தத்தில் சாக்கிய ஜாதியினர்களால், ஆளப்பட்டுவந்த கோலிய, தீவாதகா, கபிலவாஸ்து முதலிய நகரங்கள் கொள்ளை யடிக்கப்பெற்று நாசஞ் செய்யப் பட்டன. அவ்வமயம் கபிலவாஸ்து நகரை யாண்ட அபிரத்ஜா என்பவன் தனது யுத்த வீரர்களுடன் வெளியேறி பர்மாவினுட்பிரவேசித்து 'தெங்கதரதா'

¶ G. H. Luce-Appendix F. P-298. Census Report, Burma 1931.

§ Taw Sein Ko -"Three eyed King" 1893.

'தெங்கதநகோ' வென்றழைக்கப் பட்டவிடத்தில் 'டகாங்' என்ற பெயருடன் ஓர் நகரை ஸ்தாபித்து அதில் ஆண்டுவந்தான்.''

அரக்கான் உண்டான விதம்

அபிரத்ஜா என்ற இந்திய அரசனுக்கு கன்ரத்ஜார்ஜீ, கன்ரத்ஜானே என இரு புதல்வர்களிருந்தனர். அபிரத்ஜா மறைந்தபிறகு இரு சகோதரர்களுக்குள் அரசுரிமையைப்பற்றிச் சச்சரவு ஏற்பட்டது. இவர்கள் வழக்கைத்தீர்ப்பான்வேண்டி பெரியோர்கள் ஒன்று கூடி ஆலோசித்து இருவரையும் ஒரே இரவில் ஒரு தேவாலயம் கட்டும்படி கட்டளையிட்டு அதிகாலையில் யாருடைய கட்டிடம் பூர்த்திபெற்று விளங்குகிறதோ அவரே அரசனுகவேண்டுமெனக் கூறினர்.

இளைய குமாரன் புத்திசாலியாகவிருந்ததால் மரங்களை உபயோகப் படுத்தி ஆலயங்கட்டி வெள்ளைத்துணியால் மூடி அதின்மேல் வெள்ளையடித்து முழுவதும் புதிதாகத் தோன்றும் வண்ணம் ஒரே இரவில் முடித்தான். மூத்தசகோதரன் கன்ரத்ஜாஜீக்கு ஒன்றுந்தோன்ருமல் அதிகாலையில் தன் சகோதரன் கட்டியிருந்த கட்டிடத்தைக் கண்டான். தான் தோல்வி யுற்றதை உணர்ந்தான். தனது நண்பர் சிலருடன் வெளியேறி ஐராவதி நதியின் வழியாக அரக்கான் தேசத்தில் புகுந்து அதுசமயம் அங்கு வசித்து வந்த 'மிரு' என்ற ஜாதியார்களின் அரசகுமாரிகள் இருவரையும் மணந்து அரக்கான் ராஜ்யத்தை ஸ்தாபித்தான். §

இவனுக்குப்பின்ஞல் தான்இப்பொழுதுள்ள அரக்கானியர் 'கன்ஜன்' என அப்பொழுது விளங்கினர். இவர்கள் பர்மிய வம்சத்தின் மூத்தகிளையினடியாகத் தோன்றியவர்களென்று 'பிரம்பக்ரீ' அல்லது 'மூத்தபர்மியர்கள்' என்று அழைத்துக் கொள்ளுகிருர்கள். இவ்விரண்டு-பர்மிய அரக்கான்-வகையினரின் பரம்பரைக் கதைகள் பல, முக்கிய விஷயங்களில் ஒற்றுமைப் படுவதால் இவர்களின் சம்பந்தம் உண்மையென உரைப்பதற்கேதுவுண்டு.

சோழ அரசர் வருகை

10, 11-ம் நூற்ருண்டுகளில் சோழ இராஜ்ஜியம் தென்னிந்தியாவில் மிக்க செல்வாக்குடன் இருந்து வந்தது. அக்காலத்தில் ஐரோப்பாவிலுள்ள ரோமாபுரியோடு தீவிர வியாபாரங்களும் நடத்தி வந்தது. 1025-ம் ஆண்டில் இராஜேந்திர சோழன் வங்காளக்குடாக்கடலைக் கடந்து பர்மாவுக்கு வந்தான். பீகு அப்பொழுது ஓர் துறைமுகப் பட்டணமாயிருந்ததால் அங்குச் சென்று சுற்றியிருந்த நான்கு வாயில்களிலும் இந்தியாவிலிருந்து கொணர்ந்த மலங் கல் தூண்களைத் தன் வெற்றிக் குறிகுறியாக ஊன்றி¶ அந்நகருக்கு 'கிடாரம்' என்னும் ஓர் தென்னிந்திய நகரின் பெயரை வைத்தழைத்துச் சில காலம் ஆண்டு வந்திருக்கிறுன். மேலே கூறிய கல் தூண்களில் இரண்டைத் தற்சமயம் பீகு நகரத்தின் கோர்ட்டுக்கு முன்னல் ஊன்றி ஞாபகார்த்தமாக வைத்திருக்கின்றனர்.

1043-57 வரை பீகுவை டிஸ்ஸா என்னும் இந்து அரசன் ஒருவன் ஆண்டு வந்திருக்கின்ருன். இவன் இராஜேந்திர சோழனுக்கு எவ்வழியிலும் சம்பந்தப் பட்டவனு வென்பது ஆராயக் கிடக்கிறது. ஆனல் பீகுவுக்கு

---

§ இது 'மகாரத்ஜாவெங்' என்ற பர்மிய பேழுதியதோர் நூலில் காணப்படுகிறது.

¶ Taw Sein Ko.

உஸ்ஸா வென்றும் பேர் வழங்கிய தா'ே ஒரு வேளை டிஸ்ஸா என்பவனின் காலத்தில் ஏற்பட்டிருக்கலாமோ வென்றும், அப்படியானல் ஒரிஸா மாகாணத்திலிருந்து வந்தவனுகுமோ வென்றும் ஐயுற வேண்டியதாயிருக்கிறது. அஃது எவ்வாருயினும் டிஸ்ஸா ஓர் இந்து அரசனைச் சுமார் 15 வருட காலம் ஆண்டு வந்திருக்கிறுன்.

டிஸ்ஸா பௌத்தனை விதம்

டிஸ்ஸா புத்த மதத்தை எதிர்த்து புத்தர் உருவங்களைக் குளம், குட்டைகளில் எறிந்து அம்மதத்தில் சேர்ந்தவர்களையும், புத்தர் உருவங்களுக்குத் தலைசாய்த்தவர்களையும் கொலை புரிந்து வந்தான். அப்பொழுது தலேயங் வர்த்தகன் ஒருவனின் மகள் பத்ரதேவி என்னுமோர் மாது, புத்தர் மதமே உண்மையானதெனக் கொண்டு, ஒரு நாள் தான் ஸ்நானம் செய்த குளத்தில் அரசனுல் எறியப்பட்டுக்கிடந்த ஒரு புத்தர் உருவத்தைக் கண்டு வெகு பக்தியுடன் வீடு கொணர்ந்து ஆராதனை செய்து வந்தாள். இதனை அரசன் அறிந்து அப்பெண்ணைத் தன் சேவகர்களால் கொண்டுவரச் செய்து யானையால் மிதித்துக் கொலைசெய்ய உத்திர விட்டான்.

அம்மாது புத்தரைத் தியானித்து மந்திரங்களை உச்சரிக்கவும் யானை அப்பெண்ணின் மீது பாதத்தை வைக்காமல் பெருஞ் சப்தமிட்டு அப்பால் சென்றது. எத்தனையோ யானைகளைக் கொண்டு வந்தும் ஒன்ருவது மிதிக்கவில்லை. டிஸ்ஸா இதனைக் கேட்டு அதிகச் சீற்றங் கொண்டு பத்ரதேவியைப் பாடையில் கட்டி நெருப்பிட்டு எரிக்கும்படி செய்தான். அதிலும் பிரயோஜன மடையாது கடைசியாக டிஸ்ஸா, அம்மாதை நோக்கி, அவள் நம்பும் புத்தரின் உருவம், ஏழு எட்டு உருவங்களாக ஆகாய மார்க்கமாய்ப் பறந்தோடச் செய்யா விட்டால், அவளை ஏழு துண்டாக வெட்டி விடப் போவதாகத் தெரிவித்தான். அதற்குப் பத்ரதேவி, புத்தர் பெருமானை மனத்தில் சிந்தித்துத் தன்னைக் காப்பாற்ற வேண்டுமென்று இறைஞ்சி நிற்க, திடீரென்று எட்டு புத்தர் உருவங்கள் ஆகாயமார்க்கமாகப் பறந்தோடியதை அரசன் கண்டு வியப்புற்றுத் தனது மதக்குருக்களை அவ்வாறு செய்யக் கட்டளையிட முடியாமை கண்டு, அவர்களையெல்லாம் துரத்திவிட்டு பத்ரதேவியைத் தமது பட்டத்து இராணியாக்கித் தானும் புத்த மதத்தைத் தழுவிக் கொண்டான் என்று பர்மியப் பரம்பரைக் கதைகளில் காணப்படுகிறது. கதையில் முழு உண்மை இல்லாவிடினும் டிஸ்ஸா என்னும் இந்து அரசன் பத்ரதேவியை மணந்து புத்த மதத்தைத் தழுவினுன் என்பதை மறுக்க இயலாது.

சோழர்களின் போக்கு வரத்து

சோழ இராஜ்ஜியம் ரோமாபுரிவரை வியாபாரம் நடத்தியதுபோலவே கிழக்கே வெகுதூரம் நடத்திவந்திருக்கிறது. இவ்வாறு சென்றதில் மலேயா, ஜாவா, சுமத்ரா முதலிய பாகங்களைக் கைப்பற்றி சுமத்ரா தீவிலுள்ள பாம்பாங் என்ற நகரை முக்கிய பட்டணமாகக்கொண்டு தமிழர்இராஜ்ஜியத்தை ஸ்தாபித்து ஆண்டு, மலேயாவில் கேடா† என்ற நாமத்துடன் ஒரு பட்டணம் நிறுவியதாகவுந் தெரிகிறது. இவ்வாறுண்டான தமிழ்ராஜ்யத்திற்கு அறிகுறியாக இன்றும் சுமத்ராதீவில் இந்திரபுரம் என்றும், ஜாவா தீவில் மதுரை என்றும் இருபட்டணங்களிருக்கின்றன. இப்புதிய சோழ ராஜ்யத்திலிருந்து அதிகாரிகள் சீனதேசத்து

† கேடா (Kedah) என்பது 'கிடாரம்' என்றிருந்திருக்கலாம்.

அரச சபைகளுக்குச் சிநேகப் பான்மையுடன் பர்மா வழியாகப் போய் வர இருந்திருக்கிறார்கள். இவ்வாறு 1077 ஆண்டு வரை போக்கு வரத்து இருந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

1044-77 வரை பர்மாவை ஆண்ட அனோரட்டா என்ற முதல் பர்மிய அரசன் ஆளுகைக்குட்பட்டவை யாவும் தமிழர்கள் சுவாதீனத்திற்குட்பட்டவைகளன்றி தலேய்ங் ஜாதியாரின் பாகங்களல்ல வென்று ஒரு ஐரோப்பியரும்† சோழ ராஜ்யத்திலிருந்து படை யெடுப்பு வருகிறதென்று தெரிந்து அனோரட்டா பர்மாவின் 'டெல்டா' பாகத்தைக் கைப்பற்றிக் கொண்டான் என்று மற்றொரு ஐரோப்பியரும்§ கூறுவதிலிருந்து தென்னிந்தியத் தமிழர்களுக்கும், பர்மாவுக்கும் சம்பந்தம் ஏற்பட்டது வெகு காலம் என்று நிர்ணயிக்கலாம்.

பர்மாவை ஆண்ட மூன்றாவது அரசனான கியான்ஜித்தா (1084-1112) என்பவன் அப்பொழுது வெசாலி என்றழைக்கப்பட்ட அஸ்ஸாம் தேசத்து அரசகுமாரியாகிய பஞ்சகல்யாணி என்னும் இந்திய மாதுக்குப் பிறந்தவன். பர்மிய அரசனான அனோரட்டா, பஞ்ச கல்யாணியை மணஞ் செய்து கொள்ள விரும்பியதாகவும், அதற்கிணங்கி அவளை அழைத்து வந்த அனோரட்டாவின் மந்திரி அவளை நேசித்தான் என்றும், எனவே இருவரையும் அரசன் துரத்தி விட்டான் என்றும் அம்மந்திரிக்குப் பிறந்தவனே கியான்ஜித்தா வென்றும் கூறப்படுகின்றன.

இவ்வாறு இந்திய ரத்தத்தையுடைய கியான்ஜித்தா, புத்தகயாவென்றதோரிடத்திலுள்ள ஆலயங்களைச் செப்பனிட்டுச் சடங்குகளை வெகு ஆடம்பரமாக நடத்திக் கொண்டிருக்கும்போது சோழ ராஜ்ஜியத்திலிருந்து (ஒரு வேளை மலேயா முதலிய விடங்களில் புதிதாய் ஸ்தாபிக்கப்பட்ட சோழ ராஜ்ஜியத்திலிருந்து) ஓர் சர்க்கார் அதிகாரி சீனா தேசத்திற்குப் போக அம்மார்க்கமாய் வந்திருப்பதாகக் கேட்டு வரவேற்று உபசரித்தான். மூன்று இரத்தினங்களாகிய புத்தர், புத்தரின் விதிகள், புத்தகுருமார்கள் இவைகளின் உண்மைப் பிரதாபங்களைப் பற்றி வரைந்து, வந்திருந்த சோழதேசத்து அதிகாரிக்கனுப்ப அவைகளின் உண்மைகளையும், உயர்வுகளையும் உற்றுணர்ந்து அவன் தனது பரிவாரங்களுடன் புத்த மதத்தைத் தழுவிக் கொண்டான் என்றும், பின்னர் கியான்ஜித்தாவுக்கு விலையுயர்ந்த இரத்தினம் முதலியவைகளோடு தனது அழகிய இளங் குமாரத்தியையும் அன்புடன் அளித்ததாகவும் செதுக்கெழுத்துக்களில் காணக் கிடக்கிறது.*

பர்மாவுக்குச் சோழ இராஜ்ஜியத்திலிருந்து பலவிதத் துணிகளும், மலேயாவத்திலிருந்து தேக்கு மரங்களும் (கி.பி. 600) ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இதே மாதிரி வட இந்தியாவிலிருந்து புத்தர் உருவச்சிலைகள் பர்மாவுக்கு அனுப்பப் பட்டு வந்தனவென்றும் தெரிகிறது.

'கல்லா'

பர்மியர்கள் 'பிரம்ம' என்றழைக்கப் பட்டு வந்தபோது, பர்மியர்கள் இந்தியர்களைக் 'கல்லா' வென்றழைத்து வந்தனர். பாலி அல்லது சமஸ்கிருதத்தில் 'குலம்' என்றால் 'குடும்

† Forchammer- 'Jardine Prize' 22

§ Stewart-Pegu Gazetteer 21

*Third Talaing Inscription at the Shweh Sandaw Pagoda Prome,- Epigraphia Birmanica 1 (11) 153.

வாழ்விலிருந்து வீழ்ந்து விட்ட பிறகு—?

—"வறுமைப் புலவன்"

நல்ல உன்னத ஸ்திதியில், சகோதரா, நீ இருந்தாய். செல்வமிழந்து, பதவியும் போனபிறகு, இப்பொழுது உன் பழைய நிலைமை நினைவுபடுத்திக் கொள்கிறாய். புழுப்போல் துடிக்கிறாய். வீழ்ச்சி உனக்குப் பெரிய அதிர்ச்சி; விதியின் கொடுமையான கதி; மீள முடியாத ஒரு துன்ப நிலை.

அதோ, எதிரே சற்று தூரத்தில், உனது சத்துருக்களில் ஒருவன், உன் நிலைமையைப் பார்த்து மெதுவாகச் சிரிக்கிறான். மற்றவர்களுடைய புறக்கணிப்பிலே, உன்னுடைய சிறுமை நன்கு வெளியாகிறது. நீ அளித்த பல விருந்துகளை நன்றாகச் சாப்பிட்ட உன் நண்பர்கள், இவ்வளவு தடபுடல் விருந்துகள் வைத்திருக்க வேண்டாமென்று இப்பொழுது சொல்கிறார்கள். உன் குற்றங்கள், இப்பொழுது மற்றவர் கண்களுக்குப் புலனாகின்றன. நன்றி கொன்ற தன்மை, இனி உன்னிடமிருந்து எதிர் பார்க்க வேண்டிய தொன்றுமில்லை யாதலினால், பகிரங்கமாக இப்பொழுது தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது. உனக்கு இந்த நிலைமை ஏற்படுமென்று ஒவ்வொரு முட்டாளும் இப்பொழுது சொல்ல ஆரம்பிக்கிறான். உன்னுடைய தேவைகளைக்கவனிக்க ஒரு வேலைக்காரன் கூடத் தேவையில்லைஎன்று உனக்குஇப்பொழுது தோன்றுகிறது. உன் தோட்டத்திலே உற்பத்தியான பழங்களை முன்னர் உன் நண்பர்களுக்குக் கூடைகூடையாகக் கொடுத்தனுப்பி யிருக்கலாம். ஆனால் இப்பொழுது அவற்றை யெல்லாம் மார்கெட்டுக்கு அனுப்பக் கூடாதென்று யோசிக்கிறாய்? இந்த நிலையிலே, பிச்சைக்காரர்களுக்குப் பிச்சைபோடுவதா? நீயே பரம ஏழையாயிற்றே.

இந்தத் துரதிர்ஷ்ட நிலைக்குத்தான், 'ஒவ்வொருநாளும் இறந்துகொண்டிருப்பது' என்று அர்த்தம். வாட்டர்லூயுத்தகளத்திலே நெபோலியன் நின்றமிடுக்கென்ன? பின்னர் செயின்ட் ஹெலினா தீவில்அவன்பட்ட அவஸ்தையென்ன?

பம்' 'வகுப்பு' என அர்த்தப்படுகிறது. ஆகவே 'கல்லா' வென்றால் 'உயர்ந்த வகுப்பார்' என்று பொருள் படுகிறது. இந்தியர்கள் அக்காலத்தில், கல்வி, நாகரிகம், அரசாங்கம் முதலிய முன்னேற்றங்களுக்குக் காரணமாயிருந்ததால் இந்தியர்களைப் பர்மியர்கள் 'உயர்ந்த வகுப்பினர்' அல்லது 'கல்லா' வென்று அழைத்து வந்தனர்.¶

டாக்டர் பிளாக்டன் என்பவர், பர்மியர்கள் பிறகு மேற்கிலிருந்து வருவோரனைவரையும் 'கல்லா' வென்று வெகு காலத்துக்குப் பிறகு அழைக்கத் தொடங்கினர் என்று கூறுகிறார். இதை வலியுறுத்த பர்மியர்கள், சில வெள்ளைக் கைதிகளை 'கலாப்லூ' அதாவது 'வெள்ளைக் கல்லா' என்றழைத்திருக்கிறார்கள். இப்பொழுது பொதுவாக வெள்ளையர்களைப் 'போ(வ்)' என்றும் கருமை நிறத்தினர் எல்லாரையும் 'கல்லா' வென்றும் அழைக்கத் தொடங்கிவிட்டனர்.

¶G.H.Luce-Appendix F.P 301.Burma Census Report 1931

மனிதன் யார்?

——"தேவ கவி"

எவனொருவன் ஒரு பெரிய கூட்டத்தில் தனது தனித்துவத்தை விட்டுக் கொடாமலிருக்கிறானோ,

எவனொருவன் தனது நம்பிக்கையிலே தைரியங்கொண்டவனாய், உலக மெல்லாம் ஒன்று சேர்ந்து 'ஆம்' என்று உரக்கச்சத்தமிட்டபோதிலும் 'இல்லை' என்று கூற வல்லானோ,

எவனொருவன் வயிற்றுப்பிழைப்புக்காக ஏற்றுக்கொண்டுள்ள தொழிலை, அது தரும் ஊதியத்தைக்கொண்டு இழிவென்றோ உயர்வென்றோ கருதாமல், அத்தொழிலுக்குப் புறம்பானவனா யிருக்கிறானோ,

எவனொருவன் தனது தொழிலில் ஆத்மஅபிவிருத்தி, ஞானப்பெருக்கம், ஒழுங்கு, ஒழுக்கம், மனிதத்தன்மை ஆகியவற்றைக் காண்கிறானோ,

எவனொருவன் நிதானபுத்தியுடையவனாய், தனது உபயோகத்தையும் அதிகாரத்தையும் ஒரு சிறு துறை காரணமாக உலக நன்மைக்குப் பயன்படுத்த முடியாத சாபத்தைப் பெறாமலிருக்கிறானோ,

எவனொருவன் இயற்கையிலேயே கோழையாக இல்லாமல் வீர புருஷனாக விளங்குகிறானோ,

எவனொருவன் தனது ஆத்ம வளர்ச்சியை ஒரு சார்பாக மட்டும் செலுத்தாமல் பல சார்பாகவும் ஒரே நிதானமாகச் செலுத்துகிறானோ,

எவனொருவன் விசாலநோக்குடன் விஷயங்களை ஆழ்ந்து கவனித்து, கல்லூரியில் படித்த விஷயங்களை ஏட்டுச்சுரைக்காயாகக் கொள்ளாமல் அநுபவ வாழ்க்கைக்குக் கொண்டுவருகிறானோ,

எவனொருவன் தனது நல்ல பெயரை விலையற்ற பொக்கிஷமாகக் கருதுகிறானோ,

எவனொருவன் வெறுந்துறவியா யில்லாமல், உயிரும் ஊக்கமும் நிறைந்தவனாய், தனது உணர்ச்சிகளை யெல்லாம் தனது மனோபலத்திற்குக் கட்டுப்படுத்துகிறவனாய், தனது மனச்சாட்சிக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவனாய், இயற்கையழகையும் கலை யழகையும் அநுபவிக்கக்கூடியவனாய், இழிவான எண்ணங்களையும் செயல்களையும் புறக்கணிப்பவனாய், தன்னைப்போல் பிறரையும் மதிக்கக்கூடியவனாய் இருக்கிறானோ,

அவனே மனிதன்.

மனிதன் நிமிர்ந்து நிற்கவேண்டும். தூய்மையுள்ளவனாய் இருக்கவேண்டும். தாராள மனப்பான்மை கொண்டவனாய் இருக்கவேண்டும். இவைமட்டும் போதா. அவன் அறிவு, திறமை, வீரம் முதலியன நிறைந்தவனாகவும் இருக்க வேண்டும். இத்தகையவனையே மனிதன் என்று கடவுள் அழைக்கிறார். அவனது நரம்புகள் உணர்ச்சி வேகத்தினால் முறுக்கேறி நிற்கவேண்டும். அவனது அறிவு கூர்மை, ஆழம், விசாலம் இவற்றோடு கூடி இருக்கவேண்டும். அவனது கரங்கள் எந்தத் தொழிலையும் செய்யக்கூடிய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அவனது கண்கள் தூரதிருஷ்டிக்கண்ணாடிபோல் இருக்கவேண்டும். அவனது இருதயம் மிருதுவானதாய், மிகப் பரந்ததாய், பளிங்குபோல் இருக்கவேண்டும்.

அவன்தான் மனிதன்.

இத்தகைய மனிதத்தன்மைகள் நிறைந்த
மகா புருஷர்கள் யார்?



சிறுகதை எழுதுதல்

—கி. ரா

சிறுகதைகள் எழுதுவது தனிக்கலை. அஃது ஒரு 'நிரடான' கலையுங்கூட. அதில் கைதேர்ந்தவர் கி. ரா. இந்த வியாசத்தினாலேயே அவருடைய தேர்ச்சியை நன்றாக அளந்து பார்க்கலாம்.

இலக்கியத்திலே அப்பியாசத்தில் மிகவும் கஷ்டமான பாகம் 'சிறுகதை' தான். ஆனால் ஆரம்ப ஆசிரியர்களை மிகவும்எளிதில் கவர்வதும் 'சிறுகதை' தான். ஏதாவது எழுதவேண்டுமென்று நினைத்ததும் முதலில் கதை தான் எழுதுகிறார்கள் அவர்கள்.

இதற்குக் காரணம், இலக்கியத்தில் ரொம்ப ருசியான பாகம், அதோடு ரொம்ப எளிதாக எல்லோரும் ரஸிக்க விரும்பும் பாகம் கதை தான். கதை சொல்லிக் கதை கேட்கும் வழக்கம் மனிதனுடைய மிகவும புராதனமான வழக்கம். அது நாளடைவில் ரூபத்திலும் சொல்லும் முறையிலும் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது; இன்று ஒரு உன்னதமான நிலையை அடைந்திருக்கிறது.

என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிறார். அவருக்குக் கதைகள் எழுத வேண்டுமென்று ஆசை அபாரம். ஆனால் தேகத்திலுள்ள சோம்பல் அவரைப் பின்னுக்கிழுத்துக் கொண்டேயிருக்கும். ஆனாலும் ஆசையினால் அவர் அடிக்கடி கேட்பார்: 'ஸார், ஏதாவது ஒரு கருத்து சொல்லுங்களேன். இன்ன பத்திரிகைக்கு ஒரு கதை எழுதவேண்டும். என்னத்தைப் பற்றி எழுதுவதென்று தெரியவில்லை' என்று.

அதேமாதிரி ஆரம்பஆசிரியர்களைப் பெரும்பாலும் முதலில் பயமுறுத்துவது இந்தக்கதை தான். எதைப் பற்றி எழுதுவது? என்ன எழுதுவது? 'ஒரு புருஷன் மனைவி. ஒரு நாள் சாயந்திரம் புருஷன் ஆபீஸிலிருந்து வந்ததும் வீடு பூட்டியிருந்தது. மனைவியைக் காணவில்லை. கவலைப்பட்டு போலீஸில் சொல்லுகிறான். பந்துக்களுக்கெல்லாம் தந்தி கொடுக்கிறான். கடைசியில் அவள் ஒரு பந்து வீட்டுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்தனள்.' இதைப்பற்றியெழுதலாம் என்று சொன்னால் அவர்கள் உடனே கதையை அழகாக மூக்குக் காது வைத்து எழுதி முடித்து விடுவார்கள்.

நல்ல தேர்ந்த ஆசிரியனுக்கு, கல்பனையுள்ள எழுத்தாளனுக்கு இந்தக்கதைப்பஞ்சம் கிடையாது. அவன்செய்யவேண்டியதெல்லாம் எழுதவேண்டுமென்று நினைக்கவேண்டியது தான். அவன் மனம் பக்குவப்பட்டு கைப்பயிற்சி யடைந்திருப்பதில் 'ஒருகதை வேணுமே!' என்று அவன் உட்கார்ந்து யோசிப்பதில்லை. எதிரே பார்க்கும் சம்பவங்களெல்லாம் அவனுக்கு ஒரு கதையாகத் தோன்றும்.

உதாரணமாக, பிளாட்பாரத்தில் நின்றுகொண்டிருக்கிறான் ஆசிரியன். எதிரேஒருவர் அவசரம் அவசரமாகக் கையில் பெட்டியுடன் ஓடிவருகிறார். வண்டி புறப்படும் சமயம். ஆச்சு. வண்டியும் புறப்பட்டுவிட்டது. பிரயாணி டிக்கட்டுடன் வியர்க்க விறுவிறுக்க ஓடிவருகிறார். ஆனால் பிரயோசனமில்லை. வண்டி போய்விட்டது.

இதைப் பார்க்கும் ஆசிரியரின் கல்பனை ரயிலுக்குமேல் வேகமாக ஓடுகிறது. இந்தப் பிரயாணி என்ன அவ

சரமாகப் போகிறாரோ? வீட்டில் யாராவது சீக்காயிருக்கலாம், அல்லது நாளைக்கு இவர் அவசியமாக ஆஜராகவேண்டி கேஸ் விசாரணை ஏதாவது இருக்கலாம். இப்போது இவர் போகாததால் நஷ்டந்தானே? ஆனால் ஒரு வேளை இந்த ரயில், வழியில் விபத்து ஏற்பட்டு முறிந்து விடுகிறது. அதனால் அந்தப் பிரயாணி இறந்து போய்விட இடமுண்டல்லவா? இப்பொழுது தப்பி விட்டாரல்லவா?— இவ்விதம் ஓடுகிறது அவனுடைய கல்பனை. சில நிமிஷங்களில் உள்ளத்தைக் கவரும் ஒரு அழகான கதை பிறந்து விடுகிறது!

எனக்குத் தெரிந்த ஒரு எழுத்தாளர் ஒரு சமயம் என்னிடம் சொன்னார்:- 'ஸார், இதைப் பாருங்கோ. மேல் நாடுகளில், அவர்களுடைய சமூக வாழ்க்கையில் கதை எழுத நிறைய இடம் இருக்கிறது. ஆனால் நம்ம தேசத்தில் பாருங்கள். எவ்வளவு கட்டுப்பாடுகள்! சட்ட திட்டங்கள்! அது தான் நமக்கு நல்ல கதை எழுத முடியவில்லை!' என்று.

நண்பரின் வாதம் எவ்வளவு ஆதாரமற்றது என்பதைக் கொஞ்சம் கதை எழுதி அநுபவமுள்ள யாரும் கண்ணை மூடிக்கொண்டு ஒப்புக்கொள்ளுவார்கள். நண்பர் ஆங்கிலத்தில் வெளிவரும் கந்தல்களைப் படித்துவிட்டு 'விடுதலையில்லா முக்கோணம்' (அதாவது ஒரு காதலன், காதலி, இடையே இன்னொரு துஷ்டன் இவர்களுடைய சிக்கல் வாழ்க்கை) 'விவாக ரத்து' 'தன்னுடைய சந்தோஷத்துக்காகப் பிறரைக் கொலை செய்யும் கதாநாயகி' இவை இல்லாவிட்டால் கதையில்லை என்று முடிவு கட்டியிருக்கிறார்!

ஆனால் எழுதும் திறமையுள்ள ஆசிரியனுக்குக்கட்டுப்பாடே கிடையாது. எதைப்பற்றி வேண்டுமானாலும் அவன் எழுதமுடியும்.

ஆனால் இந்தக்கலையை எய்துவதற்கு நல்ல பயிற்சி அவசியம். எடுத்த எடுப்பில் நல்ல கதையாக, குற்றங்குறைகளில்லாமல் எழுதிவிட வேண்டுமென்று எதிர்பார்ப்பது தப்பு. அந்த மாதிரி எழுதிய ஆசிரியன் இல்லையென்றே சொல்லிவிடலாம்.

கதை எழுதுவதற்கு முதலில் வேண்டியது எழுத வேண்டுமென்ற ஆசை. அந்த ஆசை எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு சீக்கிரமாக ஆசிரியன் முன்னேற முடியும். ஆனால் 'ஆசை மட்டும் இருந்தால் நல்லகதை எழுதிவிட முடியுமா? ஆசையோடு விடாமுயற்சியும் சேர வேண்டும். முதல் முதலில் நாலுவரி எழுதினதும் அதை எப்படியாவது உடனே பிரசுரித்துவிட வேண்டுமென்று விரும்புவது அசட்டுத்தனமாகும். எழுதி எழுதி நன்றாகப் பழகின பின்தான் பிரசுரிப்பதைப்பற்றி யோசிக்கவேண்டும். எழுதி எழுதி கிழித்தெறிய அஞ்சக்கூடாது. பயிற்சி ஏற்பட ஏற்படத் தான் கதை எழுதும் விதம், அந்தக் கலையின் நுணுக்கங்கள் முதலியன தெளிவுபட முடியும்.

ஆசை நிறைய இருக்கிறது. கதை எழுதுவதென்று தீர்மானித்தாய் விட்டது. விஷயத்தையும் பொறுக்கியாய் விட்டது. ஆனால் எப்படி ஆரம்பிப்பது? எப்படி வேண்டுமானாலும் ஆரம்பிக்கலாம். ஆனால் வாசகனுடைய கவனத்தைக்கவரும் வகையில் ஆரம்பிக்கவேண்டும். ஆரம்பிக்கும் விதம், அவரவர்கள் பழக்கம் ஆனபின் தானாகத் தீர்மானிக்க வேண்டுமே தவிர இன்னமாதிரிதான் ஆரம்பிக்கவேண்டும் என்று கோடு போட்டுக் காட்ட

முடியாது. சமீபத்தில் ஒரு பத்திரிகையில் படித்தேன். அமெரிக்காவில் கதை எழுதுவோருக்கென்று ஒரு அகராதி இருக்கிறதாம். அதில் இன்னின்ன சம்பவங்கள், இன்னின்ன கதைகள், இன்னின்ன முடிவுகள் என்று தனித்தனியாக ஒரு ஜாபிதா இருக்கிறதாம். அதில் நமக்கு எந்த மாதிரி கதை வேண்டுமோ அதைப் பார்த்துப் பொறுக்கிக் கொள்வது வழக்கமாம். இதைப்போல் அபத்தமான விசித்திரம் வேறு இருக்க முடியுமா?

ஒரு குறிப்பிட்ட கதையை அந்த ஆசிரியன் தன்னுடைய கல்பனையின் மூலம் ஒரு குறிப்பிட்ட தனி வழியில் தான் எழுதமுடியும். இதற்காகப் பிறர் ஜாபிதா போட்டு வைப்பதென்பது ரொம்பவும் அசம்பாவிதம்.

கதை எழுதத் தொடங்குமுன் ஆசிரியன் தன் கல்பனையில் அந்தக் கதையைத் திருப்பித் திருப்பிப்பார்க்கிறான். ஆயிரம் தடவை அந்தக் கதை, எழுத்தில் உருவெடுக்குமுன் அவனுடைய கல்பனையிலே நிகழ்கிறது. 'இப்படி மாற்றலாம். இந்த மாதிரி முடிந்தால் நன்றாயிருக்கும்' என்றெல்லாம் அவனாகவே தனக்குள் சீர்தூக்கிப் பார்க்கிறான். விரஸமாகப்படும் பாகங்களைக் கிழித்தெறிகிறான். அதன்பின் தான் கதை பிறக்கிறது.

சிறு கதையில் தற்காலம் கணக்கில்லாத ரூபங்களிருக்கின்றன. இன்னும் அதன் ரூபம் வளர்ந்து பெருகிக் கொண்டேயிருக்கிறது. எந்த மாதிரியான ரூபம் அமைப்பது என்பது பெரும்பாலும் கதையின் கருத்தைப் பொறுத்திருக்கிறது. ஆனால் அதை நிர்ணயிக்கவேண்டிய பொறுப்பு ஆசிரியனையே சேர்ந்தது. ஏனெனில் சிறுகதையென்பது அந்த ஆசிரியனின் தனிச் சிருஷ்டி; அவனுடைய சொந்தச் சொத்து.

ஆனாலும் பொதுவாகக் கதையில், ஆரம்பம், வளர்ச்சி, கதையின் உச்சி என்று சில சம்பிரதாய எல்லைகள் வழக்கிலிருக்கின்றன. அந்த எல்லைக்குள் தான் பாத்திரங்கள் நடமாட வேண்டியிருக்கிறது. ஏனெனில் வாசகனுக்குச் சோர்வு ஏற்படாமலிருப்பதற்காகக் கதையைச்சுருக்கிச் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் தேர்ந்த கதாசிரியன் இந்தஎல்லைக்குள்ளே இந்திர ஜாலங்களைச் செய்து விடுகிறான்! மனித வாழ்க்கையிலுள்ள ஏக்கங்களை, பெருமித மனக்கிளர்ச்சிகளை வெகு எளிதில் சித்திரித்து விடுகிறான்!

அவன் ஒன்றும் செய்துவிடவில்லை. அவனுடைய சிருஷ்டியான அந்த கதா பாத்திரங்களுக்குள்ளே புகுந்து விடுகிறான்! அந்தச் சில நிமிஷங்களுக்கு அவனுக்கு வெளியுலகம் ஒன்றும் கிடையாது. எல்லாவற்றையும் மறந்து அவனே கதாபாத்திரங்களாக மாறி விடுகிறான்! அவன் எழுதும் அந்தக் கதை அவனுக்கு நிஜமாகவே அப்போது நடக்கிறது! அந்தப் பாத்திரங்களின் இன்ப துன்பங்களை அப்படியே அவன் யதார்த்தமாக அனுபவிக்கிறான். இதுதான் வெற்றியின் ரஹஸ்யம்.

கதையை முடிப்பது எப்படி என்பது ஆரம்ப ஆசிரியர்களைப் பயமுறுத்தும் மற்றொரு பிரச்னை. ஆனால் ஒரு குறிப்பிட்ட கதை ஒருவிதமாகத்தான் முடிய முடியும். வேறு விதமாக முடிந்தால் அதன் நயம் குன்றி விடும் என்பது அநுபவம். ஆனால் விசேஷமாக நமது நாட்டில் துக்ககரமான முடிவுள்ள கதைகளை அதிகமாக யாரும் விரும்புவதில்லை. அந்த மாதிரியான கதைகளைக்

கண்டு மிரண்டு ஓடுகிறார்கள். அதற்குக் காரணம் என்ன என்பது நமக்கு அவசியமில்லை. ஆனால் இந்த நிலைமை விரும்பத்தக்கதல்ல என்பதை மட்டும் சொல்ல வேண்டும். அதே போல சில ஆசிரியர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கதை முடிவில் 'சுபம்-சுபம்' போட்டால்தான் தூக்கம் வரும். இது ஒரு பலவீனம். இந்தப் பலவீனம் நல்ல ரஸனைக்கு, அழகு நவிற்சிக்கு அடையாளமில்லை. துக்கத்தைக் கண்டு ஏன் பயப்பட வேண்டும்? உலகத்தில் எல்லாமே சுகமாக நடக்கிறதா? துக்கமே கிடையாதா?

இன்னொரு முக்கியமான விஷயம். கதை எப்படி முடிகிறது என்பதைப் பற்றி உயர் நவிற்சியுடைய ரஸிகன் கவனிப்பதேயில்லை. கதை நன்றாயிருக்கிறதா, படிக்கும்போது கல்பனையைத் தூண்டி உயர் சித்திரங்களை எழுப்புகின்றதா என்பதைத் தான் கவனிக்கிறான் அவன்.

கதை எழுதுவதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது நடைத் தெளிவு. எழுதும் கருத்து வாசகனுக்குத் தெளிவாக இருக்க வேண்டும். 'இதுவா, அதுவா' என்று வாசகனுக்குப் புதிர் போடும்படியான முறையில் எழுதுவது நல்ல கலையில்லை. வாசகன் மனதில் எந்தவிதமான பதிவை உண்டாக்கப் போகிறோம் என்பதை ஆசிரியன் முதலில் நிச்சயமாகத் தீர்மானித்துக் கொள்ள வேண்டியது. அதற்கான முறையில் கதைப் போக்கை நிர்ணயித்து எழுத வேண்டியது. அந்த ஆசிரியனின் உத்தேசப் பதிவு, வாசகனுடைய மனதில் தானாக ஏற்பட்டு விடுமானால் அந்தக் கதை பூர்ண வெற்றியடைந்து விட்டதென்று சொல்லி விடலாம்.

இன்னும் 'சிறு கதை'யைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதலாம். அவ்வளவு விஸ்தாரமான விஷயம் அது. ஆனால் இடத்திற் கஞ்சி, என்னுடைய சொந்த அநுபவத்தை வைத்துக் கொண்டு மேலாக, சுருக்கமாகச் சில குறிப்புகளை மட்டும் எழுதியிருக்கிறேன். இந்தக் கட்டுரையைப் படித்த பின், 'கதை எழுத வேண்டும்' என்று முன் வரும் உத்தேச ஆசிரியர்களில் யாராவது ஒருவராவது தங்கள் முயற்சியைக் கைவிட்டு விடுவார்களானால் நான் திருப்தியடைவேன். ஏனென்றால் அவ்வளவு சிரடான விஷயம் அது.

ஐரோப்பிய மகாயுத்தத்திற்கு முன்னர் அமெரிக்காவில் 1348 கோடீசுவரர்கள் இருந்தார்கள். யுத்தம் முடிந்த பிறகு 5526 பேர். 1929-ம் வருஷத்தில் இந்தக் கோடீசுவரர்களின் தொகை 14818 ஆகப் பெருகியது. இதே ஜர்மனியின் நிலையைப்பாருங்கள். யுத்தத்திற்கு முன்னர் 150 கோடீசுவரர்கள். யுத்தத்திற்குப் பிறகு 12 பேர் தான். ஜெர்மனியின் முணு முணுப்புக்கு வியாக்கியானம் வேறு வேண்டுமா?

மாஜிகெய்ஸர் பட்டந்துறந்து ஹாலந்துக்குச் சென்றபோது, அவனுடைய கோச் வண்டி விற்பனைக்கு வந்தது. அதை எதியோப்பிய மன்னனை ஹெயிலி செலாஸி வாங்கினான். அவனும் கெய்ஸரைப்போல் பட்டந் துறக்கும்படி யாகிவிட்டது. கோச் வண்டியின் அதிர்ஷ்டமா?

ராஜ பக்தி

—"சரித்திரக்காரன்"

எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற சம்பவம். நமது தாய் நாடு, புண்ணிய பூமி, இந்தியாவிலேதான். வேறெங்கே இந்த மாதிரியான செயல்கள் நிகழ்ந்திருக்க முடியும்?

டில்லிமா நகரம், எத்தனை அரச பரம்பரையினரை கைலாகு கொடுத்து சிங்காதனங்களில் ஏற்றி வைத்ததோ, அத்தனை அரச பரம்பரையினரையும் அந்தச் சிங்காதனங்களிலிருந்து இறக்கியும் இருக்கிறது. சுமார் பதின்மூன்று ஏகாதிபத்தியங்களை இது சிருஷ்டி செய்து சம்ஹரித்தும் இருக்கிறது. யானைகளின் மீது அம்பாரி போட்டு ஆடம்பரமாக ஊர்வலம் வந்த அரசர்களைக் கண்ட இந்த டில்லி பட்டணம், அதே அரச பரம்பரையினரால் சூறையாடப்பட்டும் வந்திருக்கிறது. ஒரு முறையல்ல, பலமுறை. ஆனால் இதற்காக இந்த நகரம் சலியாது, தன் ஆக்கல் அழித்தல் வேலையைச் செய்துகொண்டுதான் வந்திருக்கிறது. இனி எப்படியோ?

டில்லியில் பிருத்விராஜன் என்பவன் ஆண்டுகொண்டிருந்தான். இவன் மகா சூரன்; ஜனங்களுக்குத் தந்தையாயிருந்து நாட்டைப் பரிபாலித்து வந்தான். இவனுக்குப்பின்னால் வந்த இந்து மன்னர் எவரும், இவனைப்போல் இந்துஸ்தானத்தில் சீரும் சிறப்புமாக ஆட்சி புரியவில்லை யென்று சரித்திரக்காரர்கள் கூறுவார்கள். கவிகளின் வருணனைக்குக் கேட்க வேண்டுமோ?

பிருத்வி ராஜனிடத்தில் பரம விசுவாசம் பூண்டிருந்த சர்தார்கள் பலர். இவர்கள், தங்கள் அரசனுக்காக எதனையும் செய்யச் சித்தமாயிருந்தனர். அரசனும் இவர்களை அவ்வளவு கௌரவமாக நடத்திக்கொண்டு வந்தான்.

பிருத்வி மன்னனுடைய ராஜ்யத்திற்குப் புறம்பாக மஹோபே என்றொரு சிறு ராஜ்யம். இதனை ராய் பர்மால் என்பவன் ஆண்டுகொண்டு வந்தான். இந்த இரண்டு அரசர்களும் சதா சண்டை போட்டுக் கொண்டிருந்தனர். இதனால் இருதரத்துச் சேனா வீரர்களும் யுத்த ஆவேசம் நிரம்பியவர்களாகவே எப்பொழுதும் இருந்தனர். பர்மாலுக்கு, உற்ற துணைவர்களாகவும் சிறந்த சேனாதிபதிகளாகவும் இரண்டு பேர் இருந்தார்கள். ஆல்ஹா என்பது ஒருவனுடைய பெயர். மற்றொருவன் ஊதல். இவ்விருவரும் பர்மாலிடத்தில் எப்படி விசுவாச முடையவர்களாக இருந்தார்களோ, அப்படியே பர்மாலும் இவர்களிடத்தில் பூரண நம்பிக்கை வைத்திருந்தான்.

ஒரு சமயம், பிருத்வி ராஜனுக்கும் பர்மாலுக்கும் பிரமாதமான யுத்தம் ஆரம்பித்து விட்டது. இருதரத்துப் படைகளும் எப்படியாவது ஒருவித முடிவுக்கு வந்துவிடுவதென்று தீர்மானித்துமும்முரமாக யுத்தம் செய்தன. அமர்க்களத்தில் ரத்தஆறு ஓடியது. மண்டைகள் உருண்டன. அந்தோ! இந்த யுத்தத்தில் நமது தாய் நாட்டு வீரமக்கள் காட்டிய சாகஸந்தான் என்னே? வாளேந்திய கையர்களாய் வீழ்ந்தவர் எத்தனைபேர்? தங்கள் விசாலமான மார்பகத்தைப் பூமிதேவிக்குக் காட்ட மாட்டோமென்று சொல்லி ஒரே பிடிவாதமாக மல்லாந்து கொண்டே மடிந்த மகாபாக்கியசாலிகள் எத்தனைபேர்?

ஆல்ஹாவும், ஊதலும் தங்களுடைய வாளாயுதங்களின் பிரகாசத்திலேயே வீர சொர்க்கத்திற்குச் சென்று விட்டார்கள். பர்மாலின் சைனியம் இதனால் நிறைற ஆரம்பித்தது; ஆனால் பயந்து பின்னோக்கி ஓடவில்லை.

பிருத்வி ராஜனுடைய பக்கத்தில் அசகாய சூரர் பலர் துடிக்கத்துடிக்கக் கீழேவிழுந்து புரண்டுகொண்டிருந்தார்கள். இவர்களுடைய வாயிலிருந்து 'எங்கள் அரசன் நீடூழி வாழ வேண்டும்' என்ற பிரார்த்தனை ஒலித்துக் கொண்டிருந்தது. ஆனால் இவர்களுடைய பிரார்த்தனை பிருத்வி ராஜனுடைய தேகத்தில் ஏற்பட்ட காயங்களிலிருந்து வடியும் ரத்தத்தைத் தடுக்க முடியவில்லை. எவ்வளவு பலசாலியாக இருந்தாலும், எவ்வளவு மனோதிடம் இருந்தாலும், தேகத்தின் பல பாகங்களில் காயம் ஏற்பட்டு அவைகளிலிருந்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தால் அவன் எவ்வளவு நேரந்தான் சமாளித்துக்கொண்டிருக்க முடியும்? பிருத்வி ராஜன் கீழே விழுந்து விட்டான். பிரக்ஞை இல்லை. அக்கம்பக்கத்திலே என்ன நடக்கிறதென்று அவனுக்குத் தெரியாது.

பிருத்வி ராஜனுடைய சர்தார்களில் சம்யம்ராய் என்பவன் ஒருவன். எஜமான விசுவாசி. இவனும் யுத்தகளத்தில், தன் அரசனுடன் நிழல்போல் இருந்து போர்புரிந்தான். அப்பொழுது, சத்துருக்களின் வாட்களினால் இவனுடைய இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்டு விட்டன. கீழே விழுந்தான். எழுந்திருக்க முடியவில்லை. இவனுக்கு அருகாமையிலேயே, பிருத்வி ராஜனும் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தான். பார்த்தான் சம்யம்ராய். என்ன செய்வான்? மனந்தவித்தான். எழுந்திருக்க முயல்வான். முடியாது. புரண்டாவது செல்வோமென்று யத்தனித்தான். தேகமெல்லாம் வெட்டுக் காயங்கள். 'ஆ, அரசே' என்று அலறிக்கொண்டிருந்தான்.

மூர்ச்சையாகி விழுந்துவிட்ட பிருத்வி ராஜனைப் பிணமென்று கருதிக் கொண்டு, காகங்களும் கழுகுகளும் கூடிவிட்டன. ஆரவாரம் செய்தன. அரசனுடைய உடலமன்றோ இவைகளுக்கு ஆகாரமாக அகப்பட்டிருக்கிறது!

பிருத்வி ராஜனைச் சுற்றி இந்த மாமிசபட்சணிகள் ஆரவாரித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான் சம்யம்ராய். மிகுந்த கவலை கொண்டான். தன்னையறியாமலே எழுந்திருக்க முயன்றான். எப்படி முடியும்? முழங்கால்களுக்குக் கீழே ஒன்று மில்லையே.

கடைசியில் ஓர் உபாயம் செய்தான். ஆ! அந்த உபாயத்தை எப்படி வருணிப்பது? எந்த நாட்டுச் சரித்திரத்திலே இத்தகைய வீரச் செயலைப்பார்க்க முடியும்? பக்கத்திலே உடைந்து போனவாள் ஒன்று வீழ்ந்து கிடந்தது. அதனை மெதுவாகக் கையை நீட்டி எடுத்துக்கொண்டான். தனது தேகத்திலிருந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சதையை அறுத்து, அந்தப் பட்சிகளின் அருகில் எறிந்தான். அவை, பிருத்வி ராஜனை விட்டுவிட்டு, இந்த மாமிசத்துண்டுகளண்டை வந்து கூடிவிட்டன. இப்படியே சிறுசிறு துண்டங்களாகத் தன் தேகத்தை அறுத்துப் பட்சிகளுக்கு ஆகாரமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறான், சம்யம்ராய். எப்படியாவது பிருத்வி ராஜன் உயிர் பிழைக்கவேண்டு மென்பதுதான் இவன் கவலை.

இப்படி இவன் செய்து கொண்டிருக்கிற சமயத்தில் பிருத்விராஜனுக்கு சிறிது பிரக்ஞை வந்தது. கண் திறந்தான். பார்த்தான் சுற்றுமுற்றும்.

சம்யம்ராய், தனது அன்புள்ள சர்தார் செய்துவரும் அரிய செயலைக்கண்டான்; கண்ணீர் விட்டான். இதனுல் மறுபடியும் மூர்ச்சையாகி விட்டான்.

பிருத்விராஜனுடைய இந்தக்கண்ணீரைப்பார்த்து, சம்யம்ராய்க்குச் சந்தோஷம் ஏற்பட்டுவிட்டது. ஏன்? தனது அரசன் உயிர் பிழைத்திருக்கிருனல்லவா? மேலும் உற்சாகத்தோடு சதையை அறுத்துப்போட ஆரம்பித்தான்.

இச்சமயத்தில் சந்தன்ராய் என்பவன் யதேச்சையாக அங்கே வந்தான். இவன் பிருத்விராஜனுடைய ஆப்த நண்பன். சமஸ்தானகவியுங்கூட. தன் அரசனைத்தேடிவந்த இவன் சம்யம்ராயின் விபரீதமான செயலைப் பார்த்தான். திக்பிரமையடைந்தான். 'அப்பனே சம்யம்ராய்! என்ன இது?' என்று சொல்லிக்கொண்டே அருகில் சென்ருன். செல்லும்போது, ஒருபுறமாக பிருத்விராஜன் மூர்ச்சையாகி விழுந்துகிடப்பதையும் பார்த்துவிட்டான். ஒருவாறு புரிந்துகொண்டான் விஷயத்தை. கவியல்லவா?

சம்யம்ராயின் அருகில்சென்று 'அப்பா சம்யம்ராய்! என்ன கோரமான தியாகம் இது?' என்று ஆத்திரத்தோடு கேட்டான். புன்முறுவலோடு பதில் சொல்கிருன் சமயம் ராய்:- "கவிஞர் பெருமானே! பிருத்விராஜனுடைய உப்பைத்தின்றுதான் இந்தச் சரீரம் வளர்ந்தது. அவனுக்காகவே இந்தச்சரீரத்தை உபயோகப் படுத்துவதுசரியல்லவா? தாங்கள் நல்லசமயத்தில் வந்தீர்கள். என்னுடைய கடமையை நான் செய்துவிட்டேன். தாங்கள் எப்படியாவது அரசனைக் காப்பாற்ற வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே இருகைகளையும்கூப்பினுன்.

பார்த்தான் சந்தன்ராய்; விக்கி விக்கி அழ ஆரம்பித்து விட்டான். அவனுல் வேறென்றும் செய்யமுடியவில்லை. இப்படி இவன் அழுதுகொண்டிருக்கிறபோதே, சம்யம்ராய் அரசனைக் காப்பாற்றி விட்டோம் என்ற பெருமையிலே, அரசனைச் சந்தன்ராய் கையிலே ஒப்புவித்து விட்டோமென்ற திருப்தியிலே வீர சொர்க்கத்திற்குப் போய்விட்டான்.

இதுதான் ராஜபக்தி. இந்தியர்கள் பரம்பரையான ராஜபக்தியுடையவர்கள் என்பதற்கு இன்னும் எத்தனையோ உதாரணங்களை இந்திய சரித்திரத்திலிருந்து எடுத்துக்காட்டலாம். ஆனுல் ஒரு முக்கியமான விஷயம். இந்தியர்கள் எப்பொழுதுமே ராஜபக்தி வேறே, தேசபக்தி வேறே என்றுபிரித்துக்காட்டியதுகிடையாது.

மூளையில் ஒன்றுமில்லை; ஆனுல் பை நிறையப் பணம் இருக்கிறது. அப்படிப் பட்டவனுக்குத் தான் மதிப்பு. அதிர்ஷ்டம் என்கிற அம்புகளால் பொத்தலாக்கப்பட்டு விட்ட பை எவன் வசம் இருக்கிறதோ-அவனிடத்தில் எவ்வளவு நிரம்பிய அறிவு இருந்த போதிலும்-அவன் மதிக்கப்படுவதே கிடையாது. அட உலகமே !

ஃ ஃ ஃ

புருஷனுக்கும் மனைவிக்கும் மத்தியிலே 'எனது' 'உனது' என்ற பேச்சே இருக்கக் கூடாது. இருவருக்கும் பொதுவாகவே எல்லாம் நடை பெற வேண்டும். வேற்றுமைகளோ, வேற்றுமைகள் உண்டாகக் கூடிய சாதனங்களோ இருக்கவே கூடாது.

பெண்மையிலேதான் வாழ்வு

—"குயில்"

கிரீஸ் தேசத்திலே அத்தோஸ் மலை என்ற பெயருடன் ஒரு பிரதேசம் இருக்கிறது. இங்கே பல கிறிஸ்தவப் பாதிரி மடங்கள் இருக்கின்றன. இவை எந்த நாட்டு அரசாங்க ஆதிக்கத்திற்கும் உட்படாதவை. இந்த மடங்களுக்கெல்லாம் தலைவனாய் ஒரு பட்டாதிபதி இருக்கிறான். இந்த மடப் பிரதேசத்தில் என்ன விசேஷமென்றால், இங்கே பெண் நாற்றமே கிடையாது என்பதுதான். இன்று நேற்று ஏற்பட்டதல்ல; சென்ற ஆயிரம் வருஷங்களாக, இந்த அத்தோஸ் மலைப் பிரதேசத்திற்குள் ஒரு பெண் கூட பிரவேசித்ததில்லை. அப்படி யாராவது தெரியாமல் வந்து விடப் போகிறார்களே யென்பதற்காக இங்கேயுள்ள பாதிரிமார்கள் தங்கள் மடங்களை மலையுச்சிகளிலும் எளிதிலே செல்ல முடியாத இடங்களிலும் கட்டி வைத்திருக்கிறார்கள். இந்த இடங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால் கயிற்றுப் பாலங்கட்டிக் கொண்டுதான் செல்ல வேண்டும். இந்தப் பாதிரிமார்களுக்கு, முன்னர் ருஷ்ய அரசாங்கம் வருஷந்தோறும் நன்கொடையளித்து வந்தது. பின்னர் கிரீஸ் அரசாங்கம் உதவி வந்தது. இப்பொழுது இதுவும் தன் ஆதரவை நிறுத்திக் கொள்ளப் பார்க்கிறது.

பெண்ணில்லாத பிரதேசம் செழிப்பாயிருக்குமா? அங்கே அழகுதான் உண்டா? 1914ம் வருஷத்தில் இந்த அத்தோஸ் மலைப் பிரதேசத்தில் 15000 பாதிரிமார்கள் இருந்தார்கள். இப்பொழுது—அதாவது இருபது வருஷங்களுக்குப் பிறகு—அங்கே 2500 பேர்தான் இருக்கிறார்கள். இன்னும் குறைந்து போனால் அதற்கு ஆச்சரியப் படவேண்டியதில்லை.

இந்தப் பாதிரிமார்கள் ஏன் பெண்ணுலகத்தைக் கண்டு அஞ்சுகிறார்கள்? இவர்களுக்கிருப்பதாகச் சொல்லப்படும் தெய்வ பக்தி, தியாக சிந்தனை முதலியன யாவும் தாய்மார்களிடத்திலிருந்தன்றோ உண்டாயின? இவர்கள் தாய் வயிற்றில் பிறந்தவர்கள் தானே? அப்படியிருக்க, தாய்மையின் பெருமையை இவர்கள் அறியாமற் போனதென்ன? ஓ! பாதிரிமார்களே! வாருங்கள்; உங்கள் தனிமையிலிருந்து இறங்கி உலகத்திற்கு வாருங்கள். பெண்மையைப் பற்றி பெரியோர் சிலர் என்ன கூறியிருக்கின்றனர் என்பதைச் சிறிது செவி சாய்த்துக் கேளுங்கள்.

ஃ ஃ ஃ

"பெண்ணுலகம் இருக்கிறதே அஃது ஒரு தனியுலகம். அங்கே புயற்காற்று அடிப்பதில்லை. வாழ்க்கையிலே ஏற்படும் சூறாவளிகளிலிருந்து தப்பித்துத் தஞ்சம் புக மனிதன் அந்த உலகத்தையே நாடிச் செல்கிறான். அங்கே ஆனந்தமும் அன்பும் தாண்டவம் செய்கின்றன. குற்றமற்ற தன்மையும் அமைதியும் கூடி வாழ்கின்றன. அங்கே சந்தேகங்களில்லை; பொறாமைகளில்லை; இரண்டு நாவுகள் படைத்த பொய்மையும் அங்கு இல்லை. பழித்தல் என்னும் விஷமும் அங்குக் கிடையாது. அதனைச் சாந்தம் என்பது கவிந்து காப்பாற்றுகிறது. அங்கே 'இல்லை' என்ற பேச்சே இல்லை. எப்பொழுதும் நிறைவுதான். அந்த உலகத்திற்குள் மனிதன் நுழையும்போது, தன் துக்கங்களை

யெல்லாம் மறந்து விடுகிறான். கவலைகள் பறந்தோடுகின்றன. தான் வாழ்க்கையிலே அடைந்த ஆசாபங்கங்கள் அவன் ஞாபகத்திற்கு வருவதே கிடையாது. உடனே, தன் இருதயத்தை, நம்பிக்கைக்கும் இன்பத்துக்கும் திறந்து விடுகிறான். அப்படிப் பட்ட உலகம் எது?

ஒழுக்கமுள்ள ஒரு பெண்ணின் நிருவாகத்தின் கீழ் நடைபெற்று வரும் ஒழுங்கான குடும்பந்தான்."

ஃ ஃ ஃ

"பெண்கள் அந்தப் பெண் தெய்வங்கள்-அவர்கள் கடமைக்காக எதையும் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் 'முடியாது' என்பது கிடையாது. அன்பு, கௌரவம், நிஷ்கபடம், மதம் ஆகிய இவற்றைக் காப்பாற்றுவதற்குச் சிறிதும் பின் வாங்கமாட்டார்கள்: சந்தோஷத்தின் குரலையோ, அதிகார தொனியையோ அவர்கள் கவனியாமல் செல்லலாம். ஆனால் எங்கே துக்க ஓசை கேட்கிறதோ அங்கே உடனே காது கொடுத்துக் கேட்பார்கள்.

நோயாளிகளின் அறையிலே, சாகுந்தறுவாயிலுள்ளவர்களின் தலையணைக்குப் பக்கத்திலே, இறந்து போனவர்களின் சவக் குழிக்கு அருகாமையிலே, மதத்தின் பலி பீடத்திலே பெண்களை நிச்சயமாகப் பார்க்கலாம். அவர்களில்லாவிட்டால் அவர்களுடைய அநுதாபமாவது அங்கே இருக்கும். பெண், இயற்கையிலே அச்சமுடையவள்தான். காற்றுக் கூட அவள் மீது வேகமாக வீச அஞ்சும் மெல்லியலாள் தான். ஆனால் சில சமயங்களிலே-சிறப்பாகக்கடமையை நிறைவேற்ற வேண்டிய சந்தர்ப்பங்களிலே-ஆபத்தைப் பார்க்கிறாளில்லை. அசாதாரணமான தைரியம் அவளிடத்திலே பிறந்து விடுகிறது. பின்னால் என்ன விளையுமோ என்று கூட அவள் கவலைப்படுவதில்லை! அப்பொழுதுதான் அவள் ஒரு புதிய சக்தி பெற்று நிற்கிறாள். அந்தச் சக்தி. துன்பங்களை வலிய ஏற்பதில்லை. அப்படி வலிய வந்தால் அதற்குப் பயந்து ஓடுவதுமில்லை. முணுமுணுக்காத, செய்வினைக்கு இரங்காத ஓர் உன்னத நிலையை அடைந்து விடுகிறாள். துன்பத்திலே அவள் காட்டும் சகிப்புத் தன்மை, மரணத்தையும் சில சமயங்களில் வென்று விடுகிறது."

ஃ ஃ ஃ

"நமது அதிருஷ்டம் மாறிவிடலாம்; செல்வாக்கெல்லாம் போய் விடலாம்; ஒழுக்கத்திலே நாம் நிலை தவறி விடலாம். ஆனால் நமது தாய், நம்மீது வைத்திருக்கும் அன்புமட்டும் மாறாது. தனது மக்களின் வளர்ச்சியிலே அவள் எப்படி இன்பங் காண்கிறாளோ, அப்படியே அவர்களுடைய வீழ்ச்சியிலும் அகௌரவத்திலும் அவள் துக்கத்தை அடைகிறாள். மக்களின் நிலையைக் கண்டு, தாயின் இதயத்திலிருந்து ரத்தம் வடிகிறது. அடக்கியும் அடங்காமல் அவள் கண்களிலிருந்து நீர் வடிகிறது. அவர்கள் நேரில் இருக்கிற போது, அவள் கண்கள் அவர்களுடனேயே சுற்றித் திரிகின்றன. அவர்கள் நேரில் இல்லாதபோது, அவர்களுக்குப் பின்னால் அவளுடைய ஆத்மா சென்று கொண்டிருக்கிறது. சலிப்புக் கொள்ளாத பொறுமையோடு, முடிவு காணாத தன்னல மறுப்போடு, அவள்-அந்தத் தாய்-தன் மக்களின் சுகத்திற்காகவும் சந்தோஷத்திற்காகவும் தனது எல்லாவற்றையும் தியாகம் செய்து விடுகிறாள். அவள் காட்டும் அநுதாபம் எல்லாராலும் உரைப்படுகிறது. அவள் கூறும் ஆறுதல் மொழிகள், மக்களின் ஆன்மா

வுக்குச் சாந்தியளிக்கின்றன. அவள் காட்டும் அன்போ, வாழ்க்கையிலே மாற்றமில்லாதது; மரணத்திலே பலமுடையது. அவள் தன் கடைசி மூச்சையும் தன் குழந்தைகளின் நன்மைக்காகவே விடுகிறாள்.

துரதிருஷ்டமாகிற அம்புகள் நம் மீது வந்து விழும்போது, தாயன்பு அவைகளைத் தகைந்துநிற்கிறது; தன் பக்திலிருந்து நம்மை உயரத் தூக்கி விடுகிறது. நோயின் போது, தலையணையாயிருந்து உதவுகிறது. தலைவலி என்றால், அந்த வலியைப் போக்க, தாயின் கையன்றோ விரைந்து வருகிறது. உலகமெல்லாம் நம்மை உறுத்துப் பார்த்த போதிலும், தாயின் புன்சிரிப்பிலல்லவோ நாம் அடைக்கலம் புகுந்து கொள்கிறோம்."

ஃ ஃ ஃ

"தொட்டிலிலே குழந்தை தூங்குகிறது; அல்லது நோயாய்ப் படுத்திருக்கிறது அருகே நின்ற தாய் அதனை ஆட்டுகிறாள். பாடுகிறாள்; அதன் மீது ஈ, கொசு வராதபடி விசிறியாலோ முந்தானையாலோ வீசுகிறாள். ஆனால் குழந்தையின் முகத் தோற்றத்தில் ஏதேனும் மாறுதல் உண்டானால், தாயின் முகத்திலே எவ்வளவு சீக்கிரமாக மாறுதல் உண்டாகிறது? குழந்தை நிம்மதியாகத் தூங்கவேண்டுமென்பதற்காக, தாய், எத்தனை இரவுகள் தூங்காமல் விழித்திருக்கிறாள்? இந்தத் தாயன்புக்குச் சமமாக, உலகத்திலே வேறெந்தச் சக்திதான் இருக்கிறது? தனது குழந்தை பிற்காலத்திலே சுகமாக வாழவேண்டுமென்பதற்காக, எத்தனை பகல்கள் உழைப்பு! எத்தனை இரவுகள் விழிப்பு! தனது சுகங்களை எத்தனை தரம் தியாகம் செய்திருக்கிறாள்! ஓ! அந்தத் தாயன்பு, மோட்ச உலகத்தின் ஓர் அமிசம்; பெண்மையின் ஆன்ம பொக்கிஷத்திலிருந்து வரும் களங்கமற்ற ஒரு ஜோதி; குழந்தைகள் துன்பமாகிற இருளியே மயங்குகிறபோது, அவர்களுக்கு வழிகாட்டும் தூண்டா விளக்கு. நம்மோடு பாலியத்திலே படித்த சிநேகிதர்கள் நம்மை மறந்து விடலாம். நமது பெயரின் மீதும் செல்வத்தின் மீதும் களங்கமும் வறுமையும் விழலாம். நமது தகப்பன் கூட, 'நீ யார்? வெளியே போ' என்று நம்மைத் துரத்தி விடலாம். ஆனால் தாயன்போ சூரியனைப் போல் அழியாதது; அவள் வாழ்க்கையோடு அவள் அன்பு பின்னிக்கொண்டிருக்கிறது. ஒன்று அழிந்தால்தான் மற்றொன்றும் அழியும். அவள் நா, குழறக் குழறக் கூறும்:—"நீ என்னுடைய குழந்தை. உலகமெல்லாம் உன்னை வெறுத்த போதிலும் நீ என் குழந்தை தான்." தன் குழந்தைக்கு நல்ல காலம் வரும் என்ற நம்பிக்கை தாய்க்கு எப்பொழுதுமே இருக்கும்."

புகழ், செல்வாக்கு, பணம் முதலியவற்றைப் பெறுவதற்காக உத்தியோகஸ்தர்கள், தங்கள் வாழ்விலே சிறந்ததெனக் கருதுகிற எல்லாவற்றையும் தியாகம் செய்யத் துணிகிறார்கள். வியாபாரிகள், பணத்தைக் கொழிக்கவேண்டுமென்ற போராட்டத்தில் ஈடுபட்டு, குடும்பம், தேகாரோக்கியம், சுகம் முதலியன அனைத்தையும் துறக்க முன் வருகிறார்கள். இவர்களுடைய முயற்சி பணத்தைப் பெருக்குகிறது. ஆனால் மனிதனைக் கொல்கிறது. ஒரு மனிதனுக்கு உலகமெல்லாம் ஒன்று கூடிக் காலடியிலே வந்து பணிந்தாலும், அவன் ஆத்மாவை இழந்து விட்டிருப்பானாகில், அவன் அடைந்த பயன்தானென்ன?

விசுவ பாரதி-சாந்தி நிகேதனம்

—வி. தேவாச்சாரியன்

இந்தக் கட்டுரையாளர் ஆங்கிலம், தமிழ், வங்காளி, ஹிந்தி முதலிய பாஷைகளில் தேர்ச்சி பெற்றவர். சாந்தி நிகேதனத்தில் சில ஆண்டுகள் தமிழாசிரியராக இருந்து தொண்டாற்றி வந்தார். மிக அடக்கமானவர். அன்பினால் அனைவரையும் அணைக்குந் தன்மையர். இந்தக் கட்டுரையில் சாந்தி நிகேதனத்தின் அன்றாட வேலைத் திட்டத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

1919, 1920, 1921 இந்த மூன்று ஆண்டுகளும் இந்தியாவின் சரித்திரத்தில் மிகவும் முக்கியமானவைகள். "இந்தியா இந்தியர்களுக்கே உரியது; அதனைப்பிரித்தாளுதல் அரிது; அதனுடைய தேசிய தாகத்தைத் தீர்த்துக்கொள்ள அதற்குச் சந்தர்ப்பமளிக்காவிட்டால், உலக சுதந்திரத்திற்கே கேடு சூழும்" என்னும் எண்ணத்தை உலகினுக்குணர்த்திய ஆண்டுகள் அம்மூன்றாண்டுகளே யாகும். அம்மூன்று ஆண்டுகளிலும் ஒவ்வொரு மனிதனுடையவும், ஒவ்வொரு சமூகத்தினுடையவும் தனிப்பட்டதும், பொதுப்படையானதுமான வாழ்க்கையில் நேரிட்ட மாறுதல்கள்-பூரண மாற்றங்கள்-எண்ணிலும் ஏட்டிலும் அடங்காதனவாகும்.

மாணவ வாழ்க்கைக்கு ஏற்பட்ட சோதனை

அந்த மூன்று ஆண்டுகளில், மாணவ வாழ்க்கைக்கு ஏற்பட்ட சோதனைகளைப் போல் வேறெந்த வாழ்க்கைக்கும் சோதனைகள் ஏற்படவில்லை. ஓர் புறம் "மாணவர்களே! கல்லூரிகளை, பாடசாலைகளை விட்டு வெளியில் வாருங்கள்! தேசிய பாடசாலைகளில் சேருங்கள்! அரசாங்கக் கல்லூரிகளை பஹிஷ்கரியுங்கள்! தேசசேவையிலீடுபடுங்கள்!" என்னும் கூக்குரல். மற்றொரு புறம், "மாணவர்களே இராஜீயத்திலீடுபடாதீர்கள்! அது உங்கள் சம்பந்தப்பட்டதல்ல" என்னும் கூக்குரல்.

இவ்விரு கூக்குரல்களுக்குமிடையில் மனச் சாட்சியை மதித்து நடக்க முயலும் மாணவன் சிக்கி அதனால் பட்ட அவஸ்தைகள் கொஞ்சமல்ல. அங்ஙனம் அவஸ்தைக் காளானவர்களில் யானும் ஒருவன். மேலே குறிப்பிட்டுள்ள ஆண்டுகளில் சென்னை மயிலாப்பூரில் யான் மாணவ வாழ்க்கையை மேற்கொண்டிருந்தேன். அரசாங்க ஆதரவில் நடைபெறும் பாடசாலையைப் பஹிஷ்கரித்துவிடவேண்டுமென்னும் எண்ணம் மிகுதியும் உண்டு. ஆனால்என் தந்தையார்க்குச் சம்மதமில்லை. இத்தருணத்தில் ஸ்ரீமான் சக்கிரவர்த்தி ராஜகோபாலாசாரியார் அவர்கள் மயிலாப்பூரில் லஸ் சர்ச் ரோட்டில் 8 இலக்கமிட்ட தமது மாளிகையில் வசித்துக் கொண்டிருந்தார். ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு அவ்வியக்கத்தைக் குறித்துத் தீவிரமாகப் பிரசாரஞ் செய்து கொண்டிருந்தார். என் நிலைமையை விளக்கி அவருக்கு ஓர் நிருபம் வரைந்து அதில் என்னை நேரிய வழியில் செலுத்துமாறு கேட்டுக்கொண்டேன். அப்பெரியார் நேரில் தம்மைத் தமது இல்லத்தில் சந்திக்குமாறு பதில் விடுத்தார். அங்ஙனமே சந்தித்தேன். ஹிந்தி பயில்வித்து, பின்னர் பிரயாகையிலுள்ள ஹிந்தி போதனா முறைப் பாடசாலைக்கு அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு ஸ்ரீஜத்

ஹரிஹர சர்மா அவர்களுக்கு ஓர் கடிதம் கொடுத்து என்னை அப்பெரியாரிடம் அனுப்பினர். ஹிந்தியும் பயின்றேன். பிரயாகைக்குச் செல்ல வேண்டிய காலமும் நெருங்கியது. அரசாங்கத்தில் உத்தியோகம் பெறுவதொன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்த என் தந்தையார் எனக்கு அனுமதி தர மறுத்து விட்டார். வேறு வழியில்லாது போகவே மீண்டும் அதே பாடசாலையில் படிக்கவும், அரசாங்கப் பரீக்ஷைக்குப் பணங் கட்டவும் நேர்ந்து விட்டது.

தோற்றுவாய்

மிக்க மன வருத்தத்துடன் இருந்த எனக்கு சாந்தி நிகேதனத்தைப் பற்றிய செய்தி வெஸ்லி காலேஜ் ஆசிரியர் ரெவரெண்டு வில்லியம்ஸ் அவர்கள் கூறத் தெரிந்தது. கேட்ட அக்காலந் தொட்டு அவ்வாசிரமத்தில் கல்வி பயில வேண்டுமென்னும் அவா மிகுதியாக விருந்தது. காலம் அதற்குத் துணை செய்யவில்லை. ஆனல், பன்னிரண்டாண்டுகள் கழிந்த பின்னர் ஆண்டவனருளால் அவ்வாச்சிரமத்தில் இரண்டாண்டுகள் வரையில் தமிழ்த் தொண்டு புரியும் பேறு கிடைத்தது. அவ்வாசிரமத்தில் நான் நேரில் கண்டதையும், அனுபவித்ததையும், அங்கு வாழ்க்கையில் நேர்ந்த மாறுதல்களையுங் குறித்து "ஜோதி"யின் மூலமாகத் தமிழ் மக்களுக்குக் கூற விரும்புகிறேன்.

விசுவ பாரதி

விசுவ பாரதி ஓர் பல்கலைக் கழகம். இக்கழகத்தில் உலகத்தில் வழங்கி வரும் பிரதான பாஷைகள் பலவும் போதிக்கப்படுகின்றன. ஆராய்ச்சி நிலயங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. பல பெரிய அறிஞர்களால், பற்பல பாஷைகளினும் எழுதப்பட்ட நூல்கள் நிறைந்த பெரிய புத்தகாலயம் ஒன்று இருக்கிறது. சிற்பம், சுதை வேலை, சங்கீதம், நடனம், பற்பலவிதமான கைத்தொழில்கள், விவசாயம் ஆகிய யாவும் போதிக்கப்படுகின்றன. பற்பல நாடுகளிலிருந்தும் சேகரிக்கப்பட்டதும், சித்திர வேலைப் பாடுகளமைந்ததுமான நவ நவமான பாத்திரங்கள், பட்டு, கம்பளம் முதலியவைகளாலான ஆடை வகைகள், மரச் சாமான்கள், மற்றும்பலவுங் கொண்ட பொருட் காட்சி சாலையொன்றுமிருக்கிறது.

மேலே கூறப்பட்டவைகள் யாவும் போதிக்கப்படும் இப்பல்கலைக் கழகத்திற்கு விசுவ பாரதி என்று பெயர். இப்பல்கலைக் கழகத்தின் பிரிவுகளைக் குறித்துச் சிறிது கூறுவேன்.

பல்கலைக் கழகத்தின் பிரிவுகள்

முதல் வகுப்புத் தொடங்கி மெட்ரிகியூலேஷன் வகுப்பு முடியவுள்ள பிரிவிற்கு 'பாடபவன்' (Patha Bhavan) என்றும், இண்டர்மீடியட், பி.ஏ. வகுப்புகளடங்கிய பிரிவுகளுக்கு 'சிக்ஷா பவன்' (Siksha Bhavan) என்றும், சரித்திரம், மதம், வேதம், காவியம் முதலானவைகளைக் குறித்து ஆராய்ச்சி நடைபெறும் பிரிவிற்கு 'வித்யா பவன்' (Vidhya Bhavan) என்றும், சங்கீதம், நடனம் ஆகியவைகள் போதிக்கப்படும் பிரிவினுக்கு 'சங்கீத பவன்' (Sangit Bhavan) என்றும், சித்திரம் வரைதல், சுதை வேலை, முதலானவைகள் பயிற்றுவிக்கப்படும் பிரிவினுக்கு 'கலா பவன்' (Kala Bhavan) என்றும் பெயர். 'டிபார்ட்மெண்டு' என்னும் ஆங்கில பதத்திற்கு என்ன பொருளோ அதே பொருள் தான் 'பவனம்' என்னும் வங்க பதத்திற்கும்.

போதனா முறை

இனி போதனா முறையைக் குறித்துச் சிறிது பேசுவோம். அவரவர் தாய்ப் பாஷை நீங்கலாக, ஏனைய பாடங்களெல்லாம் வங்க (Bengali) பாஷையின் மூலமாகவே போதிக்கப் படுகின்றன. நாடு முழுவதிலும் நிறுவப்பட்டுள்ள அரசாங்க ஆதரவு பெற்று நடைபெறும் பாடசாலைகளில் காலை முதல் தொடர்ந்து மாலை வரையிலும், இடையில் சிறிதும் ஓய்வில்லாது வகுப்புகள் நடைபெறுவதைப் போல் இங்கு நடைபெறுவதில்லை. சிறுவர் சிறுமிகளின் மனோபாவத்தை நன்குணர்ந்து அதற்கேற்ப காலவரையறைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இக்கல்விக்கழகத்திற்கும் ஏனைய கல்விக்கழகங்களுக்கு முள்ள வித்தியாசம் இதுவே யாகும். இதனைத் தெரிந்து கொள்ளுதல் மிகவும் முக்கியமானது. இதனை அறிந்து கொள்ள முயலுமுன் இக்கழகத்தின் ஸ்தாபகரான மகாகவி ரவீந்திரநாத் டாகூர் அவர்களைக் குறித்து அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. ஏனெனின், பல்கலைக் கழகத்தின் 'உயிர் அப்பெரியாரே யாவார்.

கவி ரவீந்திரர் தமது பதின் மூன்றுவது வயதிலேயே பள்ளிக்கூடத்திற்குப் போவதை விட்டுவிட்டார். பள்ளிக்கூட வாழ்க்கை அவருடைய இளமை மனதைத் திருப்தி படுத்துவதாக இல்லை. "இளைஞர் மனமோ தன்னைச் சுற்றியுள்ள இயற்கைப் பொருள்களின் மீது தாவுகிறது. தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொன்றைக் குறித்தும் அறிய ஆசைப்படுகிறது. சொல்லாலும், செயலாலும் பிறரால் விளக்க முடியாதவைகளைத் தாம் நேரில் உற்றுணர்வதால் எளிதில் அறியவல்லமை உண்டாகிறது. பள்ளிக்கூடம் என்னும் தொழிற் களரிகளிலும் (Factories) 'ஒழுங்கு' 'நல்ல நடவடிக்கை' என்பவைகளின் பெயரால், அடைத்து வைக்கப்பட்டு, சட்ட திட்டங்களால் பயமுறுத்தப் படுவதால், இயற்கை யன்னையின் கூட்டுறவால் மகிழ்ந்து இன்புற வேண்டிய மனம், பயத்தால் பீடிக்கப்பட்டு, சத்தற்ற, சாரமற்ற, ஜீவகளையில்லாத உருவங்களாகி விடுகின்றன" என்பதே கவியின் தற்கால பள்ளிக்கூடங்களைப் பற்றிய கருத்து.

ஆதலின், இளைஞர்களின் மனோ விருத்தியைப் பாழ் படுத்துவதற்கான மேற் கூறிய காருண்ய மற்ற முறைகளை விடுத்து, இயற்கையோடியைந்த வாழ்வை மாணவர்கள் அடையவும், தாராள மனப்பான்மையுடையவர்களாக ஆகவும் வல்ல ஓர் காலவரையை அமைத்திருக்கிறார். ஒரு பாடம் முடிந்து மற்றொரு பாடம் ஆரம்பமாவதற்கு இடையில் மாணவர்கள் தம்மிஷ்டப்படி ஓடியாடவும், பிறர் தலையீடின்றி யிருக்கவும் வேண்டி சிறிது ஓய்வு நேரம் உண்டாக்கிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனம் கொடுக்கப்பட்டிருப்பதால் மாணவர்களுக்குப்படிப்போ, அல்லது பாடசாலை வாழ்க்கையோ சுமையாகத் தோன்றுவதில்லை. இந்த ஏற்பாடே, பிற பாடசாலைகளாலும் பின் பற்றப்பட வேண்டிய ஏற்பாடாகும்.

சாந்தி நிகேதனம்

இதுகாறும் பல்கலைக் கழகத்தைப் பற்றிக் கூறினேன். இனி சாந்திநிகேதனத்தைப் பற்றிக் கூறுகிறேன்.

விசுவ பாரதி இருக்குமிடத்திற்கு 'சாந்தி நிகேதன' மென்று பெயர். சாந்தி நிகேதனம் என்னும் சொற்றொடருக்கு 'சாந்தத்தின் இருப்பிடம்' என்பது பொருள். இது ஒரு ஆசிரமம். சுமார் 400 ஏகர் விஸ்தீரண முள்ளது. மரங்களடர்ந்த இடம். மரங்கள்

பெரும்பாலும் கனி வருக்கங்களைத் தரக் கூடியவைகள். இந்த ஆசிரமத்தின் வட புறத்தில் மஹா கவியின் மாளிகை 'உத்திராயணம்' என்னும் பெயருடன் விளங்கிக் கொண்டிருக்கிறது. மேற்கே, கலா பவனமும் பொருட் காட்சி சாலையு மிருக்கின்றன. தென் பாகத்தில் ஆசிரியர்கள் வசிக்கக்கூடிய 'குருபள்ளி' என்னும் வீதி காணப்படும். வடக்கிலும் கிழக்கிலும் ஆச்சிரமத்தின் பிரவேச வாயில்கள். வடக்கு வாயிலில் 'அதிதிகளின் விடுதி' (Guest House) இருக்கிறது. ஆசிரமத்தின் நடுவில் புத்தகாலயமும், மாணவர்கள் தங்குவதற்கான விடுதிகளும், நாடக அரங்கமும் இருக்கின்றன. மாணவர்கள் தங்குவதற்கென்று அமைக்கப்பட்டுள்ள விடுதிகளில், பிராக் குடீர், சமிந்த குடீர், சந்தோஷ ஆலயம், பீதிகா முதலானவைகள் முக்கியமானவைகள்.

புத்தகாலயத்திற்கு அடுத்து, போஜன விடுதியும், அதனையடுத்து நாரீ பவனமும் அமையப் பெற்றிருக்கின்றன.

ஆசிரம வாழ்க்கை

வகுப்புகள் எல்லாம் மரத்தடியிலே நடை பெறுகின்றன. மழைக்காலங்களில் மாத்திரம் கட்டிடங்களின் தாழ்வாரங்களில் நடைபெறும். பண்டை குரு குலங்கள் இன்ன ரீதியில் தான் அமையப் பெற்றிருந்தன என்பதற்கு சாந்தி நிகேதனம் சாட்சியாக விளங்கிக் கொண்டிருக்கிறது. வானத்தால் மேகம் ஆழ்ந்து, மப்பும் மந்தாரமுமாக இருந்து குளிர்ந்த காற்று அடிக்குங் காலங்களில் ஆசிரியர்கள் மாணவர்களை யழைத்துக் கொண்டு உலாவச் செல்வர். ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரே குடும்பத்தினரைப் போல் பழகுவதும் அறிவினைப் பெருக்கிக் கொள்ளும் நிமித்தமும், வித்தியாபிவிருத்தியின் பொருட்டும் இங்குக் கூடியிருக்கிறோமென்னும் உணர்ச்சி ததும்புவதும் இங்குக் கண்கூடு. உலகத்திலுள்ள நானு தேசங்களிலிருந்தும் வித்தியார்த்திகள் இங்கு வந்து கூடியிருப்பதால் நிறவேற்றுமைக்கோ, அல்லது மதவேற்றுமைக்கோ இடமில்லை. சாந்தி நிகேதனத்தில் அடி வைத்தவுடன் ஒருவன் தன் குறுகிய எண்ணங்களை யெல்லாம் மறந்து விடுகிறான். உலக சகோதரத்துவத்தை உணருகிறான். அதை விட்டு நீங்கும்பொழுதும் இதே கொள்கைகளை உலகத்தில் பரப்ப விரும்பும் நோக்கத்துடன் நீங்குகிறான்.

எல்லாவற்றிற்கும் மேலாக, மஹா கவியின் புத்தம் புதிய பாடல்களையும், கருத்துகளையும் முதலில் கேட்டுமகிழும் பாக்கியம் சாந்திநிகேதன வாசிகளுக்கே கிட்டுகிறது. நாள்தோறும் ஆசிரமத்திற்கு அறிஞர்கள் விஜயஞ் செய்த வண்ண மிருக்கின்றனர். அவர் தம் அரிய பிரசங்கங்கள் அறிவு வளர்ச்சிக்குத் துணை செய்யக் கூடியவைகளாக விருக்கின்றன.

ருதுக்கள் தோறும் நடைபெறும் *விழாக்களைக் காண மாணவர்களின் பெற்றோரும் மற்றோரும் வந்து கூடுகின்றனர். வேனில் விழா, கார்கால விழா, அறுவடைவிழா ஆகிய இம் மூன்றும் குறிப்பிடத்தக்கவைகள். இவ்விழாக்காலங்களில் சங்கீத போதகாசிரியர்களும், நடன போதகாசிரியர்களும் தத்தம் மாணவர்களை அரங்கேற்றுவிப்பர். ருதுலட்சணங்களை விளக்கி மஹாகவி பாடல்களை இயற்றி, தம் இனிய குரலில் பாடிமகிழ்விப்பார். கலா பவனத்தில் பயிலும் மாணவிகள் புலவர் பெருமானை, விழாக் கொண்டாடுவதற்கான உபகரணங்களுடன்

வசந்தனை யழைக்கும் பாடல்களைப் பாடி நடனத்துடன் ஊர்வலமாக 'அமர குஞ்சம்' என்னு மிடத்திற்கு அழைத்துவரும் காட்சி, சங்கீதம், சாஹித்தியம், பரதநாட்டியம் ஆகிய துறைகளில் இந்தியா அடைந்திருந்த மேன்மையை நினைப்பூட்ட வல்லதாக விருக்கும். நாட்டியக்கலையில், பாரத தேசத்தின் நாலுபாகங்களிலும் பின் பற்றப்படும் முறைகளில் சிறந்தவை பலவும் மேற் கொள்ளப்பட்டு அவைகள் யாவும் பயிற்றுவிக்கப் படுதல் குறிப்பிடத்தக்கது. கேரள நாட்டில் பயிற்றுவிக்கப் படும் 'கதகளி' என்னும் நாட்டியத்துறையும், மணிபுரியில் பெரிதும் போற்றப் படும் பாகவத கலை சம்பந்தமான நாட்டியத்துறைகளும் பின்பற்றப் படுகின்றன.

கால அட்டவணை

காலையில் 4-45க்குத் துயில் நீங்கி எழுந்திருத்தல். 5-30க்குக் குளித் தல். 6-மணிக்குச் சிற்றுண்டி கொள்ளல். 6-15க்குத் தொழுகை யாரம்பம் 6-30க்கு வகுப்புக்கள் தொடக்கம். 9-மணிக்குப் பானவகைகள் தரப்படல். 11-மணிக்கு உணவு. 11-மணி முதல் 12-30வரையில் ஓய்வு. 12-30முதல் 1-30வரையில் ஆசிரியர் களின் பார்வையில் மாணவர்கள் பாடம் பயிலல். 2-30க்கு மாலைவகுப்பு ஆரம்பம். 4-45க்கு மாலை சிற்றுண்டி. இரவு 8-மணிக்கு ஆகாரம்.

இரவில் மாணவர்கள் ஆசிரியர்களுடன் மஹாகவியின் கீதங்களை இன்னிசைக்கருவிகளுடன் பாடிக்கொண்டு ஆசிரமத்தைச் சுற்றிவருதலைக் காணுதல் வாழ்க்கையில் ஓர் புத்துணர்ச்சியை அளிக்கும் காட்சியாக இருக்கும்.

பிரதி புதனும் விடுமுறை நாட்கள். விடுமுறையன்று காலை 7-30க்கு ஆசிரமத்திலிருக்கும் ஆலயத்தில் மஹாகவி பிரார்த்தனையை நடத்துவார். அதனைத் தொடர்ந்து ஓர் பிரசங்கஞ் செய்வார். ஆசிரமத்தைச் சார்ந்த ஆலயத்தில் உருவ வழிபாடில்லை யென்பது ஈண்டுக் குறிப்பிடத்தகுந்தது.

விடுமுறை காலங்களில், அண்மையிலும் சேய்மையிலுமுள்ள சரித்திர சம்பந்தமான இடங்களுக்கு மாணவர்கள் அழைத்துச் செல்லப்படுவர். நிலாக்காலங்களில் அருகிலுள்ள நீர் நிலைகளுக்கும், இன்பக்காட்சிகளை யளிக்க வல்ல மனோரம்மியமான இடங்களுக்கும் அழைத்தேகப் படுவர்.

முடிவுரை

ஒவ்வொரு நாட்டிற்கும் ஜீவநாடியான கலைகளின் ஒற்றுமையை நாடி அக்கலைகளின் மூலம் மனித வருக்கத்தில் ஒற்றுமை காணுவதற்கும், அத்தகைய ஒற்றுமையை விரும்புவோர் ஓரிடத்தில் தங்கி தத்தம் அபிப்பிராயங்களை வெளியிட்டு தாராளமாகக் கலந்து பழகவும், அறிவின் உறைவிடம் என்று அனைவரும் புகழும் பெருமைக்குப் பாத்திரமான சாந்திநிகேதன ஆசிரமத்தில் அறிவுடையோர் பலரும் தம் ஆயுட் காலத்தில் ஓரிருஆண்டுகளாவது தங்கி, வாழ்க்கையில் ஓர் உத்வேகத்தைப் பெறுதல் இன்றியமையாதது என்பது என் அபிப்பிராயம். என் ஜாதி, என் மதம், என் தேசம் என்னும் மயக்கம் தலைக்கேறி பூசல் விளைவிக்கும் குறுகிய அறிவுடைய மக்கள் அங்குத் தங்கி வெளிவருவரேல் எத்தகைய உணர்ச்சியுடன் வெளிவருவர்? ஜாதி, மதம்,

இந்தியாவின் கவர்னர்-ஜெனரல்கள்

பிரிட்டிஷார், இந்தியாவின் அரசாங்க நிருவாகத்தை ஒப்புக்கொண்டது முதல் வரிசைக்கிரமமாக நியமனம் பெற்ற கவர்னர்-ஜெனரல்கள் வருமாறு:-

பெயர்	நியமன வருஷம்	பெயர்	நியமனவருஷம்
வாரன் ஹேஸ்டிங்கஸ்-	— 1774	ஸர்ஜான் லாரென்ஸ்-	—1864
ஸர்ஜான் மாக்பர்ஸன்-	— 1785	லார்ட் மேயோ-	—1869
லார்ட் கார்ன்வாலிஸ்-	— 1786	,, நார்த்ப்ரூக்-	—1872
ஸர்ஜான்ஷோர்-	— 1793	,, லிட்டன்-	—1876
லார்ட் மார்னிங்க்டன்-	— 1798	,, ரிப்பன்-	—1880
,, கார்ன்வாலிஸ் (மீண்டும்)	1805	,, டப்ரின்-	—1884
,, மின்டோ-	— 1807	,, லான்ட்ஸ் டௌன்-	—1888
,, மாய்ரா-	— 1813	,, எல்ஜின்-	—1894
,, ஆம்ஹர்ஸ்ட்-	— 1823	,, கர்ஸன்-	—1899
,, பெண்டிங்க்-	— 1828	,, மின்டோ-	—1905
,, ஆக்லண்ட்-	— 1836	,, ஹார்டிஞ்ச்	—1910
,, எல்லன்பரோ-	— 1842	,, செம்ஸ் போர்ட்-	—1916
,, ஹார்டிஞ்ச்-	— 1844	,, ரெடிப்-	—1921
,, டல்ஹவுஸி-	— 1848	,, இர்வின்-	—1926
,, கான்னிங்-	— 1856	,, வில்லிங்க்டன்-	—1931
,, எல்ஜின்-	— 1862	,, லின்லித்கௌ-	—1936

தேசம் யாவற்றையும் அகண்டமான திருஷ்டியில் நோக்கும் பொழுது அவையாவும் ஆண்டவன் முன்னிலையில் பேதமற்று ஒரே தன்மையதாய் மனிதவருக்கம் முழுவதும் ஒரே குடும்பம் என்னும் உணர்வு பெற்று சர்வ மதங்களுக்கும் ஜீவாதாரமான ஒழுக்கம் ஒன்றே உயர்வைத் தரவல்லது என்னும் உணர்ச்சியுடன் வெளிவருவர். இதில் ஐயமில்லை. கேவலம் உத்தியோகத்திற்கென்று மட்டில் கல்வியளிக்கும் பெற்றோர்களொழிந்த ஏனைய பெற்றோர்கள்—சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய சீரிய நோக்கங்களைக் குறித்துப் பழகவேண்டுமென்றும் அவனுடைய பெற்றோர்கள் தத்தம் மக்களை அக்குரு குலத்திற்கனுப்பி வாழ்க்கையின் சீரியநோக்கங்கங்களையும் பூர்த்தி செய்தல் நலம்.

இன்னும் ஒரு விஷயத்தைக் குறித்து மட்டில் கூறி இவ்வியாசத்தை முடிப்பேன். இப்பல்கலைக் கழகம் கல்கத்தா சர்வகலாசாலைப் பரிக்ஷைகளுக்குச் செல்ல விரும்பும் மாணவர்களுக்கும் கல்வியளிக்கிறது. அரசாங்கத்தில் நற்சாட்சிப்பத்திரம் பெற விரும்புவோர் இவ்வாசிரமத்தின் மூலம் அப்பரிக்ஷைகளுக்குச் செல்லலாம. விஸ்வபாரதியின் நற்சாட்சிப் பத்திரங்களை இந்தியாவிலுள்ள அரசாங்க சர்வகலாசாலைகளும், இங்கிலாந்திலுள்ள சர்வகலாசாலைகளும் அங்கீகரிப்பதில்லை. ஜெர்மனி, பிரான்ஸ் அமெரிக்கா, இட்டலி போன்ற ஏனைய நாட்டு சர்வகலாசாலைகள் அங்கீகரிக்கின்றன. அங்ஙனம் சென்றுள்ள மாணவர்களின் தொகை அனந்தம்.

தமிழ்நாடும், தமிழர்களும் தம்மக்களைச் சாந்தி நிகேதனத்திற்கனுப்பி இயற்கையோடியைந்த வாழ்வை வாழ்வதற்கு ஏற்றவர்களாகச் செய்வதுடன், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு வேண்டிய நிதியையும் கொடுத்து உதவுவார்களாக!

சாணக்கியன்

—சு. குஞ்சிதபாதம்
B. A., L. T.,

சுமார் 2300 வருஷங்களுக்கு முன் நமது தாய்நாட்டில் பிரபல ராஜ தந்திரியொருவன் இருந்தான் என்றால் அதற்கு நாம் பெருமைப்பட வேண்டியது நியாயந்தானே. சாணக்யன், பொருள் நூலுக்குப் பிதா மகன் எனலாம். இவன் இயற்றிய 'அர்த்தசாஸ்திரம்', இப்பொழுதும் உலக ராஜ தந்திரிகளின் குருபீடமாயமைந்திருக்கிறது. இந்த 'அர்த்த சாஸ்திர'த்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதற்கு முன், அதன் ஆசிரியனாகிய சாணக்யனை அறிமுகப்படுத்திக் கொள்வது அவசியமல்லவா? அதனையே சுருக்கமாகவும் அழகாகவும் செய்திருக்கிறார் இங்கே ஸ்ரீமான் குஞ்சிதபாதம். இவர் ஆங்கிலத்தோடு தமிழிலும் புலமை மிக்கார். இவருடைய திருக்குறள் ஆராய்ச்சி பெரிதும் வியக்கத்தக்கது,

இந்திய நாட்டின் பண்டைய சரித்திரத்தையும், இந்தியமக்களின் புராதன நாகரிக வளர்ச்சியையும் அறிவிக்கும் சான்றுகள் பொதுவாக அறு வகைப்படும். கல்வெட்டு முதலிய சாஸனங்கள்; நாணயங்கள்; கட்டிடங்கள், ஸ்தூபிகள் முதலிய கலா விளக்கங்கள்; புராணங்கள், ஏனையகாவியங்கள், இவைகளுட் பொதிந்துகிடக்கும் குறிப்புகள்; சரித்திர சம்பந்தமுள்ள பழைய நூல்கள்; அந்நிய நாட்டினர் நமது தேசத்தில் சஞ்சாரம் செய்தோ, சிலகாலம் வசித்தோ வரைந்த புத்தகங்கள் என அறு வகைப்படுத்திக் கொள்வது வழக்கு. இவைகளையே, சாஸ்திரம், பிரத்யக்ஷம், அனுமானம் எனப்படும் மூன்று பிரமாணங்களுக் குட்படுத்தியும் மொழிவர். கிறிஸ்துநாதர் பிறப்பதற்கு மூன்று, நான்கு ஆயிர வருஷங்களுக்கு முன்பிருந்தே இந்திய ஆரிய நாகரிகம் தோன்றி, வளர்ந்து வந்ததுமன்றி, தென்னாட்டிலும் தனித்த ஒரு நாகரிகம் செழித்திருந்ததாக அறிகின்றோம். எனினும், கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்திய நான்காவது நூற்றாண்டிலிருந்தே, கால நிர்ணயம் செவ்வனே பொருந்திய சரித்திரம் வரையக்கூடுமென்பது வி.ஏ.ஸ்மித்போன்ற சரித்திராசிரியர்களின் துணிபு. அக்காலத்தில்தான் கிரேக்க அரசனான மகா அலெக்ஸாந்தர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தான். அக்காலத்தில்தான் மௌரிய ஏகாதிபத்தியம் சந்திரகுப்தனால் ஸ்தாபிக்கப்பட்டு, நாளடைவில் செழித்து, அசோக சக்ரவர்த்தியின் ஆட்சியில், அகில இந்தியாவும் ஒரு குடைக்கீழ் பொலிவுற்றிருந்தது. அக்காலத்தில்தான் அரசியல் அறிவிலும், அனுஷ்டானத்திலும் பெருந்திறமைபடைத்த சாணக்கியன் எனும் அழியாப்புகழ் அந்தணவமைச்சன் வாழ்ந்து வந்தான்; அவன் எழுதிய **அர்த்த சாஸ்திரம்** எனும் அரசியல் நூலே அக்காலத்துச் சரித்திரத்திற்கு இன்றியமையாத ஓர் திறவுகோலா யிருக்கின்றது. அதுவே, பொதுவாக பண்டைய இந்திய ராஜீயத்திற்கும், சிறப்பாக, மௌரிய ஏகாதிபத்தியத்திற்கும் கண்ணாடி போன்று விளங்குகின்றது.

அர்த்த சாஸ்திரம் ஆக்கிய இப்பெரியானுக்குப் பல நாமங்கள் இருந்ததாக அறிகின்றோம். ஹேமசந்திரர் இயற்றியுள்ள 'அபிதான சிந்தாமணி' யிலிருந்து சாணக்கியனுக்கு

வாத்ஸ்யாயனன், கௌடில்யன், மல்லநாகன், பக்ஷிலஸ்வாமி, விஷ்ணுகுப்தன் என்ற பல பெயர்கள் உண்டு என்று விளங்குகின்றது. இவன் அந்தண வகுப்பைச் சேர்ந்தவன். இளமையில், அக்காலத்தில் புகழ்பெற்று விளங்கிய தக்ஷசீலம் என்னும் நகரில், சர்வகலாசாலையில் வேதசாஸ்திரங்கள் முறையே பயின்றவன். இவனுக்கு அதர்வண வேதத்தில் சிறந்த பாண்டித்யமுண்டு; அதன் வழிகளில் மிகவும் பற்றுடையவன் என்பது ஒரு சாராரின் கொள்கை. அர்த்த சாஸ்திரத்தின் பல வாக்கியங்களிலிருந்து, சாணக்கியனுக்கு, அதர்வண வேதத்தில் பற்று அதிகமிருந்திருக்க வேண்டுமென்றும், அவனுடைய நூலின் பதினான்காவது அத்தியாயம், 'இரகசிய வழிகள்' என்ற தலைப்புடன், எதிரிகளைப் புறங்காண்பதற்கான மாந்திரீக உபாயங்களைச் சொல்வதிலிருந்தும், அவனை 'அதர்வணப் பிராமணன்' § என்று அழைக்கின்றார் இந்திய சரித்திராசிரியரான ஆங்கிலேய வி. ஏ. ஸ்மித்! பண்டைய ஆரியர்களும் சரி, தற்காலத்து ஹிந்துக்களும் சரி, மந்திர சக்தியில் நம்பிக்கையுடையவர்களே. ஆக, ஏனையோரைப்போல சாணக்கியனுக்கும் மாந்திரீகத்தில் நம்பிக்கை யிருந்திருத்தல் கூடும். அவ்வித்தையில் பாண்டித்யமும் அடைந்திருக்கலாம். அதுகாரணம் பற்றியே. அவனை அதர்வணப்பிராமணன் என்று துணிவது பொருந்தாது. மேலும், 'தசகுமாரசரிதம்' எழுதிய தண்டியும், 'நீதிஸாரம்' எழுதிய காமந்தகரும், சாணக்கியனின் அபார பாண்டித்யத்தைப் பாராட்டியும், புகழ்ந்தும், அர்த்த சாஸ்திர வாக்கியங்களைக் கையாண்டும் இருக்கின்றனர். எனினும் அவனை அதர்வணப்பிராமணன் என்று கொண்டார்களில்லை! இது நிற்க, சாணக்கியன் மகா மேதாவி; சகல சாஸ்திர விற்பன்னன் என்று நீதிஸாரத்தின் ஆரம்பத்திலேயே போற்றுகின்றார் காமந்தகர். இவன் இயற்றிய நூல் அர்த்தசாஸ்திரம் மாத்திரமன்று. நியாயபாஷ்யமும் காமசூத்திரமும் இவனையே கர்த்தாவாகக் கொண்டுள்ளன. கௌடில்யன் இயற்றிய நூல் ஒவ்வொன்றும் அவ்வத்துறையில் தனக்குவமை யில்லாது சிறந்து நிற்பதாகும்.

இனி, சாணக்கியனுக்கும் மௌரிய ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்த சந்திரகுப்தனுக்கும் இருந்த தொடர்பை ஆராயப் புகுவோம். சந்திரகுப்தன், பாடலிபுரத்தை கி. மு. 413 முதல் 322 வரை ஆண்டு வந்த நந்த வம்சத்து அரசர்களுக்குச் சொந்தமானவன் எனக் கூறுவர். கடைசி நந்த அரசனுக்கு இழிகுல மங்கையொருத்தியிடம் ஜனித்த புதல்வன் எனக் கூறுவோருமுளர். யாது காரணம் பற்றியோ, இளமையிலேயே தேசப்பிரஷ்டம் செய்யப் பட்டான் இவன். அக்காலத்தில் தான் இவன் விஷ்ணுகுப்தனின் சீடனாய், சிந்துநதி தீரத்தில் வசித்து வந்தான் போலும். கி.மு. 326-325 ஆண்டுகளில் மகா அலெக்ஸாந்தர் இந்தியாவிற்கு வந்தபொழுது சந்திரகுப்தன் அவனைக்கண்டதாகவும் கூறுவர். கி. மு. 323ல் அலெக்ஸாந்தர் இறந்தவுடன், பஞ்சநதி தீரத்தில் இருந்த கிரேக்கப்படைகளைத் தாக்கி வெற்றி பெற்றான். பின்னர், சாணக்கியனின் துணைகொண்டு, பாடலி புரத்தில் புரட்சிக் கொடிநாட்டி, நந்த வம்சத்தை வேரறுத்து கி. மு. 322ல் அரியணையமர்ந்தான். கி. மு. 288 வரை அரசுபுரிந்தான். மகதநாட்டில் புரட்சி யேற்பட்டதும், சந்திரகுப்தன் நந்த அரசரை நீக்கி செங்கோல்

§ V. A. Smith: Oxford History of India, P. 85.

கவர்ந்ததும், சாணக்கியன் இதற்கு முக்கிய துணையாய் நின்றதும் கி. பி. 5-ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட ‘முத்ரா ராக்ஷஸம்’ என்ற நாடகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அல்லாமலும், விஷ்ணுபுராணத்திலும் பாகவத புராணத்திலும் “பிராமணனாகிய கௌடில்யன் நவநந்தர்களை வேரறுத்து சந்திரகுப்தனை அரசனாக நிலை நாட்டுவான்” என்று கூறப்பட்டுள்ளது. இது போன்ற குறிப்புகள் வாயு புராணத்திலும் பிரம்மாண்ட புராணத்திலும் காணப்படுகின்றன. ஜைன நூலாகிய நந்தி சூத்திரத்திலும் சந்திரகுப்தனுக்கு சாணக்கியன் சிறந்த அமைச்சனாக இருந்ததைப்பற்றிப் பாராட்டப் பட்டிருக்கின்றது. அர்த்த சாஸ்திரத்திலேயே, இறுதியில், வேத வித்தையையும், வீரர் கலையையும், தாய்நாட்டையும், நந்தர்களின் கொடுங்கோல் ஆட்சியினின்றும் மீட்டிய இவனாலேயே இந்நூல் ஆக்கப்பட்டதென்ற அகச்சான்றும் உளது.

சாணக்கியன் ஓர் அநுபவ ராஜதந்திரி. அவனுடைய நூலில், பல்வேறு இடங்களில், தனக்கு முன்னிருந்த அரசியல் வல்லுநர்களின் கொள்கைகளைக் கண்டித்துத் தன் மதம் ஸ்தாபித்துள்ளான். அன்றியும் அவன் எழுதிய நூல் வெறும் ஏட்டுச் சுரைக்காய் அல்ல. அவன் காலத்தில் வழங்கிவந்த தண்ட நீதியில் அர்த்த சாஸ்திரம் காணும வர்த்தமான ராஜீய விதிகளும், திட்டங்களும் காணப்படமாட்டா. ஆனால் சாணக்கியனே இருபத்தைந்தாண்டு, ராஜ்ய விவகாரங்களை நாள்தோறும் நடத்தி வந்தவன். அநுபவ அறிவு நிரம்பியவன். ஆகவே, அவன் நூலில்ராஜாங்க நடையில் அமுலில் இருக்க வேண்டிய பல அரிய விதிகளையும் நுண்மையான கருத்துக்களையும் காண்கிறோம். அவன் தன்மதிப்பு நிரம்பியவன். தான் செய்து வைத்த பெருங்காரியத்தையும், தனது ஒப்பற்ற ஆற்றலையும் குறைவு படுத்துவதில்லை. தற்புகழ்ச்சிப் பிரியன் என்பதல்ல. பேரவியடக்கம் என்பது அவனிடமில்லை யென்பதே. ஆனால் ஒரு விஷயத்தில் மாத்திரம் ஜாக்கிரதையுடனும் அபாரப் பெருந்தன்மையுடனும் இருந்திருக்கிறான். அவன் உதவியால், சூழ்ச்சியால், சந்திரகுப்தன் சக்கிரவர்த்தியானான் என்றாலும், தனது சீடன் அரசன் என்பதை அவன் ஒருபொழுதும் மறப்பதில்லை. அரசனுக்கு அவமரியாதை ஏற்படக் கூடாது என்ற எண்ணங்கொண்டு அவனது பெயரை வெளிப்படையாகச் சொல்வதில்லை.†

சாணக்கியனது பிற்கால வாழ்க்கையைப் பற்றிய தகவல்கள் முரண்படுகின்றன. சந்திரகுப்தன் கி. மு. 298 ஆண்டு அளவில் அரசுரிமையை நீத்து ஜைன மதம் தழுவி, பத்ரபாகு என்ற ஜைனப் பெரியாருடன் மைசூரிலுள்ள சிரவண பெல்கோலா என்ற பதியையடைந்தான் என்பது ஜைனர்கள் பரம்பரை. அங்குப்பன்னிரண்டாண்டு ஜீவித்திருந்து, பிறகு உண்ணா விரதங் கொண்டு உயிர் நீத்தான் எனக் கூறுவர். சாணக்கியனே பாடலி புரத்திலிருந்து கொண்டு, சந்திரகுப்தனுக்குப் பின்னர் பட்டத்திற்கு வந்த பிந்துசாரனுக்கு அமைச்சனாயிருந்தான் என்று கி. பி. பதினேழாவது நூற்றாண்டிலிருந்த திபேத்திய ஆசிரியர் தாராநாத் என்பவர் ஒருவாறு முடிவு செய்தார். சந்திரகுப்தன், ஜைன மதத்தைத் தழுவியதற்கும், சிரவண பெல்கோலாவில் இறந்ததற்கும், சாணக்கியன், துறவு விரும்பி நாடு துறந்து

†Studies in Ancient Hindu Polity by Narendranath Law Vol. I. Introductory Essay by. Prof. Radha Kumud Mukherjee P. 29.

வெளி நாடுகளில் இந்தியர்கள்

"குடியேறியவன்"

அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னர், இந்தியர்கள் உலகத்தின் பல பாகங்களுக்கும் வியாபாரிகளாகவும், மதபோதகர்களாகவும் சென்றார்கள். இவர்களுடைய சொல்லுக்கும் செயலுக்கும் அப்பொழுது வெளி நாடுகளில் நிரம்ப மதிப்பு இருந்தது. ஏனென்றால் இந்தியா அப்பொழுது சுயேச்சை பெற்றதாயிருந்தது. இது சரித்திர சம்பந்தமான விஷயம்.

ஆனால் வயிற்றுப் பிழைப்புக்காக வெளி நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து இந்தியர்கள் பெருவாரியாகச் சென்றது 1800ம் வருஷத்திலிருந்துதான். மலேயா தீபகற்பத்தில், பிரிட்டிஷார் பலர் குடியேறி கரும்பு, ரப்பர் முதலிய தொழில்களில் ஈடுபட்ட காலத்தில் இந்தியர்களுடைய உழைப்பும் அறிவும் தேவையாருந்தன. இதற்காக ஆங்காங்குக் 'கங்காணிகள்' நியமிக்கப் பட்டு கூலிக்கு ஆள் சேர்த்து அனுப்பப் பட்டனர். பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் அடிமைகளை வைத்து வியாபாரம் செய்யக் கூடாதென்று 1834ம் வருஷம் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டது. இதற்குப் பிறகு இந்தியர்கள் வெளிநாடு செல்வது அதிகமாயிற்று. 1834ம் வருஷத்திலிருந்து 1837ம் வருஷத்திற்குள், மோரீசு கரும்புத் தோட்டங்களில் வேலை செய்ய, கல்கத்தாவிலிருந்து மட்டும் 7000 பேர் சென்றிருக்கின்றனர். இதற்குப் பிறகு, உலகத்தின் பலபாகங்களிலும் இந்தியர்கள் பரவலாயினர். இதனைத்தொடர்ந்தாற் போல் இந்தியர்கள் வெளி நாடுகளில் குடியேறுவதன்

நர்மதாநதி தீரத்திலுள்ளசுக்லதீர்த்தம் சென்றான். அங்கு ஆசிரமம் அமைத்துக் கொண்டு தவ வாழ்க்கை நடத்தி வந்தான் என அறிகின்றோம். அரசன் சந்திரகுப்தனும் ஆசானைப் பின்பற்றிச் சென்றதாகக் கூறுவர் சிலர். பண்டைய காலத்தில், நமது நாட்டில், இத்தகைய துறவு மேற்கொள்ளுதல் பெரு வழக்காயிருந்தது மன்றி பல்லோர் அனுசரித்த மார்க்கமாயிருந்ததாதலின் ஆசானும் சீடனும் ஒருங்கே கானகத்திடைக் கடுந்தவம் இயற்றச் சென்றதும் இயல்பேயாகும்.

ராஜீய வானினின்று சாணக்கியன் திடீரென மறைந்து போனான். ஆனால் அவன் ஏற்படுத்திய ராஜீய, பொருளாதார சட்டதிட்டங்கள் செளரிய ஏகாதிபத்தியம் முழுவதிலும் பரிணமித்தன. அவன் இயற்றிய அர்த்த சாஸ்திரமோ இன்றும் உலக அரசியல் நூற்களில் ஒன்றாய் விளங்குகின்றது. இத்காலி தேசத்தில் வாழ்ந்த தலை சிறந்த ராஜீய சாஸ்திரியாகிய மேக்கிய வெலியார் எழுதிய 'அரசன்' எனும் நூலுக்கு ஒப்பிட்டுக்கூறுகின்றனர் சாணக்கியனது அடிப்படையான குறிக்கோள் ஜன நாயகமல்ல, குடியரசல்ல என்று நினைப்பது கூடும். ஆனால், 2300 வருஷங்களுக்கு முன்னால் அவன் விளக்கிக் காட்டிய ராஜீயப் படம், பல அம்சங்களில் பொது நன்மை பயப்பதில் எக்காலத்திற்கும் பின்னடைந்ததல்ல வென்பது சிந்திக்கற்பாலது. மேனாட்டுப் பேரறிஞராகிய ஜாகோபி என்பார், சாணக்கியனை 'இந்திய பிஸ்மார்க்' என்று வியந்து கூறுகின்றார்.

சம்பந்தமாகப் பல சட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. இவை சம்பந்தமாகப் பின்னர் 'ஜோதி' வாசகர்களுடன் பேசிக் கொள்ளலாம். இப்பொழுது சமீபத்தில் வெளியான ஒரு கணக்குப் படி வெளி நாடுகளிலுள்ள இந்தியர்களின் உத்தேச எண்ணிக்கை வருமாறு:-

பர்மா		—	1,017,825
இலங்கை		—	650,577
மலேயா தீபகற்பம்		—	624,009
பிஜி தீவுகள்		—	78,975
ஹாங்காங்		—	2,555
மோரீசு		—	265,796
செய்செல்லெஸ் தீவுகள் (இந்தியாவுக்கு மேற்குக் கடலில்)		—	332
ஜமைக்கா		—	17,950
டிரினிடாட்		—	140,689
பிரிட்டிஷ் கயானா		—	134,059
கிழக்கிந்தியத் தீவுகள்		—	50,000
சூரினும்		—	34,957
ஜிப்ரால்டர்		—	50
நைஜீரியா	*(ஆப்பிரிக்கா)*	—	100
கென்யா	,,	—	39,644
உகாந்தா	,,	—	13,026
நியாஸாலாந்த்	,,	—	805
ஜான்சிபார்	,,	—	14,242
தாங்கநிகா	,,	—	23,422
பஸுடோலாண்ட்	,,	—	172
ஸ்வாஸிலாந்த்	,,	—	7
ரொடீஷியா	,,	—	800
நேடால்	,,	—	150,920
டிரான்ஸ்வால்	,,	—	15,747
கேப் காலனி	,,	—	6,655
ஆரஞ்சு ப்ரீஸ்டேட்	,,	—	127
கானடா		—	122,911
அமெரிக்கா ஐ. மாகாணம்		—	2,500
மடகாஸ்கர்		—	5,272
நியூ பௌண்ட்லாண்ட்		—	127
பெர்ஷியா		—	3,827

இன்னும் ஐரோப்பா கண்டத்தின் பல நாடுகளிலும், சைனு, ஜப்பான் தென்னமெரிக்கா முதலிய பல நாடுகளிலும் இந்தியர்கள் குடியேறி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

நப்போலியனுடைய சில வார்த்தைகள்

'ஆகாது' என்ற வார்த்தையே பிரெஞ்சு பாஷையில் கிடையாது.

ஃ ஃ ஃ

ஒருவனை வீரன் என்று எப்படி சொல்ல முடியும்? அவன் அடைந்த மரணத்தினலா? இல்லை. அவன் எந்த லட்சியத்திற்காக மரணமடைந்தான் என்பதினுல்தான்.

ஃ ஃ ஃ

தூரம் வாய்ந்த சிற்றரசர்களின் பரம்பரையைச் சேர்ந்தவன் என்று சொல்லிக் கொள்வதை விட, ஒரு நாணயஸ்தனுடைய பரம்பரையினன் என்று சொல்லிக் கொள்வதிலே நான் பெருமையடைகிறேன்.

ஃ ஃ ஃ

ஜனங்களுடைய சம்மதத்தின் மீது நான் சிங்காதனம் ஏறினேன். எனவே பிறப்பு வேற்றுமையின்றி, எல்லாருக்கும் எல்லா உத்தியோகங்களும் கிடைக்க வேண்டுமென்ற கொள்கையுடனேயே நான் காரியங்களைச் செய்து வந்தேன்.

ஃ ஃ ஃ

ஆண்டவன் என்னைப் பிறப்பித்தபோது, நான் பலவித கஷ்டங்களை அநுபவிக்க வேண்டுமென்று கணக்கிட்டுத்தான் பிறப்பித்தார் போலும். அதனுலேயே சலவைக்கல் போன்ற இதயத்தை எனக்குக் கொடுத்திருக்கிறர். இடி, அதனை அசைக்க முடியாது. அம்புகளும் அதன்மீது உராய்ந்து கொண்டுதான் செல்கின்றன.

ஃ ஃ ஃ

என்னேடு கலந்திருப்பது உழைப்பு. நான் அதற்காகவே இருக்கிறேன். எனது கால்களை எவ்வளவுதூரம் உபயோகப்படுத்த முடியும் என்ற அளவைக்கண்டு விட்டேன். எனது கண்பார்வையை எவ்வளவுதூரம் செலுத்த முடியும் என்பதையும் அறிந்துவிட்டேன். ஆனல் என் உழைப்புச்சக்தியின் எல்லையை மட்டும்நான் காண முடியவில்லை.

ஃ ஃ ஃ

நான் இத்தாலிய சேனைக்குத் தளபதியாக நியமிக்கப் பட்டபோது, எனக்கு வயது மிகக் குறைச்சல். இதனல் என்னுடைய நடவடிக்கைகளில் மிகக் கண்டிப்பாகவும், ஒழுக்கத்தில் மகா கடுமையாகவும் நான் இருக்க வேண்டியிருந்தது. ஏனென்றல், என்னை விட வயதிலும் அநுபவத்திலும் பெரியவர்கள் மீது நான் அதிகாரஞ் செலுத்த வேண்டியிருந்தது. நான் ஒரு ஞானியைப் போலவே நடந்து கொண்டேன். ராணுவத்திலுள்ள அத்தனை பேரையும் விட நான் ஒரு படி உயர்ந்தவன் என்கிற முறையில் நடந்து கொள்வதன் மூலந்தான் என்னுடைய ஆதிக்கத்தை நான் நிலைநிறுத்திக் கொள்ள முடிந்தது. மனித சுபாவங்களின் பல ஹீனங்களுக்கு நான் உட்பட்டிருப்பேனுகில் என்னுடைய ஆதிக்கத்தை எப்பொழுதோ இழந்து விட்டிருப்பேன்.



அறிவுத்துறை

பதார்த்தங்களில் மூன்றுவகை ஏன்?

"விஞ்ஞான போதகர்"

ஏதாவது ஒரு வஸ்துவைச் சிறு சிறு பாகங்களாக நறுக்கிக்கொண்டே போனால் கடைசியாக அடையு மோர் வெகு அற்பமான பாகத்திற்கு அணுவென்று கூறுகின்றனர். அதைக்கண்கூடாய்க் காண்பதரிது. இவ்வணுக்களின் கோட்பாடுகளை சுமார் கி. மு. 400 வருடங்களுக்கு முன்பே நன்கறிந்திருந்தனர். அவை களில் சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

(அ) ஒன்றுமில்லாததிலிருந்து ஒன்றுங்கிடைக்காது. நிலைத்திருப்பவைகள் எவற்றையும் அழிக்கமுடியாது. எல்லாமாறுதல்களும் அணுக்களின் சேர்க்கையாலும் பிரிவினைகளாலும் உண்டாகின்றன.

(ஆ) யாதும் எதிர்பாராத சம்பவமாய் நேரிடுவ தில்லை. எல்லாச்சம்பவங்களும் காரணங்கள்பற்றியே உண்டாகின்றன.

(இ) அணுக்களும் வெட்டவெளியுமே நிலைத் திருப்பவைகள். மற்றவையாவும் அபிப்பிரா யங்களே.

(ஈ) அணுக்களின் தொகை அளவற்றது. அவைகளின் உருவங்கள் பல விதமானவைகள். அவைகள்

ஒன்றோடொன்று மோதியுண்டாகும் நேர் அசைவும், சுழலும் உலகம் முதலாவதாகத் தோன்றக் காரணங்களாயிருந்தன.

(உ) வஸ்துக்களின் பலவிதங்களின் காரணம் அவைகளின் அணுக்களின் தொகை, உருவங்கள், சேர்க்கை முதலியவைகளே.

இயற்கையை, செங்கல், கட்டை, ஆணி முதலிய சாமான்களைக் கொண்டு வீடு கட்டுவோனை ஒப்பிடலாம். தற்போது கண்டு பிடித்துள்ள 92 வித அணுக்களில் சிலவைகளே பெரும்பாலும் உபயோகப்படுகின்றன. நமக்குத் தெரிந்த வரை உலகத்திலுள்ள சகல வஸ்துக்களும் மிகச் சில வித அணுக்களால் வளர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு கொத்தனுக்குச் செங்கல், சுண்ணாம்பு, இரும்பு, பலகை முதலிய சாமான்களைக் கொடுத்தால் அவன் பலவித மாட மாளிகை கூட கோபுரங்களைக் கட்டி முடிக்கிறானன்றோ? ஏன் இயற்கையும் அவ்வாறே கட்டி முடிக்கக் கூடாது? அப்படியானால் பலவித சேர்க்கையிலும் எவ்வாறு அணுக்கள் ஒன்றோடொன்று பொருந்திக் கொள்ளுகின்றன? கொத்தனுக்குள்ள சாமான்களைப் போலவே இயற்கையும் பலவித அணுக்களை உடைத்தாயிருக்கிறது. கொத்தனுக்குப் போல் சாந்து, ஆணி இவைகள் இயற்கைக்கு இல்லை. ஆனால் இருவித காந்த சக்திகளால் எவ்வாறு சில பொருள்கள் தாமாகவே பொருந்திக் கொள்ளுகின்றனவோ அவ்வாறே அணுக்களும் சேர்ந்து கொள்ளுகின்றன.

அவ்வாறு பலாத்கார சக்திகளிருப்பின் ஏன் எல்லா அணுக்களும் ஒன்று சேர்ந்து ஒரே திட பதார்த்தமாக வில்லை? ஏன் வாயு பதார்த்தம், ஜல பதார்த்தமென இருவகையுமுண்டு?

பூமி சூரியனில் விழுந்து ஒரே திட பதார்த்தமாகாதிருப்பதன் காரணம் யாது? பூமி சூரியனைச் சுற்றிக் கொண்டே வருவதால் அது சூரியனில் விழாமலிருக்கிறது. எவ்வாறெனில் ஒரு சிறிய கல்லைச் சிறு கயிற்றால் கட்டிச் சுற்றினால் நமது கை சூரியனாகவும், கல் பூமியாகவும், பிணைக்கும் கயிறு பலாத்கார சக்தியாகவுமிருக்கின்றன. கயிற்றின் பலாத்கார சக்தியைக் கல்லின் சுழல் தடுத்து எவ்வாறு கல் அந்தரமாய், தனியாயிருந்து வருகிறதோ அவ்வாறே பூமியும் சூரியனில் விழுந்து விடாது அந்தரமாயிருந்து வருகிறது. ஆனால் பூமி சுற்றாமலிருந்தால் பூமியின் பாடு அதோ கதிதான்!

அதே விதமாக அணுக்களின் அசைவு அணுக்களை பலாத்கார சக்தியால் ஒன்றோடொன்று சேர்த்து ஒரே கன பதார்த்தமாகாமல் தடுத்து விடுகிறது. அணுக்களின் அசைவு, அணுக்களின் ஒன்றுக் கொன்று இழுக்கும் சக்தி (Force of attraction) யை விட அதிகரித்து விட்டால் அணுக்கள் ஒன்று சேர நேரமில்லாது போக அணுக்களுக்குள்ள தூரம் அதிகமாகி விடுவதால் வாயு பதார்த்தமுண்டாகிறது. இத்தன்மையை முதல் படத்தில் காட்டியிருக்கிறது. இதில் அணுக்கள் மிகப் பெரியனவாக அதிகரித்துக் காட்டப் பட்டிருக்கின்றன வென்பதை யுணர வேண்டும்.

படம் 1.



அணுக்களின் அசைவு, அவைகளின் ஒன்றுக் கொன்று இழுக்குஞ் சக்தியைவிட கொஞ்சம் அதிகமாகவும், கொஞ்சம் குறைவாகவுமிருந்து அணுக்கள் ஒன்றுக்கொன்று சமீபமாகஇருக்க ஏற்பட்டால் ஜல பதார்த்தமாகத் தோன்றுகிறது.

படம் 2.



ஆனால் திடபதார்த்தத்தில் அணுக்கள் ஒன்றுக்கொன்றுள்ள இழுக்குஞ் சக்தி, அவைகளின் அசைவைவிட அதிகரித்துவிடுகிறது. ஆகவே அணுக்கள் ஒன்றோடொன்று நன்றாகச் சேர்ந்து உறுதியாகிவிடுகிறது.

படம் 3.



இவ்வுறுதியான அமைப்பினும் அணுக்கள் ஓர் புகைவண்டித் தொடர் செல்லும்போது எவ்வாறு ஓர் இரும்புப்பாலம் அசைவுறுகிறதோ, அவ்விதமான அற்ப அசைவை யுடையதாயுமிருக்கிறது. ஆனால் அணுக்களால் உண்டான உறுதியான மேஜை, காகிதம், மரம் முதலிய வஸ்துக்கள் யாதொரு அசைவுமின்றியிருப்பதைக் கண்டு இந்நிலையில் அவைகளின் அற்ப அசைவை அறிந்து கொள்வது மிகக் கஷ்டமாகவே தோன்றும். ஆனால் அநேக விஞ்ஞான சாஸ்திரிகள் தங்கள் அறிதற்கரிய ஆராய்ச்சிகளின் மூலமாக அணுக்கள் சேர்ந்து பெரிய திடபதார்த்தமாக இருக்கும் அந்நிலையிலுங்கூட அதன்பாலுள்ள அற்ப அசைவை உணர்ந்தேயுள்ளனர். இவ்வசைவும் பெரும்பாலும் அகக்கண்ணால் அறியக் கூடியவையேயன்றி முகக் கண்ணால் புலனாகாது.

அணுக்கள் ஒரு சீதோஷ்ணத்தில் ஒருவித சேர்க்கையும், மற்றொரு சீதோஷ்ணத்தில் வேறொரு சேர்க்கையுமடைந்து பலவித பதார்த்தங்களாக மாறிவிடுகின்றன. திடபதார்த்தத்தை சீதோஷ்ண அதிகரிப்பால் ஜல பதார்த்தமாகவும் ஜல பதார்த்தத்தை வாயு பதார்த்தமாகவும் மாற்றி விடலாம். திடபதார்த்தத்தில் உஷ்ணம் அதிகரித்தால் அணுக்களுக்குள்ள இழுக்கும் சக்தியைவிட அவைகளின் அசைவு சக்தி அதிகரித்துச் சிறிது அகன்று நின்று ஜல பதார்த்தமாகவும், உஷ்ணத்தை மென்மேலும் அதிகரித்தால் அகன்று பக்கத்தில் தங்கி நிற்கும் அணுக்கள் பறந்தோடச் சக்தி உண்டாகி வாயுபதார்த்தமாகவும் ஏற்பட ஏதுவுண்டு. இதற்குத் தண்ணீரின் திடமான நிலையாகிய பனிக்கட்டியைக் குறிப்பிடலாம். பனிக்கட்டியில் உஷ்ணத்தைத் தாக்கினால் அது கரைந்து முதலாவதாக ஜலமாகிப் பின்பு உஷ்ணத்தை அதிகரித்தால் கடைசியாக வாயுவாக மாறிவிடுகிறதல்லவா ? இதுபோல் அநேக வஸ்துக்கள் மாற்றப்படுகின்றன. ஆனால் அவைகளின் இழுக்கும் சக்திக்குத் தகுந்தவாறு உஷ்ணத்தை அதிகரித்து அவைகளின் தன்மையை மாற்ற ஏற்படும். ஆனால் முக்கியமாகக் கரி சம்பந்தமான வஸ்துக்கள் அதாவது மரம், காகிதம், துணி இவை

களில் உஷ்ணம் அதிகரித்தால் ஜல பதார்த்தமாக மாறி விடுகின்றன. வாயு பதார்த்தங்களின் உஷ்ணத்தைக் கிரகித்து ஜல பதார்த்தமாகவும், ஜல பதார்த்தங்களின் உஷ்ணத்தைக் கிரகித்துத் திடபதார்த்தமாகவும் மாற்றி விடலாம்.

அணுக்கள் அகன்று நின்று (படம் 1.) அசைந்தாடுந் தன்மையில் ஆவி என்றும் வாயு வென்றும் இருநிலையுள. நாம் ஜலத்தை ஒரு கிண்ணத்தில் வைத்திருப்போமானால் அது சிறிது சிறிதாக வற்றிப் போவதைக் காண்போம். ஏனெனில் ஜலமானது சாதாரண உஷ்ண நிலையிலுங்கூட ஆவியாக மாறி மேலே சென்றுவிடுகிறது. இவ்விதமாக ஆவியாக மாறுந்தன்மை, ஜலத்தின் வெளிப் பாகத்திலுள்ள அணுக்கள் ஒவ்வொன்றும் வெளியேறிக்கொண்டேபோய் கடைசியாக ஜலம் யாவும் ஆவியாக மாறிவிடுகிறது. ஆனால் வாயு நிலையானது இவ்வளவு எளிதாக ஏற்படுவதில்லை. வாயு நிலையடைய அதிகசக்தி ஏற்படவேண்டும். ஜலத்தையே எடுத்துக்கொண்டால் அதனை அதிக உஷ்ணத்தால் கொதிக்க வைத்து ஜலத்தின் எல்லாப் பாகத்திலிருந்தும் அணுக்கள் அதிக சக்தி பெற்று தங்கள் கட்டுப்பாடுகளைக் களைந்து வெளிக்கிளம்புகின்றன. ஆகவே ஆவியும் வாயுவும ஒரே தன்மையானாலும் அவைகளின் சக்திகளில் வித்தியாசம் உளது. ஆவி சிறிய சக்தியையும் வாயு அதிக சக்தியையும் உடையன. ஆகவே ஆவியை ஒரு ரப்பர் குழாயில் அடைத்துத் திடீரென்று அமிழ்த்தினால் ஆவியாவும் ஜலமாக மாறிவிடும். ஆனால் வாயுவோ அவ்வளவு எளிதில் ஜலமாகி விடுவதில்லை. வாயுவை நீராக்கவேண்டுமானால் இரண்டு காரியம் செய்ய வேண்டும். ஒன்று முன்பு ஆவியை அமிழ்த்தியதுபோல் அதிக பாரமாக அமிழ்த்தவேண்டும். இரண்டாவது அதனைக் குளிரவைக்க வேண்டும். அதாவது அதன் உஷ்ண அளவைக் குறைக்கவேண்டும். இதுவே அவைகளின் வித்தியாசம்.

முன்பு கூறியது போல பனிக்கட்டியை அதாவது ஜலம் திடமான நிலையிலிருக்கும்போது அதனை நீர் நிலையடைய உஷ்ணத்தை அதிகரிக்க வேண்டும். இதில் ஒன்று கவனிக்கற்பாலது. பனிக்கட்டியில் உஷ்ணத்தை அதிகரிக்கும்போது பனிக்கட்டி உருகி முழுதும் ஜலமாகும்வரை உஷ்ணம் அதிகரித்ததாக 'தெர்மாமீட்டர்' என்னும் உஷ்ணக்கருவியால் காண்பதரிது. அப்படியானால் உட்செலுத்திய உஷ்ணம் எங்குச் சென்றுவிட்டது? பனிக்கட்டியானது உஷ்ணத்தைப் பெற்று அதின் அணுக்கள் ஒன்றோடொன்று கெட்டியாகச் சேர்ந்துகொண்டிருந்ததை விடுவித்துக் கொள்ள ஏற்பட்டு, உஷ்ணசக்தியாவும் அதில் செலவாகிவிட்டதால் உஷ்ணம் வெளிப்படையாகக் காட்டுவதற் கில்லாமல் போய்விடுகிறது.

இதேபோல ஜலம் கொதித்துக் கொண்டிருக்கும்போது அதன் உஷ்ணம் 100 என்று வைத்துக் கொண்டால் அந்நீர் முழுவதும் உஷ்ணம் அதிகமாக உட்செலுத்தப்பட்டு ஆவியாக மாறும்வரை அதன் உஷ்ணம் 100 ஆக இருக்கும். இதிலும் நாம் செலுத்திய உஷ்ணம் நீர் நிலையில் அணுக்கள் அருகிலமைத்திருக்கச் செய்யும் இழுக்கும் சக்தியை எதிர்த்து விடுவித்த வேலையில் செலவாகிப்போகவே, அந்நிலையில் உஷ்ண அதிகரிப்பைக் காண முடிவதில்லை. முழுவதும் ஆவியானபிறகு 100க்கு மேல் அதிகமாக உஷ்ணத்தைக் காட்டமுடிகிறது.

பூமி பகலில் சூரிய வெப்பத்தைக் கிரகித்து இரவில் வெளியிடுகிறது. அதி காலையில் அது மிகவும் குளிர்ந்து போகிறது. அது சமயம் பூமியின் சமீபத்தில் தங்கியுள்ள ஆவி திடீரெனக் குளிர்ந்து நீர்த் துளியாக மாறி (பனித் துளியாக) உயரத்தில் தங்குவதோடல்லாமல், இலை தழைகளில் படிந்து விடுகின்றது. இதே போல் பூமியிலிருந்து நீரானது சிறிது சிறிதாக ஆவியாக மாறி ஆகாயத்தில் வெகு தூரம் சென்று அவண் திடீரென்று குளிர்ந்த காற்றையோ அன்றி குளிர்ந்த உயரமான மலையையோ தாக்க எற்பட்டு அதன் உஷ்ணம் திடீரென்று குறைந்தவுடன் மறுபடியும் நீராகி மழையாகப் பொழிகிறதை யாவரும் உணர்ந்தே இருப்பார்கள்.

யாதாமொரு பாத்திரத்திலிருந்தோ அல்லது குளத்திலிருந்தோ நீரானது ஆவியாக மாறிக் கொண்டேயிருந்தால் அவைகளிலுள்ள ஜலத்தின் உஷ்ணம் குறைந்து கொண்டே போகும். ஏனெனில் ஜலம் ஆவியாக மாறுவதற்கு உஷ்ணம் வேண்டுமல்லவா? அவ் வுஷ்ணம் அந்நீரிலிருந்து கிரகிக்கப் படுகிறது. ஆகவே அந் நீர் சிறிது சிறிதாகக் குளிர ஆரம்பிக்கிறது.

திருஷ்டாந்தமாக நாம் தண்ணீர் 'கூஜா' வென்று வீடுகளில் வைத்திருக்கிறோமல்லவா? அவைகளிலுள்ள நீர் குளிர்ந்து போவதற்கு இதுவே காரணம். அது மண்பாத்திரமானதால் நீர் அதன் பக்கமாகச் சிறிது சிறிதாகக் கசிந்து ஆவியாக மாறிப் போய்க் கொண்டேயிருக்கிறது. அக் கசிவு நமது கண்ணுக்குப் புலனாகாது. இவ்வாறு எவ்வளவு அதிகமாகப் போகிறதோ அவ்வளவுக் கதிகமாக அதிலுள்ள நீர் குளிர்ந்து விடும். ஆகவே உஷ்ணகாலத்தில் ஆவியாக மாற அதிக சந்தர்ப்பம் ஏற்படுவதால் அக்காலத்தில்தான் 'கூஜா' தண்ணீர் அதிகமாகக் குளிர்ந்து நிற்கும். மற்றொன்று: 'கூஜா'க்களின் வாய் குறுகி இருப்பது அவசியம். இன்றேல் வெளியினின்றும் உஷ்ணம் உள்ளே தாவி குளிர விடாது செய்யும்.

பனிக்காலங்களில் நாம் வாயினால் மூச்சு விடும்போது 'வெள்ளைப்புகை' போன்று செல்வதைப் பார்க்கிறோம். நமது இருதயத்தினின்று வெளிவரும் மூச்சு அதிக உஷ்ணமாக இருப்பதால் வெளியில் நீர்த் துளியாகத் தங்கி நிற்பவைகளைத் தாக்கிய அளவில் அவைகள் திடீரென்று ஆவியாக மாறி கொதி நீர் ஆவிபோல் காணப்படுகிறதல்லாது நாம் அவ்விதமாக 'வெள்ளைப் புகை' போன்று மூச்சு விடுவதில்லை.

ஒரு பாத்திரத்தில் பனிக்கட்டியை வைத்திருப்போமானால் அதனைச் சுற்றி நீர்த் துளிகள் நிறைந்திருக்கும். இதனால் பனிநீர் அப்பாத்திரத்தினுட்புறமாக வெளிவருவதில்லை. அப் பாத்திரம் பனிக்கட்டி சம்பந்தத்தால் அதிகம் குளிர்ந்து இருப்பதால் அதனைச் சுற்றி நிற்கும் ஆவியானது அக் குளிர்ந்த பாத்திரத்தை அடைந்த மாத்திரத்தில் திடீரென்று குளிர்ந்து நீராக மாறி அப்பாத்திரத்தின் மீதே தங்கி விடுவதல்லாது பனி நீர் வெளியில் கசிந்து வருவதில்லை. இதனைக் கண்ணாடிப் பாத்திரத்தில் நாம் பனிக் கட்டியிட்டு நீர் அருந்தும்போது பார்க்கிறோம்.

மேலே குறிப்பிட்ட பதார்த்த வளர்ச்சிக்கும் அதன் மாறுதல்களுக்கும் காரணம் அபார சக்திவாய்ந்த அணுக்களின் அரும்பெருந் திருவிளையாடல்களென்று அறிகின்றோம்.

தீராப் பகை

—ஸ்ரீ. ஸ்ரீ. ஆச்சாரியா

பால்ஜாக், பெரிய பிரெஞ்சுக்கதாசிரியன், விக்டர் ஹ்யூகோ என்பவனின் அரிய நண்பன், மனித வாழ்க்கையை உள்ளபடி எடுத்து வருணிப்பதில் மகா நிபுணன். தனது வாழ்நாளில் பலவித துன்பங்களை அநுபவித்தவன். பணஞ்சம்பாதிக்கப் பெருமுயற்சிகள் செய்து பெரும் நஷ்டம் அடைந்தவன். இருபது வருஷங்களுக்குள் எண்பதுக்கு மேலான நாவல்களை எழுதியிருக்கிறான். ''லா கோமெதி ஹ்யூமென்'' ***(HUMAN COMEDY)*** என்ற பெருந்தொகுதியில் தனது நாவல்களையெல்லாம் ஒன்று சேர்த்து வெளியிட வேண்டுமென்று ஏற்பாடு செய்து கொண்டிருந்தான். ஆனால் அதற்குள் இறந்து விட்டான். 'தீராப்பகை' (வாந்தெத்தா) என்ற இந்தச் சிறுகதையில், தீராப்பகை காரணமாக இரண்டு பெரிய குடும்பங்கள் அழிவதையும் அதனிடையே கதாநாயகனும் நாயகியும் படுந் துன்பங்களையும் பர்ல்ஜாக் உண்மைக்கு மிகவும் பொருந்தியவாறு வருணித்திருக்கிறான். இவனுடைய 'ய்ஜேனி க்ராந்தே' ***(EUGENIE GRANDET)*** 'பேர் கோரியா' ***(PERE GORIOT)*** என்னும் பெரிய நூல்களுக்கு இந்தத் 'தீராப்பகை'யை முதற்படியாகக் கொள்ளலாம்,

இதனைத் தமிழில் நம்மை சுவைக்கச் செய்கிறவர் ஸ்ரீ, ஸ்ரீ, ஆச்சாரியா. இவர் சிறந்த பிரெஞ்சுப் புலவர், பெரிய தியாகி. சீரிய புலவர்கள் தேசபக்தர்களாகவும் தியாகிகளாகவுந்தான் இருக்க முடியும் என்பதை நமக்கு நிதரிசனமாக எடுத்துக் காட்டுகிறது இவருடைய வாழ்க்கை. காலஞ் சென்ற வ. வெ. ஸு ஐயர், பாரதியார் முதலிய பழைய கோஷ்டியைச் சேர்ந்தவர் இவர். ஆங்கிலம், தென் மொழி, வட மொழி, வங்கம் முதலிய பல பாஷா விற்பன்னர். கவி டாகூரின் சிறு கதைகளை இவர் மூலம் தமிழர்கள் படித்து இன்புறுகிறார்கள்

ஹோனோரே த பால்ஜாக்

HONORE DE BALZAC-1799-1850.

கி. பி. 1800ம் வருஷம் அக்டோபர் மாத இறுதி. வெளியூரான் ஒருவன், தன மனைவியோடும் மகளோடும் பாரிஸ்நகரில் துயிலெரீஸ் அரச மாளிகைக்கெதிரில் வந்து சேர்ந்தான். அருகாமையில் மறுபடி கட்டுவதற் கென்று இடிக்கப்பட்டிருந்த வீட்டின் குட்டிச் சுவர்களுக்குச் சமீபத்தில் அவன் தலை குனிந்த வண்ணமாய் வெகு நேரம் நின்று கொண்டிருந்தான்.

அந் நாட்களில் பிரான்ஸ் தேசத்தைச் சர்வாதிகாரத்தோடு ஆண்டு வந்த நப்போலியன் போனப்பார்ட், 'கான்ஸல்' என்னும் பட்டம் வகித்து அவ்வரச மாளிகையில் வசித்து வந்தான். நமது வெளியூரான் அவ்வப்பொழுது தலை தூக்கி அம்மாளிகையை உற்று நோக்குவதும், அருகில் இடிந்த கற்களின் மேல் உட்கார்ந்திருக்கும் தன் மனைவியை நோக்குவது

மாக இருந்தான். அவள் ஒன்பதுபத்து வயதுள்ள தன் மகளையே கவனித்து வந்தவள் போலக் காணப்பட்டாலும், தன் கணவன் சலனங்களொவ்வொன்றையும் காணுதிருக்கவில்லை. இந்தத் தம்பதிமார்களின் செயல்களையும் எண்ணங்களையும் காதலை மீறிய தோர் உணர்ச்சி கவர்ந்திருந்தது.

சிறுமி இவர்களோடு கால் நடையாகச் செய்த நீண்ட பயணத்திலே வெயிலில் அடிபட்டு ஓய்ந்திருந்தாலும் மனத் தளர்ச்சி சிறிதுமின்றி வேடிக்கையாய் விளையாடிக் கொண்டிருந்தாள். அவளுடைய நீண்ட கூந்தலும், விரிந்தகருவிழிகளும், வளைந்த புருவங்களும், அவளுடைய உண்மை அழகையும் இயற்கைப் பெருந்தன்மையையும் விளக்கிக் காட்டின.

இப்படிச் சற்று நேரம் கழிந்ததும் அவன் தன் உடைவாளை எடுத்து மனைவியிடம் கொடுத்து, 'நம்மை போனப்பார்ட் ஞாபகத்தில் வைத்திருக்கிருே என்றறிந்து வருகிறேன்' என்று சொல்லிவிட்டு திடு திடுவென்று அம்மாளிகை வாயிலண்டை போனுன். அங்குள்ள துவாரபாலகன் தடுக்க, 'நான் பார்த்தோலோமி யோ-டி-பியம்போ வந்திருக்கிறேன் என்று உன் எஜமானனிடம் போய்ச் சொல்' என்றுன். அதற்கவன் மறுத்தும் இவன் பிடிவாதமாக அங்கேயே நின்று கொண்டிருக்கையில் நல்ல வேளையாய் லூசியன் போனப்பார்ட் (நப்போலியன் தம்பி) வண்டி வந்து நின்றது. அதிலிருந்து அவன் கீழே இறங்கினதைக் கண்டதும் பியம்போ அவனைப் பேர் சொல்லிக் கூப்பிட்டான்.

போனப்பார்ட் குடும்பத்தினரின் சொந்த நாடாகிய கார்ஸிகா தீவைத் தான் இவ்வெளியூரானும் சேர்ந்தவன். இருவர் குடும்பங்கட்கும் அங்கேயே நட்புண்டு. கார்ஸிக தொனியில் தன் பெயரை அழைத்ததைக் கேட்டுத் திரும்பித் திரும்பிப்பார்த்து அவன் இன்னுன் என்று தெரிந்ததும், லூசியன் அவனைத் தன் தமயனிடம் அழைத்துச் சென்றுன். அங்கு நப்போலியன் காதோடு விஷயத்தைச் சொல்லவே, அவன், தன்னோடு சம்பாஷித்திருந்தவரை அனுப்பிவிட்டு, பியம்போவைப் பார்த்து 'இங்கு எதற்கு வந்தாய்?' என்றுன்.

'கார்ஸிகாவை நீ மறந்தில்லையானுல் என்னை சம்ரக்ஷித்துக் காக்க வேண்டும்' என்று படபடப்புடன் சொன்னுன் பியம்போ.

'நீ நாட்டை விட்டு வெளியேறும்படி உனக்கென்ன கஷ்டம் நேர்ந்தது? அங்கு நல்ல பணக்காரனுகவும் நல்ல......'

'போர்த்தா குடும்பத்தை நான் அடியோடு கொன்று விட்டேன்' என்று பியம்போ முகம் சுளித்து, அடித் தொண்டையிலிருந்து சொன்னுன். திகைப்படைந்தவன் போலே நப்போலியன் இரண்டடி பின்னடைந்தான்.

'எனக்குத் துரோகம் நினைக்கிருயா என்ன ?' என்று கண்கள் குழம்ப பியம்போ பின்னும், 'இன்னும் கார்ஸிகாவில் பியம்போ குடும்பத்தார் நால்வர் இருக்கின்றுர்கள் தெரியுமா?' என்றுன்.

லூசியன் அவன் தோளைப் பிடித்துக் குலுக்கி, 'நம் தாய் நாட்டைக் காப்பாற்றிய பெரியோனை நீ பயமுறுத்தவா இங்குவந்தாய்?' என்று பரபரப்புடன் கேட்டான்.

நப்போலியன், சும்மா இருக்கும்படி லூசியனுக்குச் சமிக்ஞை செய்து,

'போர்த்தா குடும்பத்தினரை ஏன் கொன்றாய்?' என்று பியம்போவைக் கேட்டான்.

'எங்கள் இரு குடும்பங்களுக்கும் சமாதானம் செய்ய பிரபாந்தி குடும்பத்தினர் முயன்றார்கள். எங்களுக்குள் இருந்த விரோதத்தை ஒழிக்க நான் அவர்களை விருந்துக் கழைத்தேன். நான் அவசர ஜோலியாய், வீட்டில் அவர்கள் இருக்கையிலேயே வெளியூர் போக வேண்டி இருந்தது. இரவு நான் திரும்பிய பொழுது என் வீட்டைக் காணோம். சாம்பரைக் காலால் தள்ளுகையில் என் மகன் சவத்தை இடறினேன். 'ஹா! இது போர்த்தாக்கள் செய்த வேலைதான்' என்று என்னுள் நிச்சயித்துக் கொண்டு, உடனே புதர்களில் ஒளிந்து என் நண்பர்களைக் கூட்டிக்கொண்டு விடிய ஐந்து மணிக்குப் போர்த்தாக்கள் தோட்டத்திற்குச் சென்றேன். ஏழு மணிக்குள் அவர்கள் அவ்வளவு பேரும் பரலோகம் போய்ச் சேர்ந்தார்கள். வேலைக்காரி, அக்குடும்பச் சிறுவன் லூஜியைக் காப்பாற்றியதாக கியாகோமோ சொன்னான். வீட்டுக்குத் தீ வைக்கு முன் நானே அச்சிறுவனைக்கட்டிலோடு பிணைத்திருந்தேன். உண்மையை விசாரிக்க எனக்கு நேரமிருக்கவில்லை. உயிர்தப்பிய என் மனைவியோடும் மகளோடும் தீவை விட்டகன்றேன்' என்று தன் செய்தியைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தான்.

இதைக் கேட்டு வியப்பொன்றும் கொள்ளாது அவனை ஏற இறங்கப் பார்த்தான் நப்போலியன்.

'அவர்கள் எத்தனைபேர்?' என்று லூசியன் கேட்டான்.

'ஏழு பேர்; உங்களைக் கூட முன்பு அவர்கள் துன்புறுத்தி யிருக்கிறார்கள்' என்றான் பியம்போ.

இதைக்கேட்ட அவ்விரு சகோதரர்கள் எவ்வித துவேஷமும் கொள்ளாததனால், அவன் சற்று வியப்புடன், 'ஓகோ' நீங்கள் கார்ஸிக உணர்ச்சியை எல்லாம் இழந்து விட்டீர்கள் போலிருக்கிறது. அந்நாட்களில் நான் உங்களுக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறேன். நானில்லாவிட்டால் உன் தாய், மார்ஸேல்ஸ் நகர் வந்து சேர்ந்திருக்கவே மாட்டாள்' என்று, தான் செய்த உதவிக்காக வருந்துபவன் போல நொந்த குரலில் நப்போலியனைப் பார்த்துச் சொன்னான்.

சற்று யோசனையிலிருந்த நப்போலியன் அவனைப் பார்த்து, 'பியம்போ, உன்னை என் காப்பில் வைத்திருப்பது என் மனச்சாட்சிப்படிசாத்தியமன்று. நான் ஓர் மகத்தான தேசத்திற்குத் தலைவன்; குடியரசுக்கு அதிபதி; சட்டப்படியே எல்லாம் நடக்குமாறு செய்ய வேண்டியவன்' என்றான்.

'ஓகோ! அப்படியா?' என்றான் பியம்போ தலையசைத்து.

'இருந்தாலும், நான் இதை கண்டு கொள்ளாது விடலாமல்லவா? கார்ஸிகாவில் சட்டமுறைகளை முற்றும் சரிவர நடத்திவைக்க இவ் 'வாந்தெத்தா' (அதாவது தீராப்பகைக்காகப் பழிவாங்கும் தன்மை) இடம் கொடுப்பதில்லை. எப்படி இருந்தாலும் அடியோடு இதை ஒழிக்க வேண்டும்' என்று தனக்குத்தானே சொல்லிவிட்டு, பியம்போவைப் பார்த்து, 'நீ இங்கே தங்கி இரு. உன் நிலபுலன்களை விலைக்கு எடுத்துக் கொண்டு உன் ஜீவனத்துக்காகப் பணம் கொடுக்கும்படி செய்கிறேன். பிறகு உனக்கு ஆக வேண்டிய வேறு விஷ

யங்களைப்பற்றி யோசிக்கலாம். ஆயின் உன் பழி வாங்கும் விளையாட்டை இனிக் காட்டலாகாது. இங்கு ஓடி ஒளிக்கப் புதர்கள் கிடையா. உடை வாள் பிரயோகம் செய்தாயோ அப்புறம் நீ தப்ப மாட்டாய். சட்டம் இங்கு யாவரையும் முறைப்படி காக்கும். எவனும் தன் மனம்போனபடி அதைக்கையாள முயற்சிக்கலாகாது.'

பியம்போவுக்கு இம்முறை விபரீதமாகக் காணப்பட்டது. அவன் லூசியனைப் பார்த்து, 'என்னவிநோத வழக்கம்கொண்ட தேசமிது! இதற்கா இவன் தலைவன்? எப்படியிருந்தாலும் இந்தக் கஷ்ட தசையில் எனக்கு நீங்கள் கை கொடுத்திருக்கிறீர்கள் இனி கஷ்டமோ சுகமோ, எதிலும் உங்களுக்காக நான் தலை கொடுப்பேன்', என்று சொல்லி, நிம்மதியடைந்து நாற்புறமும் திரும்பிப் பார்த்தான். 'உங்களுக்குக் கிடைத்துள்ள இந்தவிடுதி தேவலையே, வெகு நன்றாயிருக்கிறதே!' என்று தானும் அங்குத் தங்க விரும்பியவன்போலச் சொன்னான்.

நப்போலியன் இதைக்கேட்டு, 'பாரிஸ் நகரில் உயர்பதவிகளுக்கும் அரசமாளிகைகளுக்கும் குறைவில்லை. உறுதியாக நம்பக்கூடிய ஆள் கிடைப்பது தானே கஷ்டம். என்னைச் சுற்றி அப்படிப்பட்ட ஒருவன் வேண்டுமென நான் பலமுறைதேடி இருக்கிறேன். நீ இஷ்டப்படுவாயானல் அது உனக்குக்கிடைப்பது கஷ்டமன்று' என்றான்.

'கார்ஸிகரின் பெருந்தன்மை உன்னிடத்தில் இன்னும் இருக்கிறது' என்று பெருமகிழ்ச்சியுடன் கூறினன் பியம்போ.

நப்போலியன் சிரித்துக்கொண்டே அவனுக்குப் பதில் சொல்லாது லூசியனுக்கு ஜாடை காட்டினன். அவன் பியம்போவை வெளியே அழைத்துப் போய் 'உனக்குப்பணம் தேவையா?' என்று கேட்டான்.

சாளரத்தின் வழியாகத்தன் மனைவியையும் மகளையும் சுட்டிக் காட்டி, பியம்போ, 'அவர்களும்நானும்அடுத்த அடுத்த கிராமத்திலிருந்து கால்நடையாக வந்தோம்; கையில் ஒரு காசு கூட கிடையாது' என்றான்.

தன் பணப் பையை லூசியன் அவன் கையில் கொடுத்துப் பின்னும் வேண்டிய உதவி செய்வதாகச் சொல்லியனுப்பி விட்டான்.

ஃ ஃ ஃ

இது நடந்த பதினைந்து வருடங்களுக்குப் பிறகு வாட்டர்லூ பெருங்களத்தில் நப்போலியனின் சாம்ராஜ்யம் சிதறுண்டு கிடந்தது. அவன் தானகச் சரண் புகுந்த 'பெல்லரோபன்' கப்பலே, அவனை ஸெயின்ட் ஹெலினவின் தீவாந்தரச் சிறையில் கொண்டு சேர்த்தது. அவன் கட்சியினர் யாவரும் பிரான்ஸ் தேச முழுவதிலும் அதிகார பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். தீவிரமாக அவன் பொருட்டு வேலை செய்தவர்கள் ஒவ்வொருவரும் ராஜத்துரோகிகளெனக் கருதப்பட்டு இடம் தெரியாமல் ஒளிந்து உயிர் தப்பவேண்டி இருந்தது. நப்போலியனுக்கு ஆப்த நண்பனகி, 'பாரன்' பட்டத்தோடு பணமும் பதவியும் பெற்றிருந்த நமது பியம்போ, தன் செல்வாக்கெல்லாம் இழந்து விரோதிகளுக் கிடையில் சிறகிழந்த பறவைபோல பாரிஸ்நகரில் தன் வீட்டோடிருந்தான்.

சிறுமி ஜினேவரா—பியம்போவின் மகள் பெயர்—இதற்கிடையில் மங்கைப் பருவமடைந்தபோது அவளுக் கியல்பான பெருங் குணங்களும்

கூடவே வளர்ந்து வந்தன. நேர்மையில் ஊன்றி, அஞ்சா நெஞ்சம் படைத்து, தன் மனம் செல்லுமிடத்தில் தீவிரமான பற்றுதல் கொள்ளும் தன்மை அவளிடத்தில் நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. ராஜீய விஷயங்களிலேகூட அவள் இத்தன்மையைக் காட்டி வந்தாள் என்றால் தன் சொந்தச்செயல்களில் இவை தலைஎடுத்திருந்ததில் ஆச்சரியமில்லை. நப்போலியனிடத்தில் அவளுக்குப் பரமபக்தி. அவன் தன் தேசத்தவன், தன் தந்தைக்கு உதவி செய்தவன், உலகம் வியந்து நிற்கும் பெரியோன், அப்படிப்பட்டவனிடம் தான் கொண்டிருந்த ராஜ பக்தியை அவன் வீழ்ச்சி காலத்திலும் அவள் மறைக்கவில்லை. புதிய சர்க்கார் தன் குடும்பத்தினரை ராஜத் துரோகிகளாகக் கருதியது தனக்கொரு விருதென அவள் எண்ணினாள்.

ஃ ஃ ஃ

பெயர்பெற்ற ஓவிய ஆசிரியனொருவனிடம் அவள் சித்திரம் எழுதப் பயின்று வந்தாள். அவ்வாசிரியன் வெளிக்கு எப்படியிருந்தாலும் உள்ளூற நப்போலியனைச் சேர்ந்தவர்களிடத்தில் வெகு விசுவாசம் கொண்டவன். சர்க்கார் தூக்கிலிடத் தேடி அலையும் லூஜி என்னுமோர் இளைஞனை வெகு ரகசியமாகத் தன் வீட்டில் வைத்துக் காத்துவந்தான். அவனிடம் பயின்றுவரும் மாணவிகள் நாளடைவில் இதுபற்றிச் சந்தேகிக்கலானார்கள். அதில் முதன்மையானவள் ஜினேவரா தான்!

சிறுவன், நப்போலியன் கட்சிக்காரன் என்றறிந்ததுமே அவள் மனம் படபடத்தது. அவனைக்காண ஆவல் கொண்டாள். தனக்கு அவனைக் காட்டும்படி ஆசிரியனை வேண்டினாள். ரணகளத்திலேற்பட்ட பெருங்காயங்களினால் அவன் படுத்தபடுக்கையில் இருக்கிறான் என்று தெரிந்து, அவனுக்குச் சிசுருஷை செய்துவருவதெனத் தீர்மானித்தாள். தன்னைப் போன்றவர்களுக்குப் பணம் உதவி செய்ததால், தனக்கு நேர்ந்துள்ள இந்நெருக்கடியில் திக்கற்றுக் கிடக்கிறான் என்று உணர்ந்ததும், அவளுக்கு அவனிடத்தில் தன்னையும் மீறியதோர் அனுதாபமுண்டாயிற்று. அவன் சிறிது சிறிதாகச் சொஸ்தமடைந்து வருகையில் ஒரு நாள் இனிய கார்லிக தொனியில் "எவனுயிர் விழையா னிவளைக் கண்டே" என்று அவன் பாடியது அவள் காதில் விழுந்தது. அவளுக்கு உடலெல்லாம் மயிர்க் கூச்செறிந்தது. அன்றையிலிருந்து அவனிடம் தன் மனதை இழந்தவள் போலானாள்.

ஃ ஃ ஃ

'சென்ற பத்து பதினைந்து நாட்களாக ஜினேவரா வீடு வர வெகு நாழியாகிறது. சித்திரப் படங்களில் அவளுக்கு அதிக சுவை ஏற்பட்டு வருகிறது போலும்.' என்றாள் அவள் தாய்.

'இன்றைக்கு இன்னும் வரவில்லையா? வேலைக்காரன் சீக்கிரம் போகமாட்டான். நான் போய் அழைத்து வருகிறேன்' என்று சொல்லிப் பியம்போ சாயுமான நாற்காலியிலிருந்து எழுந்து புறப்பட்டான்.

அவன் வீட்டு வாயிலுக்கு வருமுன் ஜினேவராவே வந்து விட்டாள். சாப்பிட எல்லாரும் உட்காரும் பொழுது, —'எனக்கொரு படம் கொண்டுவர மாட்டாயா? இவ்வளவு நேரம் வேலை செய்கிறாயே?' என்று தந்தை கேட்டான். அப்பொழுது அவள் சிரிக்க முயன்றாளானாலும் முகம் வாட்டமடைந்தது.

'உனக்கு உடம்பென்ன? ஏன் உன் முகம் வெளுத்திருக்கிறது?' என்று தாய் கேட்டாள்.

'பொய் சொல்ல என்னால் இயலாது. உடம்பொன்று மில்லை. என் மனம் கொள்ளை போய் விட்டது. ஒரு இளைஞன் மேல் எனக்குக் காதலுண்டாயிருக்கிறது' என்று தன் குழம்பிய மனதையும், ஆனந்த ஒளி வீசும் தன் கண்களையும் மறைக்கத் தலை குனிந்து கொண்டாள்.

'யார் அவன், உயர்ந்த ஒரு ராஜகுமாரன்தானே?' என்றான் பியம்போ.

'இல்லை, சொத்தொன்று மில்லாதவன்.'

'நல்ல அழகு வாய்ந்தவன் போலிருக்கிறது.'

'பெருங் கஷ்டத்தில் சிக்கியிருப்பவன்.'

'என்ன செய்கிறான்?'

'நப்போலியனுக்காகப் போர் செய்தவன்; ராஜத் துரோகக் குற்றத்திற்காகச் சர்க்காருக்குத் தெரியாது, அவன், நமது ஓவிய ஆசிரியன்வீட்டில் மறைந்து வாழ்கிறான்' என்று அவன் பெருமையை விளக்குபவள் போலச் சொன்னாள்.

'உன் ஓவிய ஆசிரியன் நல்ல யோக்கியன்; இரக்க முடையவன். அது போகட்டும்; காதல் கொள்ள உனக்கென்ன அவசரம்? உன் கிழத் தந்தை யிடத்தில் நீ அன்பு செலுத்தி வந்தால் போதுமே' என்று பழிக்கும் குரலில் பியம்போ சொன்னான்.

'காதலிப்பதும், காதலிக்காததும் என் கையில் இல்லையே.'

'நான் சாகும் வரை என்னைக் கைவிட மாட்டாய் என்று உன்னையே நம்பி இருக்கிறேனே.'

'ஆனால் என்னை மணக்க வேண்டாம் என்று சொல்கிறாய்? உனக்குப் பிறகு எனக்கொரு உதவி நான் தேடுவது நன்றி கெட்டத் தனமாகுமா? நீ அப்படி எண்ணினால் உனக்கு என்னேயுள்ள வாஞ்சை உன் பொருட்டேயன்றி என் பொருட்டாகாது. உன்னைப்பிரிய விரும்பாததனால்தான், நப்போலியன் காலத்தில் எனக்கு மாலை சூட்ட விரும்பிய பட்டதாரிகளை நான் மறுத்தேன். மேலும் அவர்கள் என் பதவிக்காக என்னைக்கோரினர். இப்பொழுது நான் காதலிப்பவனை உன்னோடுதான் வாழவேண்டு மென்று நான் சொன்னால் என் பேச்சுக்கிசையாதவன் அவனன்று' என்று தந்தையைப் பழிப்பவள் போலச் சொன்னாள்.

'ஜினேவரா, பார்த்தாயா, இப்போதே, நம்மிருவருக்கும் தாரதம்மியம் உள்ள தென்று சொல்ல ஆரம்பித்து விட்டாயே! உன்மேல் அன்பு செலுத்துவது எனக்குச் சொர்க்கம் போலிருக்கிறதே; மற்றொருவனால் அப்படி உணர முடியுமா?' என்று மனம் கலங்கிக் கேட்டான் பியம்போ.

'அவன் அப்படி உணரவும் கூடும்; ஆனால் நான் அவனுக்கேற்றவளல்லவென்பது என் மனக்குறை' என்றாள் ஜினேவரா.

'அவன் என்று யாரைச்சொல்லுகிறாய்?'

'நான் காதலிப்பவனைத்தான்.'

'உன் பெருமையை மதிக்க, என்னைப்போல அவன் உன்னோடு பழகி இருத்தல் சாத்தியமில்லையே?'

ஜினேவரா சற்று பரபரப்புடன்,

'அப்பா, அவன் என்னைக் காதலிக்கிறான். நான் அவனைக் காதலிக்கிறேன். மற்றவை...........'

'நீ அவனைக் காதலிக்கிறாயா? எங்களிருவரிடம் கொண்ட அன்பைவிட அதிகமாகவா?'

'இவ்விரு உணர்ச்சிகளும் வேறுபட்டவை. இவைகளுக்குள் தாரதம்மியம் பார்க்கலாகாது' என்றாள் மகள்.

'அவைகளுக்குள் ஒன்று, மற்றதை விட வலிமை கொண்டிருக்கலாமல்லவா ?'

'இருக்கலாம்.'

'அப்படியாயின் நீ அவனை மணக்கலாகாது.'

'நான் மணக்கத்தான் போகிறேன்' என்று கண்டிப்புடன் சொன்னாள் ஜினேவரா. அவள் தாய் குறுக்கிட்டு அவர்கள் பேச்சைத் தடுத்தாள். எல்லாரும் சற்று நேரம் மௌனமாயிருந்தார்கள்.

'ஜினேவரா, நீ யாரையும் மணக்காதே. என் பேச்சைக்கேள். வேண்டியிருந்தால் என் தலையை உன் காலடியில் வைத்து யாசிக்கிறேன்' என்று பியம்போ தழதழத்த குரலில் சொன்னான்.

'உனக்காக ஒப்புக்கொண்டு பின்பு, சொல் தவறுபவள் நானன்று. ஜினேவரா, பியம்போ குடும்பத்தைச்சேர்ந்தவள்; உன்னுடைய மகள்!' என்றாள் பெண்.

மறுபடி தாய் குறுக்கிட்டு—'அவள் சொல்வது சரிதான். இவ்வுலகத்தில் நாங்கள் பெண்களாய்ப் பிறப்பது மணப்பதற்குத் தானே ?' என்றாள்.

'என் பேச்சை மீற அவளுக்குச் சொல்லிக் கொடுக்கிறாயா ?' என்று தன் மனைவியைக் கண் சிவக்கப் பார்த்து இடி முழக்கம் போல உறுமினான் பியம்போ.

'இது சொல் மீறுவதன்று; நியாய மற்ற ஒரு சட்டத்தை மறுப்பதேயாகும்' என்று ஜினேவரா சாவதானமாய்ச் சொன்னாள்.

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை; தந்தை வாக்கு தெய்வ வாக்கு ஆயிற்றே. பெருந்தீங்கிலிருந்து உன்னைப் பாதுகாக்கவே இவ்வெறுப்பு எனக்குள்ஏற்பட்டிருக்கலாம்.'

'அவன் என்னைக் காதலிக்காது போனால் அதுதான் பெருந்தீங்கு.'

'உனக் கெப்பொழுதும் அவன் பேச்சுத்தான் !'

'ஆமாம் அப்பா, எப்பொழுதுமே அவன்தான், அவன் எனக்கு உயிர், என் செல்வம், என் எண்ணங்கள் அத்தனையும் ஆவான். உனக்கு அடங்கி இருக்கும்போதுகூட என் நெஞ்சில் அவன் தங்கி இருக்கிறான்' என்றாள் உருக்கத்தோடு பெண்.

'இப்பொழுது அவனை மறந்துவிடு; எங்கள் சொற்படி நட. எங்களுக்குப் பிறகு...........உன்னிஷ்டம் போல.'

'அப்பா, உன் மரணத்தை நான் எதிர் பார்த்திருக்கவேண்டுமென்றா சொல்லுகிறாய் ?' என்றாள் ஜினேவரா.

இவ்வுண்மை அவன் மனதில் பெரும் கோபத் தழலை மூட்டி விட்டது. தான் சொல்வது இன்னது என்றுணராமல் 'உன்னை விட அதிக காலம் நான் ஜீவிப்பேன். தாய் தந்தையரை மதிக்காத மக்கள் அல்பாயுசுகளாய் மடிவார்கள்' என்று கடுகடுத்துச் சொன்னான்.

'அப்பா, நீ சொல்வது உண்மையாயின் நான் சீக்கிரம் மணப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகுமே. ஏனெனில் சாகுமுன் சிறிது காலமாவது நான் சுகிக்க வேண்டாமா?' என்று ஏதும் பரபரப்பின்றிச் சொன்னாள் ஜினேவரா.

இவள் இப்படி சாந்தமாகப் பேசி வந்ததனால் பியம்போவுக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. உடல் கடகடவென்று நடுங்கிற்று. ஜினேவரா சட்டென்று எழுந்து அவனைத் தழுவி 'அப்பா, நான் முன்னாடி இறப்பதே மேல். நீ ஏன் கோபிக்கிறாய்?' என்று ஒருவாறு அவனைச் சாந்தப் படுத்தினாள். தான் பிடித்ததை அவள் விடாது சொல்லிக் கொண்டு வரவே

அவன் மனம் சிறிது சிறிதாக மாற லாயிற்று. தந்தை தன் விருப்பத்திற்கு இணங்கக் கூடும் என்று அவளுக்குத் தோன்றிற்று.

ஃ ஃ ஃ

இப்படி நாட்கள் எட்டாயின. ஜினேவராவுக்கு மனது துடித்துக் கொண்டிருந்தது. ஒன்பதாவது நாள் காலை அவள் தாய், காதோடு, 'உன் காதலனைக் காலைக் கடைசியாக ஒப்புக் கொண்டார் உன் தந்தை' என்று சொன்னது அவளுக்குப் பரம சந்தோஷமளித்தது. பறந்து ஓடிப் போய் லூஜியை அழைத்து வந்து 'அப்பா, இப்போர் வீரன் வாட்டர்லூ களத்தில் நப்போலியனுக்கு நான்கடி தூரத்தில் சண்டை செய்தவன்' என்று சொல்லி அவனைத் தந்தையிடம் விட்டாள்.

பியம்போ, அவனைத் தலையிலிருந்து கால் பரியந்தம் பார்த்து விட்டு,

'நீ ஏதும் வீரப் பதக்கங்கள் பெற்றில்லையா?' என்று கேட்டான்.

"லீஜன் அப் ஆனர் (கௌரவ கூட்டத்தவன்) என்னும் பதக்கத்தை இனி அணிவதில்லை என்று வைத்து விட்டேன்' என்றான் அந்த வீரன்.

வந்தவனை உட்காரச் சொல்லாது நிற்க வைத்துப்பேசியதை ஜினேவரா சகியாது, ஒரு நாற்காலியை அவனுக் கருகில் வைத்தாள். சற்று நேரம் யாரும் பேசா திருந்ததைக் கண்ட பியம்போவின் மனைவி, தன் கணவனைப் பார்த்து, 'இவன் போர்த்தா குடும்பத்து நீனாவைப்போலவே இல்லையா?' என்று ஒரு சம்பாஷணை ஆரம்பிப்பதற்குச் சொன்னாள்.

'நீனாவின் சாயல் என்னிடத்திலிருப்பதில் அதிசயமொன்றுமில்லை. அவள் என் சொந்த சகோதரி' என்றான் லூஜி.

விழிகளில் தீப்பொறி பறக்க அவனை நோக்கி வந்த பியம்போவுக்கு இச் செய்தி நாராசம் காதில் பாய்வது போலிருந்தது.

'நீ லூஜி போர்த்தாவா?' என்று பரபரப்புடன் கேட்டான்.

'ஆம்' என்றான் விஷயத்தின் கொடுமையறியாத அவ்விளைஞன்.

கிழவன் பாம்பு கடித்தவன் போல எழுந்து நின்று தட்டுத் தடுமாறிக் கொண்டிருந்தான். அவன் மனைவி உடனே ஓடிவந்து அவனைத் தாங்கினாள். ஒரு பேச்சு கூட சொல்லாமல் தம் மகளை வெறுத்தவர்கள் போல் 'ஜிவ்' வென்று அறையை விட்டு இருவரும் நீங்கினார்கள். லூஜி திகைத்துப் போய் விட்டான். அவர்கள் அப்படிச் செய்ததின் கருத்து அவனுக்கு விளங்கவில்லை. ஜினேவரா தன் தாய் தந்தையர் போன வழியைக் கண் கொட்டாது பார்த்துக் கொண்டே,

'ஐயோ! அந்த சொல்லில் எவ்வளவு துர்ப்பாக்கிய மிருக்கிறது.'

'நான் என்ன சொன்னேன்? நம் இருகுடும்பங்கட்கும் தீராப் பகையுண்டா என்ன?' என்று லூஜி அலறிக் கொண்டு கேட்டான்.

'உண்டு, உண்டு. நம் குடும்பங்கள் ஒன்றையொன்று அழித்த விஷயம் என் தாய் சொல்லக் கேட்டிருக்கிறேன். இனி இங்கு நீ தாமதிக்காதே. உடனே புறப்படு. இவ்வீட்டிலிருக்கும் வரை உன் உயிருக்குப் பயமில்லை. ஆனால் நீ வெளியேறினதும் உனக்கு இன்னது தான் நேரும் என்று சொல்லுதற்கில்லை. என் தந்தை உனக்கொரு தீங்குமிழைக்க மாட்டான். அவனிடம் இரண்டு கார்ஸிக ஊழியர் இருக்கின்றனர். அவர்களிடமிருந்து தப்புவது

தான் கஷ்டம். நானும் உன்னுடன் வருகிறேன். புறப்படு' என்றாள்.

'ஜினேவரா, நம்மிருவரையும் கூட இப்பகை பாதிக்க வேண்டுமா?' என்று ஆனந்த சிகரத்தில் ஏற முயன்றவன் திடீரென்று துன்பக்கடலில் மூழ்கு பவன்போலக் கெஞ்சினான்.

'லூஜி, நமது காதலின் தன்மை வெகு பரிசுத்தமானது. ஆகையால் தான் இப்படி பகையையும் கடந்து உன்னை ஏற்க அது எனக்குச் சக்தி யளிக்கிறது' என்று லூஜிக்கு ஆறுதல் பேச்சுக்களைச் சொல்லி அவன் விடுதி வரை அவனோடு கூடச்சென்று திரும்பினாள் ஜினேவரா.

வீட்டில் எங்கும் ஒரே நிச்சப்தம். தாயின் அழுதகண்கள் சிவந்திருந்தன. தந்தையோ துக்கத்தால் நெஞ்சு விடாது பிளக்கப்பட்டு வந்தாலும் ஒரு கற்பதுமைபோல அசைவற்று உட்கார்ந்திருந்தான். ஜினேவரா விசேஷநிகழ்ச்சிஏதுமில்லைபோல அவர்களோடுவந்து உட்கார்ந்தாள். எதிரில் சாப்பாடு பரிமாறப் பட்டிருந்தாலும் யாரும் ஒரு கவளம் கூட உட்கொள்ள வில்லை. பெருந்துயரொன்று மனதை வாட்டுகிற தென்பதற்கு அன்னத் துவேஷம் ஒரு தக்க அறிகுறி. ஒருவரும் பேசக்கூட வாய்திறக்கவில்லை. அப்படியே கைகழுவிக் கொண்டு வெளியறையில் வந்துட்கார்ந்தார்கள்.

அவர்கள் ஒவ்வொருவருடைய மனமும் கொந்தளித்தெழும் கடல்போலிருந்தது. பியம்போ பேச முயன்றான். நா எழவில்லை. பிடிவாதத்தில் தனக்குச் சளைத்தவளன்று தன் மகள் என்பது அவனுக்குத் தெளிவாகிவிட்டது. வெகு முயன்று கடைசியாக,

'ஜினேவரா, நம் குடும்ப விரோதியை நீ காதலிக்கிறாய்!' என்று அவள் முகத்தைப் பார்க்கத் துணிவற்று தலை குனிந்து சொன்னான்

'உண்மைதான்.'

'எங்களுக்குள் தீராப்பகை இருக்கும்போது என் பகை வேண்டாதார் என் குடும்பத்தினரன்று. நீ யார் பக்கம் சேரப் போகிறாய்?'

'அதை நான் முன்னரே தீர்மானித்து விட்டேன். அவனை நான் எப்படியும் மணக்கப் போகிறேன்.'

'உன் சகோதரனைக் கொன்றவன் மகன் அவன் தெரியுமா?'

'அப்பொழுது அவனுக்கு வயது ஆறு; அவன் அறியாக்குழந்தை!'

'அவன் தந்தை கையில் நீ அப்பொழுது சிக்கி இருந்தால் உன்னை நூறு துண்டாக்கி இருப்பானல்லவா?'

'துண்டாக்கி இருக்கக்கூடும்; ஆனால் அவன் மகன் இன்று எனக்கு உயிரை விட மேலானதை அளித்திருக்கிறான். லூஜியைக் காணாது உயிர்வாழ என்னால் இயலாது. என்னுள் இன்பகரமான உணர்ச்சிகளை கிளப்பினவன் அவன். அவனைவிட அழகு மிகுந்தோரை நான் கண்டிருப்பேன். எத்தனையோ பேர்களின் குரலைக்கேட்டிருப்பேன்........என்னதான் இருந்தாலும் இனிமையில் அவனுடைய குரலுக்கீடானது எதுவுமே இல்லை. என்னை அவன் காதலிக்கின்றான். அவன்தான் என் புருஷன்.'

'அது ஒரு நாளும் நடக்காது! ஒரு போர்த்தா என் மருமகனாக நான் ஒப்பவே மாட்டேன். இது கண்டிப்புத்தான். என்பெயர் பார்த்தோலோமியோ டி பியம்போ தெரியுமா, ஜினேவரா?'

'இந்தப் பெயரில் ஏதாவது மந்திர சக்தி இருக்கிறதா என்ன?'

'அப்பெயருக்கு அர்த்தம், 'என் கையில் ஒரு வாள் உண்டு; நான் மனித சட்டங்களுக்கு அஞ்சாதவன்' என்பதுதான். கார்ஸிகா நாட்டினரா கிய நாங்கள் கடவுளின் முன்னிலையில் போய்த்தான் கணக்குத்தீர்ப்பது.'

'அப்படியாயின் என் பெயர் ஜினேவரா டி பியம்போ. இன்னும் ஆறு மாதத்தில் லூஜி போர்த்தாவின் மனைவி யாவேன். இனி உன் கொடுமையை நான் சிறிதும் சகிக்க மாட்டேன்.'

ஃ ஃ ஃ

நாட்கள் பல சென்றன. தந்தையும் மகளும் ஒரே பிடிவாதமாயிருந்தனர். ஜினேவரா வீட்டை விட்டு வெளியே கூடாதென்று தடுத்தான் தந்தை. சட்ட உதவி கொண்டு அவ்வுத்திரவை மீற முயன்றாள் மகள். இனி அவளைத் திருப்ப வழி இல்லை என்று கண்டான். போர்த்தாவின் மருமகள் பியம் போவின் மகளாயிருத்தல் சாத் தியமன்று எனக்கூறி அவளை வீட்டை விட்டு வெளியே அனுப்பி விட்டான்.

உடுத்த ஆடையோடு மாத்திரம் லூஜியிடம் வந்து சேர்ந்தாள் ஜினே வரா.

'நான் உனக்குக் கொண்டு வரும் செல்வம் என் காதலைத் தவிர வே றொன்றுமில்லை. என் தந்தை என்னைத் துறந்தனர்' என்று மனதில் குறை யோடு சொன்னாள் அவள்.

'நீயேன் குறை படுகிறாய்? நீ கொண்டு வந்திருப்பது விலையில்லா மாணிக்க மாயிற்றே! அது ஒன்றி ருந்தால் உலகப் பேரரசர்களை விட நாம் பணக்காரராவோமே!' என்று ஆறுதல் சொன்னான் அவன்.

இருவரும் பரம ஏழைகள் போல மணந்து கொண்டார்கள். ஜினேவரா, தான் எழுதும் படங்களை விற்றே குடு ம்ப வாழ்க்கையை நடத்தி விடலா மென்று எண்ணினாள். சிறிது காலம் அப்படியே கடந்தது. ஆனால்நாளடை வில் அவள் படங்கள் விலை போக வில்லை. லூஜிக்கும் தக்க உத்தியோகம் கிடைக்க வில்லை. இதற்குள் அவள் கருப்பம் தரித்து ஒரு ஆண் குழந்தை பெற்றாள். அதற்குத் தன் தந்தையின் பெயரைச் சூட்டி வெகு செல்லமாக வளர்த்து வந்தாள். நாட்கள் செல லச் செல்ல வறுமையின் கொடுமை அதிகரித்து வந்தது. அதனால் இச்சிறு குடும்பம் வாட்ட முற்றது. சில நாட் களில் தம்பதிகளுக்குக் குடிக்கக் கஞ்சி கூட இராது. உள்ளதை எல் லாம் தங்கள் குழந்தைக்கு ஊட்டிவிட்டு அவர்கள் பட்டினியாய்ப் படுத்த நாட் கள் பல. வேளா வேளையில் குழந் தைக்கு வேண்டிய சரியான ஆகாரங் கிடைக்காமலும் போக ஆரம்பித்தது. இருவரும் வறுமையோடு போராடி எப்படியாவது தங்கள் குழந்தையைக் காப்பாற்றுவதென்று முயன்றார்கள். முதலில் அன்றாடம் லூஜி வெளியில் போய்க் கஷ்டப்பட்டுக்கொண்டு வரு வதை வைத்துக் காலம் தள்ளினார்கள். ஆனால் அவனும் அடிக்கடி நோய்ப் பட்டு வந்ததனால், வரும்படியே இல் லாத நாட்கள் பலவாயின. வீட்டிலி ருந்த தட்டுமுட்டு சாமான்களை விற் கத் துணிந்தார்கள். அவையும் சரி யான விலைக்குப் போகவில்லை. வீட் டில் பசிப்பிணி மகா கோர உருவத் தோடு தாண்டவமாடி வந்தது.

இக் கஷ்ட காலத்தில் ஜினேவரா காட்டிய தீரத்தனம் சொல்லொணா தது. அவள் 'வறுமையிற் செம்மை' என்பதற் கோர் உருவமாயமைந் தாள். வளரும் குழந்தைக்குத் தக்க போஷணை இல்லாததனால் அதுநோய்ப் பட்டுச் சாகும் நிலைமைக்கு வந்து விட் டது. இக் குழந்தையின் கவலை ஒரு

புறம்; வீட்டைச் சுத்தப் படுத்தி, உள்ளதைச் சமைத்து, மறுபடி ஒழுங்காக வைப்பது மற்ருெரு புறம்; சம்பாதிப்பதற்காக இராப் பகல் உழைப்பது வேருெரு புறம்; இவ்வளவுக்கும் மன வமைதியோடு அவள் ஈடு கொடுத்து வந்தாள். தனக்குணவில்லை, எதையும் சரியாகச் செய்யச் சௌகரியங்களில்லை என்பதனுல் அவள் செய்ய வேண்டிய முயற்சியில் சிறிதும் குறைபவில்லை.

கடைசியாக ஒரு நாள் வீட்டில் ஒரே ஒரு துண்டு ரொட்டிதான் இருந்தது. குழந்தை படு நோயிலிருந்தபடியால் அப்பழைய ரொட்டி அதற்குப் பயன்படவில்லை. சாயந்திரம் வரை அதை அப்படியே வைத்திருந்து, ஊரெல்லாம் அலைந்து திரிந்து வந்த லூஜிக்குக் கொடுத்தாள்.

'நீ அதை உண்ண வில்லையா?'

'எனக்கு ஆய்விட்டது.'

அவள் பட்டினி கிடக்கிருள் என்பது அவனுக்குத் தெரியும். அத்துண்டை, தான் அருந்துவது சரியன்று என வுணர்ந்து தான் அவசரமாய் வெளியே போக வேண்டும் என்ருன்.

உயிர் துறக்க இருக்கும் இருவர், தூக்கு மரத்தடியில் எவ்வளவு தீவிர உணர்ச்சியோடு கட்டித் தழுவுவார்களோ அப்படி இவ்விருவரும் ஒருவரை யொருவர் கட்டியணைத்துக் கொண்டார்கள். இருவருக்கும் உள்ளூர ஜுரம் வாட்டி வருவது அப்போது புலனுயிற்று. ஆயினும் என்ன செய்வது! கண்களில் நீர் ததும்ப லூஜி வெளியே வந்தான்.

அந்நாட்களில் பிரான்ஸ் தேசத்தில் எல்லாக் குடிகளும் மூன்று வருஷம் ராணுவப் பயிற்சி பெற்றுத் தீர வேண்டும். அதற்குச் சௌகரிய மில்லாதார் ஒரு குறித்த தொகை கொடுத்து தமக்குப் பதிலாக மற்ருெருவனை பயில அனுப்பலாம் என்றிருந்தது.

இந்த வழியில் தன் உடலை விற்றுப் பணம் சம்பாதிக்கலாம் என்று வீட்டிற்கு வெளியில் வந்த லூஜிக்கு மனதில் தோன்றிற்று. முன் பணமாகக் கிடைக்கக் கூடிய பொன்னை ஜினேவராவிடம் கொடுத்தால் அவள் குழந்தையைப் பார்த்துக் கொள்வாள்; அவளைப் பிரிந்து ராணுவத்தில் சில வருஷம் உழைத்து வந்தால் பிறகு நல்ல காலம் பிறக்கக் கூடும் என்றெண்ணினுன்.

அதற்காக ஏற்பட்டிருந்த ராணுவ உத்தியோகஸ்தனிடம் பறந்தோடினுன். தன் பரிதாபகரமான நிலைமையை அவனிடம் சொல்லவே அவன் ஒரு பிடி பொன் நாணயங்களை எடுத்துக் கொடுத்தான். அவைகளைக் கையில் வாங்கிக் கொண்டு வீட்டிற்கு ஓடோடியும் வந்தான். வழியில் ஜினேவரா, ஜினேவரா என்று சொல்லி அலறுவான். வீடு வந்து சேர்ந்த போது இருள் மூட ஆரம்பித்தது. சத்தம் செய்யாது மிக மெதுவாக அறைக்குள் நுழைந்தான்.

ஜினேவரா நாற்காலியில் சாய்ந்து கொண்டு குழந்தையைத் தன்மார்போடணைத் திருந்தாள். அயர்ச்சியினுல் மெய் மறந்து உறங்குபவள் போலக் காணப்பட்டாள். கிட்டப் போய் ஜினேவரா என்று கூப்பிட்டான். அவன் குரல் காதில் விழுந்ததும் அவள் கண்களைத் திறந்தாள். அவளுக்குத்தான் கொண்டு வந்த பணத்தைக் காட்டினுன். அதைக் கண்டு சிரிப்பவள் போல பாவித்து,

'குழந்தையின் உடம்பு ஜில்லிட்டுப் போய் விட்டதே!' என்று சொல்லி மறுபடி மூர்ச்சையாய் விட்டாள்.

அவன் ஓவென்று அலறிப் பணத்தைத் தரையில் எறிந்து இறுகப்பிடித்தி

ருந்த குழந்தையோடு தாயை எடுத்துக் கட்டிலில் விட்டான். வைத்தியனுக்குச் சொல்லியனுப்பினன். அவன் வருவதற்குள் ஜினேவரா கண்ணைத் திறந்து தன் கணவனை அருகில் அழைத்து, 'இனி நான் பிழைக்க மாட்டேன். உன்னோடு நான் அனுபவித்த சுகத்திற்கு இம்மரணம் ஒரு பெரிதன்று. இனி உயிர் பிழைத்தாலும் இக்கஷ்ட வாழ்க்கையை உன்னோடிருந்து பூர்த்தி செய்ய நான் பின் வாங்க மாட்டேன். என் அடையாளமாக என் தந்தையிடம் என் கூந்தலைச் சேர்த்து விடு. நான் அவன் மேல் ஒரு பழியும் கூறவில்லை என்று சொல்லு. சீதளம் அதிகரிக்கிறது. அதைத் தடுக்க உன் கையைத் தா; என் இருதயத்தின் மேல் வைத்துக் கொள்கிறேன்' என்று அவன் கையைப் பற்றி இழுத்தாள். அதற்குள் உயிர் போய் விட்டது.

ஃ ஃ ஃ

'இதென்ன, இங்கே இப்படிக் குளிருகிறதே, நம்மால் தாங்க முடியவில்லையே! ஜினேவராவின் எளிய வீட்டில் என்னமாய்த் தான் இருக்குமோ?' என்றாள் அவள் தாய்.

பியம்போ இரவெல்லாம் தூக்கமின்றி நெருப்பருகில் குளிர் காய்ந்து கொண்டிருந்தான். தன் மனைவி சொல்லியதைக் கேட்டு அவனுக்கு உடல் நடுக்கமுற்றது.

'இக்குளிரோடு பட்டினியாயுமிருந்தால் அவளுக்கு என்ன கஷ்டமாயிருக்கும்!' என்று தொடர்ந்து சொன்னாள்.

அவன் கண்களில் நீர் ததும்பிற்று. ஒரு நிலையில் இருக்க முடியவில்லை. பெருமூச்செறிந்தான்.

'அவளுக்கொரு குழந்தை இருக்கிறதாம்; அதற்குப் பால் கொடுக்கக் கூட அவளுக்குச் சக்தியில்லை என்று கேள்வி' என்று மனம் கசிந்து சொன்னாள் தாய்.

'போதும், போதும்; அவளைப்போய் அழைத்து வா. ஹா! என்னருமை மகளே! என்னைத் தோற் கடித்து விட்டாய்!' என்றலரும் தன் கணவனைவிட்டு விட்டு அவள் உடனே தன் மகளை அழைத்துவரப் புறப்பட்டாள். கதவருகில் போன உடனே அது படீரென்று திறந்தது. பேய் பிடித்தவன் போல ஒருவன் உள்ளே நுழைந்தான்

'அவளிறந்தாள்! ஒன்றையொன்று அழிக்க முயன்று நம் இருகுடும்பங்களும் பாழாயின. கடைசியாக மிஞ்சியது அவளுடைய இந்த அளகபாரம் ஒன்றுதான்' என்று சொல்லி நீண்ட அவளுடைய கருங் குழலை மேஜைமேல் வைத்ததும் அப்படியே சாய்ந்து விட்டான்.

வீட்டில் இடிவிழுந்தது போலாயிற்று. கிழவனும் கிழவியும் பிரமித்து விட்டார்கள். தடுக்க ஒண்ணாத ஒரு கொடுமை நேரும்போது நாம் நடுங்கி ஒடுங்கி ஒன்றும் செய்யத் தோன்றாத குழந்தைகளாகி விடுகிறோம். நாம்செய்யக் கூடியதெல்லாம் வாய் திறந்து கொண்டு விறைக்க விறைக்க விழிப்பது ஒன்று தான். பியம்போவும் அவன் மனைவியும் அசைவற்ற பதுமைகள் போல் நின்று கொண்டு ஒருவரை யொருவர் கண் கொட்டாது பார்த்து நின்றார்கள். வந்தவன் என்ன கதியானான் என்பதைக் கூட அவர்கள் கவனிக்கவில்லை. சற்று நேரம் கழிந்ததும் பியம்போவின் மனைவி மேஜை மேல் கிடந்த கூந்தலைக் கண்டு அலறி அழத் தொடங்கினாள். பியம்போவும் சற்று சமாளித்துக் கொண்டு நோக்குகையில் லூஜி பிணமாய்க் கிடப்பதைக் கண்டான்.

ஹாவாய்த் தீவுகள்

—நமது அமெரிக்க நிருபர்

பசிபிக் மகா சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள இவ்வழகிய தீவுகளை காப்டன் குக் என்பவர் 1788ம் வருடத்தில் கண்டு பிடித்தார். பல நூற்றாண்டுகளாக இந்நாடு உலகத்தின் மற்றப் பகுதிகளுடன் எவ்வித தொடர்பு மில்லாதிருந்தது. ஆனால் இன்று தினம் நாகரிக உலகத்திலே ஹாவாய்த் தீவுகள் ஒரு ஸ்தானம் வகிக்கின்றன. பசிபிக் மகா சமுத்திரத்தில் செல்லும் பெரும்பாலான கப்பல்கள் ஹொனலுலு துறை முகத்தில் தங்காமல் செல்லுவதில்லை.

அமெரிக்காவின் பசிபிக் கரையோரத்திலிருந்து சுமார் 2,100 மைல் தூரத்திலும், ஜப்பானிலிருந்து சுமார் 3,500 மைல் தூரத்திலும் இத் தீவுகள் அமைந்திருக்கின்றன. ஹாவாய் என்பது பிரதம தீவு. மாவுஇ, ஒஹாஉ, காஉஆய், கலாவா ஓ முதலிய நான்கு தீவுகள், இன்னும் மிகச் சிறிய தீவுகள் பலவும் உண்டு. இவைகளெல்லாம் சேர்ந்து ஹாவாய்ப் பிரதேசங்கள் (Territory of Hawaii) என்றழைக்கப் படுகின்றன. இத்தீவுக் கூட்டங்களின் விஸ்தீரணம் 6,450 சதுர மைல்களாகும்.

காப்டன் குக், இத்தீவுகளைக்கண்டு பிடித்தபொழுது இவைகள் தனித் தனிச் சுதந்தர நாடுகளாக தனித்தனி அரசர்களின் ஆட்சியில் இருந்தன. பின்னர் காமிகாமேஹா என்ற வீரம் நிறைந்த மன்னன் மற்றத் தீவுகளையெல்லாம் ஜயித்து தனி அரசனாக விளங்கினான். இவன் சிறந்த நீதிமானாக விருந்ததோடு குடிகளின் நன்மைக்காகப் பாடுபட்டான். ஹாவாயர்கள் இவனைத் தெய்வமாகக் கொண்டாடினர்: இவனைப் பற்றிய கதைகளும் பாட்டுகளும் எண்ணில இவைகள் தேசியப் பொக்கிஷமாக இருப்பதோடு ஹாவாயர்களுக்குத் தேசிய உணர்ச்சியையும் ஊட்டுகின்றன. இவனிறந்த பின்னர் நாட்டிலே குழப்ப முண்டாயிற்று. அமைதியின்மை நிலவிற்று. மதப்பற்றுடைய சில ஹாவாயர்களும்கூட மதத்தில் நம்பிக்கை யிழந்தனர். 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்று வாழத்தலைப்பட்டனர். காமிகாமேஹாவோடு ஹாவாயர்களின் தேசிய வாழ்க்கை ஒரு முடிவுக்கு வந்தது என்று கூறலாம். இச்சிறந்த மன்னனின் பொன்னிறமுள்ள கம்பீரமான உருவச்சிலை இன்று ஹொனலுலு நகரை அலங்கரிக்கிறது.

ஹாவாயர்களின் பூர்வீகத்தைப் பற்றி, சரித்திர ஆசிரியர்களே இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. காட்டுத் தேவதைகளை வணங்கினார்களென்றும், பெருத்த மூட நம்பிக்கை கொண்டிருந்தார்களென்றும் தெரிகிறது. பெரும்பாலான மக்களுக்கு மதமே கிடையாது. சந்தர்ப்பத்தை உபயோகப் படுத்திக் கொள்வதில் மிகச்சிறந்தவர்களான அமெரிக்கப் பாதிரிகள் இச்சந்தர்ப்பத்தையும் உபயோகப் படுத்திக்கொண்டதில் ஆச்சரியமில்லை. தங்கள் குறைகளைப் போக்க வகை யறியாத இப்பாதிரிகள் ஹாவாயர்களுக்கு ஞானஸ்நானம் செய்யும் முயற்சியிலீடுபட்டார்கள்.

பல வித குழப்பங்கட்குப் பின்னர் 1898-ம் வருடத்தில் ஹாவாய்த்தீவுகள் ஐக்கிய அமெரிக்காவோடு சேர்க்கப்பட்டன. ஏகாதிபத்தியப் பைத்தி



ஒரு ஹாவாய்ப் பெண். அழகிய மலர் மாலைகளை அணிந்து கொள்வதில் இவர்களுக்கு அதிக விருப்பம்.

யம் பிடித்த பிரிட்டன் போன்ற நாடுகள் இத்தீவுகளின் மேல் கண்வைத்த போதிலும் பயனில்லாது போயிற்று. இத்தீவுகள் அமெரிக்காவின் குடியேற்ற நாடுகளல்ல. அல்லது அமெரிக்காவின் ஆட்சியிலுள்ள நாடுகளுமல்ல. இவைகள் அமெரிக்காவின் ஒரு பகுதியேயாகும். அமெரிக்காவின் எல்லையாகவும் இவைகள் கருதப்படுகின்றன. ஆனாலும் ஸ்டேட்டுகளுக்குள்ள உரிமைபோன்று ஹாவாய்க்கு உரிமை கிடையாது. ஹாவாய் மக்களில் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஒரு பிரதிநிதி செனெட் சபையில் அங்கம் வகிப்பார். விவாதங்களில் கலந்து கொள்ளத்தான் இவருக்கு உரிமையுண்டு. ஓட்டுரிமை கிடையாது.

ஹாவாய்த் தீவுகளின் கவர்னர், நீதிபதிகள் முதலியவர்களை அமெரிக்காவின் குடியரசுத் தலைவரே நியமனம் செய்வார். இக் கவர்னர் செனெட் சபைக்குப் பொறுப்பாளி. ஹாவாயில் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற ஜனப்பிரதிநிதி சபை இருக்கிறது. இச் சபை இரண்டு வருடத்திற்கொரு முறை அறுபது நாட்கள் கூடுகின்றன. இச் சபை செய்யும் தீர்மானங்களை நிராகரிக்கும் உரிமையும் (Veto Power) கவர்னருக்கு உண்டு. பல இலாகாக்களின் தலைவர்களை—ஜனப்பிரதிநிதி சபையின் சம்மதத்தோடு—கவர்னர் நியமனம் செய்

வார். ஸ்தல ஸ்தாபனங்களெல்லாம் ஜனப்பிரதிநிதி சபையின் ஆட்சிக்கு உட்பட்டதாகும்.

இத் தீவுகளின் ஜனத்தொகை சுமார் 324,000 தான். இவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அமெரிக்கக் குடிகள் (American citizen). ஜனத் தொகையைப் பற்றிய புள்ளி விவரங்களை நோக்கினால் இது சர்வ தேச மக்களைக் கொண்ட நாடு என்பது விளங்கும்.

அமெரிக்க, பிரிட்டிஷ், ஜர்மன், ரஷ்யன்	36	ஆயிரம்
சீனர்கள்	25	,,
பிலிப்பைன் தீவுக்காரர்கள்	50	,,
ஹாவாயர்கள்	21	,,
ஜப்பானியர்	128	,,
கொரியர்	6	,,
ஹாவாயர்கட்கும் மற்றவர்கட்கும் பிறந்தவர்கள்	22	,,
போர்ச்சுகீஸியர்	27	,,
போர்ட்டோ ரிக்கன் (Porto Rican)	6	,,
ஸ்பானியர்கள்	2	,,

இத்தீவிலே நிறத்திமிரோ ஜாதித் துவேஷமோ கிடையாது. எல்லோரும் சமத்துவமாகவும் சகோதரப் பான்மையுடனும் சுதந்தரத்துடனும் வாழ்கின்றார்கள். ஜப்பானியர்கள் அளவுக்கதிகமாக இங்கு குடியேறியிருப்பது குறிப்பிடத்தக்கது. எக்காரணம் கொண்டும் ஜப்பானியர்கள் இங்குக் குடியேற இப்பொழுது அனுமதிக்கப்படுவதில்லை. ஹாவாயர்கள் பழுப்புநிறமுள்ள மக்கள். அழகிய தோற்றமுடையவர்கள். கலப்பு மணம் அதிகரித்து விட்டபடியால் உண்மையான ஹாவாயர்களைக் காண்பதே கஷ்டமானதாகும்.

ஹுலா ஹுலா நடனம்.

ஹாவாயர்களின் பாஷையில் 12 எழுத்துக்கள் தான் உள்ளன. 'ட' என்ற எழுத்துக் கிடை

டாது. அதற்குப் பதிலாக 'க' என்ற எழுத்தை உச்சரிக்கிறார்கள். இப்பாஷைக்குப் போதுமான இலக்கணம் கிடையாது. ஒரே வார்த்தைக்குச் சமயத்தையொட்டிப் பல அர்த்தங்கள் இருக்கின்றன. இக்காரணங்களால் இப்பாஷை மறைந்து வருகிறது. ஆங்கிலமே அனைவரும் பேசும் பாஷையாகும். ஹாவாயின் தேசிய பாஷை ஆங்கிலம் என்று கூறுவது மிகையாகாது. ஆனாலும் ஹாவாய் பாஷையில் மற்றவர்கள் பேசுவதைக் கேட்கும்பொழுது இனிமையாக இருக்கிறது. சில வார்த்தைகளைக் கேளுங்கள்.

அலோஹா —வந்தனம்
கேக்கிகனே —பையன்
கேக்கி மாஹினி —பெண்
விக்கி விக்கி —அவசரமாய்
ஹலே புலே —கோவில்
கூலி கூலி —நில்லுங்கள்
ஹுலா ஹுலா —தேசிய நாட்டியம்
மாலிஹினி —அந்நியர்



ஹாவாயில் மீன் பிடிப்பது ஒரு முக்கிய தொழில்

ஹாவாய்த் தீவுகளில் 175 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. 1,719 ஆசிரியர்கள் 55,044 மாணவ-மாணவிகட்குப் பாடங்கற்பிக்கின்றனர். இப்பள்ளிக்கூடங்கள் அரசாங்கத்தாரால் நடத்தப் பெறுவனவாகும். தனிப்பட்டவர்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் சுமார் 10 ஆயிரம் மாணவ-மாணவிகள் பயில்கின்றனர்.

இந்நாட்டில் கரும்பு உற்பத்தி அதிகம். முதன் முதலாக காப்டன் குக், இந்நாட்டைக்கண்டு பிடித்தபொழுது சில கரும்புச் செடிகளைக் கொண்டு வந்தார். இப்பொழுது வருடமொன்றுக்கு 20 கோடி ரூபாய் பெறுமான எட்டு லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதி செய்யப்படுகிறது.

அடுத்தபடியாக அன்னாசிப் பழம். 1888ம் வருடம் ஜான் கிட்வெல் (John Kidwell) என்பார் முதலாவது அன்னாசிச் செடியைக் கொண்டுவந்தார். அன்னாசியை, பழமாகவும் சாறாகவும் பக்குவப்படுத்தி ஏற்றுமதி செய்கின்றனர். வருடமொன்றுக்கு எழு கோடி ரூபாய் பெறுமான அன்னாசி ஏற்றுமதி செய்யப்படுகிறது.

மூன்றாவதாக யாத்திரை வாசிகள். இதனை ஒரு தொழிலாகக் கருதுவோமானால் இத்தொழில் இங்கு மூன்றாவது ஸ்தானம் வகிக்கிறது. வருடத்



ஹாவாயர்கள் வாழும் இன்பகரமான குடிசை

திற்குச் சுமார் 20-ஆயிரம் யாத்திரை வாசிகள் இங்கு வருகின்றனர். இங்கு சராசரி சீதோஷ்ணம் 74-டிக்கிரிதான். மிகவும் ஆரோக்கியமான இடமாக இருப்பதால் பல பணக்காரர்கள் உல்லாச யாத்திரையாகவும், சிலர் உடல் நலன் பொருட்டும் இங்கு வருகின்றனர். மிகச் சிறந்த அரண்மனை போன்ற ஹோட்டல்கள் பல. நீளமான தார் ரோடுகள். போக்குவரத்து வசதிகள் நன்கமைந்திருக்கின்றன. தினந்தோறும் மற்றத்தீவுகளுக்கு ஆகாய விமான வசதிகள் உண்டு. பெரும்பாலோர் சொந்த மோட்டார்கள் வைத்திருக்கின்றனர். ஒரு சில குதிரை வண்டிகளே தென்படும். துறைமுகத்தில் கப்பல்கள் தங்கும் பொழுது நூற்றுக்கணக்கான அழகிய இளம் ஹாவாய்ப் பெண்கள் ஹுலா ஹுலா நடனமாடுவர். யாத்திரை வாசிகளின் கழுத்திலே அழகிய மலர் மாலைகளைப் போடுவார்கள். இம்மாலைகள் ஒரு ரூபாய் முதல் பத்து ரூபாய்வரை விலையுள்ளதாகும். மாலைகள் அணிந்து கொள்வது இந்நாட்டு வழக்கம். மாலைகள் அணிய சமய சந்தர்ப்பங்கள் பார்ப்பதில்லை, நினைத்த பொழுதெல்லாம் அழகிய மாலைகளை அணிந்து ஆனந்தமாகப் பாடிக்கொண்டு ஆண்களும் பெண்களும் வேலை செய்வார்கள். தென்னை மரங்களும் பனை மரங்களும் இந்நாட்டில் ஏராளம். தேங்காய் மூடிகளைக் கொண்டு இவர்கள் தயாரிக்கும் பொருள்கள் கலைவனப்புடையதாகும்.

இன்னும் பல தொழில்கள். காபி, மீன் பாடம் செய்தல், வாழைப் பயிர், விவசாயம் முதலியனவும்

நெவில்லி சேம்பர்லேன்

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னே—ஏன்? ஐரோப்பிய மகா யுத்தம் நடந்து கொண்டிருக்குபோது கூட, நெவில்லி சேம்பர்லேன் என்ருல் எத்தனை பேருக்குத் தெரியும்? அவர் பிறந்த பர்மிங்ஹாம் நகரத்திலே மட்டுந்தான் அவர் ஓரளவு பிரபலஸ்தரா யிருந்தார். ஆனுல் இப்பொழுது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதம மந்திரிப்பதவியை வகித்திருக்கிருர்.

உண்டு. விவசாயம் வர வர க்ஷீண திசை யடைந்து வருகிறது. ஜப்பானியர்கள் ஜப்பானிலிருந்து அரிசி இறக்குமதி செய்கின்றனர். விலை அதிகமாய் இருந்தபோதிலும் அவர்கள் பொருட்படுத்துவதில்லை. ஹாவாய்த் தீவுகளில் அமெரிக்கக் குடிகளாக வாழ்ந்த போதிலும் ஜப்பானியர் ஜப்பானியர்களாகவே யிருக்கிருர்கள்.

ஹாவாயர்கள் மூட நம்பிக்கையின் அடிமைகள். சில சமயங்களில் தன்னம்பிக்கை இழந்து விடுவார்கள். ஜனத்தொகையில் 16ல் ஒரு பங்குள்ள இந்த ஹாவாயீர்கள் பெரும்பாலும் கிராமங்களிலே—குடிசைகளிலேதான் வசிக்கிருர்கள். இயற்கையிலே இன்பங் காண்பதில் இவர்கட்குப் பிரியமதிகம். களியாட்டங்களிலே அதிக கருத்துச் செலுத்துவார்கள். இவர்களின் வாழ்க்கை மிக எளிமையானது. சோறும் மீனுந்தான் இவர்களின் பிரதம ஆகாரம். சீனர் உணவு, ஜப்பானியர் உணவு, அமெரிக்கர் உணவு முதலியவைகளையும் இவர்கள் உண்கின்றனர். பெரும்பாலும் அமெரிக்கர்களைப் போன்றே ஆடையணிகின்றனர். சங்கீதத்தில் இவர்கட்கு எல்லை யற்ற பிரியம்.

மோர்மன் என்ற மதத்தினர் இங்குள்ளனர். இவர்களுடைய அழகிய ஆலயம் ஹொனலுலு நகரில் அமைக்கப் பெற்றிருக்கிறது. இது முற்றிலும் சலவைக் கல்லாலாகிய கட்டிடம்.

பிஷப் மியூசியம் ஹொனலுலுவிலுள்ள பிரசித்தி பெற்ற பொருட்காட்சிசாலை. இது ஹாவாய்த் தீவுகளின் முன்னேற்றத்தை ஒருவாறு நன்கு விளக்கும்.

வைக்கிக்கி என்பது ஹொனலுலு நகரின் ஒரு பகுதி. நான்கு மைல் நீளமுள்ள அழகிய கடற்கரை. நாகரிக வசதிகளுள்ள பல வீடுகளும் ஹோட்டல்களும் இங்குள்ளன. வைக்கிக்கி தியேட்டர் உலகிற் சிறந்த தியேட்டர்களில் ஒன்று. தியேட்டருக்கு உள்ளே இருந்த போதிலும் வெட்ட வெளியில் இருப்பது போலத் தோன்றும். உண்மையான மரங்கள் ஹாலின் இருபுறங்களிலும் இருக்கின்றன. கூரையை நோக்கினுல் நீல நிறமுள்ள ஆகாயம். மேகங்கள் நகர்ந்த வண்ணமாய் இருக்கும். நக்ஷத்திரங்கள் பிரகாசிக்கும். உண்மையான ஆகாயம் மப்பும் மந்தாரமுமாயிருந்த போதிலும் இந்தச்செயற்கை ஆகாயம் எப்பொழுதும் பிரகாசமாயிருக்கும்.

ஐம்பது ஆண்டுகளுக்குள் முன்னேற்ற மடைந்துள்ள இவ்வழகிய தீவுகளைப் பார்க்கத் தவருதீர்கள். சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிராதீர்கள். சந்தர்ப்பத்தை உண்டாக்கிக் கொள்ளுங்கள். அலோஹா!



நெவில்லி சேம்பர்லேன்
பிறந்தது 18-3-1869

நெவில்லி சேம்பர்லேன் 1869ம் வருஷம் மார்ச் மாதம் 18ந் தேதி பிறந்தார். இவர் பதின்மூன்று வயது அடைந்ததும் ரக்பி பள்ளிக்கூடத்திற்கு அனுப்பப்பட்டார். பிறகு பர்மிங்ஹாமிலுள்ள ஒரு பிரபல கல்லூரிக்குச் சென்றார். இவர், பள்ளிக்கூடங்களில், பாடங்களை விட, விளையாட்டுகளிலேயே அதிக கவனம் செலுத்தினார். சிறப்பாக காற்பந்து விளையாட்டிலே இவருக்கு நல்ல பயிற்சியும் திறமையும் இருந்தன. அந்தக் காலத்தில் பட்சிகளைப் பிடிப்பது, அவற்றின் குணகுணங்களை அறிவது, புழு பூச்சிகளின் வாழ்க்கை எப்படி என்பன போன்ற ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார்.

இவரை தொழிற்கல்வி பயிலுவிக்கும் ஒரு பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி, இஞ்சினீரிங், ரஸாயனம் முதலிய பாடங்களைப் படிக்குமாறு இவர் தந்தை ஜோஸப் சேம்பர்லேன் கூறினார். நெவில்லியும் அதற்குடன்பட்டு, தன் படிப்பில் அதிக கவனஞ் செலுத்திப்படித்துக்கொண்டிருந்தார். அப்படியே ஒரு பிரபல வியாபார நிலயத்திலும் வேலை கற்றுக் கொண்டிருந்தார்.

இப்படி யிருக்கும்போது, மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான பஹாமா தீவில் ஒரு வகை அவுரி உற்பத்தியாகிறதென்றும் அதில் வியாபாரம் செய்தால் நல்ல லாபம் கிடைக்கலாமென்றும் ஜோஸப்சேம்பர்லேனுக்குச் சிலர் யோசனை கூறினார்கள். எனவே, ஜோஸப், தமது இருகுமாரர்களையும் அழைத்து யோசனை கேட்டார். நெவில்லி, பஹாமாஸுக்குச் செல்வதாக ஒப்புக்கொண்டு அப்படியே சென்றார். அப்பொழுது இவருக்கு வயது 21.

நெவில்லி, பஹாமாஸில் கடுமையான வாழ்க்கையை நடத்தினார். தமது அவுரித்தோட்டம் பூராவையும் காலாலேயே சுற்றிப்பார்ப்பார். மதுபானஞ் செய்யவோ ஏகிரி வஸ்துக்களை உபயோகிக்கவோ மாட்டார். அந்தப் பிரதேசங்களில் அப்பொழுது மலேரியா மிக அதிகம். ஆனால் நெவில்லிக்கு ஒரு முறை கூட மலேரியா வந்தது கிடையாது. கடைசியில் 1896-ம் வருஷம் பர்மிங்ஹாமுக்குத் திரும்பி வந்து வியாபாரத்தில் நுழைந்தார்.

வியாபாரத்தோடு இவர் திருப்தியடைய வில்லை. 1911-ம் வருஷம் பர்மிங்ஹாம் நகர சபைத்தேர்தலில் அபேட்சகராக நின்று வெற்றி பெற்றார். இங்கே, ஸ்தல ஸ்தாபன சீர்திருத்தங்கள் பல செய்தார். 1914-ம் வருஷம் 'ஆல்டர்மன்' ஆனார். 1915-ம் வருஷம் 'மேயரா'னார்.

பிரதம மந்திரி மீன் பிடிக்கிருர்

பார்லிமெண்டில் கன்ஸர்வேடிவ் கட்சி அங்கத்தினராகப் பிரவேசித்தார். பின்னர் நான்கு வருஷம் இவர் எந்த அரசாங்க உத்தியோகமும் வகிக்கச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. 1922ம் வருஷம் கூட்டுக் கட்சி அரசாங்கம் வீழ்ந்ததும், ஸ்ரீமான் போனர்லா பிரதம மந்திரியானுர். அப்பொழுது நெவில்லிக்கு போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் உத்தியோகம் கொடுக்கப்பட்டது. உத்தியோகப்படிகளில் வெகுவேகமாக இவர் ஏறிக்கொண்டே சென்ருர். இதன் பிறகு சுகாதார இலாகா மந்திரியானுர். இந்தப் பதவியில் இவர் சுமார் ஆறு வருஷகாலம்-இடையே சில மாற்றங்கள் தவிர-இருந்து திறமையாக நிருவாகம் நடத்தினுர். இந்தக் காலத்தில் இவர் அமுலுக்குக் கொண்டுவந்த சீர்திருத்தச் சட்டங்கள் பல. பின்னர் 1931ம் வருஷத்திலிருந்து இவர் பொக்கிஷ மந்திரியாயிருந்து வேலை பார்த்தார். 1937ம் வருஷம் மேமாதம் ஸ்ரீமான் பால்ட்வின் பிரதம மந்திரிப் பதவியினின்று விலகிக் கொண்டபிறகு இவர் கன்ஸர்வேடிவ் கட்சியின் தலைவராகவும் பிரதம மந்திரியாகவும் தெரிந்தெடுக்கப் பட்டார்.

ஸ்ரீமான் சேம்பர்லேன் ஒழுங்கான உழைப்பாளி. காலையில் பதினேரு மணிக்குச்சரியாகத் தமது காரியாலயத்திற்கு வந்துவிடுவார். அங்கே இருந்துகொண்டு தமது வேலைகளைச் சுறுசுறுப்பாகக் கவனிப்பார். இவர் பேசும்போது, ஒரு நாவலர் பேசுவது போல் இராது. ஆனுல் விஷயங்கள் கோவையாக இருக்கும்.

நெவில்லிக்கு அதிகமான நகைச்சுவை இல்லாவிட்டாலும், பேசுகிற சில சமயங்களில் அதிக அர்த்தபுஷ்டியுடைய விகடவார்த்தைகளை உபயோகிப்பார். இவர் அதிகமான களியாட்டங்களில் கலந்து கொள்வது கிடையாது. வீட்டிற்கு வந்தால் தமது மனைவியுடனும் குழந்தைகளுடனும் இன்பமாகக் கலந்து விளையாடுவார். ஓய்வு நேரங்களில் நிறையப்படிப்பார். எப்பொழுதும் இவர் கையில் ஷேக்ஸ்பியர் நாடகப் பிரதி யொன்றைப் பார்க்கலாம்.

இவருக்கு அதிகமாக மீன் பிடிப்பதில் விருப்பம். திறந்த வெளிகளில் நடப்பதும், ஓடு நீரில் மீன்களைப் பிடிப்பதும் இவருக்குப் பெரிதும் சந்தோஷத்தையும் உற்சாகத்தையும் தருகின்றன.

இந்தியாவில் தற்கால அரசியல் நெருக்கடி

—கே. வி. ராமசுப்ரமண்யம் B. A., B. L.

'இந்தியாவில் தற்கால அரசியல் நெருக்கடி' தீர்வதற்கு முன், இந்த வியாசம் எழுதப்பட்டது. காங்கிரஸ் கட்சியினர், ஆறு மாகாணங்களில் மந்திரி சபைகள் அமைத்து, நிருவாகத்தை நடத்தி வருகின்றனர். இது காரணமாக, நெருக்கடி தீர்ந்துவிட்டதாயினும், இந்தக்கட்டுரை பல ஆராய்ச்சிகளை அடக்கிக் கொண்டிருப்பதால், இதனை வெளியிடுகிறோம். இதனை எழுதிய ஸ்ரீமான் ராமசுப்ரமண்யம் சிறந்த சட்ட அறிஞர். இந்தியா சட்டசம்பந்தமாக ஆங்கிலத்திலும் தமிழிலும் சில நூல்கள் எழுதியிருக்கிறார், இந்தக் கட்டுரையில், புதிய அரசியலை ஐந்து காட்சிகளாகப் பிரித்து படிப்படியாகக் கூறிக்கொண்டு செல்கிறார், இவர் கூறுகிறபடி இப்பொழுது ஐந்தாவது காட்சி நடைபெறுகிறது.

தற்காலம் இந்தியாவில் 1935ம் வருஷத்து இந்தியா ஆக்ட்படி புதிய அரசியல் மிகவும் அற்புதமான ரீதியில் நடைபெற்று வருகிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் 11 மாகாணங்கள் இருக்கின்றன. அதாவது கவர்னரைத் தலைவராகக் கொண்ட மாகாணங்கள். இவைகளில் ஐந்து மாகாணங்களில் புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வந்து, சட்டசபைகளும் கூட்டப்பட்டு, சட்டசபையில் மெஜாரிட்டி மெம்பர்களின் ஆதரவையுடைய மந்திரி சபைகள் அமைக்கப்பட்டு, மேற்படி மந்திரிகளால் மாகாணத்தின் நிர்வாகம்நடந்து வருகிறது. மற்ற ஆறு மாகாணங்களிலோ என்றால், (அதாவது சென்னை, பீகார், ஒரிஸா, மத்திய மாகாணம், ஐக்கிய மாகாணம், பம்பாய்) புதிய அரசியல் அமுலுக்கு வந்துவிட்டது என்று கருதினாலும், சட்டசபைகளே கவர்னர்களால் கூட்டப்படாமலும், மேற்படி சட்டசபை மெம்பர்களின் ஆதரவு கொஞ்சம்கூட கிடையாது என்று நன்றாகத் தெரிந்தும் 'மந்திரிகள்' என்ற பெயருடன் 'இடைக்கால மந்திரிகள்' நிர்வகித்து வருகிறார்கள்.

இந்த ஆறு மாகாணங்களின் விஸ்தீரணம் சுமார் 509,000 சதுர மைல். ஜனசங்கியை சுமார் $16\frac{1}{2}$ கோடி. அதாவது பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்திலும் ஜனசங்கியையிலும் சுமார் ஐந்தில் மூன்று பங்கு உள்ளது. இந்த ஆறு மாகாணங்களில் நடந்துவரும் அற்புதமான அரசியல் நாடகத்தில் மொத்தம் ஐந்து காட்சிகள்! இரண்டு காட்சிகள் நடந்து இப்பொழுது மூன்றாவது காட்சி நடந்து கொண்டிருக்கிறது. இன்னும் இரண்டு காட்சிகள் நடைபெறவேண்டும்.

முதற்காட்சி சென்ற பிப்ரவரி மாதம் நடைபெற்றது. இந்தியா முழுவதிலும் ஒரு மகாயுத்தம்-தேர்தல் யுத்தம்-நடந்தது. இந்த யுத்தத்தில் பல கட்சிகள் கலந்துகொண்டன. சென்னையுள்பட ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சிக்குப் பெருவாரியான ஜயம் கிடைத்தது. சென்னையுள்பட மூன்று மாகாணங்களில் மற்றக் கட்சிகள் இருந்தவிடம் தெரியாமல் சிதறவடிக்கப்பட்டன. இந்த ஆறு மாகாணங்களிலும் காங்கிரஸ் கட்சிக்கு மெஜாரிட்டி ஸ்தானங்கள் சட்டசபை

யில் கிடைத்தது. தனக்கு யாரும் நிகரில்லை யென்று ஜெயக் கொடி நாட்டியது. இத்துடன் முதற்காட்சி முடிவடைந்தது.

இரண்டாவது காட்சி சென்ற மார்ச் மாதம் கடைசி வாரத்தில் ஆரம்பித்தது. காட்சி ஆரம்பத்தில் 1935ம் வருஷத்து இந்தியா ஆக்டைப் பற்றியும், அதன்மூலம் இந்திய மாகாணங்களில் பொறுப்பாட்சி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றியும், பறையறைந்து இந்தக் காட்சி ஆரம்பித்தது. பொறுப்பாட்சி என்ருல் பொதுஜனங்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் அடைந்திருக்கும் மந்திரிகளின் பொறுப்பில் மாகாணத்தின் சகல விஷயங்களும் நிர்வாகம் செய்யப்பட வேண்டும் என்று பொருள்படும். பொதுஜனங்களின் நம்பிக்கை என்ருல் பொதுஜனங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளில் மெஜாரிட்டியாரின் நம்பிக்கை என்று கொள்ளவேண்டும். மேற்கூறிய ஆறு மாகாணங்களில் காங்கிரஸ் கட்சியே மெஜாரிட்டிக் கட்சியாகையால், அந்த கட்சியிலிருந்து மந்திரிகளைப் பொறுக்கி எடுத்து, அந்தந்த மாகாணத்தின் நிர்வாகத்தை இம்மந்திரிகளிடம் ஒப்புவிக்கவேண்டியதே பொறுப்பாட்சியின் லக்ஷணம். இந்தக் கொள்கையை அனுசரித்து, இந்த ஆறு மாகாணங்களின் கவர்னர்கள், சட்டசபையில் காங்கிரஸ் தலைவர்களைக் கூப்பிட்டு மந்திரி சபை அமைக்கும்படி கேட்டார்கள். இந்தக் கட்டத்தில்தான் தகராறு ஏற்பட ஆரம்பித்தது. காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கவர்னர்களை ஒரு உறுதிமொழி கேட்டார்கள். எழுத்து மூலமான உறுதிமொழி கேட்கவில்லையாயினும் எழுத்து மூலமாக யிருந்தால் எவ்வளவு நாணயமாகக் காப்பாற்றவேண்டுமோ அவ்வளவு நாணயமாகக் காப்பாற்றவேண்டியதும், வாக்குத் தவருத இரண்டு பெரிய மனிதர்களுக்குள் ஏற்படும் ஒப்பந்தத்துக்குச் சமமானதுமான ஒப்பந்தம் என்று உறுதிமொழி கேட்டார்கள். என்ருல் "நாங்கள் மந்திரிகளாக இருக்கும்வரையில் நீங்கள் உங்களுடைய விசேஷாதிகாரங்களையும் விசேஷ பொறுப்புகளையும் உபயோகப்படுத்துகிறதில்லையென்று உறுதிசொல்லுங்கள்" என்று. இதற்குக் கவர்னர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. "நாங்கள் அவ்விதம் உறுதிமொழி கொடுக்க எங்களுக்கு அதிகாரமில்லை. அவசியமான சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி பிரயோகம் செய்வதற்காகவே விசேஷப் பொறுப்புகளும் விசேஷ அதிகாரங்களும் பார்லிமெண்ட் சபையாரால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அதை நாங்கள் எவ்விதம் விட்டுக்கொடுப்பது" என்று கவர்னர்கள் சொன்ஞர்கள். இவ்விதம் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கேட்ட உறுதிமொழியைக் கொடுக்க கவர்னர்கள் மறுக்கவும் மந்திரி சபையை அமைக்கக் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் மறுத்துவிட்டார்கள். இத்துடன் இரண்டாம் காட்சி முடிவடைந்தது.

அடுத்த காட்சியைப்பற்றிச்சொல்லு முன் இரண்டாவது காட்சி சம்பவங்களின் நுட்பத்தைச் சற்று ஆராய்வோம். இந்தியா ஆக்ட், 1935ம் வருஷம் ஆகஸ்டு மாதம் சட்டமாக நிறைவேறியது. இதை ஏற்படுத்துவதற்காகப் பூர்வாங்கமான ஆலோசனைகளும் வட்டமேஜை மகாநாடுகளும், கமிட்டிக் கூட்டங்களும் 1927ம் வருஷம் முதல் நடைபெற்று வந்தன. இந்தப் பூர்வாங்கமான

ஆலோசனைகள் நடந்துகொண்டிருந்த பொழுதெல்லாம் இந்திய மாகாணங்களில் மாண்டேகு செம்ஸ்போர்ட் திருத்தங்கள் மூலம் ஏற்படுத்தப்பட்ட இரட்டையாட்சி என்ற பூரண பொறுப்பற்ற ஆட்சி நடைபெற்று வந்தது. இந்த இரட்டையாட்சியை மாற்றிப் பூரணப் பொறுப்பாட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்படி பூர்வாங்கமான ஆலோசனைகள் நடைபெற்றன. மேற்படி ஆலோசனைகள் நடக்கும் காலத்தில், கானடா முதலிய குடியேற்ற நாடுகளைப்போலவே இந்தியாவுக்கும் பொறுப்பாட்சி என்ற சுய ஆட்சி கொடுக்கவேண்டியது அவசியந்தான் என்று எல்லா பிரிட்டிஷ் ராஜதந்திரிகளும் பார்லிமெண்ட் சபையும் ஒப்புக்கொண்டது. ஆனால் இந்தியர்களுக்குப் பொறுப்பாட்சி அநுபவம் இல்லையென்றும், மந்திரிகளுக்குப் பூராப் பொறுப்பாட்சி உடனே கொடுத்துவிடக்கூடாது என்றும், புதிய அரசியலில் மாகாண சம்பந்தமான பூரா விஷயங்களையும் சாதாரணமாக மந்திரிகளே கவனித்து வந்தாலும், மந்திரிகள் தங்கள் அறியாமையாலும் அனுபவக் குறைவாலும் தவறுதல்கள் செய்யும்பக்ஷத்தில், அவைகளைத் திருத்தும்பொருட்டு சந்தர்ப்பத்துக்கேற்றவாறு கவர்னர்கள் தலையிடுவதற்காக கவர்னர்களுக்கு விசேஷ அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் என்று பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் தீர்மானித்தார்கள். இதையனுசரித்து இந்தியா ஆக்டில் ஒவ்வொரு மாகாணத்தின் கவர்னர்களுக்கும் விசேஷ பொறுப்புகள் எற்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, 'சிறு பான்மைக் கட்சியார்களின் நியாயமான அக்கரைகளைப் பாதுகாத்தல்' எனற விசேஷப் பொறுப்பை எடுத்துக்கொள்வோம். இந்திய கிறிஸ்துவர்கள் நம் மாகாணத்தில் சிறுபான்மைக் கட்சியார்கள். இவர்களுக்கும் மற்ற ஜனங்களைப்போலவே எல்லாச் சுதந்திரங்களும் கொடுக்கவேண்டும். இவர்களுக்கு யாதொரு சுதந்திரமுமில்லையென்றும், இவர்களுக்கு யாதொரு உத்தியோகமும் கொடுக்கக்கூடாது என்றும், இவர்களைச் சர்க்கார் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக்கொள்ளக்கூடாது என்றும், இன்னும் இதுபோன்ற நியாயமற்ற காரியங்களைச் செய்ய மந்திரிகள் தீர்மானித்தால், இவைகளைத் திருத்தவும் ரத்துச் செய்யவும் அதிகாரங்கள் சட்டத்தில் இருக்கவேண்டுமென்பது அனைவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. எந்த மந்திரி சபையாவது, அதிலும் பொதுஜனங்களின் ஆதரவை (மேற்படி சிறுபான்மைக் கட்சியார் உள்பட) நாடும் மந்திரி சபை இந்தகைய முட்டாள்தனமான காரியங்களைச் செய்யுமா, அல்லது இவ்விசேஷாதிகாரங்கள் அவசியமா என்பதைப் பற்றி ஆராய்வது அநாவசியம. விசேஷாதிகாரங்கள் சட்டத்தில் இருக்கின்றன. இந்த விசேஷாதிகாரங்கள் சம்பந்தமாகக்காங்கிரஸ் உறுதிமொழி கேட்டது அவசியந்தானா, அப்படியானால் அந்த உறுதிமொழியை கவர்னர்கள் சட்டப்படி கொடுத்திருக்க முடியுமா என்பதைமட்டும் ஆராய்வோம்.

உறுதிமொழி கேட்டதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். இந்த விசேஷாதிகாரங்கள் எல்லாம் சதா உபயோகிக்கவேண்டிய அவசியமே ஏற்படாதென்றும், கவர்னர்களுக்கும் மந்திரிகளுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் இருவர்களும் கலந்துகொண்டு, சிலசமயம் மந்திரிகளும சில சமயம் கவர்னர்களும் தங்கள் அபிப்

பிராயத்தை விட்டுக் கொடுத்து நிர்வாகம் ஒழுங்காக நடை பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் நாளடைவில் மந்திரிகளின் அனுபவம் அதிகம் ஆக ஆக கவர்னர்கள் தலையிட வேண்டிய அவசியமே ஏற்படாமல் இந்த விசேஷாதிகாரங்களையெல்லாம் மூட்டை கட்டி மூலையில் ஒதுக்கி வைத்து விடவேண்டி நேரிடும் என்றும், குடியேற்ற நாடுகளில் இருக்கும் வழக்கத்தைப் போலவே இந்தியாவிலும் மாகாண சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் மந்திரிகளின் அபிப்பிராயப்படியே கவர்னர் நடக்கவேண்டும் என்ற வழக்கம் அல்லது சம்பிரதாயம் (Convention) ஏற்படும் என்றும், பலதடவைகளில் பல பிரிட்டிஷ் ராஜ தந்திரிகளும், அப்போதைய இந்தியா மந்திரி சர் சாமுவேல் ஹோரும் கூறியிருக்கிறார்கள். கவர்னர்களுக்கும் மந்திரிகளுக்கும் ஆரம்பம் முதலேயே ஒரு ஒப்பந்தம் அல்லது ஏற்பாடு இருக்குமானால் இந்தியாவில் இவ்விதம் சம்பிரதாயம் அல்லது வழக்கம் ஏற்படுவது எளிதாகும். இதுதான் முதற் காரணம். இரண்டாவது காரணம் என்னவென்றால் 'நாங்களோ இந்தப் புதிய அரசியலை வெறுக்கிறோம். இந்தப் புதிய சட்டத்தை முடிவுசெய்ய வேண்டுமென்பதே எங்கள் கொள்கை. இந்த மந்திரி சபைகளை நாங்கள் அமைத்து அதிலிருந்து கொண்டே இந்தச்சட்டத்தை ஒழிக்க நாங்கள் பிரயத்தனப்படுவோம். இதனாலும், இதற்குமுன் சர்க்காருக்கும் எங்களுக்கும் உள்ள பாந்தவ்யத்தை யுத்தேசித்தும் (இரண்டாவது வட்டமேஜை மகாநாடு முடிவடைந்த வுடனேயே இந்தியாவில் பல அவசரச்சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு, பல மாகாணங்களில் பல காங்கிரஸ் ஸ்தாபனங்கள் சட்ட விரோதமானவைகள் என்று தீர்மானிக்கப் பட்டதென்றும் சமீபத்தில்தான் மேற்படி உத்திரவுகள் ரத்து செய்யப்பட்டன என்றும் நேயர்களுக்கு ஞாபகமிருக்கலாம்) நாங்கள் செய்யும் காரியங்களைப்பற்றியெல்லாம் நீங்கள் சந்தேகப்படுவீர்கள்; நாங்களோ, பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மெஜாரிட்டி ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறோம்; எங்களை நம்பி எங்களிடம் மாகாணப் பொறுப்புகளைச் சுமத்தி, மந்திரி சபையை அமைக்கும்படி கேட்டுக் கொள்கிறீர்கள்; அவ்விதம் நாங்கள் மந்திரிசபை அமைக்க வேண்டுமானால் நாங்கள் மந்திரிகளாக இருக்கும் வரை எங்கள் அபிப்பிராயப்படியே நிர்வாகம் நடக்கும் என்றும் விசேஷ அதிகாரங்களைப் பிரயோகிப்பதில்லை என்றும் உறுதிமொழி கொடுங்கள்; நாங்கள் செய்வது உங்களுக்குப் பிடிக்காமல் எங்கள் அபிப்பிராயத்துக்கு மாறாக உங்கள் விசேஷாதிகாரங்களை உபயோகிக்க இஷ்டப் பட்டால் எங்களை மந்திரிவேலையிலிருந்து நீக்கி, உங்கள் இஷ்டப்படி வேறு மந்திரிசபையமைத்துக் காரியங்களை நிர்வாகம் செய்யுங்கள்' என்று காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கவர்னர்களைக் கேட்டார்கள். இதுதான் இரண்டாவது காரணம். இவ்விதம் உறுதி மொழி கொடுப்பதில் சட்டப்படி யாதொரு தடையுமில்லையென்றுதான் பல சட்ட நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். எந்தக் காலத்திலும் எந்தச்சந்தர்ப்பத்திலும் விசேஷாதிகாரங்களைப் பிரயோகிப்பதில்லையென்று உறுதிமொழி கேட்டால் அவ்விதம் கொடுப்பது சட்ட விரோதமாகும். காங்கிரஸ் கேட்பதெல்லாம், தாங்கள் மந்திரிகளாக இருக்கும் வரை விசேஷ அதிகாரங்

களைப் பிரயோகிக்கக் கூடாது என்று கேட்கிருர்கள்.

"பொதுஜனநன்மையையுத்தேசித்துத் தானே ராஜரீகம் நடத்த வேண்டும். நாங்களோ பொதுஜன ஆதரவுடன் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறோம். எங்களை நம்பித்தானே மந்திரி சபையை அமைக்கும்படி கேட்கிறீர்கள். அப்படியானுல் எங்களைப் பூராவும் நம்புங்கள். எங்கள் அபிப்பிராயத்துக்கு மாருக நடக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால் எங்களை நீக்கிவிட்டு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்" என்று காங்கிரஸ் தலைவர்கள் கேட்கிருர்கள்.

இதில் சட்ட விரோதம் யாதொன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்பால் பார்லிமெண்ட் சபையில் இந்தியா மந்திரி ஜெட்லெண்ட் பிரபுவும் உதவி இந்தியா மந்திரி ஸ்ரீ பட்லர் அவர்களும் கிட்டத்தட்ட காங்கிரஸ் கேட்கும் உறுதி மொழியைக் கொடுத்திருக்கிருர்கள். அதாவது 'சாதாரணமாக, மந்திரிகளின் நிர்வாகத்தில் கவர்னர்கள் தலையிடப்போவதில்லை; மாகாண சம்பந்தமான பூரா விஷயங்களிலும் மந்திரிகளே சர்வாதிகாரம் செலுத்தலாம்; மந்திரிகளுக்கும் கவர்னர்களுக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் இருவர்களும் கலந்து ஒரு சமரஸத்துக்கு வரமுயற்சிப்பார்களேயொழிய திடுதிப்பென்று விசேஷாதிகாரங்களைப் பிரயோகிக்க மாட்டார்கள். அவ்விதம் சமரசம் அடைய முடியாவிட்டால் மந்திரிகளை நீக்கி விட்டுத்தான், அல்லது மந்திரிகளை ராஜிநாமா செய்யும்படி சொல்லி விட்டுத்தான், விசேஷாதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்ற ஏற்பாடு முன்னுடியே ஏன் செய்து கொள்ள வேண்டும்? பெரிய விஷயங்கள் சம்பந்தமாக அபிப்பிராய பேதம் ஏற்பட்டால், மந்திரிகள் வேலையை ராஜிநாமா செய்யலாம், அல்லது அவர்களை வேலையிலிருந்து நீக்கலாம். சின்ன விஷயங்களில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் மந்திரிகள் ராஜிநாமா செய்யாமலேயே மற்ற விஷயங்களை ஏன் நிர்வகிக்கக் கூடாது? இஷ்டமில்லாவிட்டால் மந்திரிகள் ராஜிநாமா செய்து விடலாம். ஆகையால் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்ள மந்திரிகளுக்கும் கவர்னர்களுக்கும் சுதந்திரம் இருக்க வேண்டும்' என்று பிரிட்டிஷ் சர்க்கார் சொல்லுகிருர்கள்.

ஆகையால் இப்போது ஒரு சிறு அம்சத்தில்தான் தகராறு இருக்கிறது. 'எங்களை வேலையை விட்டு நீக்கி, அல்லது எங்களை ராஜிநாமா செய்யும்படி சொல்லி, அதன் பிறகுதான் உங்கள் விசேஷாதிகாரங்களைப் பிரயோகிக்க வேண்டும்' என்று காங்கிரஸ் கூறுகிறது. 'அப்படி நிச்சயமாய் ஒன்றும் சொல்ல முடியாது. உங்களை நீக்கிவிட்டுப் பிறகு விசேஷாதிகாரங்களைப் பிரயோகிப்போம். அல்லது நீக்காமலேயே பிரயோகிக்க வேண்டிய அவசியம் இருந்தால் பிரயோகிப்போம். நீங்கள் வேண்டுமானுல் ராஜிநாமா செய்யுங்கள்' என்று கவர்னர்கள் சொல்லுகிருர்கள்.

மந்திரிகள் தாங்களாகவே ராஜிநாமா செய்வதற்கும், கவர்னர் அவர்களை ராஜிநாமா செய்யும்படி சொல்லுவதற்கும் வித்தியாசம் இருப்பதாகப் பாமர ஜனங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். ஆனுல் வித்தியாசம் இருக்கிறது. ஒரு பெரிய அல்லது முக்கியமான விஷயத்தில் தகராறு ஏற்பட்டால் அது சமரசமாக முடிந்தாலொழிய மானமுள்ள மந்திரிகள்

வேலை பார்க்க முடியாது. இந்தச் சந்தர்ப்பங்களில் இவர்கள் தாங்களாகவே ராஜிநாமா செய்வதும் கவர்னர் இவர்களை வேலையிலிருந்து நீக்குவதும் ஒன்றுதான். ஆனால் சிறிய விஷயங்களில்தான் இந்த வித்தியாசத்தின் நுட்பம் புலப்படும். ஒரு சிறிய விஷயம் சம்பந்தமாக மந்திரிகளுக்கும் கவர்னருக்கும் வித்தியாசம் ஏற்பட்டு, மந்திரிகளை நீக்குவது அல்லது ராஜிநாமா செய்யும்படி சொல்வது என்ற பொறுப்பு கவர்னரிடம் இருக்கும் பட்சத்தில், கவர்னர் அவ்விதம் செய்யு முன் ஐம்பது தடவை யோசனை செய்வார். "என்ன, இந்தச் சின்ன விஷயத்துக்காகவா இவர்களை வேலையிலிருந்து நீக்குவது? இவர்கள் அபிப்பிராயப்படி நடந்தால் அப்படி என்ன பிரமாதமான காரியம் கெட்டுப் போகப் போகிறது? அவர்கள் இஷ்டப் படிதான் நடந்து பார்ப்போமே" என்று கவர்னர் தமக்குள் ஆலோசனை செய்து மந்திரிகளின் அபிப்பிராயத்தை அனுசரிப்பார். இதனால் பொறுப்பாட்சி ஸ்திரப்பட்டு, சாதாரணமாக எல்லா விஷயங்களிலும் மந்திரிகளின் அபிப்பிராயத்தை அனுசரித்தே கவர்னர் நடக்க வேண்டுமென்ற சம்பிரதாயம் எங்கும் அமுலுக்கு வரும். இவ்விதமில்லாமல், ராஜிநாமா செய்வதா அல்லவா என்ற பொறுப்பு மந்திரிகளிடம் இருக்கும் பட்சத்தில் மந்திரிகள் "என்ன, இந்தச் சின்ன விஷயத்துக்காகவா நாம் ராஜிநாமா செய்வது? இதனால் என்ன மோசம் வந்து விடப் போகிறது? கவர்னருடைய அபிப்பிராயத்துக்கு நாம் இணங்கவில்லை யென்பதை நாமோ பொது ஜனங்களுக்குத் தெரிவித்து விட்டோம். இந்த விஷயத்தில் நம் பொறுப்பு நீங்கி விட்டது. இன்னும் எவ்வளவோ நன்மையான விஷயங்களைச் செய்து முடிக்க நமக்குச் சந்தர்ப்பம் இருக்க, இந்தச் சின்ன விஷயத்திற்காக நாம் ராஜிநாமா செய்வது தேச நன்மைக்குச் சரியல்ல" என்று நினைத்து ராஜிநாமா செய்யாமலிருக்கலாம். இதனால், மந்திரிகளின் பொறுப்பிலிருக்கும் விஷயங்களில் கவர்னர்கள் தலையிடுவதும், அதை மந்திரிகள் பொறுத்துக் கொள்வதும் சகஜமாகிவிடும. பொறுப்பாட்சியின் மூலாதாரக் கொள்கையே கெட்டுப்போய்விடும். மேலே சொல்லிய சம்பிரதாயம் இந்தியாவில் ஏற்படுவது மிகவும் கஷ்டமாகிவிடும்.

இந்த வித்தியாசத்தைத் தீர்க்க இரண்டே இரண்டு வழியுண்டு. ஒன்று கவர்னர்கள் மேலே கண்டபடி உறுதி மொழி கொடுப்பது. மற்றொன்று, யாதொரு உறுதி மொழியும் கேட்காமல், காங்கிரஸ் மந்திரி சபையை அமைத்து, கவர்னர்களுக்கும் மந்திரிகளுக்கும் தகராறு ஏற்பட்டால், அது சின்ன விஷயமானாலும் சரி, பெரிய விஷயமானாலும் சரி, உடனே ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சங்கற்பம் செய்து கொள்ள வேண்டும். இந்த இரண்டில் ஒரு வழியைக் கைப்பற்றினால், மேலே கூறிய அரசியல் நாடகத்தின் ஐந்தாவது காட்சி சுபகரமாகவே முடியும். இல்லாவிட்டால் இந்தியாவில் ஜனநாயக ஆட்சிமுறை இல்லாமல் போனாலும் போய்விடும்.

இனி நாம் மூன்று முதல் ஐந்து வரை காட்சிகளைக் கவனிப்போம். இரண்டாம் காட்சி முடிவடைந்தவுடன், அதாவது மந்திரி சபையை அமைக்கக் காங்கிரஸ் மறுத்தவுடன் மூன்றாவது காட்சி அதாவது 'இடை

க்கால' மந்திரிகளின் நடனக்காட்சி ஆரம்பித்தது. அந்தக்காட்சி இன்னும் நடந்து கொண்டே யிருக்கிறது. 'இடைக்கால' மந்திரிசபை அமைக்கச் சட்டப்படி கவர்னர்களுக்கு பாத்தியமிருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றிச் சட்ட நிபுணர்களுக்குள் அபிப்பிராய பேதம் இருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்ட் ஆக்ட்படி கவர்னர் தன் இஷ்டப்படி மந்திரிகளை நியமிக்கலாம். அவர்கள் சட்டசபை மெம்பர்களாகக் கூட இருக்க வேண்டாம். ஆறுமாதத்திற்குள் சட்டசபை மெம்பராக ஆகாவிட்டால் மட்டும் அவர்கள் தங்கள் வேலையைக் காலி செய்யவேண்டும். ஆனால் ஒவ்வொரு கவர்னருக்கும் நமது மன்னர் அவர்கள், ஒரு ஆக்ஞா சாசனம் கொடுத்திருக்கிறார்கள். இதில் மந்திரி சபைகளை அமைக்கும் விதத்தைப்பற்றிச்சொல்லப்பட்டிருக்கிறது. சட்டசபையில் மெஜாரட்டி கட்சியின் தலைவரைக் கலந்துகொண்டு மந்திரி சபை அமைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறது. மேலும், சட்டசபையின் ஆதரவு பெற்றவர்களே மந்திரிகளாக இருக்க வேண்டுமென்பது பொறுப்பாட்சியின் லக்ஷணம். 'இடைக்கால' மந்திரிகளுக்கு இவ்வித ஆதரவு இல்லையாதலால் இவ்வித 'இடைக்கால' மந்திரி சபையமைத்தது சட்டவிரோதமில்லாவிட்டாலும் பொறுப்பாட்சியின் கொள்கைக்கு விரோதம். இடைக்கால மந்திரிகள் சம்பந்தமாகக் கவர்னர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் "இந்த மந்திரிகளுக்குச் சட்டசபை ஆதரவில்லையென்பது தெரியும். சட்டசபையைக் கூட்டினால் இவர்கள் உடனே விலகவேண்டிவரும் என்றும் தெரியும். பிறகு மறுபடியும் உங்களைத்தான் மந்திரி சபை யமைக்கும் படி சொல்வோம். அப்போது நீங்கள் அவசரமாக ஒன்றும் சொல்லிவிடக்கூடாது. எல்லாவற்றையும் தீர யோசித்தே முடிவுக்கு வரவேண்டும். அதற்குப் போதுமான அவகாசம் கொடுக்க வேண்டுமென்றே சட்டசபையைக் கூட்டவில்லை. சட்டசபையைக் கூட்ட எங்களுக்குச் சட்டப்படி ஆறு மாதம் அவகாசம் இருக்கிறது. அதுவரை எங்களுக்கு ஒத்தாசைக்காக நிர்வாக உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதற்குப் பதிலாக 'இடைக்கால' மந்திரிகள் என்று சிலரை நியமித்திருக்கிறோம். ஆறு மாதகாலத்துக்கு நாங்கள் இஷ்டப்பட்டவர்களை 'மந்திரிகள்' என்ற பதத்தை உபயோகப்படுத்த பாத்தியமுள்ளவர்களாக நியமிக்க எங்களுக்கு சட்டப்படி அதிகாரமிருக்கிறது. அவ்விதம் செய்திருக்கிறோம். நாங்கள் சட்டசபையைக்கூட்ட வேண்டிய காலத்திற்குள் உங்களுக்குப் பொது ஜனங்களிடம் உள்ள செல்வாக்கும் குறையலாம். அப்பொழுது வேறு கட்சிகள் சேர்ந்து சட்டசபையின் ஆதரவைப் பெறலாம். எல்லாம் ஆர அமர்ந்து பார்ப்போமே. என்ன அவசரம்" என்று சொல்லுகிறார்கள்.

இந்த மூன்றும் காட்சி செப்டம்பர் மாதத்திற்குள் முடிந்தே தீரும். நான்காம் காட்சி சட்டசபைகளில் நடக்கும். 'இடைக்கால' மந்திரிகளின் மீது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் நிறைவேறி அவர்கள் ராஜிநாமாசெய்து, மறுபடியும் காங்கிரஸ் தலைவரைக் கூப்பிட்டு மந்திரிசபை அமைக்கும்படி கவர்னர்கள் கேட்பது நிச்சயம். ஏற்கனவே நாம் கூறியபடி உறுதிமொழி யில்லாமலோ, அல்லது உறுதிமொழி கொடுத்த பின்னரோ மந்திரி சபையை அமைக்கக்

காங்கிரஸ் ஒப்புக்கொண்டால் ஐந்தாம் காட்சியில் காங்கிரஸ் ராஜரீகத்தை நாம் காணலாம். அன்றேல், இந்த ஆறு மாகாணங்களில் புதிய அரசியல் திட்டம் அமுலுக்கு வராமல், யாதொரு பொறுப்பாட்சியு மில்லாமல் பிரிட்டிஷ் சர்க்காரின் நிர்வாக உத்தியோகஸ்தர்களின் நிர்வாகக் காட்சி நடைபெறும்.

ஐந்தாம் காட்சி எவ்விதம அமையப் போகிறது என்று நிச்சயமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. சுபகரமாகவே முடிய வேண்டும் என்று நாம் கடவுளை பிரார்த்திப்பதுடன் பிரிட்டிஷ் சர்க்காரையும் காங்கிரஸையும் ஒரு வார்த்தை கேட்போம்:—

"பிரிட்டிஷ் சர்க்கார் அவர்களே, உங்களுடைய வலிமையையும் பராக்கிரமத்தையும் அனைவரும் நன்கு உணர்வார்கள். காங்கிரஸ் கேட்கும் உறுதி மொழி கொடுத்தால் அது சட்ட விரோதமு மாகாது; உங்களுடைய பலத்துக்கு யாதொரு குறைவும் வராது. ஜனநாயக ஆட்சி எங்கள் பிரிட்டனில்தான் சிறப்பாக நடந்து வருகிறது. ஜனநாயக ஆட்சி முறையில் எங்களை விடச்சிறந்தவர்கள் ஒருவரும் இல்லை யென்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே, அந்த ஆட்சி முறையை இந்தியாவில் ஏன் நடத்திக் காட்டக்கூடாது?"

"அகில இந்தியகாங்கிரஸ் சபையே, இந்தியர்களில் பெரும்பான்மை யோர் உன்னை ஆதரிக்கும் வரையில் உனக்கு என்னகெடுதி சம்பவிக்கப் போகிறது? 'ஜனங்களுடைய குரல் கடவுளுடைய குரல்' (Vox Populi Vox Dei) என்னும் பழமொழி வாஸ்தவமானல், உன்னுடைய குரல் கடவுளுடைய குரல். கடவுளுடைய குரலை அல்லது வார்த்தையை எந்த சர்க்கார், அவர்கள் எவ்வளவு பலசாலிகளானுலும் சரி, தைரியமாக நிராகரிப்பார்கள்? கவர்னர்கள் உறுதிமொழி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் நிர்ப்பயமாக மந்திரி சபையை அமைத்துப் பொதுஜன நன்மைக்காக உனக்கு யுக்தமாகத் தோன்றும் காரியங்களை நீ ஏன் செய்யக்கூடாது?"

தனக்காக வாழ்வது வாழ்வே ஆகமாட்டாது. பிறருடைய சந்தோஷத்திற்காகக் கஷ்டப்படுகிறவன்தான் உண்மை வாழ்க்கையை நடத்துகிறவன்.

ஃ ஃ ஃ

தியாகமும் வெற்றியும் இரண்டு தேவதூதர்கள்போல. இவர்கள், வருங்கால வாழ்வின் மீது தங்கள் சிறகுகளைப் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

ஃ ஃ ஃ

மனிதர்களுடைய நாவுகளை சங்கிலியால் ஒன்று சேர்த்துக்கட்டிவிடலாம். ஆனல் அவர்களுடைய இருதயத்தைக்கட்ட முடியுமோ?

ஃ ஃ ஃ

உறங்கிக் கொண்டிருந்தேன். கனவுவந்தது. வாழ்க்கை மிக அழகுள்ளது என்று கூறியது. விழித்தேன். பார்த்தேன். வாழ்க்கை, ஒரு கடமை என்று உணர்ந்தேன்.

ஃ ஃ ஃ

அதிக அறிவானது, சில சமயங்களில் வாழ்க்கையில் ஒரு பாரமாகி விடுகிறது. ஏனென்றால். எதற்கெடுத்தாலும் தர்க்கம் செய்ய ஆரம்பித்து விட்டால், காரியத்தைச் செய்ய எப்படி முடியும்?

காங்கிரஸ் மந்திரி சபைகளின் சூத்ரதாரிகள்

பாபு ராஜேந்திர பிரசாத்

பிறந்தது டிஸம்பர் 1884. இவர் எம். ஏ. எம். எல். கல்கத்தா சர்வ கலா சாலையில் எல்லாவகுப்புகளிலும் முதன்மையாகத் தேறியவர். இரட்டை எம்.ஏ. எம்.எல். பரீட்சையிலும் முதலாவதாகத் தேறினார். கல்கத்தாவிலும், பாட்னாவிலும் வக்கீல் தொழில் நடத்தி புகழும் பணமும் சம்பாதித்தார். சாம்பரான் சத்தியாக்கிரகத்தின் போது மகாத்மா காந்தியோடு சேர்ந்து கொண்டார். பின்னர் வக்கீல் தொழிலை விடுத்ததும், சிறை சென்றதும், பீஹார் பூகம்ப நிவாரணத்திற்கு வேலை செய்ததும், 1935ம் வருஷத்துப் பம்பாய் காங்கிரஸில் தலைமை வகித்ததும் அனைவரும் அறிந்த விஷயங்களே.



சர்தார் வல்லபாய் படேல்

இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சையில் தேறியவர். ஆமதாபாத்தில் பிரபல வக்கீலாயிருந்தார். சுக வாழ்க்கையை நடத்தியவர். 1927-28ம் வருஷங்களில், ஆமதாபாத் நகரசபைத் தலைவராக இருந்தார். சத்தியாக்கிரக இயக்கத்தில் சேர்ந்து பல முறை சிறை சென்றிருக்கிறார். 1930ம் வருஷத்து கராச்சி காங்கிரஸின் தலைவர்.

மௌலானா அபுல் கலாம் அஸாத்

அரேபியாவிலுள்ள மெக்காவில் பிறந்தவர். கெய்ரோவில் அல் அஷார் சர்வ கலாசாலையில் படித்துத் தேர்ச்சி பெற்றார். ஐரோப்பிய மகா யுத்தத்திற்கு முன்னர் இந்தியாவுக்கு வந்து, கல்கத்தாவில் 'அல் ஹிலால்' என்ற ஓர் உருது வாரப் பத்திரிகையை ஆரம்பித்து அதில் துருக்கி முதலிய வெளி நாடுகளிலுள்ள முஸ்லீம்களின் பிரச்னைகளைப் பற்றி எழுதிக் கொண்டிருந்தார். அரசாங்கத்தார், இதனைப் பறிமுதல் செய்து விட்டனர். பின்னர் 'அல் பலாக்' என்ற ஒரு பத்திரிகையை ஆரம்பித்தார். இதனால், அரசாங்கத்தார், இவரை அலி சகோதரர்களுடன் காப்பில் வைத்தனர். பின்னர், இவர் காங்கிரஸில் சேர்ந்து காந்தியடிகளின் அஹிம்சா தர்மத்தில் ஈடுபட்டுப் பல முறை சிறை சென்றார்.

சென்னையில்



திரு. புலுசு சாம்பமூர்த்தி
அஸெம்ப்ளி தலைவர்

திருமதி ருக்மணி லட்சுமிபதி
அஸெம்ப்ளி உப-தலைவர்

டாக்டர் யு. ராம ராவ்
மேற் சபைத்தலைவர்

திரு. கே. வேங்கடசாமி நாயுடு
மேற் சபை உப-தலைவர்



திருமதி. விஜய லட்சுமி பண்டிட்
ஐக்கிய மாகாண மந்திரிகளில் ஒருவர்
இவரே இந்தியாவின் முதல் ஸ்திரீ மந்திரி.

சென்னை மந்திரிகள்

திரு. பி. கோபால் ரெட்டி
ஸ்தல ஸ்தாபன மந்திரி

திரு. ச. ராஜகோபாலாச்சாரியார்
பிரதம மந்திரி

திரு. டி. பிரகாசம்
ரெவினியு மந்திரி

திரு. கே. ராமன் மேனன்
நீதி இலாகா மந்திரி

ஜனப் யாகூப் ஹாஸன்
மராமத்திலாகா மந்திரி

திரு. எஸ். ராமநாதன்
விளம்பர இலாகா மந்திரி

திரு. வி. வி. கிரி
தொழில் மந்திரி

காங்கிரஸ் அரசாங்கம்-மந்திரிகள் யாரார்?

சென்னையில்

சி. ராஜகோபாலாச்சாரியார் (பிரதம மந்திரி)
டி. பிரகாசம்
டாக்டர். பி. சுப்பராயன்
டாக்டர். டி. எஸ். எஸ். ராஜன்
வி. வி. கிரி
எஸ். ராமநாதன்
பி. கோபால ரெட்டி
யாகூப் ஹாசன்
வி. ஐ. முனிசாமி பிள்ளை
கே. ராமன் மேனன்

மத்திய மாகாணத்தில்

டாக்டர் காரே (பிரதம மந்திரி)
ரவி சங்கர் சுக்லா
துர்க்கா சங்கர மேதா
துவாரகா பிரசாத் மிசிரா
பி. பி. கோலே
ஆர். எம். தேசமுகர்
முகம்மது யூசுப் ஷரீப்

பீஹார் மாகாணத்தில்

ஸ்ரீ கிருஷ்ண சின்ஹா (பிரதம மந்திரி)
அநுக்ரஹ நாராயண சின்ஹா
டாக்டர் சையத் முகம்மது
ஜகலால் சௌதரி.

ஐக்கிய மாகாணத்தில்

பண்டித கோவிந்த வல்லப பந்த் (பிரதம மந்திரி)
ரபி அகமத் கித்வாய்
டாக்டர் கைலாஸ நாத் காட்ஜு
ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்

ஒரிஸா மாகாணத்தில்

விசுவநாத தாஸ் (பிரதம மந்திரி)
நித்தியானந்த கானுங்கோ
போத்ராம் த்யுபே

பம்பாய் மாகாணத்தில்

பி. ஜி. கேர் (பிரதம மந்திரி)
ஏ. பி. லாத்தே
டாக்டர் எம் டி. கில்டர்
கே. எம். முன்ஷி
எம். ஆர். தேசாய்
எல். எம். படேய்ல்
என். வி. நூரி

காங்கிரஸ் பார்லிமெண்டரி சப் கமிட்டி.

பம்பாய், சென்னை, மத்திய மாகாணம், சிந்து ஆகிய மாகாணங்களுக்கு—**சர்தார் வல்லபாய் படேல்.**

வங்காளம், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், வடமேற்கு மாகாணங்களுக்கு—**மௌலானா அபுல் கலாம் அஸாத்.**

பீஹார், ஒரிஸா, அஸ்ஸாம் மாகாணங்களுக்கு—**பாபு ராஜேந்திர பிரசாத்.**

நமது மந்திரிகளைப்பற்றி—

ஸ்ரீசக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

இவர் 1879ம் வருஷம் பிறந்தவர். இப்பொழுது வயது 58 ஆகிறது. பெங்களூர் சென்டிரல் காலேஜில் படித்து பி. ஏ. பட்டம் பெற்றார். சென்னை சட்டக் கல்லூரியில் படித்து பி. எல். ஆனார். 1900ம் வருஷத்திலிருந்து சேலத்தில் வக்கீல் தொழிலை நடத்தினார். நல்ல வருமானம் வந்தது. முக்கியமாக கிரிமினல் வழக்குகள் நடத்துவதில் மகா நிபுணர். 1917ம் வருஷத்திலிருந்து 1919ம் வருஷம் வரை, சேலம் நகர சபைத் தலைவராயிருந்தார். அக் காலத்தில் அரசாங்கத்தார் இவருடைய நிருவாகத்தைப் பெரிதும் புகழ்ந்து பேசியிருக்கின்றனர். 1920ம் வருஷம் ஒத்துழையா இயக்கம் தொடங்கப் பட்டபோது, வக்கீல் தொழிலை விட்டார். 1921ம் வருஷம் சிறை சென்றார். அப்பொழுதுதான் சோக்ரதரைப்பற்றி வேலூர் சிறையில் ஒரு நூல் எழுதி வெளியிட்டது. சி. ஆர். தாஸ் தலைமையில் சுயராஜ்யக் கட்சி தோன்றியபோது அதனை எதிர்த்துப் போராடிய மாறுதல் வேண்டாக் கட்சித் தலைவராயிருந்தார். உப்புச் சத்தியாக்கிரகத்தின் போது தமிழ் நாட்டுத் தொண்டர் படைக்குத் தலைமை பூண்டு வேதாரணியத்திற்கு இவர் சென்ற காட்சியை யார்தான் மறக்க முடியும்? 1930, 32, 33ம் வருஷங்களிலும் சிறை சென்றார். திருச்செங்கோட்டில் காந்தி ஆசிரமத்தை ஸ்தாபித்து கிராம புனருத்தாரண வேலையில் ஈடுபட்டிருந்தார். 'சோட்டா காந்தி' (சின்னகாந்தி)என்று இவரைச் சொல்வதுண்டு. தமிழ் இலக்கியத்தில் ஒரு புதுநடையை உண்டுபண்ணியவர். பேச்சில், வேடிக்கையாகவும் அம்பு தைப்பதுபோலவும் பேசுவார். காந்தியடிகள் சிறையிலிருந்த காலத்தில் 'யங் இந்தியா' பத்திரிகைக்கு இவர் ஆசிரியராக இருந்து நடத்தியது நண்பர்களுக்கு நினைவிருக்கும்.

பொக்கிஷம், போலீஸ், ஹோம் ஆகிய இலாகாக்கள் இவர் நிருவாகத்திலிருக்கும்.

ஜனுப் யாகூப் ஹஸன்

பிறந்தது 1875ம் வருஷம். அலிகார் முஸ்லீம் காலேஜில் படித்தவர். 1893ம் வருஷம் பெங்களூரில் வியாபாரம் ஆரம்பித்தார். பின்னர் 1901ம் வருஷம் சென்னை வந்துசேர்ந்தார். 1916ம் வருஷம் முதல் 1920ம் வருஷம் வரையில், சென்னையில், நகர சபை, சட்டசபை, சர்வ கலாசாலை ஆகிய ஸ்தாபனங்களில் அங்கத்தினராயிருந்தார். 1912ம் வருஷத்திலும் 1919ம் வருஷத்திலும் ஐரோப்பா முழுவதிலும் சுற்றுப்பிரயாணம் செய்திருக்கிறார். அரசியல் காரணமாகச் சிறை சென்றவர். முஸ்லீம் லீக் ஸ்தாபகருள் ஒருவர்.

மராமத்திலாகா மந்திரி.

டாக்டர் சுப்பராயன்

• சேலம் ஜில்லாவிலுள்ள குமாரமங்கலம் ஜமீன்தார். 1889ம் வருஷம் பிறந்தவர். இங்கிலாந்திலும் சென்று படித்தவர். இரட்டையாட்சி ஏற்பட்ட காலத்தில், சட்டசபைக் காரியதரிசியாக இருந்தார். 1926—30ம் வருஷங்களில் மந்திரியாக இருந்தவர். அகில இந்திய காங்கிரஸ்

கமிட்டி அங்கத்தினராகக்கூட சில காலம் இருந்தார். ஒரு சமயம் இவருக்கு 'கதர் மந்திரி' என்று பெயர் இருந்தது. சில சமயங்களில் கட்சி விட்டு மாறி யிருந்தாலும் தேசீய நோக்கமுடையவர்.

இப்பொழுது கல்வி மந்திரி.

ஸ்ரீ டி. பிரகாசம்

சென்னையில் பிரபல வக்கீலா யிருந்து நல்ல சம்பாத்தியம் சம்பாதித்தவர். வயது சுமார் அறுபது இருக்கும். ஒரு காலத்தில் மேனாட்டு நாகரிகத்தில் அதிக பற்றுக்கொண்டிருந்தார். ஒத்துழையா இயக்ககாலத்தில் வக்கீல் தொழிலை விடுத்தார். 'ஸ்வராஜ்யா' பத்திரிகையை ஆரம்பித்து பல கஷ்ட நஷ்டங்களை அடைந்தவர். 1925-ம் வருஷத்திலிருந்து 1928-ம் வருஷம் வரை இந்தியா சட்டசபை அங்கத்தினராக இருந்திருக்கிறார். 1930-ம் வருஷம் உப்பு சத்தியாக்கிரகம் தொடங்கப்பெற்றபோது, சென்னை நகரத்தில் முதன்முதலாகத் தொண்டர்களைத் திரட்டிக்கொண்டு கடற்கரைக்குச் சென்றது இவர்தான். ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகச் சில வருஷங்கள் இருந்திருக்கிறார். இரண்டு முறை சிறை சென்றிருக்கிறார்.

தற்போது ரெவினியு மந்திரி.

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்

இவரை 'சௌந்தரம்' என்று காலஞ் சென்ற வ. வெ. ஸு ஐயர் அழைப்பார். இவருடைய முழுப் பெயர் தி. சே. சௌந்தர ராஜ ஐயங்கார். இவர் சிலகாலம் ரங்கூனில் டாக்டர் தொழிலை நடத்தினார். பின்னர் இங்கிலாந்துக்குச் சென்று வைத்திய உயர்தரப் படிப்பில் தேர்ச்சி பெற்றார். திருச்சி, மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் 'டாக்டர்' என்ற முறையில் இவருக்குநல்ல புகழுண்டு. காங்கிரஸில் ஈடுபட்டுப் பல அரிய சேவைகளைச் செய்திருக்கிறார். ஒன்றரை வருஷத்திற்கு மேல் சிறைவாசத்தையும் அநுபவித்திருக்கிறார். இந்தியா சட்டசபை அங்கத்தினராயிருந்தார். திருச்சி நகர சபைத்தேர்தல் சம்பந்தமாக இவருக்கும் தமிழ்நாடு காங்கிரஸுக்கும் சென்ற வருஷம் பிணக்கு ஏற்பட்டதும், பின்னர் இவர் தனிஹோதாவில் நின்று தோல்வியடைந்ததும் அனைவருக்கும் நினைவிருக்கும். சுகாதார மந்திரிப்பதவிக்கு எவ்வகையிலும் பொருத்தமுடையவர். ஆனால், மந்திரிச்சபையின் ஜாபிதாவை முதன்முதலாகப் பார்த்தவர்கள், இவருடைய பெயரைக்கண்டு சிறிது ஆச்சரியங் கொண்டார்கள்.

ஸ்ரீ எஸ். ராமநாதன்

மாயவரம் வாசி. ஒரு மிராசுதார். 1897ம் வருஷம் பிறந்தவர். நாற்பது வயது ஆகிறது. ஒத்துழையா இயக்கத்தின் போது வக்கீல் தொழிலை விட்டவர். ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரின் முக்கிய சகாக்களில் ஒருவராயிருந்தார். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாகச் சில வருஷ காலம் இருந்தார். இரண்டு முறை சிறைவாசம் அநுபவித்திருக்கிறார். பின்னர், எக்காரணத்தினாலோ, காங்கிரஸினின்றும் விலகி சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயகருடன் ஐரோப்பா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்தவர். ஆடம்பரமின்றி அதிகமாக வேலை செய்வதில் திறமையுள்ளவர்.

தற்போது விளம்பர இலாகா மந்திரி.

ஸ்ரீ வி. வி. கிரி

ஒரு பாரிஸ்டர். தொழிலாளர் இயக்கத்தின் தலைவர். 1894ம் வருஷம் பிறந்தவர். சுமார் மூன்று வருஷ காலம் ஐர்லாந்தில் வசித்து, அந்த நாட்டு தேசீய இயக்கம் எவ்வாறு நடைபெறுகின்ற தென்பதை நேரில் கண்டறிந்தவர். தொழிலாளர் தகராறுகள் பலவற்றுள்ளும் தலையிட்டுச் சமரஸம் செய்து வைத்திருக்கிறார். தேசீய இயக்கத்தில் ஈடுபட்டதற்காகச் சிறைவாசமும் அநுபவித்திருக்கிறார். வட்ட மேஜை மகா நாட்டிற்கும், சர்வ தேசத் தொழிலாளர் மகா நாட்டிற்கும் தொழிலாளர் பிரதிநிதியாகச் சென்றிருக்கிறார்.

இவரே இப்பொழுது தொழில் மந்திரி.

ஸ்ரீ வி. ஐ. முனுசாமிப் பிள்ளை

ஹரி ஜனங்களின் பிரதிநிதி. 48 வயதாகிறது. ஏழை மக்களுக்கு நலந்தரும் ஐக்கிய நாணயச் சங்கங்கள், நில அடமான பாங்கிகள் முதலிய பலவற்றை நடத்தி வந்திருக்கிறார். 'ராவ்சாஹிப்' பட்டத்தைத் துறந்தவர். அடக்கமும், ஹரிஜனங்களின் மத்தியில் செல்வாக்கும் உடையவர்.

விவசாய மந்திரி.

ஸ்ரீ கே. ராமன் மேனன்

கேரள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருக்கிறார். 1895ம் வருஷம் பிறந்தவர். நல்ல தியாகி; உழைப்பாளி. ஹரிஜன சேவா சங்கம், ஹிந்தி பிரசார சபை முதலியவைகளில் ஈடுபட்டுத் தொண்டாற்றுகிறவர். சில முறை சிறை சென்றிருக்கிறார்.

நீதி இலாகா மந்திரி.

ஸ்ரீ பி. கோபால் ரெட்டி

நெல்லூர் ஜில்லாவைச் சேர்ந்த ஒரு பிரம்மசாரி. வயது முப்பதுக்குள்ளிருக்கும். விசுவபாரதி கல்லூரியில் படித்ததாகத் தெரிகிறது. சத்தியாக்கிரக இயக்கத்தில் சேர்ந்து தண்டனையடைந்திருக்கிறார். சென்னைச் சட்டசபைத் தலைவராயிருந்த ஸ்ரீ ராமச்சந்திர ரெட்டியைத் தேர்தலில் தோற்கடித்தவர்.

ஸ்தல ஸ்தாபன மந்திரி.

அஸெம்ப்ளி தலைவர்

ஸ்ரீ புலுசு சாம்பமூர்த்தி பி. ஏ. பி. எல்.

ஆந்திர நாட்டின் பிரபல காங்கிரஸ் தலைவர். 1923ம் வருஷம் காக்கிநாடாவில் மௌலானா முகம்மது அலியின் தலைமையில் நடைபெற்ற காங்கிரசுக்குப் பொதுக் காரியதரிசி யாயிருந்தார். பல முறைசிறை சென்றவர். தேசத்திற்கு எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்தவர். காகி நாடா காங்கிரஸின் போது பதினெட்டு வயதுடைய தன் மகன் இறந்ததையும் பொருட்படுத்தாமல் காங்கிரஸ் வேலையில் ஈடுபட்டார்.

அஸெம்ப்ளி உபதலைவர்

ஸ்ரீமதி ருக்மணி லட்சுமிபதி, பி. ஏ.

பிறந்தது 1891: சென்னை ஸ்திரீகள் கிறிஸ்தவக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றார். பாரத ஸ்திரீ மண்டலத்தின் காரியதரிசியா யிருந்தார். 1926-ம் வருஷம் பாரிஸில் நடைபெற்ற சர்வதேச ஸ்திரீகள் மகாநாட்டுக்கு இந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றார். சென்னைச் சர்வகலாசாலை செனெட் அங்கத்தினர். 1930-ம் வருஷம் உப்பு சத்தியாக்கிரகத்தின்போது சிறை சென்றவர். காந்தி—இர்வின் ஒப்பந்தத்தைக் கண்டித்து முதன் முதலாகப் பேசினார். இளைஞர்சங்கத் (Youth League) தின் தலைவியாயிருந்து அரிய தொண்டுகள் ஆற்றிவருகிறார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி நிருவாகத்தில் முக்கிய பங் கெடுத்துக்கொண்டவர்.

நமது நிருபர்களுடன்—

வாசகர்கள், எந்த விஷயத்தைப் பற்றியேனும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அல்லது சந்தேகங்கள் ஏதேனும் இருந்தால், இந்தப் பத்திகளின் மூலம் தெரியப் படுத்திக் கொள்ளலாம்

—*ஆசிரியர்.*

'டொமினியன்'

ஐயா,

இந்தியாவுக்கு இப்போது 'டொமினியன்' சுய ஆட்சி கொடுத்து விட்டதாக ஒரு சிலர் சொல்லிக் கொள்கிறார்களே, அப்படி யென்றால் என்ன? நமது பிரிட்டிஷாருடைய அதிகாரத்தின் கீழ் மொத்தம் எத்தனை 'டொமினியன்கள்' இருக்கின்றன.?

—*ஒரு கிராமவாசி*

'டொமினியன்' என்ற சொல்லுக்கு பூர்ண அதிகாரம் பெற்ற நாடு என்று அர்த்தம் கூறலாம். **1926**ம் வருஷம் கூடிய ஏகாதிபத்திய மகா நாட்டின் போது 'டொமினியன்' களின் அந்த்ஸ்து பின் வருமாறு வியாக்கியானம் செய்யப் பட்டது:— "இந்த டொமினியன்கள் சுய பொறுப்பாட்சி பெற்ற தனித்தனிப் பிரிவுகள். எல்லாம் சம அந்தஸ்துடையவை. தங்கள் உள்நாட்டு விவகாரங்களிலும் வெளிநாட்டு விவகாரங்களிலும் ஒன்றுக்கொன்று எவ்விதத்திலும் தாழ்ந்த அந்தஸ்துடையவை அன்று. ஆனால் பிரிட்டிஷ் அரசரைத் தங்கள் அரசராக ஏற்றுக் கொள்ளும் முறையில் எல்லா 'டொமினியன்'களும் ஒன்று பட்டவை. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அங்கத்தினர்களாக இவை தாமாகவே வந்து சேர்ந்தவை." இந்த வியாக்கியானத்தின் முழு அர்த்தப்படி பார்த்தால் இந்தியா, டொமினியன் இல்லை யென்றுதான் சொல்ல வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் மொத்தம் ஐந்து 'டொமினியன்'கள் இருக்கின்றன. அவை **(1)** கானடா, **(2)** ஆஸ்திரேலியா, **(3)** நியூஜீலந்து, **(4)** தென்னாப்பிரிக்கா யூனியன், **(5)** ஐரிஷ் ப்ரீ ஸ்டேட்.

—*ஆசிரியர்*

ஜவஹரைப் பற்றி

ஐயா,

சமீபத்தில் பண்டித ஜவஹர்லால், பர்மாவில் சுற்றுப் பிரயாணம செய்தாரல்லவா? அவரோடு சில இடங்களுக்கு நானும் போயிருந்தேன். அவருடன் கூட இருந்து அவருடைய பழக்கவழக்கங்களையும் பேச்சு வார்த்தைகளையும் கவனிக்கும்படியான சந்தர்ப்பங்கள் எனக்குப் பல கிடைத்தன. அவரைப்பற்றி எனக்குச் சொல்லியிருந்த நண்பர்கள் பலர், அவர் மகா கோபி என்றும், அவருக்கெதிரே பேசக்கூட முடியாதென்றும் சொல்லி வந்திருக்கிறார்கள். ஆனால் அப்படியொன்றும் எனக்குத் தென்படவில்லையே. அவர் நன்றாகச் சிரிக்கிறாரே; நிறையக் கூட சிரிக்கிறாரே. குழந்தைகளைப் பார்த்தால் அவைகளோடு விளையாடுகிறார். பெண்களைப்பார்த்தால், பரம பக்தியுடன் அவர்களிடத்தில் நடந்து கொள்கிறார். அப்படி இருக்க, ஐரோப்

பாவிலுள்ள சில சர்வாதிகாரிகளைப் போல் அவரைச் சித்திரித்துச் சொல்கிறார்களே! ஏன் அப்படி?

—தலைவரோடு சுற்றிய தொண்டன்

ஏன் அப்படி என்றுதான் நாமும் கேட்கிறோம். பொதுவாகவே, எந்த நாட்டிலும் தலைவர்களாகவோ, பெரிய அதிகாரிகளாகவோ இருக்கிறவர்களைச் சுற்றி இத்தகைய பொய் வதந்திகள் சூழ்ந்து கொள்வது சகஜந்தான். இஃது அவர்களுக்கு ஏற்பட்ட சாபம் போலும். இத்தகைய வதந்திகள் உண்டாகாமலிருக்க 'தொண்டனை'ப் போன்றவர்கள் தொண்டு செய்தல் அவசியம். பண்டித ஜவஹரின் பார்வையைக் கொண்டே, அவர் எத்தகைய சுபாவமுடையவர் என்பது நன்கு தெரியுமே. அவர் பேச்சிலே ஒரு மிடுக்கு. பார்வையிலே, அனைவரையும் வணக்குவிக்கும் சக்தி. நடையிலே கூட என்ன கம்பீரம்! அவருடைய பேச்சு தோரணையைப் பார்த்து, கோபமாகப் பேசுகிறார் என்று கருதுவது தவறு. 'தொண்டன்', ஐரோப்பிய சர்வாதிகாரிகளையும் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர்களும் அவரவர் நாட்டிலே தெய்வம்போல் போற்றப் படுகிறவர்கள். மனித உள்ளம் படைத்தவர்கள். அவர்கள் சொல்லும் செயலும், வெளிநாட்டாருக்குச் சில சமயங்களில் பிடித்தும் இல்லா திருக்கலாம். அதற்கென்ன செய்வது?

—ஆசிரியர்

தமிழ் மகாநாடுகள்

ஐயா,

தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஈரிரண்டு ஆண்டுகளுக்கு முன்னே தமிழர் மகாநாடென்றும், தமிழன்பர் மகாநாடென்றும் இருவித மகாநாடுகள் சென்னையில் கூடிக் கலைந்தன. பல தீர்மானங்கள் நிறைவேறின. அவை என்னவாயிற்று? ஜோதியே! சிறிது சோதித்துப் பார்ப்பாயா?

—தமிழன்

மகாநாடுகளைக் கூட்டியவர்களே, இன்னும் தீர்மானங்களைச் சோதித்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ?

—ஆசிரியர்

தளர்ச்சி வேண்டாம்

ஐயா,

நான் பி. ஏ. கிளாஸ் வாசித்துக் கொண்டிருக்கும்போது ஒத்துழையா இயக்கம் ஆரம்பித்தது. பள்ளிக்கூடத்தை விட்டேன். கள்ளுக்கடை மறியல் செய்தேன். தடியடிகள் பட்டேன். சிறை சென்றேன். என்னுடைய பிதிரார்ஜித சொத்து பதினைந்து வேலி நிலம் இருந்தது. எல்லாம் பிரம்மார்ப்பணம். நான் படித்துக்கொண்டிருந்த காலத்தில், நல்ல அழகு, படிப்பு, பணம் எல்லாம் இருக்கிறதே யென்று நினைத்து, பெரிய இடத்துப் பெண்ணை எனக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். அவர்களும் இப்பொழுது என்னை 'பிழைக்கத் தெரியாத மாப்பிள்ளை' என்று சொல்லி ஏளனமாகப் பேசுகிறார்கள். எங்கு போனாலும் வேலை கிடைக்கவில்லை. என் கீழே எட்டு பண்ணையாட்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது என்னை ஒரு பண்ணையாளாகக்கூடச் சேர்த்துக்கொள்ள மாட்டேனென்கிறார்கள். என்னுடைய தேச பக்திக்கும் தியாகத்திற்கும் இதுதானா பலன்?

—மனமுடைந்த தேசபக்தன்

இத்தகைய மனோ நிலையில் பல சகோதரர்கள் நமது நாட்டில் இருக்கி

ருர்களென்று நாம் அறிவோம். இவர்களுடைய வாழ்க்கைக்குஅஸ்திவாரமாயமைந்த ஆங்கிலப் படிப்புத்தான்இந்த மனத் தளர்ச்சிக்குக் காரணம். கடமையைச் செய்து கொண்டு போ என்று சொன்னால், 'சொல்வது எளிது ; செய்வது அரிது' என்று நம்மையே இவர்கள் திருப்பிக் கொள்ளக் கூடும். மஹாராணு பிரதாபசிங்கன், **25** வருஷ காலம் தேசத்திற்காகப் படாத பாடெல்லாம் பட்டான். அமெரிக்காவைக் கண்டுபிடித்துக்கொடுத்த கொலம்பஸ், ஒரு சமயம், கைவிலங்கிடப்பெற்று அழைத்துவரப்பட்டான். அதுமட்டுமெல்ல. அவன் இறந்துபோன போது,மேற் சட்டை இல்லாமல்,இருக்கக் குடிசைகூட இல்லாமல் இறந்து போனுன். இப்படி உலக சரித்திர சம்பவங்களைக்கொண்டு நாம் மனோ உறுதி கொள்ள வேண்டும். சகோதரரே ? உங்களுடைய தேசபக்தியும் தியாகமும் பலனை எதிர் பார்க்கும் தன்மையிலா அமைந்திருக்கின்றன ?

—*ஆசிரியர்*

குடும்ப வாழ்க்கை

ஐயா,

நான் ஒரு பிர்ம்மசாரி. இப்படியே இருந்துவிடலாமென்றுதான் நினைக்கிறேன். விவாகம் செய்துகொண்டவர்களில் ஒருவராவது சுகப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அப்படியிருக்க, நானும் அந்தச் சிக்கலில், மாட்டிக்கொள்ள விரும்பவில்லை. உங்களுடைய அபிப்பிராயமென்ன ?

—*இருபத்தாறு வயது*

ஆயுள் முழுவதும் பிர்ம்மசாரியாக இருப்பது இயற்கை நியதிக்கு விரோதம் என்பது நமது கருத்து. அப்படியே, குடும்ப வாழ்க்கையி லீடுபட்டவர்கள் எல்லாரும் துன்பத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது அறியாமை. குடும்பச் சிக்கலில் நண்பர் மாட்டிக் கொண்டால்தான், உலகச் சிக்கலிலிருந்து விடுதலை பெற முடியும்; உலகத்திற்குத் தொண்டு செய்யவும் முடியும்.

—*ஆசிரியர்*

உடைச் சீர்திருத்தம்

ஐயா,

நெடுநாளாக எனக்கு ஒரு யோசனை. இதைச் சில பேரிடத்திலே கூட்டச் சொன்னேன். 'அட, பைத்தியமே, இதெல்லாம் நடக்கிற காரியமா ?' என்று பரிகாசச் சிரிப்பு சிரிக்கிறார்கள். ஆனாலும் உங்களுக்கு இதைத் தெரிவிக்கலாமென்று நினைக்கிறேன். அதாவது, இப்பொழுது நாம் அணிந்து கொண்டிருக்கும் உடையே, நம்மை வட நாட்டார் என்றும், தென்னாட்டார் என்றும், இன்னின்ன பகுதியினர் என்றும் பலவிதமாக வித்தியாசப்படுத்திக் காண்பிக்கிறது. இதனால் நமது மனமும் வேறுபடுகிறது. நாமனைவரும் இந்தியர்கள் என்ற ஒற்றுமை உணர்ச்சி உண்டாவதற்கு வழியில்லாமல் போய்விடுகிறது. இதற்காக, இந்தியர்கள் என்று நம்மைத் தெரிவித்துக் கொள்வதற்கு, நாம் எல்லோரும் ஒரே மாதிரியான உடையை அணிந்து கொண்டாலென்ன? எப்படி கதர் அணிவது, ஒருவனுடைய தேசபக்திக்கு அடையாளமாயிருக்கிறதோ அப்படியே, அந்தக்கதர் உடையிலும் ஒரே மாதிரி எல்லாரும் ஏன் தரிக்கக் கூடாது? உங்களுடைய நோக்கத்தைத் தெரிவிக்க முடியுமா ?

—*மு. நாகேசுவரன்*

தமிழ்ப் பிரயோகங்கள்-ஒரு வேண்டுகோள்

—ஆசிரியர், "ஜோதி"

விஞ்ஞான ஆராய்ச்சி அதிகப்பட்டுக்கொண்டு வரும் இந்தக் காலத்தில், நாம் தினந்தோறும் புதிய புதிய எண்ணங்களோடு கலக்கிறோம். புதிய புதிய கருத்துக்களையும் பிரயோகங்களையும் சந்திக்கிறோம். இவற்றை அப்படியே தமிழ் மொழியில் கொண்டு வருவது அவசியமாயிருக்கிறது. இது விஷயத்தில், தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட அனைவரும் ஒற்றுமையான ஒரு முடிவுக்கு விரைவினில் வருதல் அவசியம்.

அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலிய முக்கிய துறைகளில் வழங்கப்பெறும் சொற்கள், தமிழிலே சரியாகக்கொண்டு வரப்படவில்லை. அப்படி கொண்டு வரப்பட்டாலும், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பிரயோகம் செய்துவருகின்றனர். சில சமயங்களில் பல ஆங்கில பதங்களுக்கு ஒரே தமிழ் வார்த்தையைத்தான் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக, Constitution, Act, Law, Statute என்ற ஆங்கில பதங்களனைத்திற்கும் 'சட்டம்' என்ற ஒரே சொல்லைத்தான் உபயோகிக்கிறோம். அப்படியே Dominion என்பதற்கும் Colony என்பதற்கும் 'குடியேற்ற நாடு' என்று தான்சொல்கிறோம். இங்ஙனம் பல உதாரணங்களைக்காட்டலாம். இதனால் பொதுஜனங்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்தச் சிரமத்தினின்று அவர்களை விடுவிப்பது அறிஞர்களுடைய முக்கிய கடமையாயிருக்கிறது.

இது சம்பந்தமாக நாம் ஒருவித முடிவுக்கு வருகிறபோது, தனித் தமிழென்றும், வடமொழிக் கலப்பென்றும் காலத்திற்கேலாத வாதங்களைக் கொண்டு புகுத்த வேண்டாமென்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம். ஜனங்களுக்குப் புரிகிற மாதிரி நாம் பேசவேண்டும்; எழுத வேண்டும். அதுதான் நமது நோக்கமாயிருக்க வேண்டும்.

சுமார் பதினைந்து பதினேழு வருஷங்களுக்கு முன்னர், சேலத்தில் ஸ்ரீமான் ச.இராஜகோபாலாச்சாரியார்

அன்பர் கூறும் யோசனை நல்லதுதான். நாம் சுதந்திரம் பெற்று விட்டோமானால் இந்த யோசனையை விரைவில் நடை முறையில் கோணர்ந்து விடலாம். 'உடையிலே என்ன இருக்கிறது?' என்று அலட்சியமாகப் பேசுவோரை நாம் அப்படியே ஆதரிக்க முடியாது. உடையைக் கொண்டு ஒருவனை மதிப்பிட முடியாதாயினும், அவனுடைய தன்மைகளை எடுத்துக் காட்டவும், அத்தன்மைகளைப் பிறர் அங்கீகரிக்கவும், இந்த உடை ஓரளவு துணை செய்கிறது. இது விஷயத்தில் சில மாற்றங்கள் செய்யவேண்டியது அவசியந்தான். ஆனால், உடையில் ஒற்றுமை ஏற்படுவதற்குமுன், பாஷையில் ஒற்றுமை அவசியம் என்று நாம் கருதுகிறோம். இந்தியர் அனைவரும், பொதுப்பாஷையாக ஒன்றைப் பேசத் தொடங்கி விடுவார்களானால், உடை ஒற்றுமை தானாகவே ஏற்பட்டுவிடும்.

—ஆசிரியர்

முதலிய பெரியோர்கள், சேர்ந்து 'Tamil Scientific Terms Society' என்ற பெயருடன் ஒரு சங்கத்தை ஸ்தாபித்து ஒரு பத்திரிகையும் நடத்தினர். ஆனால் சில மாதங்கள் கழித்து இந்த முயற்சி நின்று விட்டது. தமிழறிஞர் பலர், இதில் போதிய ஊக்கங் காட்டாமையே இதற்குக் காரணமா யிருக்கலாம். இதேமாதிரி வேறுபல முயற்சிகளும் தொடங்கப்பெற்று, இடையில் நின்று விட்டன வென்பதை நாம் அறிவோம்.

இப்பொழுது உலகம் போகிற வேகத்திலே, இது விஷயத்தில் நாம் சீக்கிரமான ஒரு முடிவுக்கு வருவது மிகவும் அவசியமா யிருக்கிறது. இல்லாவிட்டால், நமது அருமையான தாய்ப்பாஷை-இனிய தமிழ்-காலத்திற்கேற்ற கருத்துக்களை-புதிய மனோபாவங்களைத் தெளிவாக எடுத்துக் காட்ட முடியாத ஒரு பாஷையாக வன்றோ இருந்துவிடும்? அப்படி நாம் விட்டுவிடலாமா?

எனவே இதுவிஷயத்தில் 'ஜோதி' தன்னாலான கைங்கர்யத்தைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித் திருக்கிறது. அறிஞர் பலரும், தங்கள் அரிய யோசனைகளை 'ஜோதி' மூலமாகத் தெரிவிக்க வேண்டுகிறோம். ஆரம்பத்தில், நாமே, சில ஆங்கில அரசியல் சொற்களைக்கொடுத்து அவற்றை அப்படியே தமிழிலும் தந்திருக்கிறோம். இவைபோல் பல துறைச் சொற்களையும் அவற்றின் விளக்கங்களையும் அன்பர்கள் தெரிவிப்பார் களாயின், அவற்றை அப்படியே 'ஜோதி' யில் வெளியிடுவோம். கடைசியில் பெரும்பாலான அறிஞர் களுடைய கருத்துப்படி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சொற்றொடரை நிலை நிறுத்தி வழக்கில் கொண்டு வரலாமல்லவா? இது விஷயத்தில் தமிழ்ப் பத்திரிகாசிரியர்களும் நூலாசிரியர்களும் எமக்கு உதவி செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறோம்.

சில அரசியல் வார்த்தைகள்.

Law — லா.
Constitution—
கான்ஸ்டிடியூஷன்.
Constitutional Law—
கான்ஸ்டிடியூஷனல் லா.
Political Constitution—
பொலிடிகல் கான்ஸ்டிடியூஷன்.
Act—ஆக்ட்.
Statute—ஸ்டாச்சூட்.
Statutory provision—
ஸ்டாச்சுடரி ப்ரொவிஷன்.
Dominion—டொமினியன்.
Dominion Status—
டொமினியன் ஸ்டேடஸ்.
Colony—காலனி.
Crown Colony-க்ரௌன் காலனி.
Dependency—டிபெண்டென்ஸி.
Empire—எம்பைர்.
Commonwealth of Nations—
காமன் வெல்த் ஆப் நேஷன்ஸ்.
Mandated Territory—
Protectorate-ப்ரொடெக்டரேட்.
Free state—ப்ரீஸ்டேட்.
State—ஸ்டேட்.
Socialism—ஸோஷலிஸம்.
Communism—கம்யூனிஸம்.
Bolshevism—போல்ஷ்வெஸம்.
Corporate system—
கார்ப்பொரேட் சிஸ்டம்.
Fascism—பாசிஸம்.
Democracy—டெமாக்ரஸி.
Republic—ரிபப்ளிக்.
Federation—பெடரேஷன்.
Feudalism—ப்யூடலிஸம்.
Constituent Assembly—
கான்ஸ்டிடியுவெண்ட் அஸெம்ப்ளி.
Plebescite—ப்ளெபிஸைட்.

போய் விட்டார்களே பாவம்!

ஜான் டி. ராக்பெல்லர்



பிறந்தது-8-7-1839 இறந்தது-23-5-1937

உலகத்துப்பெரியபணக்காரன் தான். ஆனாலும்-? யமன் விடுகிறானா? என்னென்னமோ புதிய புதிய ஆராய்ச்சிகளெல்லாம் செய்கிறார்கள். பணக்காரர்களை மட்டுமாவது உயிர் போகாமல் காப்பாற்ற ஒரு விஞ்ஞான சாஸ்திரிக்காவது தெரிய வில்லையே. ஏழைகள் வயிற்றுக் கில்லாமலோ, பிழைக்க வழி தெரியாமலோ, சந்தோஷமாக இறந்து விடுகிறார்கள். பணக்காரர்கள் ஏன் சாக வேண்டும்? அவர்களால் எத்தனையோ தருமங்கள் நடைபெறுகின்றனவே!

ராக்பெல்லர் உலகத்திலேயுள்ள பெரிய பணக்காரர் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர் எவ்வளவு பெரிய பணக்காரரோ அவ்வளவு மகா தர்மிஷ்டருங் கூட. இவருக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்று எவராலும் நிச்சயமாகச் சொல்ல முடிய வில்லை. ஆனால் தருமத்திற்காக மட்டும் 79 வருஷங்களில் 53 கோடி டாலர் கொடுத்திருக்கிறார் என்று 'நியு யார்க் டைம்ஸ்' பத்திரிகை கூறுகிறது.

ராக் பெல்லர் 1839ம் வருஷம் ஜுலை மாதம் 8ந் தேதி பிறந்தார். ஆரம்பத்தில் ஒரு கம்பெனியில் கணக்குப் பிள்ளையாக இருந்து வேலை பார்த்துக் கொண்டு, கொஞ்சம் பணம் சேகரித்து, ஒரு பெட்ரோல் கம்பெனியில் ஷேர் வாங்கினார். பிறகு, இதில் லாபங் கிடைத்தது. இதுவே பின்னாடி ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியாக விருத்தியாயிற்று. இவர், போட்டா போட்டியிட்டு, பெட்ரோல் வியாபார முழுவதையும் தமது உரிமையாக்கிக் கொண்டார். இவர் கையாண்ட வியாபார தந்திரங்கள், அமெரிக்கப் பொது ஜனங்களுக்குப் பிடிக்கவே யில்லை. ராக் பெல்லரைப் பற்றி அமெரிக்க ஜனங்கள் என்ன அபிப்பிராயங் கொண்டிருக்கிறார்கள் என்பதை நமது நண்பர் ஒருவர் அமெரிக்காவிலிருந்து பின் வருமாறு எழுதுகிறார்:—

"ராக் பெல்லர் அவருடைய தர்மத்திற்காக மட்டுந்தான் பாராட்டப் படுகிறார். தொழில் முறையில் அவர் செய்த 'மோசங்கள்' எண்ணிலவாம். அமெரிக்க இளைஞருலகம் அவரை மதிக்க வில்லை. அவர் தர்மத்தின் பயனைப் பெரும்பாலும் அநுபவிப்பது அமெரிக்க இளைஞர்கள்."

மார்க்கோனி

பிறந்தது-1874. இறந்தது-20-7-1937.

கம்பி யில்லாமல் தந்திச் செய்திகளை அனுப்பமுடியும் என்று சொல்கிறார்களே, அதை முதன் முதலில் யார் கண்டு பிடித்தது தெரியுமா? ஓர் இத்தலிக்காரர். மார்க்கோனி என்பது இவருடைய பெயர். இவர் ஆதியில் நிரம்ப சிரமப்பட்டார். இத்தலியில் பிரபல சர்வகலாசாலையாகிய போலோக்னா சர்வகலாசாலையில் இவர் படித்துப் பட்டம் பெற்றார். விஞ்ஞான சாஸ்திரத்தில் நிரம்ப ஆசையுடையவர். எனவே, கம்பியில்லாமலே தந்திச் செய்திகளை அனுப்ப முடியுமா என்று பல பரிசோதனைகளை நடத்திப் பார்த்தார். இந்தப் பரிசோதனை காலங்களில் இவர் காட்டின பொறுமை இருக்கிறதே, அடேயப்பா, அற்புதம். புதிதான ஒன்றை நாம் சுலபமாக அநுபவித்து இன்பமடைகிறோம். ஆனால் ஆரம்பத்தில், அதனைக்கண்டு பிடித்தவர் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டுமென்பதைப் பற்றி நாம் சிறிதுகூட சிந்திப்பதேயில்லை.

ராக்பெல்லருடைய சந்ததியார் மொத்தம் 38-பேர் இப்பொழுது இருக்கின்றனர்.

ராக்பெல்லர், தாம் வெற்றியடைந்ததற்குக் காரணமாயிருந்த சில கோட்பாடுகளை அவ்வப்பொழுது கூறி யிருக்கிறார். அவற்றில் சில வருமாறு:-

"நாகரிகத்தின் சின்னங்களாயிருப்பவை எவை? ஒழுக்கமும் மதமுந்தான்."

"சில சமயங்களில், நம்மைப்பற்றிக் கடுமையாகச் சொல்கிறார்கள். அதற்காக நாம் சோர்வு கொண்டுவிடுகிறோம். ஆனால் அப்படி சோர்வு கொள்ளக்கூடாது. எனக்கு மனிதனுடைய சக்தியில் நம்பிக்கையுண்டு. இறுதியில் எல்லாம் நன்மையாக முடியும் என்ற நம்பிக்கை எனக்கு எப்பொழுதும் உண்டு."

"நாணயமாக ஒருவன் எவ்வளவு சம்பாதிக்க முடியுமோ அவ்வளவையும் சம்பாதித்து, அவ்வளவையும் தருமஞ்செய்ய வேண்டும்."

"உன்னால் முடிந்தவரை நன்மையைச்செய்."

"சீக்கிரத்திலே கிழவனாகிவிடாதே. வாழ்க்கையிலே இன்பங்காண்."

"வேலை செய்வதற்கு அஞ்சாதே."

"முயற்சிசெய். தவறு செய்வது மனித சுபாவந்தான். மறுபடியும் தீவிரமாக முயற்சிசெய்து காரியத்தைச் சாதி."

"இந்த உலகத்தில் நமக்குத்துணை செய்வது தன்னம்பிக்கைதான். அதை, வேறெதற்கும் அர்ப்பணம் செய்துவிடாதே."

மார்க்கோனி, இந்தப் பரிசோதனைகளை நடத்திக் கொண்டிருந்த காலத்தில், அரசாங்க உதவியை நாடினர். ஆனால் அப்பொழுதைய இத்தாலிய அரசாங்கம் இவருக்கு எவ்வித ஆதரவையும் அளிக்கவில்லை. எனவே, இவர் இங்கிலாந்துக்குச் சென்று, அங்கே ஏதேனும் ஆதரவு கிடைக்குமாவென்று பார்த்தார். அங்கே, தபால்-தந்தி இலாகாவின் இஞ்சினீராக இருந்த ஸர் வில்லியம் ப்ரீஸ் என்பவர் இவருக்கு நல்ல ஊக்கங் கொடுத்தார். இதன் காரணமாக இவர், தமது பரிசோதனையில் வெற்றி பெற்று, 1899-ம் வருஷத்தில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் கம்பியில்லாத் தந்தித் தொடர்பை ஏற்படுத்தினர். இதன் பிறகு 2100-மைல் தொலைவிலுள்ள அமெரிக்காவுக்கும் நியூபௌண்ட்லாண்டிற்கும் இந்தக் கம்பியில்லாத முறையை ஏற்படுத்தினர். இதற்குப் பிறகு, கானடாவுக்கும் இங்கிலாந்துக்கும் ஆரம்பிக்கப்பட்டது. பின்னரே, கப்பல்கள் முதலான போக்குவரவுசாதனங்களில் இந்தமுறை நிறுவப்பட்டது. 1910-ம வருஷம், இவர், தமது முறையில் சில சீர்திருத்தங்களைச் செய்தார். இவர், 1900-ம் வருஷத்தில் ஸ்தாபித்த 'மார்க்கோனி ஒயர்லெஸ் கம்பெனி' என்ற வியாபாரஸ்தாபனம் 1910-ம் வருஷத்திற்குப் பிறகு அதிக லாபகரத் தொடங்கியது. ஐரோப்பிய மகா யுத்தத்தில், இத்தலியுற் சேர்ந்துகொண்டதல்லவா? அப்பொழுது, இத்தாலிய துருப்புகளின் கம்பியில்லாத் தந்தி ஸ்தாபனத்திற்கு மார்க்கோனி தலைவராயிருந்தார்.

1909-ம் வருஷத்திலேயே இவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. இதற்குப் பிறகு இவருக்குப் பல கௌரவப்பட்டங்கள் வழங்கப் பெற்றன.

மார்க்கோனி, ஆராய்ச்சியோடும் வியாபாரத்தோடும் தமது முயற்சியை வரம்பு கட்டிக் கொண்டாரில்லை. உலக சமாதானத்திற்காக இவர் அரிய பாடுபட்டிருக்கிறார். வார்சேல் சமாதான மகாநாட்டில், இத்தலியின் பிரதிநிதியாகச் சென்று சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டார். அதனுடன் இத்தாலிய பார்லிமெண்டிலும் பல வருஷகாலம் அங்கத்தினராயிருந்திருக்கிறார்.

இவர் இறந்துபோவதற்குப் பத்து நாட்களுக்கு முன்னர், பிரிட்டிஷ் தொழிற் கட்சித்தலைவரான ஜார்ஜ் லான்ஸ்பரி என்பவர் இவரைக் கண்டு பேசிக்கொண்டிருந்தார். இங்கிலாந்துக்கும் இத்தலிக்கும் அடிக்கடி பிணக்குகள் நேரிடுவதைக் குறித்து வருந்திப்பேசினராம். தவிர, தற்போதைய விஞ்ஞான சாஸ்திர ஆராய்ச்சியானது, மக்களை வதைக்கும் முயற்சியிலேயே அதிகமாகச் செலுத்தப்படுகிறதென்றும், இதனல் நாகரிகமே அழிந்து போகலாமென்றும் கூறினராம். இவர் இறக்கும்போது 63-வயது.

மார்க்கோனி, 1905ம் வருஷத்தில், பீட்ரெஸ் ஓ'ப்ரையன் என்பவளைவிவாகஞ் செய்து கொண்டார். ஆனல் இருவரும் குடும்ப வாழ்க்கையை ஒற்றுமையுடன் நடத்த முடியவில்லை. இதனல் 1924ம் வருஷம் விவாகரத்து ஏற்பட்டது. 1925ம் வருஷம் இரண்டாவது முறை, மேரியா கிறிஸ்தினு பெஸ்ஸிஸ்காலி என்பவளைவிவாகம் செய்து கொண்டார். ஒரு பெண் குழந்தை உண்டு.

மார்க்கோனியின் பிரேத ஊர்வலத்துடன் முஸோலினி சென்றதைக் கொண்டு, இவருக்கு, இத்தாலிய சமூகத்தினர் எத்தகைய மதிப்பு வைத்திருந்தனர் என்பது நன்கு புலப்படும்.

துலாக்கோல்

ஜவஹரின் பர்மா விஜயம்

'பர்மியத் தேனீ' திரட்டியது.- வெளியிட்டோர்: ஸ்ரீமான் சி. நாகையா, செட்டியார் பிரஸ், 68 மொகல் வீதி, ரங்கூன். இரண்டாம் பதிப்பு. டபிள் கிரவுன் அளவு 1X16. பக்கங்கள் 135. விலை: ஆறு அணா.

சென்ற மே மாதத்தில் சுமார் பதினைந்து நாட்கள், பர்மாவில் பண்டித ஜவஹர்லால் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஓய்வு கொள்ள வந்தார். ஆனால் அனைவருடைய சோர்வையும் நீக்கினார். அந்தப் பதினைந்து நாட்கள் வரை, ஜனங்களிடத்திலே என்ன பரபரப்பு! ஒவ்வொருவர் முகத்திலேயும் தன்னம்பிக்கை குடிகொண்டிருந்தது.

ஜவஹர் பல இடங்களில் பேசினார். ஒவ்வொரு பேச்சும், புதிய மாதிரியாகவே இருந்தது. எத்தனை தரம் அவர்பேச்சைக் கேட்டாலும் ஆவல் தீராமல் ஒவ்வொரு கூட்டத்திற்கும் ஓடிச்சென்றவர் பலர். பேச்சைக் கேட்பானேன்? அவர் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதாதா வென்று சென்றவரும் உண்டு. ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவருடைய பிரசங்கங்களைச் சரியானபடி பர்மாவில் எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை. இந்தச் சமயத்தில் உவாக்கமாவில் அவர் கூறிய சில வார்த்தைகள் நமது ஞாபகத்துக்கு வருகின்றன:—"உலகத்தோடு சேர்ந்து வாழ வேண்டுமானால் நீங்கள் அன்றாட உலக நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். அங்ஙனம் உலகச் செய்திகளை வெளியிடக் கூடிய பத்திரிகைகள் பாமாவில் அதிகமாகக் காணோம். வெளியுலகத்திலிருந்து துண்டிக்கப்பட்ட நிலைமையிலேயே இந்தப் பத்து நாட்களும் நான் பர்மாவில் இருக்கிறேன்."

ஜவஹர்லால் செய்த பிரசங்கங்கள் அனைத்தையும் தொகுத்து இந்த நூலாக ஸ்ரீமான் சி. நாகையா வெளியிட்டிருக்கிறார். 7-5-37ல் அவர் இரங்கூன் வந்து இறங்கியது முதல், 11-6-37ல் அக்யாப்பில் செய்த பிரசங்கம் வரையில் இந்த நூலில் கூறப்பட்டுள்ளது. பிரசங்கங்களனைத்தையும் கோவையாகத் தொகுத்து வெளியிட ஸ்ரீமான் நாகையா அதிக சிரமம் எடுத்துக் கொண்டிருக்கிறார். இந்த நூலின் முதற் பதிப்பு, வெளியான ஒரு வாரத்திற்குள் செலவழிந்து போனதே இவருடைய சிரமத்தைத் தமிழர்கள் பெரிதும் பாராட்டியிருக்கிறார்கள் என்பது நன்கு தெரிகிறதல்லவா?

இந்நூலில் பொருத்தமான இடங்களில் பல படங்கள் சேர்த்திருப்பது பாராட்டத் தக்கது.

விரைவில் மூன்றாம் பதிப்பு வெளியாகுமென்று எதிர்பார்க்கிறோம்.

இப்படியும் நடக்குமா?

ஆறாவது ஜார்ஜ் மன்னரின் உபயோகத்துக்காக காசி மகாராஜா, ஒரு கூடை மாம்பழத்தை ஆகாய விமானத்தில் 2-7-37ல் அனுப்பினர். இதற்கு பார்சல் செலவு ரூ. 136.

ஃ ஃ ஃ

மேரி அன்டாய்னெட்டே என்ற ஓர் ஆங்கிலேய ஸ்திரீயின் வைரமாலையை தர்பங்கா மகாராஜா பதினையாயிரம் பவுனுக்கு 1-7-37ல் லண்டனில் ஏலம் எடுத்தார்.

ஃ ஃ ஃ

பெய்ஸ்பூரில் கூடிய காங்கிரஸுக்கு மொத்த வரவு ரூ. 114,934; செலவு ரூ. 90,244; அதிக வரவு ரூ. 24,690.

ஃ ஃ ஃ

லாகூரில் 11 போலீஸ் கான்ஸ்டேபில்கள் உத்தியோகத்திற்கு 2,000 பேர் மனுப்போட்டார்கள். இவர்களில் 11 பேர் பொறுக்கி யெடுக்கப்பட்டனர். இதில் ஒருவர் பட்டதாரி.

ஃ ஃ ஃ

நைஜாம் சமஸ்தானத்தில் 13 வருஷங்களுக்கு முன்னே ஒரு சிறுவன், அதே சமஸ்தானத்தில் மற்ஞோர் ஊரிலிருந்த தன் தகப்பனருக்கு ஒரு கடிதம் எழுதினன். அந்தக் கடிதம் தகப்பனருக்குச் சேராமலே மறுபடியும் பையனுக்கே 6-7-37ல் வந்து சேர்ந்தது.

ஃ ஃ ஃ

மகாத்மா காந்தியின் மூத்த மகனை ஸ்ரீ ஹிராலால் காந்தி சொல்கிறார்:—1936ம் வருஷம் நவம்பர் மாதம் நான் இஸ்லாமிய மதத்திலிருந்து மீண்டும் ஹிந்து மதத்திற்குத் திரும்பியவுடன், ஹிந்து சமூக சீர்திருத்தத்திற்காகப் பெரிதும் உழைத்து வருகிறேன். இப்பொழுது லாகூரில் தவத்திலும், ஆராய்ச்சியிலும் ஈடுபட்டிருக்கிறேன்.

பம்பாய் நகர சபை மேயருக்கு இனி, கார்ப்போரேஷன் செலவிலேயே மோட்டார் வண்டியும், டெலிபோன் வசதியும் அளிக்கப்படும்.

ஃ ஃ ஃ

மைசூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த தளபதி கிருஷ்ண அரசு என்பவர், ஐரோப்பிய மகா யுத்தத்தின்போது, பாலஸ்தீனத்தில், துருக்கியப் படைகளுக்கு விரோதமாகச் சண்டை போட்டுக் கொண்டிருந்தார். துருக்கியப் படைகளின் தளபதிகளாக ஜர்மானியர்களும் ஆஸ்திரியர்களும் இருந்தார்கள். ஒரு சமயம் அரசுவின் சமீபத்தில் ஆஸ்திரிய தளபதி ஒருவன் பிணமாகிக் கிடந்தான். அவன் பக்கத்தில் ஒரு சித்திர புஸ்தகம் இருந்தது. அதனை அப்படியே கிருஷ்ண அரசு எடுத்து வந்து, தமது மகாராஜாவுக்குக் காட்டினர். இது யாரோ ஓர் ஓவியனுடைய புத்தகமா யிருக்க வேண்டுமென்று தீர்மானித்தார் மகாராஜா. சென்ற வருஷம் அவர் ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் செய்தாரல்லவா? அப்பொழுது இந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டு போய், ஜெர்மன் ராணுவ காரியாலயத்தில் கொடுத்து, இதன் சொந்தக்காரரைத் தேடிக் கொடுக்க வேண்டுமென்று கூறினர். ஜெர்மன் ராணுவ அதிகாரிகளும், ஆஸ்திரிய ராணுவ அதிகாரிகளும் சுமார் ஒரு வருஷமாக இதனைப்பற்றி விசாரித்து, கடைசியில் ப்ரேக் நகரத்திலுள்ள ராபர்ட் ஹாப்மான் என்பவனுடையது என்று கண்டு பிடித்தார்கள். 23 வருஷங்களுக்குப்பிறகு, சொந்தக்காரனிடம் புத்தகம் போய்ச் சேர்ந்தது மைசூர் மன்னருடைய கருணையால்.

ஃ ஃ ஃ

சைனுவுக்குள்ளேயே உயரமான மனிதன் ஒருவன். அவன் பெயர்

வியு யூகிங். எட்டடி உயரம். சமீபத்தில் இறந்து போனான். இறக்கும் போது தன் மனைவியைக் கூப்பிட்டுச் சொன்னான் :— என்னுடைய சாவுச் சடங்குகளுக்குக் கடன் மட்டும் வாங்காதே.

ஃ ஃ ஃ

இத்தலியின் சர்வாதிகாரி முஸோலினி. இவன் கையெழுத்திடும்போது முஸோலினி என்று முழுப்பெயரையும் போடுவதில்லை. முதலெழுத்தாகிய 'மு' (ஆங்கிலத்தில் எம்) என்ற எழுத்தை மட்டும் எழுதி விடுவான். ஏனென்றால் பூராப் பெயரையும் எழுதி காலத்தை வீணாக்குவானேன் என்பது இவன் கருத்து.

ஃ ஃ ஃ

கவர்ன்மெண்ட் ஹவுஸ் முதலியவைகளுக்குச் செல்ல வேண்டுமானால் உத்தியோக உடையென்று ஒன்றுண்டல்லவா! அதாவது கால்சட்டை போட்டுக்கொள்ள வேண்டும், இன்ன வர்ணத்தில் இன்ன விதமாகப் போட்டுக்கொள்ளவேண்டுமென்று இருந்ததல்லவா? இனி வேஷ்டியும் அங்கவஸ்திரமுந்தான் உத்தியோக உடையாகவும் தர்பார் உடையாகவும் இருக்குமென்று வங்காள மாகாண பிரதம மந்திரி ஜனாப் பஸ்லுல்ஹக் கூறியிருக்கிறார்.

ஃ ஃ ஃ

ஐரோப்பா கண்டத்திலேயுள்ள சர்வாதிகாரிகள், ஏராளமான பொருள் திரட்டி வைத்திருக்கிறார்கள் என்று சில அமெரிக்கப் பத்திரிகைகள் கூறுகின்றன. இவை கூறுவதை அப்படியே நம்பிவிடுவதற்கில்லை. உதாரணமாக, இத்தலி சர்வாதிகாரியான முஸோலினிக்கு வருஷம் 5,200 டாலர்தான் சம்பளமாம். ஆனால், 'போபோலோ-டி- இடாலியா' என்ற பத்திரிகையின் சொந்தக்காரர் என்ற முறையில் அவருக்கு நிறைய வருமானம் கிடைக்கிறதாம். அப்படியேதான் ஹிட்லருக்கும். அவருடைய வருஷச் சம்பளம் 20,000 டாலர். ஆனால், அவர் ஒரு பெரிய புஸ்தக வியாபாரியாம். அதிலேதான் ஏராளமான சம்பாத்தியம் கிடைக்கிறதாம்.

ஃ ஃ ஃ

மற்ற சர்வாதிகாரிகளின் வருஷாந்த சம்பளத்தைக் கேளுங்கள். ருஷ்ய சர்வாதிகாரி ஸ்டாலினுக்கு 3,000 டாலர்; ஆஸ்திரியா தேசத்துச் சர்வாதிகாரியான டாக்டர் ஷூஸ்னிக்குக்கு 5,700 டாலர்; போலந்து சர்வாதிகாரியான ரிட்ஸ் மிக்ளிக்கு 11.400 டாலர்.

ஃ ஃ ஃ

ஜெர்மன் சர்வாதிகாரியான ஹிட்லர் தனது சுயசரிதையை 'எனது போராட்டம்' என்ற தலைப்புக் கொடுத்து எழுதியிருக்கிறான். இந்தப் புஸ்தகம் எத்தனை பிரதிகள் விற்றிருக்கின்றன தெரியுமா? 25 லட்சம் பிரதிகள்! இத்தலி, ஸ்பானிஷ், டச்சு, ஹங்கேரி, துருக்கி, போர்த்துகல், அரபி முதலிய பலபாஷைகளிலும் இது மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

அமெரிக்கா மிகுந்த நாகரிகம் பெற்ற நாடல்லவா? அங்கே கல்வி அபிவிருத்தியும் அதிகம். இரண்டு மாணாக்கர்கள் இருந்தாலும் ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தி விடுகின்றனர் அரசாங்கத்தார். 2 மாணாக்கர்களையுடைய பள்ளிக்கூடங்கள் 750ம், 4 பேரையுடைய பள்ளிக் கூடங்கள் 2,250ம், 5 பேரையுடைய பள்ளிக்கூடங்கள் 30,000ம், 6 அல்லது 7 பேரையுடைய பள்ளிக்கூடங்கள் 16,000ம், 17 பேருக்குக் குறைவான மாணாக்கர்களையுடைய பள்ளிக்கூடங்கள் 85,000ம் இருக்கின்றன.

அன்றாட உலகம்



1937

மே

12 ஆறாவது ஜார்ஜ் மன்னரின் மகுடாபிஷேகம்.

14 ஏகாதிபத்திய மகாநாடு லண்டனில் கூடியது.

23 ராக்பெல்லர் மரணம்.

26 சர்வதேச சங்கத்தில் எகிப்து தேசம் அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

28 ஸ்ரீ பால்ட்வின், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பிரதம மந்திரிப் பதவியினின்று விலகினார்.

29 ஸ்ரீ நெவில்லி சேம்பர்லேன், பிரதம மந்திரிப் பதவியை ஏற்றுக்கொண்டார்.

ஜூன்

3 மாஜி எட்டாவது எட்வர்ட் மன்னரான விண்ட்ஸர் பிரபுவுக்கும் ஸ்ரீமதி சிம்ப்ஸனுக்கும் விவாகம்.

22 ராஜப்பிரதிநிதி லார்ட் லின்லித்கௌ, இந்திய அரசியல் நிலைமையைப் பற்றி ஓர் அறிக்கை விடுத்தார்.

ஜூலை

மஞ்சூரியாவுக்கு வடக்கேயுள்ள ஆமூர் நதியில் ஓடிக்கொண்டிருந்த சோவியத் அரசாங்கத்தின் பீரங்கிப் படகொன்றின் மீது, ஜப்பானியப் படைகளும் மஞ்சுகோ படைகளும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தன. இதனால் ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் மனஸ்தாபம். முதலில் சோவியத் படகுகள்தான், மஞ்சூகோ துருப்புகளின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தன வென்று மஞ்சூகோ அரசாங்கத்தார் கூறினர்.

பிரான்ஸ் தங்கநாணயச் செலாவணியை ரத்து செய்து விட்டது.

ஐரிஷ் ப்ரீ ஸ்டேட்டில் பொதுத் தேர்தல் நடை பெற்றது. இதில் டிவேலரா கட்சியினர் 69 பேரும், தொழிற் கட்சியினர் 13 பேரும், காங்கிரேவ் கட்சியினர் 48 பேரும், இண்டிபெண்டெண்ட் கட்சியினர் 8 பேரும் ஐரிஷ் பார்லிமெண்டுக்குத் தெரிந்தெடுக்கப் பட்டனர்.

2 ஸ்பெயினில், செவில்லே என்ற ஊரில், கலகக் காரர்களுக்கு, அரசாங்கத் துருப்புகளால் அதிக நாசம் உண்டாக்கப் பட்டது.

3 ஸ்பெயினோடு நேசப் பான்மையுடன் இருக்க வேண்டுமென்பதே தங்கள் நோக்கம் என்று காமன்ஸ் சபையில் ஸ்ரீ ஈடன் கூறினார்.

4 போர்த்துகல் தேசத்துப் பிரதம மந்திரியும் சர்வாதிகாரியுமான டாக்டர் ஸலாஸர் மீது வெடிகுண்டு எறியப்பட்டது. ஆனால் காயமொன்று மில்லை.

வட இந்தியாவிலுள்ள சுவந்தவாடி சமஸ்தானத்து அரசர் இறந்துவிட்டார்.

ருஷ்யாவில், 25 ரெயில்வே உத்தியோகஸ்தர்கள், ஜப்பான் சார்பாகத் துப்பறிந்து வந்தார்கள் என்றுசொல்லித் தூக்கிலிடப் பட்டார்கள்.

ஸெண்ட்ரல் பாங்கியின் ஸ்தாபகரான ஸர் ஸோராப்ஜி போச்கன் வாலா பம்பாயில் மரணம்.

5 காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப்பதவிகளை ஏற்றுக்கொள்ளும் விஷயமாக முடிவு கட்ட வார்தாவில் காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது.

இந்தியா சட்டசபையின் ஆயுட்காலம் நீடிக்கப்பட்டதாக இந்தியா அரசாங்க அறிக்கை பிறந்தது.

ஸ்பெயினின் அரசாங்கத் தலைநகராகிய வாலென்ஷியா மீது கலகக்காரர்கள் ஆகாய விமானங்களிலிருந்து எண்பது வெடிகுண்டுகள் எறிந்தனர்.

7 பாலஸ்தீனத்தை யூதர் பிரதேச மென்றும், அராபியர் பிரதேச மென்றும், பிரிட்டிஷார் பிரதேச மென்றும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்க வேண்டுமென்று லார்ட் பீல் தலைமையில் நியமிக்கப்பட்ட கமிஷன் சிபார்சு செய்தது.

மலேயாவில் இந்தியா அரசாங்க ஏஜண்டாக இருக்க ஸ்ரீமான் சி. எஸ். வேங்கடாசாரி ஐ. சி. எஸ். நியமிக்கப்பட்டார்.

காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக் கொள்ளலாமென்று காரியக் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியது.

8 அடுத்த காங்கிரஸுக்கு மகாத்மா காந்தி தலைவராக இருக்க வேண்டுமென்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஓர் அறிக்கை விட்டிருக்கிறார்.

பாலஸ்தீன் அறிக்கை சம்பந்தமாகப் பிரிட்டிஷாருக்கு விரோதமான பிரசாரம் ஒன்றையும் இத்தலியில் ரேடியோ மூலம் செய்யக் கூடாதென்பது முஸோலினியின் உத்திரவு.

வட சைனாவிலுள்ள பீபிங்கில் சீனத் துருப்புகளும் ஜப்பானியத் துருப்புகளும் சண்டையிட்டன.

9 நைனி சிறையில் 45 நாள் உண்ணாவிரதமிருந்த சசீன் பக்ஷி என்பவர், பாபு ராஜேந்திர பிரசாத்தின் தூண்டுதல் பேரில் உணவு உட்கொள்ளத் தொடங்கினார்.

1937ம் வருஷத்து வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழுவதைச் சரிப்படுத்த பிரெஞ்சு அரசாங்கத்தார் சில புதிய வரிகளை விதித்தனர்.

பாலஸ்தீன் பிரிவினை அறிக்கையைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்ய வேண்டுமென்று ஜெருசலேத்திலுள்ள அராபிய கமிட்டியார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

ஸ்பெயின் குழப்பத்தில் தலையிடக் கூடாதென்பதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டி 2 மணி நேரம் கூடியிருந்து, ஒரு முடிவுமின்றிக் கலைந்து விட்டது.

10 பாரிஸ் நகரத்தில் ஹோட்டல் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம். வாரத்தில் ஐந்து நாட்கள்தான் வேலைசெய்ய முடியும் என்று சொல்வதே இதற்குக்காரணம்.

மாட்ரிட் நகருக்கு அருகாமையில் பெரிய யுத்தம். மூவாயிரம் பேருக்கு மேல் சேதம்.

பீகிங் நகரத்துக் கருகாமையிலுள்ள வாங்கிங் என்ற ஊரில் சீனத் துருப்புகளுக்கும் ஜப்பானியத் துருப்புகளுக்கும் கைகலந்த சண்டை.

சிந்து மாகாண அரசாங்கம், அரசாங்க நிருவாகத்தில் எவ்வித ஊழலும் இருக்கக் கூடாதென்பதற்காக வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறது.

11 காங்கிரஸ் கட்சியினர் மந்திரிப் பதவிகளை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்ததைப் பாராட்டி, ஜஸ்டிஸ் கட்சியின் காரியக் கமிட்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறது.

ஜப்பானியத் துருப்புகள் செய்த அட்டூழியத்திற்குப் பரிகாரம் தேடிக் கொடுக்க வேண்டுமென்று சீன அரசாங்கம் ஜப்பானைக் கேட்டது. ஆனால், ஜப்பானோ வடசைனாவிலுள்ள தனது துருப்புகளை மேற்பார்வை செயய, ஒப்பந்தப்படி தனக்கு உரிமை உண்டென்றும் அதன் படியே தான் நடந்துகொண்டு வருவதாகவும் தெரிவித்தது.

சேத் ஜம்னாலால் பஜாஜின் குமாரி மதாலஸைக்கு வார்தாவில் விவாகம்.

12 ஸ்பெயினில் மாட்ரிட் நகருக்கு அருகாமையில் பெரிய ஆகாயப்படை யுத்தம் நடைபெற்றது. 160 ஆகாய விமானங்கள் ஓரே சமயத்தில் இந்த யுத்தத்தில் கலந்துகொண்டன.

13 ஜப்பானில், சைனாவுக்கு விரோதமான பலத்த பிரசாரம் பத்திரிகைகளில் தொடங்கப் பெற்றது.

14 சென்னைச் சட்டசபை கூடியது. காங்கிரஸ் கட்சியினர், விசுவாசப் பிரமாணம் செய்தனர். காங்கிரஸ் மந்திரிச் சபை அமைக்கப்பட்டது.

மத்திய மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிகள் பதவிகளை ஏற்றுக்கொண்டார்கள்.

15 சென்னைக் கீழ்ச் சபைக்கு ஸ்ரீமான் புலுசு சாம்பமூர்த்தி தலைவராகவும், ஸ்ரீமதி ருக்மணிலட்சுமிபதி உபதலைவராகவும் தெரிந்தெடுக்கப் பட்டார்கள்.
மேற்சபைக்கு டாக்டர் யு. ராமராவ் தலைவராகவும், திரு. கே. வேங்கடசாமி நாயுடு உபதலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

16 பாட்னாவுக்கு 17-மைல் தொலைவிலுள்ள பீடா என்ற ஸ்டேஷனில் பஞ்சாப் ஹௌரா எக்ஸ்பிரஸ்வண்டி தண்டவாளத்திலிருந்து கீழே இறங்கியதால் பலத்த சேதம் உண்டாயிற்று. சுமார் 100-பேர் இறந்தனர். 200-பேருக்குக் காயம்.
பாலஸ்தீன அறிக்கையைக் கண்டித்தும், யூதர் கட்சியை ஆதரித்தும் லாயிட் ஜார்ஜ், 'சண்டே எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினார்.

17 காங்கிரஸ் மந்திரிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டு மென்பதைப்பற்றி காந்தியடிகள் ஹரிஜன் பத்திரிகை மூலமாக ஓர் அறிக்கை விடுத்தார்.
அரசாங்க நிருவாக உத்தியோகஸ்தர்கள் புதிய மந்திரிச்சபை விஷயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதைப் பற்றி, ஐக்கியமாகாண அரசாங்கக்காரியாலயத்தில், பிரதம மந்திரி பண்டித கோவிந்த வல்லப பந்த் ஒரு பிரசங்கம் செய்ததாகத் தெரிகிறது.

18 பிரிட்டிஷ் பிரதம மந்திரி சேம்பர்லேன், மிட்டில்ஸ்பரோ என்ற ஊரில் பேசிய போது, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஆயுதபலம், சென்ற வருஷத்தை விட பாராட்டத்தக்கதா யிருக்கிறதென்று பெருமையாகப் பேசினார்.

19 பம்பாய் சட்டசபை கூடியது. காங்கிரஸ் மந்திரிகள் விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார்கள்.
பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் அந்நிய நாட்டு மந்திரி ஈடன் பேசியபோது, ஸ்பெயின் யுத்தத்தை ஐரோப்பிய யுத்தமாக்க எவரும் விரும்பவில்லை யென்று சொன்னார். அப்பொழுது சர்ச்சில் பேசுகையில், ஜிப்ரால்டர் துறைமுகத்தில் ஏன் பெரிய பீரங்கிகள் வைக்கப்பட்டிருக்கின்றன வென்றும், இதற்கும் ஸ்பெயின் யுத்தத்திற்கும் என்ன சம்பந்தம் என்றும் கேட்டார்.
மாட்ரிட் நகருக் கருகாமையில், சரித்திரத்திலேயே இதுவரையில் நடைபெறாத பெரிய யுத்தம் நடை பெற்றது. கலகக்காரர்கள் மூன்று கிராமங்களைப் பிடித்துக் கொள்ள முயன்றதே இதற்குக் காரணம்.
கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்த மார்க்கோனி இறந்துபோனார்.
ஒரிஸாவில் காங்கிரஸ் மந்திரிகள் பதவிகளை ஏற்றுக்கொண்டார்கள்.
காங்கிரஸ் மந்திரிகளோடு உத்தியோகஸ்தர்கள், பொதுஜனங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று ச. ராஜகோபாலாச்சாரியார் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

20 பீஹார் மாகாணத்தில் காங்கிரஸ் மந்திரிகள் உத்தியோகங்களை ஏற்றுக்கொண்டார்கள்.
பஞ்சாப் மாகாணத்திற்குள் கான் அப்துல் கபூர் கான் வரக்கூடாதென்று பிறப்பித்திருந்த தடையுத்தரவு ரத்துச் செய்யப்பட்டது.
35,000 ஜப்பானியத் துருப்புகள் ஜப்பானிலிருந்து டீன்ட்ஸினுக்கு வந்து சேருகின்றன.

ஸ்பெயின் தேசத்து முக்கியமான துறைமுகங்களில் சர்வதேசங்களுக்கும் பொதுவான உத்தியோகஸ்தர்களை நியமிப்பதென்று, ஸ்பெயின் யுத்தத்தில் தலையிடாத கமிட்டியார் தீர்மானித்தனர்.
பாலஸ்தீன் அறிக்கை சம்பந்தமாக லார்ட்ஸ்சபையில் வாதம்நடைபெற்றது.

21 ஐர்லாந்து அரசாங்க நிருவாக சபையின் தலைவராக திரு. டிவலேரா தெரிந்தெடுக்கப்பட்டார்.

பாலஸ்தீன் அறிக்கையைப் பற்றி காமன்ஸ் சபையில் வாதம் நடைபெற்ற போது, அறிக்கையை அப்படியே அங்கீகரிக்கக் கூடாதென்று தொழிற் கட்சியினர் வாதம் செய்தனர். எனவே இந்த அறிக்கையை சர்வதேச சங்கத்தின் முன்னர் சமர்ப்பிப்பதென்றும், பின்னர் விசாரணை செய்து, நிர்ணயமான ஒரு திட்டத்தை வகுப்பதென்றும் காமன்ஸ் சபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

22 பீஹார் சட்டசபை கூடியது, அங்கத்தினர்கள் விசுவாசப் பிரமாணம் செய்து கொண்டார்கள்.

23 பீஹார் மாகாணத்துக் கீழ்ச்சபைக்கு தலைவரும் உபதலைவரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

பாலஸ்தீனத்தைப்பற்றி

—ஓர் அரசியல் மாணுக்கன்

பாலஸ்தீனம், இப்பொழுது பிரிட்டிஷ் ராஜ தந்திரத்தின் பரிசோதனை ஸ்தலமாக இருக்கிறது. என்ன செய்யலாம்? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பரிசோதனை காலம் வருமல்லவா? பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பார்த்தால் நமக்கு ஒரு விதத்தில் அநுதாபமே உண்டாகிறது. அவர்கள் எந்த நன்மையைச் செய்யப் போனுலும் அதற்கு எதிர்ப்புத்தானு? கமிஷன் நியமித்தால் பகிஷ்காரம்; அமைதியை உண்டாக்கப் புதிய உத்தியோகஸ்தர்களை நியமித்தால் எதிர்ப்பு; எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையே கமிஷன், விசாரணையை நடத்தி, அறிக்கை வெளியிட்டால் அது எந்தத் தரப்பாருக்கும் பிடித்தமே இருப்பதில்லை. பாருங்கள்! சென்ற 1936ம் வருஷம் ஏப்ரல் மாதந் தொடர்ந்து பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கு மிடையே கலகங்களும் குழப்பங்களும் நடைபெற்றனவல்லவா? இதன் விவரங்களைத்தான் பத்திரிகைகளில் எல்லாரும் படித்திருப்பீர்களே, அதை நான் ஏன் விஸ்தரித்துக் கொண்டு போக வேண்டும்? இந்தக் கலகத்தைப் பற்றி விசாரிக்கவும், பாலஸ்தீனத்தின் எதிர்கால அரசியல் எவ்விதமிருக்க வேண்டுமென்பதைப்பற்றி நிர்ணயிக்கவும் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் 1936ம் வருஷம் நவம்பர் மாதம் ஒரு கமிஷனை நியமித்தார்கள். இதற்கு லார்ட் பீல் தலைவர். இந்தியா மந்திரியாகக் கூட இருந்து ராஜ்யபாரம் நடத்தினுரே, அவர்தான். கமிஷன் பாலஸ்தீனம் வந்து சேர்ந்தது. என்ன நடந்திருக்குமென்று ஊகிக்கிறீர்கள்! எதிர்ப்புத்தான்! பகிஷ்காரந்தான்! சைமன் கமிஷன் நமது நாட்டுக்கு வந்து போகவில்லையா? அராபியர்கள் இந்தக் கமிஷனைப் பகிஷ்காரஞ் செய்தார்கள். பின்னர், கமிஷனர்கள் எப்படியோ ஒரு வகையாக விசாரணையை முடித்துக் கொண்டு ஊர் போய்ச் சேர்ந்தார்கள். பிறகு 1937ம் வருஷம் ஜுலை மாதம் எட்டாந் தேதி ஓர் அறிக்கையை வெளியிட்டார்கள். அட, அறிக்கை வெளிவந்ததே, அதில் என்னதான் இந்த பிரகஸ்பதிகள் எழுதி யிருக்கிறுர்கள் என்று பார்க்கக் கூடாதா? சிபார்சுகளைப் பார்த்த மாத்திரத்திலேயா இவ்வளவு கூச்சல்! பாலஸ்தீனத்திலே வசிக்கின்ற யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் நாட்டைப் பங்கு போட்டுக் கொடுத்துவிட்டு, அதில் பிரிட்டிஷாருக்கும் ஒரு பங்கு இருக்கட்டும் என்று இந்தக் கமிஷனர்கள், பட்சபாத மில்லாமல் சிபார்சு செய்திருக்கிறுர்கள். இந்தப் பிரிவினை ஏற்பாடு யூதர்களுக்கும் பிடிக்கவில்லை; அராபியர்களுக்கும் பிடிக்கவில்லை. குடி முழுகிப் போய்விட்டதென்று இருதரப்பாரும் கூச்சல் போடுகிறுர்கள். என்ன செய்வார்கள், பாவம், பிரிட்டிஷ் அரசாங்கத்தார்! அதுதான் 'செல்லாக் காசு' சர்வ தேச சங்கம் ஒன்று இருக்கிறதே, அதனிடத்திலே இந்த அறிக்கையைச் சமர்ப்பித்து விடுவதென்றும், மறுபடியும் பாலஸ்தீனத்தைப் பற்றி விசாரணை நடத்துவதென்றும் தீர்மானித்து விட்டனர். அடங்கினுர்களயா கொஞ்சம் யூதர்களும் அராபியர்களும்!

ஆமாம், இந்தப்பாலஸ்தீனம் எங்கே இருக்கிறது? இதைப்பற்றி, ஏன் இவ்வளவு ஆரவாரம்? பிரிட்டிஷார், இதற்காகக் கவலைப்படுவதன் காரணமென்ன? இவைகளை யெல்லாம்பற்றி நாம் தெரிந்து கொள்ளவேண்டாமா?

பாலஸ்தீனம், மத்தியதரைக் கடலுக்குக் கிழக்கே, அரேபியாவுக்கு வடக்கே, ட்ரான்ஸ் ஜார்டோனியா தேசத்திற்கு மேற்கே இருக்கிறது. சுமார் பதினாயிரம் மைல் விஸ்தீரணமுடையது. இந்த நாடு, முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் முக்கியமான நாடா யிருக்கிறது. யூதர்கள் இந்த நாட்டை ஆதியில் தங்கள் தாய் நாடாகக் கொண்டாடி வந்தார்கள். பின்னர், தெற்கே அரேபியாவிலிருந்து அராபியர்கள் படையெடுத்து வந்து இந்த நாட்டில் 'டேரா' அடித்துக்கொண்டு விட்டார்கள். ஐரோப்பா கண்டத்திலிருந்து பல கிறிஸ்தவப்படைகள் வந்து இந்த நாட்டைச் சுவாதீனப்படுத்திக் கொள்ள முயன்றும் பயன்படவில்லை. இப்படியிருக்க, கி. பி. 1517ம் வருஷத்தில், இஸ்லாமிய நாடுகள் பல, துருக்கியின் ஆதிக்கத்துக் குட்பட்டன. அவற்றுள் பாலஸ்தீனமும் ஒன்று. சுமார் 400 வருஷம், துருக்கியின் நிருவாகத்திற் குட்பட்டே இந்தத் 'தேனும் பாலும் பொழியும் நாடு' இருந்தது. ஆனல் தேனும் பாலுமே பொழிந்து கொண்டிருந்தால், திகட்டிப்போய் விடாதா? 1917ம் வருஷம் டிசம்பர் மாதம் ரத்தத்தையும் சுவை பார்க்க ஆரம்பித்தது பாலஸ்தீனத்து மண். ஐரோப்பிய யுத்தத்தில், நேசக் கட்சியாருக்கு விரோதமாக இருந்ததல்லவா துருக்கி? துருக்கியின் ஆதீனத்திற் குட்பட்டிருந்த நாட்டை யெல்லாம் நேசக் கட்சியார் கைப்பற்றிக் கொள்கிற முறையில், 1917ம் வருஷம் பிரிட்டிஷாரின் சுவாதீனத்திற்குப் பாலஸ்தீனம் வந்தது. அப்படி வந்ததற்குத் துணை செய்தவர்கள் யூதர்கள் முதலாயினோர்.

அக்காலத்தில், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நிருவாகத்தை நடத்திக் கொண்டிருந்தவர்கள், யுத்தத்தில் வெற்றி பெற எல்லாருடைய உதவியும் தேவை என்பதற்காக எல்லாருக்கும் எதை வேண்டுமானாலும் கொடுப்பதாகச் சொன்னார்கள். நமது லாயிட் ஜார்ஜ் துரை கூட 1917ம் வருஷம் ஆகஸ்ட் மாதம், 'இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுத்து விடப் போகிறோம், பிடித்துக் கொள்ளுங்கள்' என்று வாயாலே அளந்து விட வில்லையா? ஏன்? அப்பொழுது இந்தியர்களுடைய உதவி அவ்வளவு அவசியமாயிருந்தது. அக்காலத்தில்—1917ம் வருஷத்தில்—பிரிட்டிஷ் அரசாங்கத்து அந்நிய நாட்டு மந்திரியாக ஸ்ரீமான் ஏ. ஜே. பால்பர் என்பவர் இருந்தார். இவர், 'யூதர்கள் பாலஸ்தீனத்தைத் தங்கள் தேசிய நாடாக்கிக் கொள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எல்லா வகையிலும் உதவி செய்வர்' என்று 2-11-1917ல் காமன்ஸ் சபையில் சொன்னார். இதற்குத்தான் 'பால்பர் அறிக்கை' (Balfour Declaration) என்று பெயர்.

இங்கே ஒரு சின்ன விஷயம். இந்த அறிக்கை எப்படிப் பிறந்தது? யுத்தகாலத்தில், ஒரு சமயம், பிரிட்டிஷாருக்குப் பெரிய நெருக்கடி ஒன்று ஏற்பட்டது. அதாவது, கப்பல்களைத் தகர்த்தெறிவதற்காக உபயோகிக்கும் வெடி குண்டுகளில் சேர்க்கப்படும் முக்கியமான ரசாயனப் பொருள் ஒன்று குறைந்து போய் விட்டது.

இந்தப்பொருளின் ரகசியம் ஜெர்மானியர்களுக்குத்தான் தெரிந்திருந்தது. என்ன செய்வது? இந்த ரகசியத்தை எப்படியாவது கண்டு பிடித்துச் சொல்லுங்கள் என்று, அப்பொழுது யுத்த தளவாட மந்திரியா யிருந்த லாயிட் ஜார்ஜ், பிரிட்டிஷ் விஞ்ஞான சாஸ்திரிகளிடம் தெரிவித்துக் கொண்டார். அப்பொழுது மான்செஸ்டர் சர்வ கலாசாலையில் ரசாயன போதகாசிரியன் ஒருவன் இருந்தான். இவன் பெயர் செயிம் வீஸ்மான். இவன் ஒரு யூதன். இவன் மேற்படி ரசாயனப் பொருளின் ரகசியத்தைக் கண்டு பிடித்து அரசாங்கத்தாருக்குத் தெரிவித்தான். நேசக் கட்சியாரின் வெற்றிக்கு இஃது ஒரு முக்கிய காரணமாயிருந்தது.

வீஸ்மானுக்குப் பணமும் கௌரவப் பட்டமும் வழங்க அரசாங்கத்தார் முன் வந்தனர். ஆனால் வீஸ்மான் இவற்றையெல்லாம் மறுத்து விட்டான். 'அப்படியானால் உங்களுக்கு வேண்டியதென்ன?' என்றது லாயிட் ஜார்ஜின் அதிகார தொனி.

'நேசக் கட்சியாருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தால், பாலஸ்தீனத்தில் யூதர்களுடைய உரிமைகளைக் கவனித்துக் கொள்ளுங்கள்' என்றது வீஸ்மானின் சமூக நலச் சிந்தை.

பால்பர் அறிக்கைக்கு மூல காரணம் இப்பொழுது தெரிகிறதல்லவா?

ஆனால் இதே சமயத்தில், அராபியர்களுக்கும் பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந்தன. ஏனென்றால், துருக்கியப் படையை வெற்றி கொள்ள அராபியர்களுடைய துணை பிரிட்டிஷாருக்கு அவசியம் தேவையாயிருந்தது. அப்பொழுது லாரென்ஸ் என்பவன் அராபியர்களுடைய தேசிய உணர்ச்சியைக் கிளப்பி விட்டு, பிரிட்டிஷாருக்கு உதவி புரியுமாறு செய்தான்.

பிரிட்டிஷார் அளித்த வாக்குறுதிகளினால் யூதர்களும், அராபியர்களும் பாலஸ்தீனத்தைப் பற்றிப் பலவித ஆசைகளைக் கொண்டிருந்தார்கள். பாலஸ்தீனத்தின் நிருவாகம், 1920ம் வருஷம் தற்காலிகமாகப் பிரிட்டன் வசம் ஒப்புவிக்கப் பட்டிருந்தது. இதனை 1923ம் வருஷம் டிசம்பர் மாதம் சர்வ தேசசங்கம் உறுதி செய்தது.

இஃது இப்படியிருக்கட்டும். 1917ம் வருஷம் பிரிட்டிஷார் பாலஸ்தீனத்தைக்கைப்பற்றியதுமுதல் 1921ம்வருஷம் வரை, அடிக்கடி யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் சச்சரவுகள் நடந்து கொண்டு வந்தன. இடையிலே 1921ம் வருஷத்திலிருந்து 1929ம் வருஷம் வரைதான் சிறிது அமைதி இருந்தது.

கலகங்கள் ஏற்பட்டபோது, அவற்றைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் அடக்கிவந்தனர். இந்த அடக்குமுறைகள், சில சமயங்களில் யூதர்கள் மீதும் சில சமயங்களில் அராபியர்கள் மீதும் கடுமையாகப் பிரயோகிக்கப்பட்டன.

பால்பர் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டும், பிரிட்டிஷாருடைய உதவிபெற்றும், 1922-ம் வருஷத்திலிருந்து வெளிநாடுகளிலிருந்த பல யூதர்கள், பாலஸ்தீனத்தில் வந்து குடியேறினார்கள். யூதர்கள் எப்பொழுது மே சுறு சுறுப்புடையவர்கள்; உழைப்பாளிகள்; 'சந்து விட்டால் வந்து விட்டேன்' என்று சொல்கிற பேர்வழிகள். கொஞ்சங் கொஞ்சமாகப் பாலஸ்தீனத்தில் தங்கள் ஆதிக்கத்தைப் பரப்பிக்கொண்டதோடு கூட, கைத்

தொழில், வியாபாரம், விவசாயம் முதலியவைகளில் அதிக பங்கெடுத்துக் கொண்டு பணத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். பதினைந்து வருஷங்களில் 130-ஆயிரம் யூதர்கள் வந்து குடியேறியிருக்கிறார்கள். 1933-ம் வருஷம் ஜெர்மனியில், ஹிட்லர் ஆதிக்கத்திற்கு வந்தபிறகு, யூதர்கள் பாடு திண்டாட்டமாகி விட்டதல்லவா? அந்த வருஷத்திற்கப்புறம், ஜெர்மனியிலிருந்து ஏராளமான யூதர்கள் வந்து குடியேற ஆரம்பித்தார்கள். 1934-35 வருஷங்களில் மட்டும், வருஷமொன்றுக்குச் சராசரி 42,000 யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு வந்து குடியேறியிருக்கிறார்கள்.

யூதர்கள் குடியேறிய பிறகு விவசாயம், கைத்தொழில் முதலியன ஓரளவு விருத்தியடைந்திருக்கிறது வாஸ்தவந்தான். ஆனால் அராபிய சுதந்திரத்தின் மீது. இதனை அராபியர்கள் வெறுத்து வந்தார்கள். தவிர, பக்கத்திலேயுள்ள ஈராக், ட்ரான்ஸ்ஜார்டோனியா, அரேபியா முதலிய இஸ்லாமிய நாடுகள் சுதந்திரம் பெற்றிருப்பதையும் இவர்கள் பார்த்தார்கள். இவர்களிடத்தில் தேசீய உணர்ச்சி வீறிட்டு எழுந்து நின்றது.

இப்படியிருக்கிற போது, பிரிட்டிஷ் அரசாங்கத்தார், பாலஸ்தீனத்தில் ஒரு சட்டசபையை ஏற்படுத்த முயன்றார்கள். இதனை யூதர்கள் பலமாக எதிர்த்தார்கள். அராபியர்கள் சட்டசபையில் பெரும்பான்மையான ஸ்தானங்கள் கிடைக்குமென்று கருதி இந்த யோசனைக்கு ஆதரவு கொடுத்தார்கள். ஆனால் யூதர்களின் எதிர்ப்பு இவர்களுக்குப் பிடிக்கவில்லை. தவிர, பிரிட்டிஷ் காமன்ஸ் சபையில் பாலஸ்தீனப் பிரச்னை வருகிறபோது, பெரும்பாலும் யூதர்களுக்கு ஆதரவு காட்டியே பேசப்பட்டு வந்தது. இதுவும் அராபியர்களுக்குப் பிடிக்கவில்லை. ஏற்கனவே புகைச்சல் இருந்ததல்லவா? இது திடீரென்று, 1936ம் வருஷம் ஏப்ரல் மாதம் யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் பலத்த கலகமாக ஆரம்பித்தது.

இது அடக்கப்பட்டதும், பின்னர் லார்ட்பீல் தலைமையில் கமிஷன் விசாரணை நடத்தியது, இவர்கள் அறிக்கை தயாரித்து அனுப்ப, அது, இப்பொழுது சர்வதேச சங்கத்தின் முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருப்பதும் முன்னர் கூறப்பட்ட விஷயங்களாகும்.

இந்த பீல் அறிக்கையானது, பாலஸ்தீனத்தின் கிழக்குப் பாகத்தை அராபியர்களுக்கும், மேற்கே கடற்கரையோரமாகவுள்ள பிரதேசத்தை யூதர்களுக்கும், இரண்டுக்குமிடையே ஜாபா என்கிற துறைமுகத்தோடு இணைப்பதும், ஜெருசலேம், பெத்லெஹம் முதலிய புனித ஸ்தலங்களையுடையதுமான ஒரு சிறு பிரதேசத்தையும், ஹைபா, ஏக்ரே முதலிய சில முக்கிய துறைமுகங்களையும் பிரிட்டிஷாருடைய மேற்பார்வைக்கும் பிரித்துவிட வேண்டுமென்கிறது. இதில் அராபியர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது விசாலமான பிரதேசம். ஆனால் செழுமையற்றது; பாலைவனங்களை யுடையது. யூதர்களுக்குப் பிரிக்கப்பட்டிருப்பதோ சிறியது; ஆனால் செழிப்புள்ளது. பீல் கமிட்டியார் அராபியர்களைப் பார்த்துக் கூறுகிறார்கள்:- உங்களுக்கென்று தனியாக நாடு பிரித்துக் கொடுக்கப்பட்டதால், உங்களுக்குத் தேசீய சுதந்திரம் கிடைத்து விட்டது. பக்கத்திலுள்ள இஸ்லாமிய நாடுகளுடன் சேர்ந்து நீங்கள் முன்னேறலாம்.

சிறைப்பட்ட செல்வி

—ஆந்த்ரே ஷெனியேர்

பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதியில் பிரான்ஸ் தேசத்தே நடைபெற்ற மாபெரும் புரட்சிக்குப் பலியான மேதாவிகளில் ஆந்த்ரே ஷெனியேர் ஒருவன். அரசன் ஆண்ட போது இவன் பல உயர்ந்த உத்தியோகங்களை வகித்தானுனலும் புரட்சி வெள்ளம் பொங்கி எழுந்த போது அதன் பெரு நோக்கங்களில் மிகவும் ஈடுபட்டான். ஆனுல் புரட்சிக்காரர் கைவலுத்து, ரோபஸ்பியேர் என்பவன் தலைமையில் நடைபெற்ற

யூதர்களைப்பார்த்துச் சொல்கிருர்கள்:- பால்பர் அறிக்கைப்படி உங்களுக்கென்று தேசிய நாடு ஏற்பட்டு விட்டது. சமீபத்தில் அராபியர்களுடைய ஆட்சிக்குட்பட நேரிடுமோவென்ற அச்சம் இருந்தால், அதை இனி ஒழித்துவிடுங்கள்.

இந்தச் சமாதானங்கள் இருசாராரையும் திருப்தி செய்யவில்லை. 'எங்களுடைய பரம்பரை நாடாகிய பாலஸ்தீனத்தை, இப்படிப் பிரித்து விட்டது மின்றி, செழிப்பில்லாத பிரதேசங்களை யெல்லாம் எங்களுக்குக் கொடுத்திருக்கிறீர்களே' என்று அராபியர்கள் கேட்கிருர்கள்.

'தேசிய நாடு என்ருல் பாலஸ்தீனம் முழுவதையும் கொடுத்து விடுவீர்கள் என்றன்ருே நாங்கள் நினைத்திருந்தோம். இப்பொழுது ஒரு சிறு பிரதேசத்தைக் கொடுத்து, இதுதான் தேசிய நாடு என்று திருப்தியடையச் சொல்கிறீர்களே. எங்களுடைய, சுரண்டும் முயறசிக்கு இது போதுமா?' என்று யூதர்கள் கேட்கிருர்கள்.

பாலஸ்தீனத்தை ஏன் ஒரு முக்கிய பிரச்னையாகப் பிரிட்டிஷார் கருதுகின்றனர்? என்ருல், அது, இந்தியாவுக்கும் மற்றக் கீழ் நாடுகளுக்கும் செல்லும் முக்கியமான பாதையில் இருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்னுடியிருந்தே—அதாவது பாலஸ்தீனம் பிரிட்டிஷாருடைய மேற் பார்வைக்கு வந்தவுடனேயே,—ஹைபா என்ற துறை முகத்தைப் பலப்படுத்தி வந்திருப்பது இங்கே கவனிக்கத் தக்கது. 1936ம் வருஷம் ஜூன் மாதம் காமன்ஸ் சபையில் தளபதி அமெரி என்பவர் கூறினுர்:—

"ஐரோப்பா, ஆப்ரிக்கா, ஆசியா ஆகிய மூன்று கண்டங்களையும் இணைக்கக் கூடிய ஆகாய விமானப் பாதைகள் சந்திக்கும் இடமாக பாலஸ்தீனம் இருக்கிறது. மத்திய தரைக் கடலில் இப்பொழுது ஏற்பட்டுள்ள புதிய நிலைமையில், அது ஒரு முக்கிய ஸ்தானத்தை வகிக்கிறது. பாலஸ்தீன மேற்பார்வை உடன்படிக்கைப்படி, ஹைபா துறை முகத்தை கப்பற்படை ஸ்தலமாக நாம் அமைத்துக் கொள்ள முடியாதாயினும், மத்திய தரைக் கடலிலேயுள்ள வியாபாரத் துறைமுகங்களிலே ஒன்ருக அதனை அமைத்துக் கொண்டு, யுத்த காலத்தில் வேறெங்கும் அகப்படாதபோது எண்ணெய் சப்ளை செய்யக் கூடிய ஸ்தாபனமாகவும் அதனை ஆக்கிக் கொண்டால் அது நமக்கு ஆஸ்தியாகும்."

பிரிட்டிஷாருடைய மேற்பார்வையில் பாலஸ்தீனம் வந்தபிறகு, ஒரு ஹை கமிஷனர், இதன் பிரதம நிருவாக உத்தியோகஸ்தராயிருக்கிருர். இப்பொழுது இருக்கப் பட்டவர் ஸர் ஆர்தர் வாக்கோப். இவர் 1931ம் வருஷம் நியமிக்கப் பட்டார். இவருடைய வருஷச் சம்பளம் 4,000 பவுன்.

'பயாநகக் கொடுங்கோலாட்சி'யைச் சகிக்காது 'பாரிஸ் பத்திரிகை' என்பதில் தைரியமாக எதிர்த்தான். அதற்காக மரண தண்டனை விதிக்கப் பெற்று கொடுங்கோன்மைக்கு ஜீவாதாரமான 'பாஸ்தீல்' சிறைச் சாலையில் அடைக்கப்பட்டான்.

சிறையில் தனக்கு மனச்சோர்வு ஏற்பட்ட ஒரு சமயத்தில் தன்னைப் போல் மரண தண்டனைக் குட்பட்ட ஒரு அழகிய இளம் நங்கையின் மனோபாவத்தை ஒரு கவியில் சித்திரித்திருப்பதை இங்கு ஒரு சிறிது எடுத்துக் காட்ட முயல்வோம். (ஸ்ரீ. ஸ்ரீ)

இளம்பயிர் அரிவாளுக்கு அஞ்சாது செழித்து ஓங்கி வளர்கிறது. அது போல் அழகும் இளமையும் வாய்ந்தவள் நான். தற்பொழுது கஷ்டங்களும் கவலைகளும் என்னைச் சூழ்ந்துளவாயினும், இவ்வளவு சீக்கிரம் உயிரிழக்க நான் இசையேன்.

நெஞ்சில் ஈரமற்று உலக வெறுப்புடையோன், வேண்டியிருந்தால், யமனைக் கட்டித் தழுவிக் கொள்ளட்டும். இன்று கண்ணீர் சொரிகின்றேனாலும் நற்காலம் எனக்குண்டென்பதில் திட நம்பிக்கை கொண்டுள்ளேன். கொடிய குளிர் என்னை நலிக்கும்போது சுருங்கிப் பதுங்கி இருந்து, பின்பு தலை தூக்கி உலாவுவேன். காலம் கெட்டிருந்தாலும் இன்பம் ததும்பும் நாட்களும் உள. ஆஹா! இவ்வுலகில் புளிக்காத தேனு முண்டோ? புயலில் கொந்தளிக்காத கடலு முண்டோ?

கனிந்த மனப்பால் என் உள்ளத்தைக் கவர்ந்துளது. இச்சுவர்கள் என்னைச் சிறைப்படுத்த வீணே முயல்கின்றன. என் மன வெழுச்சி சிறகு கொண்டது. கொடிய வேடன் வலையிலிருந்து தப்பிய குயில், வான் வெளியில் பின்னும் இனிமையாயும் மனோகரமாயும் பாடுகின்றது.

எனக்கா சாவு! கவலையின்றித் தூங்கிக் கவலையின்றி விழித்தெழும் எனக்கா! விழிப்பிலும் உறக்கத்திலும் நான் மனக் குறுகுறுப்பற்றவள். காலையில் எழுந்ததும் பலர் கண்கள் ஆனந்த ஒளியோடு என்னை வரவேற்கின்றன. துயருற்று அயர்ந்த சிரங்கள் கூட என்னைக் கண்டதும் மகிழ்வுடன் நிமிர்கின்றன.

என் பயணம் முடிய இன்னும் எவ்வளவோ காலம் ஆகவேண்டும். நான் புறப்பட்ட சோலையில் முதல் மரங்களைக் கூட இன்னும் கடக்கவில்லை. இவ் வாழ்க்கை விருந்தின் முதற்படியில் கிடைக்கும் குவளை நிறைந்த இனிய பானத்தில் என் அதரங்கள் ஒருவாய்தான் உட்கொண்டிருக்கின்றன.

இது என் வசந்த காலம்; பூவெடுத்துக் காய்க்கும் தருணம்; கனி முதிர்ந்து பழுக்கும் தசையை நான் காண வேண்டும். சூரியனைப்போல பருவம் பருவமாகக் கடந்து வருஷ முடிவுவரை நான் செல்லவேண்டும். பூங்கொத்தில் ஒளி வீசிக் கொண்டு நந்தவனத்தின் அலங்கார மலராகிய நான், காலை ஒளியைத்தான் கண்டுள்ளேன்; இத்தினத்தைப் பூர்த்திசெய்யக் கருதுகிறேன்.

யமனே! அவசரப்படாதே, ஒதுங்கி நில்! எட்டிப் போ, எட்டிப் போ நீ! வெளிறிய நிராசை, அச்சம், அவமானம் முதலியன பீடிக்குமவர்களிடம் நீ தரும் ஆறுதலைக் கொண்டுபோ. எனக்கு வேண்டாம். வனஸ்பதிகளின் பூப்பந்தரும், காதல் மூர்த்தியின் முத்தங்களும், சங்கீதக் கச்சேரிகளும் என்னை வரவேற்கக் காத்திருக்கின்றன.

கஸ்ராஜ் சோப்

ஆரோக்கியமானது, சிக்கனமானது,
சாந்தப்படுத்துவது.

வெயர்வையால் மூடிய சரும துவாரங்களை சுத்தம் செய்து, துர்நாற்றத்தைப் போக்கிச் சருமத்தை வழவழப்பாகவும், பளபளப்பாகவும் செய்கிறது.

கஸ்-ராஜ் சோப்

வெட்டிவேர், தாழம்பூ, மற்றும் பல விலையுயர்ந்த சரக்குகளைக்கொண்டு தயார் செய்யப்படுகிறது.

சோல் ஏஜண்டுகள்:—S. விஸ்வநாதம் & கோ.,
விஜயநகரம், விசாகப்பட்டினம்.

பர்மா சோல் ஏஜண்டுகள்:—

மீனாக்ஷி ஸ்டோர்ஸ்,
83, மொகல் வீதி, இரங்கூன்.